
www.padippakam.com

உலகத் தமிழ் இதழ் நவம்பர் 2005

# காலச்சுவடு

www.kalachuvadu.com

இதழ் 71 ரூ. 15



## எழுத்தில் வாழ்பவன் அன்றோ நான்

சுந்தர ராமசாமி

1931 - 2005

தமிழ்: தாலி – கற்பு – பண்பாடு

ஆனி சோமோன்: பிரெஞ்சுச் சிறுகதை

படிப்பகம்

# இந்தியாவின் இணையற்ற
# சீட்டு நிதிச் சிகரம் ஸ்ரீராம் சிட்ஸ்




3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானது சீட்டு சேமிப்பு திட்டம். சமுதாய மக்கள் ஒருங்கிணைந்து, சிறுகச் சிறுகச் சேமிக்கவும், தேவைப் படும்போது அச்சேமிப்பில் இருந்தே கடன் பெறவும் உதவி செய்வதே சீட்டுச் சேமிப்பு திட்டத்தின் சிறப்பு அம்சம்.

### இருவழிப் பயன்:

குடும்ப வளமைக்காகத் தொடர்ந்து சேமிக்கவும், அவசரத் தேவைகளையும், திட்டமிட்ட செலவுகளையும் எதிர் கொள்ளவும் உதவும் இருவழிச் சாதனம் சீட்டு சேமிப்பு திட்டம்.

### வளரும் வளமை:

சீட்டு சேமிப்பு திட்டத்தில், சேமிக்கும் தொகை, சேமிக்கும் காலம், கடன் பெறும் தொகை, வட்டி விகிதம், யாவும் உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப் படுகிறது. மேலும், மாதந்தோறும் வருவாய் உயரும் வாய்ப்பு, உறுப்பினர் அனைவரும் சமமாக லாபம் பெறும் வாய்ப்பு ஆகியவை இதன் தனிச்சிறப்பு அம்சங்கள்.

### உயரும் வருவாய்:

வங்கிச் சேமிப்பு, அஞ்சலகச் சேமிப்பு, சிறுசேமிப்பு, ஆகிய முதலீடுகள் மீதான வருவாய் சரிந்து விட்டது. ஆனால் சீட்டுத் திட்டங்களில் ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்த்தப் பட்டுள்ளதால், உறுப்பினர்களின் கசறுத்தொகை (Dividend) கணிசமாக உயரும். ஏலத்தில் போட்டியின் கடுமை குறைந்து, உடனடியாக ஏலம் எடுக்கும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.

### நிகரற்ற ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் 29 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சீட்டுத் தொகையாக ரூ.10,500 கோடிக்கு மேல் பட்டுவாடா செய்துள்ளது.

உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். நலமும் வளமும் வளரத் தேவையான திட்டங்களில் சேர்ந்து சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.



**ஸ்ரீராம் சிட்ஸ்**
**தமிழ்நாடு (பி) லிமிடெட்**

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 52011833. www.shriramchits.com

WORDCRAFTS

www.padippakam.com

# அஞ்சலி



ஓவியம்: ஆதிமூலம்

*"உலகெங்கும் கணந்தோறும் இழப்பின் துக்கங்களில்
ஒரு கோடிக் கண்கள் கலங்குகின்றன"*

— பசுவய்யாவின் கவிதை வரிகள்

**சுந்தர ராமசாமியின் மரணச் செய்தியை - அல்ல, அவர்** உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தியை - கேள்விப்பட்டபோது கலங்கிய கண்கள் இன்னமும் தெளிய வில்லை. உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் எழுத்தாளர் கள் பலரும் பெருவாரியான வாசகர்களும் தங்கள் வீட்டில் நிகழ்ந்துவிட்ட மரணமாகவே இதை உணர்கிறார்கள். சமீப காலங்களில் அவரைக் கடுமையாக விமர்சித்துவந்தவர் களும் ஆத்மார்த்தமாகக் கண்ணீர் உகுக்கிறார்கள். உல கெங்கிலுமிருந்து நூற்றுக்கணக்கில் இரங்கல் கடிதங்களும் தொலைபேசி அழைப்புகளும் சுந்தர விலாசத்திற்கு வந்தவண்ணம் இருக்கின்றன. தமிழக, கேரள ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்து இந்தச் செய்தியை வெளியிட்டன. முன்னணி இதழ்கள் பல சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கின்றன. ஓரிரு இதழ்கள் சு.ரா.வின் படைப்பொன்றை மறுபிரசுரம் செய்வதன் மூலம் அஞ்சலி செலுத்தியிருக்கின்றன. 54 ஆண்டுகளாக இலக்கியச் சூழலில் அழுத்தமான சலனங்களை ஏற்படுத்திவந்த ஒரு தமிழ் எழுத்தாளனுக்குச் சூழல் செலுத்தும் இந்த அஞ்சலியை, சு.ரா. இந்தச் சூழலில் காண விரும்பிய ஆரோக்கியமான மாற்றங்களின் அடையாளமாகவே காண முடிகிறது.

படைப்பு, விமர்சனம், கருத்துலகச் செயல்பாடு, இதழியல் பணிகள், எழுத்தாளர்களுடன் பேணிவந்த ஆழமான நட்பு, பகைத்துக்கொண்டவர்களிடமும் காட்டிய பண்பு முதலான அம்சங்களினூடே வெளிப்பட்ட சு.ரா. என்னும் ஆளுமையின் பரிமாணங்கள் அவரது இழப்பை ஏற்கவே இயலாத அசம்பாவிதமாக உணரச் செய்கின்றன. தமிழில் தீவிரமான தளத்தில் செயல்பட்டுவரும் ஒவ்வொரு படைப்பாளிக்கும் சு.ரா.வைப் பற்றி - படைப்புப் பற்றி யும் தனிப்பட்ட வாழ்வு குறித்தும் - பகிர்ந்துகொள்ளப் பல விஷயங்கள் இருக்கின்றன என்பதே அவரது வீச்சை உணரப் போதுமானதாக இருக்கிறது.

சு.ரா.வின் படைப்பு, மொழி, கருத்துலகம், தனிப்பட்ட வாழ்வு ஆகியவை குறித்துப் பேச எவ்வளவோ இருக் கின்றன. எதிர்பாராத பேரதிர்ச்சியாக இழப்பு தன் தாக்குதலை நிகழ்த்தியிருக்கும் இத்தருணம் அதற்கு ஏற்றதல்ல. ஜே.ஜே. சொல்வதுபோல, "ஒவ்வொன்றையுமே நன்றாகப் பார்க்க அதற்கான இடைவெளிகள் வேண்டும்." என்றாலும் அரை நூற்றாண்டுக் காலத்தில் சு.ரா. ஆற்றிய பங்களிப்பைச் சற்றேனும் நினைவுபடுத்திக்கொள்ள இச்சமயத்தில் முயலலாம்.



படிப்பகம்

www.padippakam.com



உச்சத்தை அடைந்த பிறகு, தேக்கம், சரிவு என்பதாக அமையும் தமிழ் எழுத்தாளர்களின் பொதுப் போக்கின் பின்னணியில் விதிவிலக்காகத் தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொண்டே வந்தவர் சு.ரா. வாசிப்பு, விவாதம், செயல்பாடு, படைப்பு, மொழி ஆகியவற்றினூடான அவரது வெளிப்பாடுகளைக் கால வரிசைப்படி அடுக்கிப் பார்க்கும்போது பளிச்சென்று புலப்படும் அம்சம் இது. தமிழ்ச் சூழல் மீதும் தமிழ் வாழ்வின் மீதும் அவர் அளவிற்குக் கரிசனத்துடன் விமர்சனங்களை முன்வைத்துவந்த தமிழ் எழுத்தாளர் யாருமே இல்லை என்று சொல்லலாம். விமர்சனங்களை முன்வைப்பதோடு தன் வேலை முடிந்தது எனக் கருதாமல் சூழலின் மாற்றத்திற்குத் தன்னால் இயன்ற பங்களிப்பைத் தொடர்ந்து செய்துவந்தவர் அவர்.

தேர்ந்த சிற்பக் கலைஞனின் நுட்பத்தோடு ஒப்பிடக்கூடிய சு.ரா.வின் மொழிநடை அவரது மற்றொரு முக்கியமான பங்களிப்பு. மொழி விஷயத்தில் அவரது பங்களிப்பைப் பற்றிப் பேச விரிவானதோர் ஆய்வுக் கட்டுரைதான் எழுத வேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால் போலி அலங்காரங்கள், மிகை ஆகியவற்றைத் துறந்த கம்பீரம், அழகுணர்ச்சி, வில்லில் ஏற்றப்பட்ட நாணைப் போன்ற இறுக்கம், அடியோட்டமாக இழையும் அங்கதம், தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுவரும் பாங்கு முதலானவை அவரது மொழியின் சிறப்பம்சங்கள். அவருக்குப் பின் வந்த எல்லா எழுத்தாளர்களையும் ஏதேனும் ஒரு விதத்தில் பாதித்திருக்கும் அவரது மொழி, தமிழுக்குச் சில புதிய சொல்லாடல்களையும் சொற்றொடர்களையும் தந்திருக்கிறது.

எழுத்தில் வெளிப்படும் தீவிரம், சமரசமற்ற போக்கு, ஆழ்ந்த அக்கறை, எழுத்தைத் தாண்டியும் கிளை பரப்பும் பல தளங்களிலான செயல்பாடு, இவற்றின் ஒட்டுமொத்த தாக்கங்கள் ஆகியவை அவரை வெறும் எழுத்தாளராக மட்டும் பார்க்க முடியாமல் ஆக்குகின்றன. அவரைப் படித்தவர்கள் யாருக்குமே அவரோடு உரையாட வேண்டும் என்ற எண்ணம் தவிர்க்க முடியாமல் எழுந்துவிடும். அவரது எழுத்தில் வெளிப்பட்ட கருத்துகளும் பார்வைகளும் தீர்ப்பின் பிரகடனங்களாக இல்லாமல் தேடலின் பாதைகளாக விரிந்திருப்பதால் அவருக்கும் அவரது வாசகர்களுக்கும் இடையில் மானசீகமாகவும் வெளிப்படையாகவும் உரையாடல்கள் நிகழ்ந்தபடி இருக்கின்றன. அவரது எழுத்தும் அவர் பேணிவந்த ஆத்மார்த்தமான நட்புகளும் மூத்த எழுத்தாளர்கள்முதல் புத்தம் புதிய எழுத்தாளர் வரையிலான சக எழுத்தாளர்களிடத்தில் அவர் நிகழ்த்திவந்த உரையாடல்களும் அவரது வாசகர்கள், நண்பர்களிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. கருத்தளவிலும் செயல்பாட்டளவிலும் பாதிப்புகளை நிகழ்த்தியிருக்கின்றன. இந்தப் பாதிப்புகளின் வெளிப்பாடுகள் சூழலில் பல சாதகமான மாற்றங்களுக்கு வித்திட்டிருக்கின்றன. இவையெல்லாம சேர்ந்து சு.ரா.வை ஒரு எழுத்தாளர் என்பதைத் தாண்டி ஒரு இயக்கமாகவே மாற்றிவிட்டிருக்கின்றன.

தனது சூழல் பற்றிப் புலம்பலற்ற விமர்சனங்களையும் காழ்ப்புணர்வற்ற கண்டனங்களையும் மிகையுணர்ச்சியற்ற பாராட்டுகளையும் மிகுந்த அக்கறையுடன் பதிவுசெய்துவந்த அவர் தமிழ் வாழ்வில் பெண்களும் தாழ்த்தப்பட்டோரும் பெற்றிருக்கும் பங்கு குறித்தும் ஆழமான கவலைகளைக் கொண்டிருந்தார். தனிப்பட்ட வாழ்வில், ஜாதி, மதம் சார்ந்த அடையாளங்களிலிருந்தும் போக்குகளிலிருந்தும் முற்றிலும் விடுதலை பெற்றிருந்த அவர், தனது எல்லாவிதமான செயல்பாடுகளிலும் அவர் உருவாக்கிய செயல்பாட்டுக் களங்களிலும் ஒடுக்கப்பட்டோருக்கான வெளியை விரிவுபடுத்தியதன் மூலம் தமிழ்ப் பொதுவெளியின் எல்லைகளைச் சற்றேனும் நெகிழச் செய்திருக்கிறார்.

"ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல் அதில் ஒன்றுமில்லை" எனத் தன் மரணம் பற்றி அறிவிக்கிறது அவரது கவிதை வரி ஒன்று. சுய படிமம் சார்ந்த உரிமைகோரல்களை முற்றாகத் துறந்த ஓர் ஆளுமையால்தான் இப்படிச் சொல்ல முடியும். இத்தனை ஆண்டுகளாகத் தன் அசைவுகள் மூலம் வெட்டவெளியில் தனது இருப்பை அர்த்தமுள்ளதாக்கிவந்த இலை உதிர்ந்துவிட்டது. நேர்மை, ஆழம், தீவிரம், இடையறாத பயணம், அறிவுபூர்வமான அணுகுமுறை, சுரணை, சமத்துவம், ஆத்மார்த்த உணர்வு முதலிய மதிப்பீடுகளைத் தன் தனிப்பட்ட வாழ்விலும் பன்முகச் செயல்பாடுகளிலும் முன்னிறுத்தி, வலுப்படுத்திவந்த ஒரு படைப்பாளியின் மறைவையொட்டி எண்ணற்ற எழுத்தாளர்களும் வாசகர்களும் அனுபவித்துவரும் சொல்லொணாத துயரத்தைக் காலச்சுவடு பகிர்ந்துகொள்கிறது.

**- அரவிந்தன்**

நிறுவனர்
**சுந்தர ராமசாமி**

ஆசிரியர் குழு
**ஆதவன்**
**அரவிந்தன்**
**நஞ்சுண்டன்**

உதவி ஆசிரியர்
**திவாகர் ரங்கநாதன்**

ஆலோசனைக் குழு
தமிழ்நாடு:
**ஆ. இரா. வேங்கடாசலபதி**
**ப்ரஸன்னா ராமஸ்வாமி**
**களந்தை பீர்முகம்மது**
இலங்கை: **எம்.ஏ. நுஃமான்**
இங்கிலாந்து: **பத்மநாப அய்யர்**
அமெரிக்கா: **கோகுலக் கண்ணன்**
சிங்கப்பூர்: **கனகலதா, மு. ந. மூர்த்தி**
மலேசியா: **சை. பீர் முகமது**

வடிவமைப்பு
**கீழ்வேளூர் பா. ராமநாதன்**
தயாரிப்பில் உதவி:
**இரா. சக்திவேல்**
கலை
**சந்தோஷ்**

பதிப்பாளர் – ஆசிரியர்
**எஸ். ஆர். சுந்தரம்**
**(கண்ணன்)**

■ **தலைமை அலுவலகம்:** 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி: 91-4652-278525
தொலைநகல்: 91-4652-231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in
■ **சென்னை அலுவலகம்:** பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 600 005,
தொலைபேசி: 91-44-28481662, 91-44-52155972. மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com, kalachuvadu@gmail.com



படிப்பகம்

www.padippakam.com



நிறுவனர்:
சுந்தர ராமசாமி


காலச்சுவடு
மாத இதழ்


நவம்பர் 2005 ● இதழ் 71

## சுந்தர ராமசாமி

- கவிதைகள்
- சில நினைவுகூரல்கள்
- கடைசி வரிகள்

37-76





## தமிழ்: தாலி – கற்பு – பண்பாடு

- ப்ரேமா ரேவதி
- மாலதி மைத்ரி
- ப்ரஸன்னா ராமஸ்வாமி
- மாலன்
- கனிமொழி

13 - 24



ஆனி சொமோன்:
பிரெஞ்சுச் சிறுகதை
8




கொங்குதேர் வாழ்க்கை
விமர்சனக் கட்டுரை
சுகுமாரன்
26

கடிதங்கள்..............................4
அன்னியரால் வரும் நீதி.........6
பத்தி: பாவண்ணன்...............23
மதிப்புரைகள்..........................29
பதிவுகள்.................................32
செருகளத்தூர் சாமா..............34



படிப்பகம்

அக்டோபர் மாத இதழில் வெளியான ஜார்ஜ் எல். ஹார்ட்டின் நேர்காணல் அவர் தனித்துவ மிக்கத் தமிழ்ப் பற்றாளர் என்பதனை நிறுவியுள்ளது. இலங்கைத் தமிழர்மீதான ஹார்ட்டின் தார்மீகக் கோபம்கூட அத்தமிழ்ப் பற்றின்பாற்பட்டதே. பாரதியார் பற்றிய கேள்விக்கு ஹார்ட் பதிலாகக் கூறுவன அவரது வாசிப்பு நேர்மையைக் காட்டுகின்றன. கம்பராமாயணம் பற்றிய இவரது கருத்துகள், மறைந்த பேராசிரியர் ஜேசுதாசரின் கருத்துகளைப் போலவே உள்ளன. இவரது விரிந்த வாசிப்பும் அவ்வாசிப்பு சார்ந்த சீரிய புரிதலும் இவர் வகிக்கும் பதவிக்கு மெருகூட்டுகின்றன. துறை சார்ந்த சாதனையாளர்களின் நேர்காணல்களைப் பிரசுரம் செய்யும்போது அவர்கள் முகவரியையும் மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிட்டால் சிறப்பாக இருக்கும்.

சரவணன் 1978
மதுரை 7

காந்தியடிகளைப் பற்றிய இரண்டு கட்டுரைகளைப் படித்தேன். சமீப காலங்களில் சிற்றிதழ்களில் பொதுவாக மகாத்மா காந்தியடிகளைப் பற்றி எதிர்மறையான விமர்சனத்தையே அதிகம் வாசித்த என் போன்றோருக்குத் தங்கள் பத்திரிகையில் நேர்மறையான பார்வையில் காந்தியடிகளைப் பற்றிய கட்டுரைகளைப் படித்ததும் சந்தோஷம் ஏற்பட்டிருக்கும்.

முற்போக்குச் சிந்தனை என்றாலே இடதுசாரி, பெரியாரிய, தலித்திய எழுத்துக்கள்தான் என்றும் அதன் நீட்சியாக காந்தியைப் பழமைவாதியாகவும் வர்ணாசிரமவாதியாகவும் சித்தரிப்பதும்தான் முற்போக்கு என்றும் ஒரு போலித் தோற்றம் உருவாகியுள்ளது.

பொதுவாக இவர்கள் யாருமே காந்தியைத் திறந்த மனதுடன் படித்ததில்லை என்பது இவர்களுடைய எழுத்துகளைப் படித்தாலே தெரியும். அப்படி எதிர்மறையாக விமர்சிப்பவர்கள் தாங்கள் சார்ந்துள்ள இயக்கத்தின் ஆரம்பப் பாடமாகப் படித்ததே காந்திய எதிர்ப்புச் சிந்தனையாகத்தான் இருக்கும். அங்கே அவர்களுக்கு காந்தியத்தின் மீது ஊட்டப்பட்ட வெறுப்புணர்ச்சிதான் அவர்களின் எழுத்துகளிலும் தெரியும்.

இன்றைய உலகமயமாக்கல், மத வெறிச் சூழல்களில் இந்தியாவிற்கு மட்டுமல்லாமல் உலகிற்கே வழிகாட்டக் கூடிய பொருளாதார, சமயக் கொள்கைகளை உள்ளடக்கியதுதான் காந்தியம்.



காந்தியம் என்பது தனிப்பட்டவரின் வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஏதோ கடைப்பிடிக்க முடியாத வறட்டு ஒழுக்கங்களைப் பேசுவதல்ல. தனிநபர் ஒழுக்கம், பொதுவாழ்வில் தூய்மை, பெண் விடுதலை, தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றம், கிராமப் பொருளாதாரம், ஆதாரக் கல்வி, இயற்கை சார்ந்த வாழ்வியல், தனிவுடைமைக் கொடுமைக்கு மாற்றாக அறங்காவலர்க் கொள்கை, கிராம சுயாட்சி என இறுதியாக அரசு என்பது இறந்துவிட்ட காவல் துறை, ராணுவம் என்பது இல்லாமல்போன ஒரு சர்வோதயச் சமயத்தை நோக்கி இட்டுச் செல்லக் கூடிய அளவிற்குப் பல பரிமாணங்களை ஒருங்கிணைப்பது.

சு. சரவணன்
சென்னை 18

காந்தி குறித்து நெய்தல் கிருஷ்ணன் கூறுவது போன்றும் அதைவிட மோசமாகவும் பல்வேறு கதைகள் நம் கிராமங்களில் வழங்கிக்கொண்டுதான் வருகின்றன. அவற்றைக் கூறிக்கொண்டிருப்பவர்கள் நல்ல படிப்பாளிகள்தான்.

கு. இரமேஷ்
கங்களாஞ்சேரி 1

ஏகாதிபத்தியத்தின் மனிதத்தன்மையற்ற நடவடிக்கைகளுக்குக் கிடைத்த பதில் நடவடிக்கைதான் லண்டன் குண்டுவெடிப்பு. ஏகாதிபத்தியத்தின் தலைநகர் ஆகட்டும், அயர்லாந்திலுள்ள அதன் ராணுவ இலக்குகளாகட்டும், அது ஓர் அயர்லாந்துக்காரனால் தாக்கப்பட்டால் அது விடுதலைப் போர்! ஏகாதிபத்தியத்தின் அரக்க ராணுவம் வியட்நாமில் ஒரு வியட்நாமியினால் தாக்கப்பட்டால் அது விடுதலைப் போர்! அதே படைகள் பாலஸ்தீனத்திலும் ஆஃகானிஸ்தானிலும் சோமாலியாவிலும் ஈராக்கிலும் தாக்கப்பட்டால் தாக்கியவர் முஸ்லிம் என்பதால் அது இஸ்லாமிய பயங்கரவாதமா?

முன்பு ஆஃப்கானிஸ்தானை கம்யூனிஸ்ட் ரஷ்யா ஆக்கிரமித்தபோது அதை எதிர்த்து நின்ற முஸ்லீம் முஜாஹிதீன்களை (போராளிகளை) ரீகன் சாத்தானை அழிக்க வந்த விடுதலை வீரர்கள் என்று புகழ்ந்தார். சொல்லாடலில்கூட இவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள். அவ்வேடதாரிகளின் வாசஸ்தலத்தில் செய்தி வாசித்துவரும் கட்டுரையாளர்கூட இஸ்லாமியத் தீவிரவாதம் என்ற சொல்லாடலை அழுத்தமாகப் பயன்படுத்துகிறார்.

ஏன்? லண்டன் குண்டுதாரிகள் பாகிஸ்தான் மதரஸாக்களுக்குச் சென்று வந்ததினாலா? உலகின் போக்கை மாற்றிய செப்டம்பர் 11இல் தாக்குதலில் ஈடுபட்ட அல் கய்தா முஜாஹிதீன்களில் (மேற்கத்திய மொழியில் 'அல் கய்தா பயங்கரவாதிகள்') சில பேர் ஜெர்மன் ஹாம்பர்க் பல்கலைக்கழகத்தில்தான் பயின்றார்கள் என்பதைக் கட்டுரையாளர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தாங்கள் அழிந்தாலும் தங்கள் எதிரிக்கு பிரம்மாண்டமான சேதத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற லட்சியத்துடன் ஏகாதிபத்தியத்தின் தலைநகரங்களில் முகாமிடும் இத்தகைய ஃபிதாயீன்கள் (அர்ப்பணிப்புக் குழுக்கள்) மதரஸாக்களில் பிறக்கவில்லை. மாறாக, ஏகாதிபத்திய அரக்கர்களின் ஏவுகணைத் தாக்குதலில் மாண்டுபோனவர்களின் பிணங்களின் மத்தியிலிருந்தே பிறப்பெடுக்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் மனிதத்தன்மையற்ற நடவடிக்கைகளை மூடி மறைத்து அதற்கு எதிராக நடக்கும் பதில் நடவடிக்கைகளை மட்டும் பக்கம் பக்கமாக எழுதிவரும் கட்டுரையாளர்கள், ஆக்கிரமிப்பு பூமியில் அனாதைகளாக, விதவைகளாக, முடமானவர்களாக, கற்பிழந்தவர்களாக அகதி முகாம்களில் தொண்டு நிறுவனங்களின் உதவி வேண்டிக்

## கடிதம், விவாதம், படைப்பு . . .

- வாசகர் கடிதம், செய்திக் குறிப்புகள், நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் முதலியவற்றை அனுப்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் **15ஆம் தேதிக்குள்** எங்களுக்குக் கிடைக்குமாறு அனுப்புக. மின்னஞ்சலில் கடிதம் அனுப்புவோர் (kalachuvadu@sancharnet.in) TAM, TAB, TSCII, Bamini ஆகிய குறியீடுகள் கொண்ட எழுத்துருக்களைப் பயன்படுத்துக.
- விவாதம் பகுதிக்கு எழுதுவோர் தங்கள் கருத்துகளை 500 சொற்களுக்கு மிகைப்படாமல் எழுதுக.
- படைப்புகள் அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்புக. மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும்.
- படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே தபால் தலைகளை இணைக்க வேண்டாம். பிரசுர விவரம் மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்கப்படும்.
- பிரதியின் பின்புறம் முழு முகவரியையும் காசோலை அனுப்புவதற்கான பெயரையும் மறக்காமல் குறிப்பிடுக.
- அஞ்சலட்டையில் எழுதி அனுப்பப்படும் கவிதைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

மருதா வெளியீடு



பிள்ளைபிடிக்காரன்
(சிறுகதைகள்)
நாஞ்சில முதன்
பக்: 160, விலை: ரூ. 80

மருதா
226 (188), பாரதி சாலை
ராயப்பேட்டை, சென்னை 600 014.
✆: 09382116466

## இளையபெருமாள்: சுயமரியாதைப் போராளி

இளையபெருமாளுக்கு ரவிக்குமார் எழுதிய அஞ்சலி என்னை மிகவும் பாதித்தது. வெவ்வேறு இயக்கங்களில் இருந்தாலும்கூடத் தென் ஆற்காட்டுப் பகுதி தலித்துகளிடம் இளையபெருமாள் என்னும் பெயருக்கிருந்த மதிப்பை உணர்ந்திருக்கிறேன். இத்தகைய மதிப்பு கடந்த காலங்களில் தலித்துகளுக்கான சுயமரியாதையை நிறுவ அவர் நடத்திய போராட்டங்களுக்காகவே தரப்படுகிறது. மிகுதியும் அறியப்படாத இளையபெருமாள் கமிஷன் பற்றிய தகவல்களைத் தந்திருந்தது அஞ்சலி. இளையபெருமாளின் வாழ்வும் மரணமும் தலித்துகள் கற்றுக்கொள்ள எவ்வளவோ செய்திகளைத் தாங்கியிருப்பதாக ரவிக்குமார் எழுதியிருப்பது பொருத்தமான கூற்றுதான். எனக்கு அது பல அர்த்தங்களாக விரிகிறது.

இம்மக்கள் கல்வி, நிலம் ஆகியவற்றைப் பெறுவதற்காக ஆரம்பகாலத் தாழ்த்தப்பட்ட சமூகத் தலைவர்கள் போராடியிருப்பதைப் பார்க்கிறோம். தலித் மக்கள் நவீன வாழ்வியல் கூறுகளை அடைய வேண்டுமென்பதாக இதற்கு அர்த்தம் கொள்ளலாம். சாதி இழிவுகளிலிருந்து விடுபட்டுச் சுயமரியாதை பெறுவதற்கான இப்போராட்டங்கள் சாதியின் பெயரால் சுமத்தப்பட்ட தொழில்களை மறுத்து எழுந்தன. இத்தகைய போராட்டங்களைத் தொகுத்தால் தலித் வரலாறு தனித்துவமானது என்பதை உணரலாம். இளையபெருமாள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் பறையடிப்பதைப் போராடி நிறுத்தினார். அது மட்டுமல்லாமல் வட ஆற்காட்டுப் பகுதியில் குடியரசுக் கட்சியினரால் நடத்தப்பட்ட இத்தகைய போராட்டங்கள் எண்ணற்றவை. அரிச்சந்திரன் நாடகமும் நந்தன் நாடகமும் பல இடங்களில் போராட்டங்களால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. 'நந்தனார்' திரைப்படத்தை எதிர்த்துக் கோலார் தங்கவயலில் ஆளவந்தார் ராமதாஸ் என்பவர் போராடினார்.

இவை போன்ற பணிகளை இன்றைய தலித் அரசியல் எத்துணையளவு கணக்கில் கொண்டுள்ளது என்பது கேள்விக்குறிதான். இது போன்ற வரலாறுகள் சொல்லப்படுவதில்லை. தலித்துகள்மீது சுமத்தப்பட்ட இது போன்ற இழிவுகளை அவர்களின் பண்பாடு என்று வலியுறுத்தியது கடந்த 15 ஆண்டுக் கால தலித் அரசியல். திராவிட இயக்கப் பாணியிலான பார்ப்பன எதிர்ப்பு மனோபாவத்தில் கட்டமைக்கப்பட்ட இத்தகைய கருதுகோள்கள் தலித்துகளின் போராட்ட அனுபவங்களைக் கணக்கில் கொள்ளாதவை. பார்ப்பன எதிர்ப்பு என்னும் கருத்தை திராவிட இயக்கத்திற்குத் தந்த தலித் முன்னோடிகளின் பார்ப்பன எதிர்ப்பின் அர்த்தம் சாதி ஒழிப்புதானேயொழிய அதிகார மாற்றமும் சாதியப் பாதுகாப்பும் அல்ல.

சமூக நீதிக்கான போராட்ட வரலாற்றில் முன்னிற்கும் தமிழகத்தில் இளையபெருமாள் கமிட்டி ஒரு தகவலாகக்கூட நம் 'தமிழ்' அரசியல் எழுத்தாளர்களுக்கு/செயல்பாட்டாளர்களுக்குத் தெரியாமல் போனது தற்செயலானதல்ல. தலித் இயக்கங்களும் செயல்பாட்டாளர்களும் இதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஸ்டாலின் ராஜாங்கம்
திருப்பத்தூர்

ஒரு பிரதான அரசியல் கட்சியில் இருந்துகொண்டு அடிமைப்பட்டுக் கிடக்கும் தன் சமூகத்துக்காக உழைத்த இளையபெருமாள் தலித மக்களின் காவலராக இருந்திருக்கிறார். நவீனத் தீண்டாமைக்கு ஆட்பட்டு வாய்மூடிக் கிடக்கும் திராவிடக் கட்சிகளின் தலித் எம்.எல்.ஏ., எம்.பி.கள் இளையபெருமாளின் செயல்பாடுகள் மூலம் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்.

பார்ப்பனியத்தைவிடக் கொடூரமானது திராவிடம் என்ற இளையபெருமாளின் கூற்று நூறு சதவீதம் சரி. பார்ப்பனியம் உயர்சாதிச் சூத்திரர்களையும் தலித்துகளையும் சமநோக்கோடுதான் பார்க்கிறது. சூத்திரர்கள் கருவறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. தலித்துகள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. இரண்டும் ஒன்றுதான்; நிலைமை இப்படியிருக்க, தங்களை மார்க்சியவாதிகளாகவும் பகுத்தறிவுவாதிகளாகவும் காட்டிக்கொள்ளும் உயர்சாதிச் சூத்திரர்கள் சிலர் தலித்துகள் மதம் மாற வேண்டும் எனத் திருவாய் மலர்கின்றனர். கருவறைக்குள் வரக் கூடாது என்பது இவர்களுக்கு அவமானமாகத் தோன்றவில்லையா? இதற்காக இவர்கள் மதம் மாறினார்களா?

வருணாசிரமத்தைத் தோற்றுவித்தது பார்ப்பனியம். அதை இன்றுவரை தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பது யார்? பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் ஆகிய கிராமங்களில் வருணாசிரமத்தைக் கடைப்பிடித்துவரும் ஆதிக்கச் சாதியினரை என்ன செய்தன திராவிடக் கட்சிகள்?

ஆ. சின்னதுரை
தோட்டப்பாடி

காத்துக் கிடக்கும் அம்மக்களைப் பற்றியும் அவர்கள் நிலையின் காரணகர்த்தாக்கள் பற்றியும் எழுத வேண்டும்.

அபு மர்வாஸ் ஃபவ்ஜைனி
கோவை 1

செப்டம்பர் மாத இதழில் 'தமிழர் உணவு' பகுதியில் கட்டுரை எழுதிய அ. முத்துலிங்கம் எப்படி யாழ்ப்பாணத்தின் முத்திரை உணவாகிய ஒடியல் கூழை ஒதுக்கிவிட்டாரென்பது எனக்குப் பேராச்சரியமாக இருந்தது. ஒடியல் மாவுடன் சுத்தமான புளி, செத்தல் மிளகாய், மிளகு, உள்ளி, பலாக்கொட்டை, மரவள்ளிக் கிழங்கு, பயற்றங்காய், கொண்டல் கடலை, மீன் (நெய்த்தலியிலிருந்து கணவாய் மீன்வரை) சேர்த்துச் சற்றே காரமாக மண்பானையில் ஊர் மணக்கக் காய்ச்சிப் பலாவிலையிலோ ஓலைத் தட்டுவத்திலோ பரிமாறப்படும். இங்கு உலோக அகப்பையோ உலோகப் பாத்திரமோ பயன்படுத்தினால் நீர்த்துவிடுமென்பது முக்கிய அம்சம். பாரீஸுக்கு அண்மையில் வந்த தமிழக எழுத்தாளர் ஒருவர் ஈழத் தமிழ் நண்பர் வீடொன்றில் பரிமாறப்பட்ட ஒடியல் கூழைச் சுவைத்துவிட்டு, "இதுவரை எனது சுவை உணவின் பட்டியலில் அக்கார அடிசில்தான் மேலே இருந்தது. இனி அது ஒடியல் கூழ்" என அறிவித்தாராம்.

ப்ரஸன்னா ராமசாமியிடம் அழகான மொழி இருக்கிறது. அவர் தனக்கு வாய்த்த உலகப் பயண வாய்ப்புகளையும் அனுபவங்களையும் வைத்து நாவல் ஒன்றை எழுதலாம்.

பொ. கருணாகரமூர்த்தி
பெர்லின்

'தமிழர் உணவு' குறித்து தொ. பரமசிவன் ஒரு கருத்தை வரலாற்றுச் சான்றில்லாமல் தந்துள்ளார்.

தொடக்கக் காலத்தில் மனிதர்கள் எல்லோரும் பச்சைக் காய்கறிகளை, தானியங்களை அப்படியே உண்டுவந்தனர். அக்கினியைக் கண்டுபிடித்த பின்னர் வாட்டி, வதக்கிச் சாப்பிட்டனர். நாக்கின் சுவைக்கு ஏற்ப நளபாகம் வந்தது. அதன் பின்னர் சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு பிரிவினர் அவர்தம் சுவைக்கு ஏற்ப பச்சையாகவோ வேகவைத்தோ வேறு பொருள்களைச் சேர்த்து உண்டுவந்தனர். தீண்டாமை கருதி உணவை அமைத்துக்கொண்டனர் என்ற கருத்து காலத்தோடு பொருந்திச் செல்லவில்லை. குறிப்பிட்ட இனத்தவர் பச்சரிசி சாப்பிடுவதற்குக் கூறும் காரணமும் அறிவுக்கு ஏற்றதாக அமையவில்லை.

கோ.வே. சுப்பிரமணியன்
கல்லிடைக்குறிச்சி

கட்டுரை

# அன்னியரால் வரும் நீதி?

**ஆதவன்**

இந்தியாவில் 25 கோடிக்கும் அதிகமான மக்கள் சாதியின் பெயரால் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவது பற்றி தற்போது உலகநாடுகள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க சட்ட மாமன்ற விசாரணை (congressional hearing) ஒன்று அக்டோபர் முதல்வாரத்தில் (5&6-10-2005) அமெரிக்காவில் நடைபெற்றது. "இந்தியாவின் முற்றுப்பெறாத செயல் திட்டம்: சாதியமைப்பால் பாதிக்கப்பட்ட இருநூறு மில்லியன் மக்களுக்கு சமத்துவமும் நீதியும்" என்ற தலைப்பிலான அந்த விசாரணையின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நவம்பர் மாதத்தில் அமெரிக்க காங்கிரஸின் முன்பாக வைக்கப்படவுள்ளன. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் குறித்து அக்கறை காட்டும்படி அமெரிக்க அரசை நிர்ப்பந்திக்கப் போவதாக அந்த விசாரணையின் அமைப்பாளர்கள் கூறியுள்ளார்கள்.

அரிசோனாவைச் சேர்ந்த ரிபப்ளிகன் கட்சியின் காங்கிரஸ் பிரதிநிதி ட்ரென்ட் ஃப்ராங்க்ஸ் கட்சியின் (வசநவே குயேமேஎ) முன்முயற்சியில் நடந்த அந்தச் சிறப்பு விசாரணையின் முடிவில் ஐந்து பக்கங்கள் கொண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உலக வங்கி, இந்தியாவில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும்போது "சாதிப் பாகுபாடு அங்கே நிலவுகிறதா?" என விசாரித்து அதனடிப்படையிலேயே நிதி வழங்க வேண்டுமென உலக வங்கியைக் கேட்டுக்கொள்ளும்படி அமெரிக்க அரசை அந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவு இலாகா மூலமும் இந்திய அரசிடம் "தீண்டாமை மற்றும் சாதிப் பாகுபாடு" குறித்து நிர்ப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் என ட்ரென்ட் ஃப்ராங்க் கூறியுள்ளார். நியூஜெர்ஸியைச் சேர்ந்த காங்கிரஸ் பிரதிநிதி கிறிஸ்டோபர் ஸ்மித், இந்தச் சிறப்பு விசாரணைக்குத் தலைமை வகித்தார்.

"ஒரு நாட்டின் கால்பகுதி மக்களை மனிதத் தன்மையற்ற நிலையில் வைத்திருப்பது மனித உரிமை மீறல் மட்டுமன்று, அவர்களின் அரசியல் பொருளாதாரத் தேக்க நிலைக்கும் அதுவே அடிப்படை" என ஸ்மித் கூறியுள்ளார். இந்தச் சிறப்பு விசாரணையில் தலித் தலைவர் உதித் ராஜ், எழுத்தாளர் காஞ்சா அய்லையா உள்ளிட்டோர் கலந்துகொண்டு சாட்சியமளித்துள்ளனர். 'யுஎஸ்எய்ட்' உள்ளிட்ட அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களின் பயன் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்குச் சென்று சேர்கிறதா என்பதைக் கண்காணிக்கும்படி இந்திய தலித் இயக்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ள அந்தத் தீர்மானம், அமெரிக்காவில் ஆர். எஸ். எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத் உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகள் மேற்கொண்டுவரும் நடிவடிக்கைகளையும் அவற்றின் நிதிப் பரிவர்த்தனைகளையும் கண்காணிக்கும்படி அமெரிக்க அரசை வற்புறுத்தியுள்ளது.

இந்தியாவில் நிலவும் தீண்டாமை உள்ளிட்ட சாதிக் கொடுமைகளை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதில், 'டர்பன் மாநாட்டுக்குப்' பிறகு இந்தச் சிறப்பு விசாரணை முக்கியப் பங்காற்றியுள்ளது. இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமெரிக்க அரசால் செயல்படுத்தப்பட்டால் நிச்சயம் அது மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினையை இப்படி உலக அரங்குக்கு எடுத்துச் செல்வது சரியல்ல என்று குறை கூறுபவர்கள் "ஆயிரமுண்டிங்கு ஜாதி - எனில், அன்னியர் வந்து புகலென்ன நீதி?" என்ற பாரதியின் வரிகளை மேற்கோள் காட்டுவார்கள். ஆனால் அதே பாரதி 'ஜாதி மதங்களைப் பாரோம்' என்று சொன்னதையோ "எப்பதம் வாய்த்திடுமேனும் - நம்மில் யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும்" என்று பாடியதையோ அவர்கள் கவனத்தில்கொள்வதில்லை.

இந்தியச் சமூகத்தைத் தொடர்ந்து கவனித்துவருபவர்கள், பிரிட்டிஷ் இந்தியாவைவிட, 'சுதந்திர இந்தியா'வில் சாதியின் மூர்க்கம் அதிகரித்திருப்பதை ஒப்புக்கொள்வார்கள். அதற்கான முக்கியமான காரணங்களுள் ஒன்று: தாழ்த்தப்பட்டோர், இந்துக்கள் என்ற இரு தரப்பினருக்கு அப்பால் மூன்றாவது தரப்பாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அப்போது இருந்தனர். மூன்றாவது தரப்புதானே தவிர அவர்கள் நடுநிலையாளர்களல்லர்.

தாழ்த்தப்பட்ட மக்களை ராணுவத்தில் சேர்க்கக் கூடாது என விதிக்கப்பட்ட தடை; அவர்களது அரசியல் பிரதிநிதித்துவக் கோரிக்கைக்குக் காட்டப்பட்ட அலட்சியம்; அவர்களுக்கு நிலம் உள்ளிட்ட பொருளாதார உரிமைகளை வழங்கும்படி மிஷனரிகள் பரிந்துரைத்தபோது செய்யப்பட்ட நிராகரிப்பு என பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் செயல்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கேடாகவே இருந்தன என்றபோதிலும்; 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கொள்கையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில சட்ட நடிவடிக்கைகள் சாதிவாதிகளின் வன்முறையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களைப் பெருமளவில் பாதுகாத்தன.

இந்தச் சிறப்பு விசாரணையைத் தொடர்ந்து அமெரிக்க அரசு ஏதேனும் நடிவடிக்கை எடுத்தால் "ஏகாதிபத்திய தலையீடு" என இடதுசாரிகள் அதை வர்ணிக்கத் தயங்கமாட்டார்கள். இடதுசாரிகளுக்கும் 'தேசபக்தி'தான் முதல் புகலிடம்.

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் மீட்சி அமெரிக்காவின் கையில் இல்லை. தனது நாட்டில் நிறவேற்றுமையை இன்னும் காப்பாற்றிக் கொண்டிருக்கிற ஒரு நாடு, புயல் நிவாரணப் பணிகளிலும் நிறபேதம் பாராட்டுகிற ஒரு அரசு, இந்தியாவின் மனித உரிமை மீறல் குறித்துப் பேசுவதற்குத் தகுதியானதுதானா என்ற கேள்வியும் நியாயமானதே. சாதி வன்முறை, அரசு வன்முறை என்ற இருமுனைத் தாக்குதலை எதிர்கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள், அரச வன்முறையை மட்டுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் வரவேற்கவே செய்வார்கள்.

அமெரிக்காவில் நடத்தப்பட்டுள்ளது போன்ற விசாரணைகள் இந்திய அரசின் வெளிப்படையான சாதிச் சார்பைக் கொஞ்சம் குறைத்தால், அதுவே பெரிய ஆறுதல்தான். ●

ஈழத்திலிருந்து புதிய நாவல்



புயலுக்குப் பின்

மா.கி. கிறிஸ்ரியன்

பக்கம் 448, விலை ரூ. 200

கிடைக்குமிடம்

அடையாளம்

1205/1, கருப்பூர் சாலை

புத்தாநத்தம் - 621 310.

04332 273444


கோலங்கள்
கலெக்ஷன்
Nalli®
Since 1928
FAME/NALLI/3007
நல்லி சின்னசாமி செட்டி
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ.பே. : 24344115 / 52604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com

# டோல் நகரத்தில் மாறியிருக்க வேண்டும்

ஆனி சொமோன்
(Annie Saumont)



'மெஸ்ஸியே எ மதாம்[1] உங்கள் பயணச் சீட்டினைத் தயவுசெய்து காண்பியுங்கள். பரிசோதிக்க வேண்டியிருக்கிறது.'

பரிசோதகரின் குரல், கம்பார்ட்மென்ட்டில் வினோதமாய் ஒலித்தது. தலையை உயர்த்தினேன்; வாசித்துக் கொண்டிருந்த புத்தகம் கை நழுவியது. எடுப்பதற்காகக் குனிந்தேன். அப்புத்தகம் போரைப் பற்றியது: தாக்குதல்கள், குண்டு வீச்சுகள் எனப் போரின் எல்லா அவலங்களும் அதிலுண்டு. பத்தொன்பது வயதான எனக்கும் அப்புத்தகத்தில் குறிப்பிடப்படும் போர் நடைபெற்ற காலத்திற்குமான இடைவெளி அதிகமென்றே தோன்றுகிறது. எனது பிறப்பிற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே நடந்து முடிந்த அப்போர் எனக்குப் கதையாகிப்போனது.

பரிசோதகர் எதிரே நிற்கிறார். வங்கிக் கடன் அட்டைகள், கைத் தொலைபேசி, தூக்க மாத்திரைகள் கொண்ட சிமிழ், முக அலங்காரப் பொருட்களெனக் கிடந்த எனது கைப்பையை அலச வேண்டியிருந்தது. பயணச் சீட்டை வாங்கிப் பார்த்தவரின் முகம் நொடியில் மாறிப்போனது.

'டோல் (Dole)[2] நகரத்துல மாறி இருக்கணும்' என்கிறார்.

'அய்யய்யோ! எனக்குத் தெரியாதே. இப்போது என்ன செய்யட்டும்?' – நான்.

'நீ ஷெட்டுக்குத் திரும்பற ரயிலில் ஏறி இருக்குற. இனி செய்யறதுக்கு ஒண்ணுமில்லை. சிரமங்கள் உனக்குத்தான். நீ பொய் சொல்லலைங்கிறது விளங்குது. அதனால கூடுதல் கட்டணமேதும் வாங்க மாட்டேன்' என்றவர் பயண சீட்டைத் திரும்பவும் என்னிடத்தில் ஒப்படைத்தார். என்னை விட்டு விலகி, பெட்டியின் மறுகோடிக்குச் சென்றார். 'உங்கள் பயணச் சீட்டினைப் பரிசோதிக்க வேண்டியிருக்கிறது, தயவுசெய்து காண்பியுங்கள்' – ஒரு சில விநாடிகள் எனது கண்கள் அவரையே சுற்றி வருகின்றன. அவரது குரல் முற்றாக என்னிடமிருந்து விலகிக்கொள்கிறது. ஆச்சரியப்படுத்தும் வகையில் கையிலிருந்த புத்தகம் மறுபடியும் என்னிடமிருந்து நழுவ, அதனைத் தடுக்க முற்பட்ட எனது கரத்தை மற்றொரு கரம் முந்திக்கொண்டது. அக்கரத்துக்குச் சொந்தக்காரர் எவரென்று பார்க்கிறேன். மற்றொரு பயணி. சற்று முன்புவரை சகபயணியென்று எவருமில்லை. மெல்லப் புன்னகை செய்தவண்ணம் அப்படியான ஒருவர் இப்போது உட்கார்ந்திருக்கிறார். அம்மனிதருக்கு பதிலளிக்கும் வகையில் போனால் போகிறதென்று நானும் புன்னகைத்து வைத்தேன். அந்த நபரைத்

தெளிவாய்ப் பார்க்க இயலவில்லை என்கிறபோதும் அளவான அவரது கேசத்தையும் கம்பளி உடையையும் பிரித்து அறிய முடிகிறது. பரிசோதகர் டிக்கெட் பரிசோதனைக்கென்று வரும்வரை எனது கம்பார்ட்மெண்ட் பயணிகளின்றியே இருந்ததென்று சத்தியம் செய்ய முடியும். ஒருவேளை எனக்குப் பின்புறம் பயணிகள் இருந்திருக்கலாம். அதை நான் கவனிக்கவும் தவறி இருக்கலாம். சட்டென்று என்னருகிலிருந்த எல்லா இருக்கைகளிலும் பயணிகள். அவர்கள் அமர்ந்துள்ளது வெற்று மரப்பலகைகளினாலான இருக்கைகளில். இதுவரை இங்கிருந்த பொய்த் தோலினால்[3] ஆன இருக்கைகளுக்கு என்ன நேர்ந்தது? தவிரவும் இப்போது நான் அமர்ந்திருந்த கம்பார்ட்மென்ட்டுக்குப் போன தலைமுறையைச் சார்ந்த தோற்றம். பயணிகள் ஆட்டங்காணும் கம்பார்ட்மெண்டில் கனவுலகில் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சீட்டாடும் பயணிகள் எழுப்பும் குரல்கள் காதில் விழவில்லை. அவர்களில் ஒருவன் எதிராளியிடம் அமைதியாகத் தனது எதிர்ப்பினைக் காட்ட, மற்றொரு ஆசாமி தன் பங்கிற்கு அதே அமைதியுடன் சீட்டுக் கட்டினைப் பிரித்துப் போடுகிறான். பெண்ணொருத்தி கம்பளி நூலைப் பிரிக்க, அவளிடம் சம்பாஷித்துக்கொண்டே மற்றொருத்தி பின்னிக்கொண்டிருக்கிறாள். சுற்றிலும் நூல்கள் பின்னுபவள் தலைமுடியைப் போலவே சுருண்டு கிடக்கின்றன.

காலுறை பின்ன உதவுகிற நான்கு ஊசிகளும் தங்களுக்குள் உரசிக்கொண்டபோதும் அங்கே நிசப்தம். பின்னுகிற பெண்மணிகூட நிழல் போலத்தான் தெரிகிறாள். அவளருகே ஷத்தேய்ன்[4] கூடையுடன் இருந்த கிராமத்துப் பெண்மணிகூட நீரில் எழுதப்பட்ட ஓவியம் போல் தெரிகிறாள். சோகையான குழந்தையொன்று தனது கட்டைவிரலைச் சூப்பியவண்ணம் என்னைப் பார்க்கிறது. அக்குழந்தையைத் தீண்டவும் அதன் கன்னத்தில் முத்தமிடவும் எனக்கு விருப்பம். ஆனால் ஏதோவொன்று தடுக்கிறது. ஒருவேளை அவ்விருப்பத்தினைச் செயல்படுத்தும் எனது முயற்சி கசப்பிற்கு உள்ளாகலாம் என்கிற பயமாக இருக்கலாம். தலையில் மிருதுவான தொப்பியொன்றை அணிந்திருந்த ஆசாமி, எழுதி நிரப்பியிருந்த தாள்களைப் புரட்டுகிறார். தங்களுக்கிடையிலான ரகசியங்களைப் பறிமாறிக் கொண்டு களைத்திருக்கும் இளம் பெண்கள் முகத்தைச் சுருக்கிக் கொண்டு கிசுகிசுக்கிறார்கள். அவர்களது மயிர்க் கற்றைக்கு ஒழுங்காக க்ளிப் போடப்பட்டிருக்கிறது. அவர்களுள் ஒருத்தி தனது வெற்றுக் கால்களில் கற்பனையாகக் காலுறைத் தையலை வரைந்திருக்கிறாள். அதன் வண்ணங்கள் வெளுத்துள்ளன. அவர்களது உதட்டுச் சாயங்கூட வீரியத்தை இழந்து மங்கியுள்ளது.

சற்றுத் தூரத்தில் பதினைந்து அல்லது பதினாறு வயது மதிக்கக்கூடிய பையன் ஒருவன், நகம் கடித்துக்கொண்டு பெட்டியின் மறுகோடியில் வெளிர் பச்சைச் சீருடையில் அமர்ந்திருந்த இரு அதிகாரிகளை அவ்வப்போது சாடையாகப் பார்க்கிறான். அதிகாரிகளின் கவனம் புகைப்பதிலிருக்க, அவர்கள் பையனைப் பொருட்படுத்தவில்லை. தங்களுக்குள் உரையாடுகிறார்கள் அல்லது குறைந்தபட்சம் அவர்களது வாய் வார்த்தைகளை வடிவமைக்கின்றன. என்ன பேசுகிறார்கள் என்பது காதில் விழவில்லை. சிறுமி, கம்பளி பின்னிக்கொண்டிருந்தவள்மீது அழுந்தச் சாய்ந்து நித்திரையிலிருக்கிறாள். எதிர்பாராமல் கம்பளி நூல் பந்துகளைத் தவறவிட்ட அம்மாக்காரியின் அசைவு சிறுமியின் நித்திரையைக் கலைத்து விடுகிறது. சிறுமி கண்களை சிமிட்டியவண்ணம், மரப் பாதமிட்ட சப்பாத்தணிந்த கால்களை ஆட்டிக்கொண்டிருக்க, அம்மாக்காரி புருவத்தை நெரிக்கிறாள். எதிரே, தனக்கதில் தொடர்பில்லை என்பதுபோல விடைத்தாள்கள் திருத்துவதில் மும்முரமாயுள்ள ஆசிரியர்.

மழுங்கச் சவரம் செய்த முகம், சப்பையான தொப்பி எனவிருந்த அதிகாரி, தனது கைப்பையிலிருந்து மடிந்திருந்த காகிதமொன்றை எடுத்துப் பிரித்தவன், சக அதிகாரியிடம் கொடுக்க, அவன் இவனிடம் எதையோ கேட்டு அதற்கான பதிலுக்குக் காத்திருப்பதுபோல் தலையைச் சாய்க்கிறான். இருவரும் எழுந்து நிற்கிறார்கள். அவர்களுக்கு இடையிலான ஊமைப் பேச்சு முடிவுக்கு வந்திருந்தது. அவர்களது பார்வை பெட்டியை ஒருமுறை வலம் வந்தது. அமைதி. பயணிகள் தலையைக் குனிந்துகொண்டனர். சிறுமி மட்டும் பெட்டியின் மறுகோடிக்குச் சென்றுகொண்டிருந்த சீருடை அதிகாரிகளை பயமற்றுப் பார்க்கிறாள். சரீரத்தைக் குறுக்கிக்கொண்டு, கைகள் இரண்டையும் தோலாலான மேலங்கியின் ஜேபிக்குள் புதைத்துக் கொண்டு பையன் அமர்ந்திருக்கிறான்.

ரயில் பெட்டிக்குள் மழைக் காலத்துக்கே உரிய அடர்த்தியான பனிப்புகார். அதிகாரிகளில் ஒருவர் பையனிடம் குனிந்தபடி இருப்பதும் அவன் தயக்கத்துடன் கசங்கிய தனது அத்தாட்சிப் பத்திரத்தை அதிகாரியிடம் காண்பிப்பதும் பனிப்புகாரின் ஊடாகத் தெரிகிறது. அத்தாட்சிப் பத்திரம் மற்றொரு அதிகாரியின் கைக்கு வந்திருந்தது. அவர் எகத்தாளமாகச் சிரிக்கிறார். பையனை இரு அதிகாரிகளும் இழுத்துச் செல்கிறார்கள். பயணிகளுக்கிடையே இருந்த நடைபாதை வழியே, ரயில் பெட்டியின் கதவினை நோக்கி அவர்கள்

**கங்கு - சிறுவெளியீடு வரிசை**

**இந்தியத் தத்துவங்களின் அரசியல்**
ந. முத்துமோகன்


**சமயங்களின் அரசியல்**
தொ. பரமசிவன்

**நாட்டார் வழக்காற்றியல் அரசியல்**
ஆ. சிவசுப்பிரமணியன்

ஒவ்வொரு நூலும்
ரூ. 25, பக். 64

**பரிசல்**
1. இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94
கை பேசி **9382853646**

விளம்பரம்



செல்வதுவரை பார்த்துக்கொண்டிருந்தேன். வாகனத்திலிருந்த மற்ற பயணிகளுக்கு நடந்து முடிந்த சம்பவம் குறித்த பிரக்ஞை இல்லை. சிறுமியின் அம்மாக்காரி மட்டும் செருமிக்கொள்கிறாள். அவளுக்கு ஒருவேளை தொண்டையில் பிரச்சினை இருந்திருக்க வேண்டும். இறையைக் கவ்விச் செல்வதுபோல அரக்கர்கள் இருவரும் பையனைத் தூக்கிக்கொண்டு கதவினை நெருங்க, நான் பதட்டத்துடன் அவர்களை நோக்கி ஓடினேன். ‘ஆபத்தெனில் அபாயச் சங்கிலியை இழுக்கவும்’ – இழுக்கிறேன். ரயில் சக்கரங்கள் கிறீச்சிட்டு நிற்கின்றன.

பிறகு என்ன நடந்ததென்ற நினைவில்லை. முறையான காரணமின்றி ரயிலை நிறுத்தியதாக என்மீது குற்றச்சாட்டு. ‘இவ்வுரிமையை முறைகேடாகப் பயன்படுத்துவோர் தண்டிக்கப் படுவார்கள்.’ சுமத்தப்பட்ட குற்றத்தை மறுக்கிறேன். எனக்கேற்பட்ட நெருக்கடி காரணமாகவே அபாயச் சங்கிலியை இழுக்க நேர்ந்தது என்கிறேன் – அதாவது எனக்கேற்பட்டது அசாதாரண நிலைமையென்கிற நியாயத்தினை வற்புறுத்துகிறேன். அவர்களோ சம்பவத்தன்று நானொருத்தி மட்டும் கம்பார்ட்மெண்டில் இருந்ததாகவும் அபாயமேற்படுவதற்கான காரணமேதும் இல்லையெனவும் சொல்கிறார்கள். அபராதத் தொகை செலுத்த முடியாதெனப் பிடிவாதமாக மறுக்கிறேன்.

என்மீது குற்றம் பதிவான பிறகு, நான் அவ்வாறு நடந்துகொண்டதற்கான காரணம் என்னவாக இருக்குமென அறிய விரும்பினேன். தற்போது உயர்கல்வி படிக்கிற ரென் நகருக்குச் சென்று சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசோதித்தேன். பல மணி நேர முயற்சிக்குப் பிறகு, கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஒருவாறாக முடிவுக்கு வர முடிகிறது. அதாவது 1944ஆம் ஆண்டுவாக்கில் இரவொன்றில் டோல் நகருக்கும் சென் மாலோவுக்கும் இடையிலான இருப்புப் பாதை வெடி வைத்துத் தகர்க்கப்படலாமென அஞ்சப்படுகிறது. அவ்வச்சம் சற்றுத் தாமதமாக மெய்ப்பிக்கப்பட்டதில், விபத்தென்பதையே அறிந்திராத காலை நேரத்துச் சிறிய ரயிலொன்று வெடித்து சிதறுகிறது, எஞ்சியது சாம்பல் மட்டுமே. உண்மையில் எனக்கு ஏற்பட்டிருப்பது ஒருவிதமான பிரமை. அதாவது எனது முதலாண்டு பல்கலைக் கழகப் பாடத் திட்டத்திற்கென்று சென் மாலோ தாக்குதலை – சரியாகச் சொன்னால் 1940ஆம் ஆண்டு போரினால் ஏற்பட்ட 5,00,000 கன மீட்டர் சேதங்களை, இடிபாடுகளை – நான் ஏற்கனவே படித்திருக்க வேண்டும்.

வேண்டுமென்றே திட்டமிட்டு ரயிலை நிறுத்திய குற்றத்திற்காகவும் அதற்கான அபராதத் தொகையைக் கட்ட மறுத்ததற்காகவும் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜரானேன். இது வரை எந்தச் சிக்கலுக்குக்கும் உள்ளாகாத சராசரிப் போக்குவரத்துச் சாதனமாக ஓடிக்கொண்டிருந்த ரயிலொன்று அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் மாயத் தோற்றம் கொண்டதும் பிசாசு மனிதர்களைச் சுமந்து பயணித்ததையும் எப்படி நிரூபிக்கப்போகிறேன்? என்னைப் பைத்தியக்காரி என்று கேலி பேச மாட்டார்களா? இது மாதிரியான அனுபவங்களை உண்மையென்று யாரிடம் சொல்ல முடியும்? வக்கீல் வைத்துக் கொள்ளவும் விருப்பமில்லை. சம்பவத்துக்கு முந்தைய இரவு தாமதமாக உறங்கச் சென்றதால் காலையிலிருந்தே சோர்வுடன் இருந்ததாகவும் அப்போதே மாத்திரைகளை விழுங்க வேண்டியிருந்ததென்றும் கூறினேன் – ஆதாரமாகக் கைவசமிருந்த மாத்திரைக் குப்பியைக் காட்டினேன், மருத்துவர் எழுதிக் கொடுத்திருந்த மருந்துச் சீட்டையும் வாசித்தேன், ‘தூக்கமின்மையால் ...’. ஆக அன்றைய தினம் ரயிலில் உறங்கிப்போனதால் விபரீதமான கனவுகள் நேர்ந்திருக்கிறது. ஆபத்தெனில் அபாயச் சங்கிலியை இழுக்கவும் என்றிருக்க அதன்படி செயல்பட்டேன். ‘எப்படியான ஆபத்து?’ நீதிபதி கேட்கிறார். ‘குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?’ வற்புறுத்துகிறார். ‘கதவைத் திறந்து அவனை அவர்கள் தள்ளப் பார்த்தார்கள்.’ ‘யாரை?’ ‘பையனை.’ ‘எதைப் பற்றிப் பேசுகிறாய்?’ மீண்டும் நீதிபதி. என்னிடம்



படிப்பகம்

தடுமாற்றம், நா குழறுகிறது. இல்லை. எல்லாமே கனவுகள். நீதிபதி என்னை வெறித்துப் பார்க்கிறார். கனவுகளிடம் கவனமாய் இருப்பதற்கு நீ கற்றிருக்க வேண்டும் என்பதான குற்றச்சாட்டு அவரது கண்களில். எனது குற்ற நகலை மேசையில் அடுக்கிவைத்திருந்த மற்றவற்றோடு சேர்ப்பிக்கிறார். விரல் நகங்கள் கடிக்கப்பட்டிருக்கிற அவரது கை நடுங்குகிறது.

சமூகநலம் சார்ந்த அமைப்பொன்றில் ஒரு மாதத்திற்கு ஊழியம் செய்ய வேண்டுமென நீதிபதி எனக்குத் தீர்ப்பு வழங்கினார். நானொரு மாணவி என்பதைக் கருத்தில் கொண்டு, தண்டனைக் காலத்தை எனது கல்வியைப் பாதிக்காத வகையில் கோடை விடுமுறையில் நிறைவேற்றலாம் என சிபாரிசு செய்யபட்டது. அதன்படி ஜூலை மாதத்தில் ஒரு நாள் என்னை அழைத்திருந்தார்கள். சென் மாலோ நகரில் கிறித்துவ அமைப்புகளால் நடத்தப்படும் ரெஸ்த்தொரான் கொம்யூனொத்தேர்[5] ஒன்றில், நாளொன்றுக்கு ஐந்து மணிநேர ஊழியமென்றும் பாத்திரங்களையும் கழுவ வேண்டியிருக்கும் என்று சொல்லப்பட்டது. தவிர ஊழியத்தின்போது ஒவ்வொரு நாளும் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட வேண்டியது அவசியமென்றும் கூறப்பட்டது.


ரயில் நிலையத்திற்குச் சென்று, ரயில்களின் நேரம் குறித்து விசாரித்தபொழுது, அங்கிருந்த அலுவலர் என்னிடத்தில் அமைதியாக, 'இல்லை... இல்லை. டோல் நகரத்துல இறங்கி மாற வேண்டியதில்லை' என்கிறார். நான் 'அப்படியா? நல்லது... நன்றி' என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

லக்சுரி கோச் ஒன்றைப் பிடித்து அவர்கள் கொடுத்திருந்த முகவரிக்கு வந்து சேர்ந்தேன். அம்முகவரி நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் சுற்றுச் சுவர்களுக்குப் பின்னே இருந்தது. போரின்போது நாஜிப் படைகளுக்கு எதிராக இயங்கிய பிரெஞ்சு மக்களின் உபயோகத்திலிருந்த கட்டிடத்திற்குக் கீழே. நான்கு மாடிகளும் கிரானைட் முகப்பும் கொண்ட ஒரு கட்டிடம். பெயர்ப் பலகை என்று எதுவுமில்லை. அரசாங்க உதவிப் பணத்தில் ஏழைகளுக்கு உணவிடும் விடுதி அங்கே இயங்குவதற்கான அறிகுறி ஏதுமில்லை. போர்க் காலங்களில் இம்மாதிரியான 'ரெஸ்கோ'[5]க்கள் இருந்ததாகப் படித்ததுண்டு. இவ்வார்த்தை இன்னும் உபயோகத்திலிருக்கிறதா? இப்போதெல்லாம் 'ரெஸ்த்தோ து கேர்'[6] தானே இருக்கின்றன.

பாதாளச் சாக்கடைத் தொழிலாளி ஒருவன், மேலே அடைத்திருந்த கால்வாய் மூடியை எடுத்துவிட்டுக் கீழே இறங்குவதற்குத் தயாராக இருக்கிறான். அவனை விசாரித்தால் ஒருவேளை சரியான தகவல் கிடைக்கலாம் என்கிற உந்துதலில் முந்திக்கொண்டேன். எனக்கான தண்டனையை மறைத்து, அரசாங்கத்தினுடைய இளைஞர்களுக்கான வேலைத் திட்டத்தின் படி முகவரி ஒன்றைத் தேடி வந்திருக்கிறேன் என்கிறேன்.

'உண்மையாகவா?' அவனது கேள்வியில் சந்தேகத் தொனி. 'உன்னை யார் அனுப்பியது? இப்படியான பைத்தியக்காரர்கள்கூட இருக்க முடியுமா? நீ தேடி வந்திருக்கிற ரெஸ்த்தொரான் கொம்யூனொத்தேர் போர் முடியும் தறுவாயில் எரிஞ்சு போச்சே. இந்த நகரம் பத்தி எரிஞ்சப்போ அந்தக் கட்டிடமுந்தான் சேர்ந்து எரிஞ்சிருக்கணும். மிஞ்சினதுன்னு ஒண்ணுமில்லை. இடிந்ததை கிரானைட் கற்களால் கட்டினோம். கற்கள் காலங்காலமாய் வாழலாம். நகரங்களுக்கு உயிர் வந்து திரும்பவும் எழுந்து நிக்கலாம், வாழ்க்கை தொடரலாம், பொருட்களும் மாற்றத்துக்கு உட்பட்டு காலத்தோட ஒத்துப்போகலாம். ஆனா மனிதர்கள் நிற்க முடியாது, கடந்தே ஆகணும். உன்னை இங்கே அனுப்பியவர்களுக்குக் குழப்பம் இருந்திருக்கணும். எனக்கு என்ன நடந்ததென்று விவரமாத் தெரியலை. நான் அப்பல்லாம் இல்லை. சொல்லப்போனா

**என்னைப் பைத்தியக்காரியென கேலி பேச மாட்டார்களா? இது மாதிரியான அனுபவங்களை உண்மையென்று யாரிடம் சொல்ல முடியும்? வக்கீல் வைத்துகொள்ளவும் விருப்பமில்லை.**



பிறக்கலை. நகரத்திலிருந்த மக்கள் எல்லாரையும் வெளியேற்றியதா கேள்விப்பட்டிருக்கேன். நகரத்தை விட்டு வெளியேற விருப்பமில்லாத வங்க இடிபாடுகளுக்கு நடுவுல வாழ்ந்ததாவும், வயித்துப் பசிக்காக எப்போதாவது அவர்கள் வெளியே போயிட்டு வருவாங்கன்னும் சொல்லியிருக்காங்க. அமெரிக்கர்கள் இங்கே ஜெர்மானியர்களைக் குறிவைத்து குண்டு போட்டபோது, நீ தேடிவந்திருக்கிற ரெஸ்கோவும் ஒரு குண்டில் அழிஞ்சிருக்கணும்.'

தொழிலாளி தனது ஏணியைச் சரிபார்த்துக்கொண்டு, துவாரத்தின் கீழே இறங்க முற்பட்டவன், திறந்திருந்த சாக்கடையை மீண்டும் தலைக்கு மேலே மூடிக்கொண்டான். ரென் நகர நீதிமன்றத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மறுமுனையில், செயலாளராக இருந்த பெண்மணி சிறிது நேரத் தயக்கத்திற்குப் பிறகு, சொந்தக் காரணங்களை முன்னிட்டு நீதிபதி விடுப்பில் சென்றுள்ளதாகத் தெரிவித்தாள். விடுப்பிலிருந்து திரும்பிய பிறகு எனது தண்டனைக்கான பணியை வேறு இடத்திற்கு மாற்றலாம்.

கடற்பறவைகளின் இரைச்சல் வழக்கத்திற்கு மாறாக அன்றைக்கு அதிகம் என்றே சொல்ல வேண்டும்.

கோடை காலம் கடற்கரையில் நடந்து போகிறேன். புத்தகமொன்று கையில் இருந்தது, வாசிக்கும் எண்ணமில்லை. பாடங்கள், மறு நாளுக்காகப் படிக்க வேண்டியவையும் என் வசமிருக்கின்றன, படிக்க விருப்பமில்லை. கால்வாய் மேடையொன்றில் சாய்ந்து கொண்டு அமர்கிறேன், நீர்மட்டம் உயர்வதை அவதானித்துக் கொண்டிருக்கிறேன். ●

1. Ladies and Gentlemen — மரியாதைக்குரியவர்களே.

2. Dol-de-Bretagne: பிரான்ஸில் Saint-Maloவுக்கருகேயுள்ள சிறிய நகரம்.

3. Imitation leather

4. Chataigne -Chest-nut

5. Restaurant communautaire - Rescos - வறியவர்களுக்கு இலவச உணவிடும் விடுதி

6. Restaurant du coeur - Restos du Coeur- இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் Coluche என்கிற நடிகரால் பிரான்ஸில் ஏழைகளுக்கு இலவசமாக உணவுப் பொருட்கள் வழங்கவென்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்.



## ஆனி சொமோன்


ஆனி சொமோனின் எழுத்துக்கு நாற்பத்தைந்து வயது. இவரது பார்வையில் உலகம் முழுநிர்வாணமாய்த் தெரிகிறது. அன்றாட உலகின் அற்பங்களில், பல்லாக் காட்டாத அக்கறை. சுருக்கமாக, எளிமையாக, ஒரு சில வார்த்தைகளில், அநேகமாகத் தினமும் நாம் கேட்கின்ற பேச்சு மொழியில், சாலை ஓரங்களில், சாராயக் கடைகளில், சந்தைகளில், பள்ளிகளில், கல்லூரிகளில், பேருந்து நிருத்தங்களில் கேட்கின்ற மொழியில் வாக்கியங்களை அமைத்து, கண்ணாடி யைக் கையாளுவதுபோன்று கவனமாக, பெரும்பாலும் சொற்ப பக்கங்களில், சுவாரஸியமாகச் சொல்கிறார்.

1927 ஆம் ஆண்டு ஜெர்பூரில் (Cherbourg) பிறந்த ஆனி சொமோன் மிக இளவயதிலேயே வாசிக்க ஆரம்பித்தவர். இந்த இளம்வயது வாசிப்புத் தாகமே விரைவில் அவரது நுண் அனுபவங்களை, மென்மையான உணர்வுகளை எழுத்தில் சொல்ல தூபம் போட்டிருக்கிறது.

அறுபதுகளில் இவரது படைப்புகள் 'இன்றைய முன்னிரவு குறித்து எனக்குப் பயம் (Ce soir, j'ai peur)', 'பாலை நிலங்களில் நடப்பது அல்லது மௌத் ஹார்ன் வாசிப்பது' (Marcher dans les déserts ou jouer de l'harmonica) வெளிவந்தன. அதற்குப் பிறகு இவர் சிறுகதை உலகில் நாட்டம் கொண்டார். 1981ஆம் ஆண்டு இவரது 'விசேடம் மற்றும் பண்டிகையின்போது சிலவேளை' (Quelquefois dans les ceremonies) என்கிற சிறுகதைத் தொகுப்பிற்கு பிரெஞ்சு இலக்கிய உலகின் முக்கியப் பரிசான 'Goncourt Prix' கிடைத்து. பிறகு வரிசையாக இவரது சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்தன: 1989இல் பூமி நம்முடையது (La Terre est à nous), அதே ஆண்டே சிறுகதைகளுக்கான Grand Prix பரிசை வென்ற 'நான் சரக்கேற்றும் வாகனமல்ல (Je suis pas un camion), 1990இல் 'எனக்குக் குழந்தைகளென்றால் பிடிக்காது' (Moi les enfants j'aime pas tellement), 'அடடா! இதுதான் நல்ல நேரம்' (Les Voila quel bonheur-1990). இச் சிறுகதைத் தொகுப்பு 1993ஆம் ஆண்டுக்கான Renaissance de la nouvelle பரிசினை வென்றது. 'எப்போதும் போல இருட்டு' (Noir comme d'habitude - 2000), பால் ஒரு வெண்ணிறத் திரவம் (Le lait est un liquide blanc, 2002), 'வீட்டில் ஒரு மாலை நேரமும் கோதுமையும்' (Les Blés et un soir à la maison, 2003). அதே ஆண்டு, இதுவரை வெளிவந்துள்ள ஆனியின் படைப்புகளைப் பெருமைபடுத்தும் வகையில், பிரெஞ்சு மொழி சங்கம் சிறுகதைகளுக்கான பரிசொன்றினை அளித்து இவரை கௌவரவித்தது. சொமோனின் சமீபத்திய படைப்பு 'போர் அறிவிக்கப் பட்டுவிட்டது' (La guerre est declarée) என்ற சிறுகதைத் தொகுப்பு. இவர் வி.எஸ். நைபால், நடின் கார்டிமர், ஷான் ஃபோலெஸ் ஆகியோரின் படைப்புகளை பிரெஞ்சுக்கு மொழி பெயர்த்திருக்கிறார். ●

www.padippakam.com





# பெண்களின் கழுத்தில் தொங்கும் அலங்காரச் சங்கிலி

ப்ரேமா ரேவதி

"திருமணம் என்பது சட்டபூர்வ விபச்சாரமே" என்று பேச இன்று பெரியார் இல்லை.

திரும்பிய பக்கமெல்லாம் புற்றீசல்கள்போலக் கிளம்பிவிட்டார்கள் கலாச்சாரக் காவலர்கள். ஐயோ, கோபித்துக்கொள்வார்கள்– 'தமிழ்' கலாச்சாரக் காவலர்கள்.

இவர்கள் எந்தக் கூச்சமுமில்லாமல் ஆயிரங்கால ஆணாதிக்க பூட்ஸ் அணிந்து முன்னர் முழங்கிய போலிப் பெண்ணியத்தின் சுவடுகூட இல்லாமல் கிளம்பி இருக்கிறார்கள்.

தங்கர் பச்சான் தமிழ்க் கலாச்சாரத்தைக் கட்டிக் காப்பாற்ற, பணிபுரியும் உதவியாளர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்காமல், மிகக் கஷ்டப்பட்டு எடுத்துவந்த திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் தொடங்கியது சர்ச்சை. தங்கர் பச்சானின் தமிழ்க் கலாச் சாரப் பாதுகாப்புப் பணியான திரைப்படமெடுத்தலை நவ்யா நாயர் என்ற நடிகை, கேவலம் தனக்குச் சிகையலங்காரம் செய்யும் உதவியாளரின் சம்பள பாக்கியைக் காரணம் காட்டித் தடை செய்ததுதான் அவருடைய ஆவேசத்திற்குக் காரணம்.

ஒருநாள் படப்பிடிப்பு தடையானதால் பாதிக்கப்பட்ட தங்கர் பச்சான், பணத்திற்காக மட்டும் திரைப்படத்தில் நடிக்கும் நடிகைகள் 'விபச்சாரி'யைப் போன்றவர்கள் என்று கூறித் தமிழ்க் கலாச்சாரத்தின் 'தொழிலாளர் கொள்கை'யை அறிவித்தார்.

பல வேளைகளில் சொந்தக் குடும்பத்தால் விற்கப்பட்டு, வறுமையில் தள்ளப்பட்டு, 'விபச்சாரம்' தேவையாய் இருக்கும் 'தமிழ்' சமூகத்தின் மிக அவலமான இடுக்குகளில் சிக்கிக்கொண்டு உடல் ரீதியாகக் கொடூரமான வன்முறைகளை எதிர்கொண்டு, சட்டத்தினால் அநியாயமாக (பாலியல் தொழிலாளரிடம் செல்லும் ஆணுக்குத் தண்டனையில்லை) அவமானப் படுத்தப்பட்டு (செல்ஃபோன் அழகி கைது – படத்துடன் செய்தி), தண்டிக்கப்பட்டு வரும் பாலியல் தொழிலாளர்கள் துடைப் பக்கட்டையும் செருப்புமாகத் தங்கர் பச்சான் வீட்டுக்குச் சென்றிருக்க வேண்டும். விட்டு விட்டார்கள்.

இன்னொரு புறம் பொதுவாகப் பாலியல் தொழிலைப் பற்றிச் சமூகத்தில் பலருக்கும் இருக்கும் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் நடிகைகளைப் பற்றிய தங்கர் பச்சானின் பேச்சு எவ்வளவு அசிங்கமானது என்பது விளங்கும்.

தன்னிடம் வேலைபார்க்கும் உதவியாளர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் சம்பள பாக்கியைக் கேட்கும் ஒரு நடிகை விபச்சாரி என்றால், மிகக் குறைவான சம்பளம் வாங்கும் சிகையலங்காரம் செய்பவர் போன்றோரின் வயிற்றில் அடித்து லாபம் சம்பாதிக்கத் துடிக்கும் ஒருவரை என்ன சொல்லி அழைப்பது?

பொதுவாகத் தங்கள்மீது வாரி இறைக்கப்படும் சகதியைச் சகித்துப் பழகிய நடிகைகள் முதல் முறையாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். மனோரமா, குஷ்பு முன்நின்றார்கள். தங்கர் பச்சான் கைகூப்பி மன்னிப்புக் கேட்டார்.

ஒரு பெண்ணை அவள் நடிக்க வந்துவிட்டாள் என்பதற்காக 'விபச்சாரி' எனக் கூறியதைக் கேட்டு கொதிக்காத



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் ரத்தம், தங்கர் பச்சான் என்ற தமிழ் ஆண் கைகூப்பி மன்னிப்புக் கேட்டதும் பொங்கி எழுந்தது.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் திருமாவளவன் நடிகைகள் அரைகுறை ஆடை அணிந்து நடிப்பதை நிறுத்திவிட்டு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக் கட்டும் என்று பேட்டியளித்தார். தொடையையும் தொப்புளையும் காட்டி நடிப்பதை விட்டபின் இப்படிப் பேசுங்கள் என்று கவிஞர் அறிவுமதி கடிதம் எழுதினார். இவர்கள் இருவருமே தங்கர் பச்சான் தமிழ் உணர்வாளர் என்பதால் அவமானப்படுத்தப்படுகிறார் என்று கூறியிருக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? இப்படியெல்லாம் நடிப்பதை நிறுத்தும்வரை விபச்சாரிப் பட்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதுதானே?

அரைகுறை ஆடையணிந்து நடிக்கும் நடிகையை விபச்சாரி என அழைப்பது சரியென்றால், இப்படிப் பட்ட காட்சிகளை இயக்கும் தமிழ் ஆண் இயக்குநர் களை எப்படி அழைப்பது? இத்திரைப்படங்களைத் தயாரிக்கும் தமிழ் ஆண் தயாரிப்பாளர்களை எப்படி அழைப்பது?

உள்ளார்ந்து பார்த்தால், பெண்கள் மோசமான உடையணிவதால் கேலிவதை (eveteasing) செய்யப் படுகிறார்கள், பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகும் பெண்களில் பலர் நடத்தை சரியில்லாதவர்கள் என்று பெண்களின் மேல் நடைபெறும் ஆணாதிக்க நிலை நிறுத்தல் வன்முறைகளுக்கு அவர்களையே காரண மாய்க் காட்டும் ஒரு முயற்சியின் தொடர்ச்சியே இது.

இன்னொரு புறம் பெண் என்பவள் வெறும் உடலாகவும் நடிகை போன்ற பல ஆண்களுடன் நெருக்கமாக நடிக்கும் பெண்கள் வெறும் பாலியல் உறுப்புகளாகவும் பார்க்கப்படும் அவலம்.

"ஒரு பொட்டச்சி, அதுவும் காசு குடுத்தா எவனை வேணா கட்டிப் புடிக்கிற ஒரு நடிகை, ஒரு ஆண்மகனை, அதுவும் தமிழனை அவமானப்படுத்துவதா" என உறுமிய பல உள்ளுணர்வுகளுக்குத் தீனியாய் கிடைத் தது குஷ்புவின் இந்தியா டுடே கருத்து.

முன்னாள் தமிழ்ப் பாதுகாப்புப் பாசறையிலிருந்து வெளியாகும் 'ஈவினிங் டெய்லி' இவ்விஷயத்தை ஊதிப் பெரிதாக்கித் தன் தமிழ்ப் பங்கை ஆற்றியது.

பாலியல் சுதந்திரமா? திருமணத்திற்கு முன் உடலுறவா? அபச்சாரம் அபச்சாரம் என்று போராட் டம் வெடித்தது.

இங்கேதான் ஆணாதிக்க சாமர்த்தியம் உட்புகுந்தது. தத்தம் பெண்கள் அமைப்புகளை கையில் துடைப்பமும் செருப்பும் கொடுத்து அனுப்பி வைத்து அவர்களைத் தங்களுடைய ஆணாதிக்க அரிப்புக்குக் கேடயமாய் நிறுத்திக்கொண்டனர் ராமதாசும் திருமாவளவனும்.

தமிழகத்தில் இன்னமும் சில ஊர்களில் தலித் பெண்கள் திருமணம் முடித்தால் முதலில் உயர் சாதி ஆண்களுடன் படுக்க வேண்டும் என்ற சாதிவெறிச் செயல்களைக் கண்டித்து வெடிக்காத போராட்டம் குஷ்புவுக்கு எதிராய் வெடித்தது.


சலுகை விலையில் பெற முன் வெளியீட்டு திட்டம்

(தமிழின் முதல் பன்முக (CUBIST) நாவல்)

எம்.ஜி. சுரேஷின்

அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்

நூல் விரைவில் ஆங்கிலத்தில் வெளிவருகிறது

ATLANTIS MAN AND OTHERS

M.G. SURESH

ஆங்கில வடிவாக்கம்: லதா ராமகிருஷ்ணன்

விலை: ரூ 325/– முன்பதிவு தொகை: 190/–

பதிவு செய்ய இறுதி நாள்: 31.12.2005

பணவிடையாகவோ/ வரைவோலையாகவோ Pudhu Punal என்கிற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்

PUDHU PUNAL

5/1, I Floor, Palani Andavar Koil Street, Ayanavaram, Chennai - 600 023

Cell: 9884427997


தமிழகத்தின் பல்வேறு ஏழைக் கிராமங்களில் காதலித்துக் கர்ப்பம் தரித்துக் குழந்தையும் பெற்று காவல் நிலையங்களில் மரபணுப் பரிசோதனையின் மூலம் குழந்தையின் தந்தை யார் என்று நிரூபிக்க வசதியின்றிக் காத்திருக்கும் இளம்பெண்களின் நல்வாழ்வுக்குப் போராட்டம் நடத்த முன்வரவில்லை இந்தப் பாதுகாவலர்கள்.

இதையெல்லாம் விடுங்கள். இப்போது நடிகைகளைப் பற்றி இவ்வளவு பேசுபவர்கள் தமிழ்த் திரைப்படங்கள் பெண்களைக் கொச்சைப்படுத்தி, பெண்களை அரை குறை ஆடைகளோடு சித்தரித்ததை எதிர்த்து ஒரு போராட்டம்கூட நடத்தியதில்லை இவர்கள். இதே குஷ்பு கவர்ச்சிகரமாய் நடித்தபோது பதறாத இவர்கள் இப்போது பத்திரிகையில் எழுதியதும் ஏன் குதிக்கிறார்கள்?

சாதியத்தைக் கட்டிக் காப்பாற்றும் மிக முக்கியக் கருவியான அக மண முறையைப் போன்று பெண்ணடி மைத்தனத்தைக் கட்டிக் காப்பாற்றும் மிக முக்கியக் கருவி கற்பு என்ற கருத்தாக்கம். அதன் செயல்முறை வடிவம் குடும்பம் என்ற அமைப்பு.

எல்லா ஆதிக்கக் கருத்தாக்கங்களையும் போலக் கற்பும் பெண்களின் மூளைக்குள்தான் முதலில் பதிக்கப்பட்டுள்ளது. நடைமுறை வாழ்க்கையில் ஏற் படும் மீறல்களைவிடக் 'கற்பு' என்ற புனிதக் கோட் பாட்டின் மீறல் மிக அடிப்படையானது.



படிப்பகம்

www.padippakam.com



கலாச்சாரம், பண்பாடு என்பதெல்லாம் இந்தக் கோட்பாட்டை விழுங்க வைக்கக் கற்பின் மீது அடிக்கப்பட்ட இனிப்புப் பூச்சுதான். அதனால்தான் எல்லாக் காலங்களிலும் பண்பாடு என்பது பெண்களின் கழுத்தில் தொங்க விடப்பட்ட அலங்கார விலங்காகிறது. ஒரு நாட்டின், ஒரு தேசிய இனத்தின், ஒரு சாதியின், ஒரு குடும்பத்தின் (ஒரு ஆணின்) மானம் இவற்றில் உள்ள பெண்களின் கற்பால் தீர்மானிக்கப்படுகிறது.

இன்றைய சர்ச்சையில் குஷ்பு ஒரு குறியீடு மட்டுமே. பாலியலைப் பற்றிப் பெண்கள் பேசக் கூடாது. அப்படியே பேசினாலும் அவர்கள் சுத்தமான கற்புடையவர்களாய் இருக்க வேண்டும் என்ற போலித்தனமான நிலைப்பாட்டின் வெளிப்பாடுதான் இந்த வாதப் பிரதிவாதங்கள்.

இதைப் பற்றி யாரிடமாவது பேசினால் "தேள் கொட்டினா மாதிரி பேசறீங்க" எனக் கொக்கி போட்டு, பேசியவரின் பாலியல் வரலாற்றை அல்லது கற்பைக் கேள்விக்குள்ளாக்குகிறார்கள்.

பாலியல், உரிமைகள் குறித்த கருத்துகளை எந்த ஒரு பெண் கூறினாலும் அது அவளுடைய சொந்த வாழ்வின் அனுபவமாகவும் அவள் நடத்தை குறித்த ஆதாரமாகவும் ஆக்கப்படுகிறது. தான் சொல்லும் ஒவ்வொரு கருத்தையும் தன் உடலால் சுமக்க வேண்டிய கட்டாயம் பெண்ணுக்கு மட்டும் இருக்கிறது.



பாலியல், உரிமைகள் குறித்த கருத்துகளை எந்த ஒரு பெண் கூறினாலும் அது அவளுடைய சொந்த வாழ்வின் அனுபவமாகவும் அவள் நடத்தை குறித்த ஆதாரமாகவும் ஆக்கப்படுகிறது. தான் சொல்லும் ஒவ்வொரு கருத்தையும் தன் உடலால் சுமக்க வேண்டிய கட்டாயம் பெண்ணுக்கு மட்டும் இருக்கிறது.

ஒடுக்க வேண்டிய அவசியம் தன் தலைமேல் உட்கார்ந்திருப்பவனுக்கு இருக்கிறது என்று புரிந்து பேச வேண்டும் என்பதின் அடிமைத்தன நிலைநிறுத்தலைச் சுட்டிக் காட்டுவதே இந்தக் கேள்வியின் நோக்கம். மேலும், "ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் அன்பு சிதறாமல் நம்பிக்கை சிதையாமல் குடும்ப உறவுகளைப் பாதுகாப்போம். அப்போது புனிதப் பூச்சுகள் உதிர்ந்துபோகும்" என்று கூறியிருக்கிறீர்கள்.

கற்பின் பெயரால் பெண்களை உடலாய், உடைமையாய் மாற்றிக் குடும்பச் சிலுவையில் அறைவது அன்பின் பெயரால் நடக்குமென்றால் அங்கே நம்பிக்கைக்கு வேலையில்லை. நம்பிக்கையின் அடிப்படையிலான, சமமான ஆண்–பெண் உறவில் கற்பு தனி மனித ஒழுக்கமாக, அடிப்படை நேர்மையாக உறவை பலப்படுத்துகிறது.

ஆனால் சமூகத்தின் ஒட்டு மொத்த (புனித) உணர்வாகக் கட்டமைக்கப்படும் கற்பு, ஆண், பெண் இருவருக்கும் உள்ள வேறுபட்ட பாலியல் சுதந்திர நிலைகளை வலியுறுத்துகிறது. ஆணின் பாலியல் உடைமையாகப் பெண்ணைச் சுருக்குகிறது.

புனிதப் பூச்சுகள் குடும்பத்தைப் பாதுகாப்பதால் உதிராது. மாறாக, புனிதப் பூச்சுகளின் அடியில் இறுகிப்போயுள்ள ஆணாதிக்கம் இன்றைய ஜனநாயகமற்ற குடும்பத்தால் நிலைநிறுத்தப்படுகிறது.

திருமாவளவனுக்கோ தங்கர் பச்சானுக்கோ அவர்களின் 'கற்பு' கேள்வி கேட்கப்பட முடியாத, கொச்சைப்படுத்த முடியாத விஷயமாகிறது.

"இச்சமூகக் கட்டமைப்பின் அடிப்படையை உணராத, குடும்ப உறவுகளாய் வளர்ந்துள்ள உடைமை உறவுகளின் வரலாற்றுப் பின்னணியை உணராத, உடனடி எதிர் வினைகளைப் புரியாத, வறட்டுப் பெண்ணியத்தின் உளறலாக" குஷ்புவின் பாலியல் சுதந்திரம் குறித்த கருத்தை விமர்சிக்கும் திருமாவளவனுக்கு ஒரு கேள்வி:

இதே வரையறையை சாதியத்தின் கொடூர ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டத்திற்குப் பொருத்திப் பார்க்க நீங்கள் தயாரா?

வறட்டுத்தனமாக சாதிய ஒடுக்குதலும் பெண்ணடிமைத் தனமும் ஒன்று எனக் கூறுவது இதன் நோக்கமல்ல. ஒடுக்கப்படும் ஒரு பிரிவு தன்னை

பெண்ணை உடலாக மட்டும் இல்லாமல், உடைமையாக இல்லாமல் சக மனுஷியாக, உணர்வுகளும் அறிவும் உள்ளவளாக எல்லா வகையிலும் ஆணுக்குச் சமமானவளாக சமூகம் ஏற்றுக்கொள்ளும்போது குடும்ப அமைப்பு பெண்ணுக்கு ஒரு விதமாய் ஆணுக்கு ஒரு விதமாய் இல்லாமல் ஜனநாயகப்படுத்தப்படும்.

இதற்கு முதல் படியாகப் புனிதப் பூச்சுகள் அடித்து நொறுக்கப்பட வேண்டும். பெண்களாலும் ஆண்களாலும்.

•

இதழியலாளராக இருந்த ப்ரேமா ரேவதி, திரைப்பட உதவி இயக்குநராகவும் பணிபுரிந்திருக்கிறார். பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட ரீட்டா மேரி பற்றி 'உங்களில் ஒருத்தி' என்னும் குறும்படத்தை இயக்கியிருக்கிறார்.




படிப்பகம்

www.padippakam.com



# குஷ்பு இட்லியும் தமிழ் அடிப்படைவாதமும்

மாலதி மைத்ரி



தமிழ்ச் சமூகம் ஈராயிரமாண்டு இலக்கியப் பாரம்பரியமும் பல்லாயிரமாண்டு வரலாற்றுப் பாரம்பரியமும் கொண்டது. அறம், ஒழுக்கம் என்ற வாழ்வின் அடிப்படைகளைப் போதிக்கும் பிரதிகளான அல்லது அறம், ஒழுக்கம் இவற்றைக் கைவிடும் மனிதர்களின் துன்பத்தை விவரிக்கும் பிரதிகளான இவற்றில் தமிழ் மனம் மற்றும் தமிழ் வாழ்வின் சாராம்சம் படிந்துள்ளது. அறம், ஒழுக்கம் என்பவை தனி மனிதராலோ குழுவாலோ கடைப்பிடிக்க இயலாதவையாக மாறும்போது அதைப் பற்றித் தொடர்ந்து பேசுவதும் வலியுறுத்துவதும் ஒரு சமூகத்திற்குத் தேவையாகிறது. இதைத்தான் நம் இலக்கியங்கள் தொடர்ந்து செய்துவந்துள்ளன.

பெண்ணின் சமூக மதிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டு ஆணின் நலன்கள் முன்னெடுக்கப்பட்டும் ஆணாதிக்க மேலாண்மை உறுதிசெய்யப்பட்டும் இலக்கியங்கள் உருவாக்கப்படும்போது அவை அறம், ஒழுக்கம் போன்றவற்றை மீறும் அதிகாரத்தை ஆணுக்கு வழங்கிப் பெண்ணை மட்டும் முடக்கிவைக்கின்றன. தனது சந்ததியைத் தாங்கிப் பேணி வளர்த்துச் சொந்த ரத்த உறவைக் காப்பாற்றும் தாதிகள் ஒரு பகுதியாகவும் தனது வரைமுறையற்ற பாலியல் இன்பத்தை அனுபவிக்கத் தேவையான பரத்தைகள் ஒரு பகுதியாகவும் பெண்ணினத்தை இரண்டாக்குகிறது. இரண்டாம் பகுதியினரை இழிவானவர்களாக நிறுத்திச் சமூகத்தின் ஒட்டுமொத்த வெறுப்பையும் அவமதிப்பையும் புறக்கணிப்பையும் முதற்பகுதிப் பெண்களின் மூலமாகவே செலுத்துகிறது. ஆனால், முதற்பகுதிப் பெண்கள் பரத்தைகளிடம் உறவாடிவிட்டு வரும் கணவனையோ காதலனையோ புறக்கணிக்க முடியாது. அதற்கு அவர்களுக்கு எவ்வித உரிமையையும் இச்சமூக இலக்கியங்கள் வழங்கவில்லை.

ஒழுக்கம் என்பது சங்க காலத்திலேயே பெண்ணின் பாலியல் ஒழுக்கம் என்று திரிக்கப்பட்டு ஆணின் பாலியல் துய்ப்புக்கும் பாலியல் வன்முறைக்கும் வரைமுறையற்ற அதிகாரத்தைத் தமிழ்ச் சமூகம் வழங்கிவிட்டது. குற்றவுணர்வுடைய ஆண் மனம் சதா தொல்லைக்குள்ளாகிறது. தன் மனைவி எக்கணத்திலும் தன்னைப் பழி தீர்த்துக்கொள்வாள் என எண்ணி அஞ்சுகிறது. அந்த அச்சத்திலிருந்து மீளவும் தன் சமூகநிலையை உறுதி செய்துகொள்ளவும் பெண்ணின் உடல் இயக்கத்திற்கு எல்லையற்ற சட்டதிட்டங்களையும் விதிமுறைகளையும் வகுக்கிறது. அச்சட்டதிட்டங்கள் குடும்பத்தின் மூலம் பெண்ணுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. இவற்றை மீறும் பெண்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகளை வழங்குகிறது. இவற்றைக் காப்பாற்றும் பெண்களைத் தெய்வமாக்கிக்கொண்டாடுகிறது. ஒரு ஆண் தனக்கு வழங்கப்பட்ட பெண்ணைத் தவிர வேறு பெண்களுடன் உறவுகொள்வது அதிகபட்ச இன்பமாகவும் கொண்டாட்டமாகவும் ஆண்மையின் பெருமையைக் கூறுவதாகவும் இருக்கிறது. ஆனால் ஒரு பெண் தனக்கு வழங்கப்பட்ட ஆணைத் தவிர வேறு ஆண்களுடன் உறவுகொள்ளுதல் என்பதைவிட நட்பு கொள்ளுதல் என்பதுகூட மரணத்தை நோக்கிய விழைவாகிவிடுகிறது.


ஆணின் வரைமுறையற்ற பாலியலைக் கொண்டாடும் பேரிலக்கியங்களுக்கு ஈடாக நாட்டுப்புறக் கதைகள் பெண்ணின் பாலியல் மீறலைப் பதிவு செய்கின்றன. எல்லா விளைவுகளுக்கும் எதிர் விளைவு உண்டு என்னும் விதிப்படி ஆணின் வரைமுறையற்ற பாலியல்



படிப்பகம்

www.padippakam.com





துய்ப்பு வெளிப்படையானது என்றால் பெண்ணின் வரைமுறையற்ற பாலியல் துய்ப்பு ரகசியமானது. ஆனால் ஆணாதிக்கச் சமூகம் இந்த யதார்த்தத்தை மறைக்க முயலுகிறது. ஏனெனில் தனது அதிகாரம் ஒரு இடத்தில் இல்லாமல் ஆக்கப்படுவதை ஆணால் ஏற்க முடிவதில்லை. தன் கீழே பெண் அடங்கி யிருக்கிறாள் என்பதன் மூலம் அடையும் மகிழ்ச்சியை ஒரு ஆணால் இழக்க முடிவதில்லை. ஒரு பெண்ணின் இயக்கம் முற்றாக ஒரு ஆணின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடும்போது அவனால் கொல்லப்படுகிறாள். அக்கொலையாளி சமூக மானத்தைக் காத்த மாவீர னாக என்றும் கொண்டாடப்படுகிறான். இதன்மூலம் சமூகம் மீண்டும் ஆணின் ஆளுகைக்குள் பெண் உட்பட்டவள் என்பதைப் பகிரங்கமாக அறிவித்து உறுதிசெய்கிறது.

ஒரு சமூகம் எந்த அளவுக்குப் பெண்களை ஒடுக்குகிறதோ அந்த அளவுக்கு அது பிற சமூகத்திடம் அடிமைப்பட்டும் அடிபணிந்தும் கிடக்கும். ஒரு சமூகத்தில் அறம், பொருள், இன்பம் என்னும் சொற்களின் அர்த்தம், பெண் × ஆண் என்னும் இரு பாலர்களுக் கிடையே வேறுபடும்போது அச்சமூகம் ஆண்டான் × அடிமை என்னும் உளவியலால் இயக்கப்படுகிறது. தமிழர்கள் இந்த உளவியலால் கட்டமைக்கப்பட்டவர் கள். ஒரு பெண்ணின் சுதந்திரத்தால் இனத் தூய்மை யும் இனத் தொடர்ச்சியும் பாதிக்கும் என நம்பும் ஒரு சமூகம் தன்னை வேறொரு சமூகத்தின் காலடியில் எழவே முடியாதபடி ஒப்படைத்துவிடுகிறது. மறத் தமிழனின் வீரத்தைப் பற்றி மார்தட்டிக்கொள்ளும் தமிழன் 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பிற நில/ நாட்டினரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது ஏன்?

உலகிலேயே அதிகமாக வைரம், தங்கம், தாமிரம் மற்றும் அடர்ந்த காடுகளையும் உயிரினங்களையும் இயற்கை வளங்களாகப் பெற்ற ஆப்பிரிக்கத் தேசங்கள் வல்லரசாக முடியவில்லை. ஆனால் ஆப்பிரிக்காவின் வளங்களை அவர்களை வைத்தே கொள்ளையிட்ட ஐரோப்பிய நாடுகள் இன்று வல்லரசாக இருக்கின்றன. மீளவே முடியாத நோய்களுக்குள்ளும் வறுமைக்குள் ளும் உள்நாட்டுப் போருக்குள்ளும் சிக்கி மடிந்து கொண்டிருக்கிறது ஆப்பிரிக்க இனம். தன் இனப் பெண்ணை அதிகமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் ஒரு சமூகம் தாழ்வுற்று இருக்க நேர்கிறது. இன்றும் இச்சமூகங்களில் பெண்களின் க்ளிடோரிஸ் வெட்டப் படுகிறது. முகம் சிதைக்கப்படுகிறது. உதடுகள் துளையிடப்பட்டு மண் தட்டு செருகப்படுகிறது. சில ஆப்பிரிக்கச் சமூகங்களில் திருமணத்திற்கு முன் குழந்தை பெற்றுவிட்ட பெண் கல்லெறிந்து கொல்லப் படுகிறாள்.

உலகமே இன்று பெட்ரோலியப் பொருள்களால் இயங்கிக்கொண்டிருக்கிறது. அரபு நாடுகளில் இன்று பெட்ரோல் எடுப்பது நிறுத்தப்பட்டால் உலகின் இயக்கமே குலைந்துவிடும். உலக இயக்கத்துக்கு எரி பொருளைக் கொடுக்கும் அரபு நாடுகள் எந்நாளும் வல்லரசாக முடியாது. இவை பெண்களின் புழங்கு வெளியையும் காலத்தையும் கட்டுப்படுத்துகின்றன. பெண் உடல்மீது தனது எல்லையற்ற உரிமையை நிலைநிறுத்த எந்நேரமும் கவனத்துடன் இயங்கும் ஒரு சமூகம், ஏதாவது ஒரு சமூகத்தின் அல்லது பன்னாட்டு நிறுவனத்தின் மேலாதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டும் சுரண்டப்பட்டும் தன்னுரிமை இழந்தும் கிடக்கும் என்பதற்கு அரபுத் தேசங்கள் உதாரணமாகின்றன. சமூகத்தின் சரிபாதியான பெண்களின் பங்கெடுப்பு இல்லாமல் எந்த ஒரு நாடும் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் வெற்றி யையோ மாபெரும் அறிவுப் பாய்ச்சலையோ சாதித்து விட முடியாது. நவீன காலத்தின் பொருளாதார வாழ்வியல் போக்கிலிருந்து பெண்களை விலக்கிவைக்க முயலும் சமூகம் விரைவில் தன்னையே அழித்துக் கொள்ளும், அல்லது அந்நிய சக்தியால் அழிக்கப்படும். எந்தச் சமூகம் பெண்களுக்குப் பரவலான உரிமையை யும் நீதியையும் வழங்குகிறதோ அச்சமூகம் முன்னேறிய சமூகமாகவும் மேலாதிக்கம் செலுத்தும் சமூகமாகவும் மாறும். அச்சமூகத்தில்தான் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழும். தன்னைத்தானே அறிவியல் கண்டுபிடிப்புகளால் புதுப்பித்துக்கொள்ளும் சமூகம் தான் வலிமையுடையதாக மாறும்.

சாதி, மதம், இனம் இவற்றின் அடிப்படையில் எழும் தேசியம் மற்றும் சமூகக் கட்டமைப்புகள், பெண்ணின் உடலை மையமாக வைத்து இயங்கு கின்றன. சாதித் தூய்மை, மதத் தூய்மை, இனத் தூய்மை இவற்றை மையமாக வைத்து இயங்கும் சமூக அமைப்புகள் பெண்ணின் தூய்மை என்பதை வன்முறையுடன் வலியுறுத்துகின்றன. தமிழர்கள், குறுநில மன்னர்களாக ஆட்சி செய்தபோது படையெடுப்பில் கைப்பற்றிய தமிழச்சிகளைப் பரத்தைகளாக்கிப் பொது மகளிராக்கிவைத்தவர்கள். பேரரசர்கள் படை யெடுப்பில் கைப்பற்றிய தமிழச்சிகளைத் தாசிகளாக்கிப் பொது மகளிராக்கிவைத்தவர்கள். மேல் சாதிப் பண்ணையார்கள் கீழ் சாதித் தமிழச்சிகளைக் கொத்தடிமைகளாக வைத்துப் பொது மகளிராக்கியவர் கள். இன்று நவீன விஞ்ஞான வளர்ச்சியில் தனியார் கம்பெனி மற்றும் அரசுப் பொது நிறுவனங்களில்



படிப்பகம்

வேலைக்குச் செல்லும் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்குவதும் நம் தமிழர்கள்தான். நம் தலித் பெண்களைக் கூட்டாகப் பாலியல் வன்முறைக் குள்ளாக்குவதும் நம் சாதித் தமிழர்கள்தான். நம் தமிழ்ப் பழங்குடிப் பெண்களைப் பாலியல் வன்முறைக் குள்ளாக்கியதும் நம் தமிழ் அதிரடிப்படைதான். சிறுமிகளுக்குப் பாலியல் கொடுமை இழைக்கும் உறவினர்களும் நம் தமிழர்கள்தான். இன்று தமிழ் நிலத்தில் பிழைப்பற்று, மாற்றுப் பிழைப்பின்றி, நெடுஞ்சாலையோரம் பாலியல் தொழிலாளியாக்கி நிற்க வைத்ததும் நம் தமிழ் அரசியல்வாதிகள்தான். தமிழ்ச் சமூகம் இவ்வளவு பெண் உடல்களைச் சூறையாடியதைக் கொண்டாடி மகிழும் விதமாகத் தமிழ் சினிமாவும் பெண்களை ஆணுக்கான காட்சி விருந்தாகப் படைக்கிறது. கோடிக்கணக்கான தமிழ் ஆண்களின் கனவுக் கன்னிகளாக அந்தந்தக் கால நடிகைகள் இருப்பதன் உளவியல் இன்னும் கேள்விக் குள்ளாக்கப்படாமலேதான் இருக்கிறது. குஷ்பு இட்லியைக் கலாச்சார உணவாக்கிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் தமிழர்கள்.

பெண்ணைப் போற்றும், தெய்வமென மதிக்கும் ஒரு சமூகம் எனத் தன்னை எப்போதும் முன்மொழிந்து கொள்ளும் ஒரு சமூகத்தின் வரலாறுதான் மேலே கூறப்பட்டது. இதன்வழி வளர்ந்த சமூகம், வளர்த்தெடுக்கப்பட்ட சமூகம் எப்படி ஆரோக்கியமான சமூகமாக இருக்க முடியும்? இச்சமூகத்தின் ஆண் உடல் பசியைத் தீர்த்துக்கொள்ளச் சிறுமிகள் வேண்டும். காதலிகள் வேண்டும். மனைவிகள் வேண்டும். பொது மகளிர் வேண்டும். அரவாணிகள் வேண்டும். விளம்பரங்கள் வேண்டும். திரைப்படங்கள் வேண்டும். இவை கலாச்சாரப் பெருமையாகப் படவும் வேண்டும்.

சமீபத்தில் நடிகை குஷ்பு தமிழ்ப் பெண்களின் கற்பைக் குறைத்து மதிப்பிட்டுக் கருத்துச் சொன்னார் என்று காரணம் கூறித் தமிழ் அமைப்புகள் என்ற பேரில் சில கட்சிகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் செருப்பு, துடைப்பம் போன்றவற்றைக் கையிலேந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர் (செருப்பும் துடைப்பமும் மட்டுமல்ல; அரிவாள்மனையும் பெண்ணுக்கான ஆயுதம்தான். ஆனால் கட்சியினர் பெண்களிடம் அதைத் தரவில்லை. பயம் காரணமோ?). அந்நடிகையின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. அந்நடிகை மீது தமிழ்நாடு முழுவதும் 30க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டன. இங்கு மீண்டும் பெண்கள் இருநிலைகளில் நிறுத்தப்பட்டார்கள். ஒன்று – குடும்பப் பெண், மற்றது – சினிமா நடிகை என்ற ஒரு பொது மகள். அவர் கூறிய கருத்து மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்ததற்கு வேறு சில காரணங்களை அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள். குஷ்புவின் அரசியல் பிரவேசத்தைத் தடுக்க... விஜயகாந்தின் அரசியல் எழுச்சியைக் கட்டுப்படுத்த... இந்த அரசியல் விஷயங்கள் எப்படியிருந்தாலும் இதற்குப் பணயமாக வைக்கப்பட்டு அரசியல் ஆக்கப்பட்டது தமிழ்ப் பெண் உடல்தான். தமிழ்ச் சமூகம் நிஜத்தை ஒருபோதும் விரும்புவதில்லை. தமிழ்ப் பெண்களின் கற்புக்குக் காவலர்களாகத் தம்மை முன்னிறுத்திப் போராடிய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினரும் பாட்டாளி மக்கள் கட்சியினரும் சமூக யதார்த்தத்தை எதிர் கொள்ள மறுக்கிறார்கள். தமிழகம் முழுதும் தலித் பெண்கள் அதிகமாகப் பாலியல் வன்முறைக்கு ஆளாவது சாதி இந்துக்களால். தலித் பெண்களின் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைக் கெதிராக இந்த இரு அமைப்புகளும் இணைந்து இதுவரை ஏன் எந்தப் போராட்டத்தையும் முன்னெடுக்கவில்லை?

குஷ்புவுக்கு எதிரான போராட்டங்களில் பெண்கள் அதிக அளவில் பங்கெடுத்துக்கொண்டார்கள். இத்தமிழ்ப் பெண்கள் தங்கள் கணவன், மகன் ஒரு சினிமா நடிகையின் போஸ்டரைத் தன் வீட்டில் ஒட்டும்போதோ ஓட்டல்களில் பரிமாறப்படும் குஷ்பு இட்லியைத் தின்னும்போதோ அவர்களுக்கு எதிராகச் செருப்பையும் துடைப்பத்தையும் எடுக்காதது ஏன்? மேலும் தன் கணவனுக்கு, மகனுக்கு எதிராக வழக்குத் தொடுக்காதது ஏன்? குடும்பம் குடும்பமாக உட்கார்ந்து பெண்களை அவமதிக்கும் தமிழ்ப் படங்களைக் காலங் காலமாகப் பார்த்துப் புளகாங்கிதம் அடைவது ஏன்?

“பெண் திருமணத்துக்குமுன் உடலுறவு வைத்துக் கொள்ளலாம்” என்ற கருத்தை குஷ்பு பத்திரிகையில் தெரிவித்ததால் எதிர்க்கப்படுகிறார். அவரைத் தமிழ் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கிறார்கள். அதே கருத்தைத் தங்கர் பச்சான் தென்றல் என்று படமாக்கிக் கொண்டாடினால் அசல் தமிழ்த் திரைப் படைப்பாளி எனக் கிராமம் கிராமமாகக் கூப்பிட்டுப் பாராட்டுகிறார்கள். இதே கருத்தை சங்கராச்சாரியார் வேறு வகையில் மிக வக்கிரமாக “வேலைக்குச் செல்லும் பெண்கள் ஒழுக்கக் கேடானவர்கள்” என்று சொன்ன போது இவர்கள் எங்கே போனார்கள்? வேலைக்குச் செல்லும் தமிழ்ப் பெண்களின் கற்பை இழிவுபடுத்திய சங்கராச்சாரியைத் தமிழ்நாட்டை விட்டு வெளியேற்ற ஏன் போராட்டம் நடத்தவில்லை?

பெண் விடுதலை என்பது வேறு; பால் சமத்துவம் என்பது வேறு. இந்த நூற்றாண்டில் சாதி, மத, வர்க்க ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூக அமைப்பில் ஆண் என்ன விதமான வாழ்க்கை வாழ்கிறானோ அதே மாதிரியான வாழ்க்கை தனக்கும் வேண்டும் எனக் கேட்பது பால் சமத்துவம். மேல்தட்டு வர்க்கப் பெண்கள் இந்த எல்லா வகையான சமூக வாய்ப்புகளையும் என்றோ அடைந்துவிட்டார்கள். அடித்தட்டுப் பெண்களின் விடுதலைக்கும் இவர்களுக்கும் எந்த உறவும் கிடையாது; எஜமானி என்பதைத் தவிரப் பெண் விடுதலை என்பது ஐந்து நட்சத்திர ஓட்டல் கலாச்சாரம் அல்ல.


பெண்ணியம் அல்லது பெண் விடுதலை என்பது ஆண்களின் விடுதலையையும் உள்ளடக்கியது; மனித சமூகம் சாதி, மதத் தளைகளிலிருந்து விடுதலையடைந்து வரவேண்டும் என விரும்புகிறது. சாதி, மத வேறுபாடுகளையும் அவற்றின் அடிப்படையில் உருவாகிய அரசியல் சட்டதிட்டங்களையும் எதிர்க்கிறது; சாதி, மதத்தை முன்வைத்து நிகழும் வன்முறைகளையும் எதிர்க்கிறது; குடும்பம் என்னும் அமைப்புதான் சாதி, மத சமூக வன்முறையின் கருவறையாக இருப்பதால் குடும்பம் என்ற அமைப்பைச் சிதைக்க வேண்டும் என்கிறது.



படிப்பகம்

ஆண், இந்தக் குடும்பம் உற்பத்தி செய்த சாதி ஆணாகவும் இங்கு உள்ள மதங்கள் உற்பத்தி செய்த மத ஆணாகவும் இருக்கிறான். ஒரு ஆண் தன் சாதி, மதத்திலிருந்து என்று விடுதலையடைகிறானோ அன்றுதான் ஒரு பெண்ணியவாதி அவனை நேசிக்க முடியும். ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பில் ஒரு ஆண் தன் சாதி, மதத்திலிருந்து வெளியேற அவசிய மில்லை. ஏனெனில் இவை அனைத்தும் அவனுக் காகவே உருவாக்கப்பட்டவை. இவ்வமைப்பு ஆண்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்து அவர்களை ஊட்டி வளர்க்கும்போது அவர்கள் ஏன் இந்தச் சுகவாழ்வி லிருந்து வெளியேற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறார்கள்.

அறம், சமூக நீதி இவற்றின் ஈடுபாட்டால் இளமை யில் கம்யூனிசம் போன்ற சோஷலிச தத்துவக் கோட்பாடுகளின் பின்னணியில் அரசியலுக்கு வருபவன் பின் அது தரும் கூடுதல் அதிகாரத்தைத் தன் சாதி, மத அடையாளத்துடன் இணைத்துக்கொள்கிறான். அறிவுஜீவி ஆண்கள் தம் சமூக அடையாளத்திலிருந்து வெளியேறி விடுதலையாகிவிடுவார்கள் என்ற நம்பிக்கையும் தற்போது பொய்த்துப் போய்விட்டது. தங்கள் அறிவுஜீவி அடையாளத்தைத் தம் சாதி, மத, குலப் பெருமையாகக் கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள். இவை எல்லாவற்றையுமே இன்று பெண்ணியம் சந்தேகிக்கிறது. கேள்வி கேட்கிறது. சாதி, மதத்திலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு வெளியேறிய அதன் அடையாளங் களைத் துறந்த மனிதர்கள் இணைந்து வாழும் ஒரு சமூகத்தைத்தான் பெண்ணியம் கனவு காண்கிறது. இத்தன்னிலைகள் பெருகி உருவாகும் குழுக்களுக்குள் பெண் தான் யாராக இருக்க வேண்டும் என விரும்புகிறாளோ அப்பொழுது அவள் அவளாக வாழ முடியும். அங்கு பெண் தனித்தும் வாழ முடியும். கூடியும் வாழ முடியும்.



இந்தச் சமூகக் கட்டமைப்பிற்குள்ளே ஒரு பிரிவு பாலியல் சுதந்திரம் வேண்டும் எனக் கேட்பதால் ஏற்கனவே அத்துமீறி ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவனுக்கு மேலதிகமாகத் தங்கள் உடம்புகளை வழங்கும் ஆபத்து நேர்ந்துவிடும். மேலும் பாலியல் சுதந்திரம் கிடைத்துவிட்டால் பெண் விடுதலை கிடைத்துவிடும் என நம்புவதும் போலித்தனமானது. இச்சமூகத்தில் பெண்கள் குடும்பத்தின் கட்டுப்பாட்டை மீறிப் பிற ஆண்களுடன் உறவு கொள்வது என்பது காலம் காலமாக நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. அப்பெண்கள் அனைவரும் விடுதலையடைந்த பெண்களாக ஏன் மாறவில்லை? அவர்களின் சந்ததிகள் ஏன் அவர்களின் வாழ்க்கை முறையைத் தொடர முடியவில்லை? தமிழ் நிலப்பிரபுத்துவச் சமூகத்தில் கட்டமைக்கப்படும் கருத்தியல் மற்றும் வாழ்வியல் மதிப்பீடுகள் பெண்ணுக்கு எதிராக இருக்கும்வரை பாலியல் சுதந்திரம் என்பது, அதிகபட்சமான பெண்ணுடலைப் பெறக் கூடிய சாத்தியங்களை ஆணுக்கு ஏற்படுத்தித் தரும் வாய்ப்பாகத்தான் அமையும். எனவே பாலியல் மறுப்பு என்பதுகூடப் பெண்ணியத்தின் ஒரு போராட்ட வடிவமே. ஒட்டு மொத்த சமூகப் புரட்சி என்பது பெண் விடுதலையை மையமாக வைத்தே இனி நிகழ முடியும்; பாலியல் சுதந்திரத்தை மையமாக வைத்தல்ல. இச்சமூகம் பெண்ணுடலை நுகர்பொருளாக ஆக்கி வைத்திருக்கும்வரை அது நுகர்வுப் பொருளாக மட்டுமே பார்க்கப்படும். பெண் முதலில் தன் உடலை விடுதலை செய்ய வேண்டும். ஜடத்திலிருந்து சக்தியாக.

நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளைக் கொண்ட தமிழக அரசியல்வாதிகளும் கல்வியாளர்களும் கலாச் சாரவாதிகளும் பெண்மீதான கட்டுப்பாடுகளை விதவிதமாக விதித்தபடி இருப்பது புதிய விஷயம் அல்ல. இவர்கள் அனைவருமே மனுவாதிகள்தான். இன்று பெரியாரியத்தைப் பேசுவது எந்த ஓர் அரசியல் அமைப்புக்கும் தவிர்க்க முடியாதது. ஆனால் பெரியார் காட்டும் பெண்ணியம் என்பதைக்கூட எந்த ஓர் அரசியல் அமைப்பும் ஏற்றுக் கொள்வதில்லை. பெரியாரியம் என்பது எதிர்காலத்தில் தமிழ்ப் பெண்ணியத்தில் மட்டுமே ஓர் அங்கமாக உயிர் வாழும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இன்று மூன்றாம் உலக வளரும் நாடுகள் முதலாளித்துவ ஜனநாயகத்தைக்கூடப் பெண்களுக்கு வழங்க மறுத்தால், ஒரு சமூகம் தனக்குள்ளாகவே பிளவுபட்டு மோதி அழிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அல்லது, வல்லரசுகள் மனித உரிமையைக் காப்பதாகக் கூறி நம்மை ஆள உள்ளே நுழைந்துவிடும். ஆப்கானிஸ்தான் நமக்கு அருகில் இருக்கும் உதாரணம். தமிழ் அடிப்படைவாதம் என்பது தாலிபானியமாக மாறிக்கொண்டிருக்கிறது.


*சித்திரங்கள்:* **சந்தோஷ்**

●



படிப்பகம்

www.padippakam.com



**குளியல் தொட்டியில் அமிழ்ந்திருக்கும் நாயகனைப்** பெயர் பெற்று மின்னிய நான்கு பெண் நட்சத்திரங்கள் சாகசச் சிரிப்புடன் சமீபிக்கிறார்கள். பத்மினி, சங்கினி என்பதுபோல அவர்களைக் காமம் சார்ந்து தரப்படுத்தும் நாயகன் எள்ளல் சிரிப்புடன் ஒரு தீர்மானத்தை மொழிகிறான். "பொன்விழா ஆண்டுக்கு இவர்கள் மட்டும் பிரயோசனமில்லை. என்போல ஒரு சூப்பர் மேன் வேணுமே." விளம்பரம், சோப்புக்கு. எல்லா விளம்பரங்களுமே சமுதாயத்தின் தடுக்கப்பட்ட (taboo) கூறுகள், ஆழ்மன இச்சை, மனப்புனைவு வெளி, இவற்றைக் கோர்த்துத்தான் தமது பொருள் விற்பனைக் கதையைப் புனைகின்றன. உடலுறவின் ரகசியக் கிளர்ச்சிகள், பெண்ணுடலை நுகர்வுப் பண்டமாக்குதல், இவை கதையாடலின் முதன்மைக் கூறுகள். 80களில் தமிழ்த் திரையில் நாயகியும் கவர்ச்சி வில்லியும் குழம்பி ஒன்றானதுபோல 90களில் 'தாய்மை' மற்றும் அதீதத் தகுதிகளும் புத்திசாலித்தனமும் வாய்ந்த 'மனைவி' பிம்பங்களுக்குள்ளும் காம நுகர்வு இழைகள் சரிகைபோலப் புகுந்தன. அன்றாட வாழ்வில் இயல்பான இச்சைகளின் நிறைவேற்றம் மூர்க்கமாக மறுக்கப்படுகிற ஒரு சமூகத்தில் பொது வெளியில் கிடைக்கும் கிளர்ச்சிகள் ஒரு பெரிய வெற்றிடத்தை நிரப்புகின்றன. நுகர்வு வெளிப்படையாக்கப்பட்டபோதிலும் நெகிழ்வும் சுகித்தலுமான அனுபவம் பேசப்படுவதை ஒழுக்கம் குறித்த கற்பிதங்களும் கட்டுப்பாடுகளும் அனுமதிப்பதில்லை. சந்தையின் தந்திரங்களுக்கு இந்தப் பாசாங்குகள் மிகுந்த ஒத்திசைவு கொண்டவை. பெண்ணுடலுக்கும் பெண்ணுக்கும் இப்படியாக நிகழ்த்தப்படும் கேவலங்கள் குறித்து ஒழுக்கக் காவலர்கள் சிறு மூச்சுக்கூட விடுவதில்லை.

எய்ட்ஸ் வருவதைத் தடுக்க ஆணுறை அணிவது அவசியம் என்று நேரடியாக விளம்பரப் பயணம் தொடங்கவில்லை இங்கே; ஒழுக்கம் சார்ந்த நீதி போதனைக் கட்டத்திற்குள் அடைக்கப்பட்ட வாசகங்கள் ஆணை மட்டுமே நோக்கி எழுதப்பட்டன. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கும் ஆண்டுக்கு இரண்டு முறை 'மனைவி'களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெறும் ஆண்களுக்கும் இந்த வாசகங்களின் பொருள் என்ன? ஆணுறை அணிவதும் அணியாததும் ஆணின் விருப்பு வெறுப்பு சார்ந்ததாக மட்டுமே நிறுவப்பட்ட விதியாக மீண்டும் வலியுறுத்தப்படுவதற்கு எய்ட்ஸ் விளம்பரம் ஒரு வாய்ப்பாகிப்போனது. நுகர்வுப் பண்டமான பெண்ணுக்கு முடிவெடுக்கும் வேலை வைப்பதில்லை – எய்ட்ஸ் பிரச்சார விளம்பரத்தில்கூட. அதுவே 70களின் இறுதியிலும் 80களிலும் அமெரிக்காவில் கண்டறியப்பட்டுச் சோதனை செய்யப்பட வேண்டிய கருத்தடை முறைகள் எல்லாமே பெண்ணுடலை மையப்படுத்தியவை. அவை யாவும் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் உபயத்தால் இந்தியத் திருநாட்டின் சகல மூலைமுடுக்குகளிலும் உள்ள பெண்ணுடல்களைச் சோதனை வேட்டைக்குட்படுத்தப் பயன்படுத்தப்பட்டன, குடும்ப நல மற்றும் சுகாதார அமைச்சகத்தின் தலைமையிலும் வழிகாட்டலிலும். பெண்ணுடல் குறித்த வேலை எதுவும் 'டாக்டர்', 'மருத்துவர்'களால் எழுப்பப்படவில்லை அப்பொழுதும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் திரை நடிகர் ஒருவர் பாலியல் தொழில் புரியும் பெண் ஒருத்தியைப் பலாத்காரப்படுத்தினார். அப்போது மகளிர் அமைப்புகள் உள்பட ஒரே குரலில் மொழிந்தன: "என்ன இருந்தாலும் அப்படித் தொழில்படுகிற பெண்தானே?" பெண்ணுக்கு, பாலியல் தொழிலே புரியும் பெண்ணுக்கும்கூட, தன் உடல் குறித்த சுதந்திரம் ஏன் இருக்கக் கூடாது? 70களில் பிரபலமான தமிழ்ப் படத்தில் கமல்ஹாசன் 'விரல் சொடுக்கில் உன்னை அடைய முடியும்' என்று கொக்கரித்ததும், சமீபத்தில் வெளிவந்த படத்தில் எதிரும் புதிருமான perspective shotsஇல் நிகழும் சம்வாதக் காட்சியில் படாரெனத் திரை பரப்பிய close upஇல் உதடு சுழித்து விஜய், "என் கண் சிமிட்டலுக்குக் காத்திருந்து கட்டிலுக்கு" வர நிமிடத்திற்கு ஒரு கட்டழகி தயார் என்று எல்லாப் பெண்களுக்குமான அறைகூவல் விடுத்ததும் தொடரும் கதை.

# பெண்ணுடல் பெண்ணுடையதா என்ன?


பிரஸன்னா ராமஸ்வாமி



படிப்பகம்

www.padippakam.com





அப்போதெல்லாம் சீறி நிமிர்ந்து பெண்ணுலகின் கண்ணியம் காக்கவில்லை எவரும். குறிப்பிட்ட கார், சட்டை, சோப்பு, ஷேவிங் லோஷன் இன்ன பிற பொருள்களால் மயங்கி ஆண்களைக் காமம் மீதுறத் துரத்தும் பெண்களும் உள்ளாடை முதல் குறிப்பிட்ட மசாலாவைப் போட்டு சமைத்தது வரை பல்வேறு காரணங்களுக்காகப் பெண்ணைப் போகித்துப் புணர்ச்சி விதிகளைப் பரிமாறும் ஆண்களும் 17லிருந்து 56 அங்குலம் வரை அங்கிங்கெனாதபடி வீட்டுத் திரைகளில் 24 மணி நேரமும் வலம் வருகின்றனர். சிங்கம் புலிகள் டி.வி. பார்ப்பதில்லை போலும். வரதட்சணை, இன்ன பிற காரணங்களால் முதிர் கன்னிகளாக நிற்கும் பெண்கள், மனத்திலும் உடலிலும் பதின் வயதில் புறப்பட்ட நெருப்பு அணையாமல் புகைந்து திரியும் ஆண்கள், பெண்கள், சமூக விதிகளில் கட்டுண்டு காதலும் காமமும் சுமந்து சுழலும் ஆணும் பெண்ணும் இப்படியான எல்லாவித உணர்வு பலாத்காரங்களுக்கு உள்படுத்தப்பட்டுக் காயடிக்கப்படுவது குறித்து 'இன்றைய இந்தியா'வின் பத்திரிகைகள் கவலைப்படுவதில்லை. பம்பரம் விடக் கேட்டபோது தொப்புளைக் கொடுத்த பெண்கள், காமிராக் கோணம் வைக்காமல் இயக்குநர்கள் 'அவள்', 'இவள்' என்றதும் கொதித்தெழுந்து கொடி பிடிக்கின்றனர். காமம் குறித்த பாசாங்கும் மழுப்பலுமான காட்சிகளையும் கருத்தாக்கங்களையும் எதிர்த்து 'விரசம், ஆபாசம்' என்று பொறுப்புணர்வு பொங்கச் சில படங்களையும் இயக்குநர்களையும் மட்டுமே குறிவைத்து வழக்குத் தொடுக்கும் அமைப்புகள் ஒருபுறம். 'அவர்களிடம் இருப்பதைக் காட்டிவிட்டுப் போக வேண்டியதுதானே' என்று வெளிப்படையாகவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேட்டியளித்த மகா வெற்றிப் பட இயக்குநர் போன்றவர்கள் மறுபுறம்.

கதையாடலும் கதை கூறலும் இங்ஙனமிருக்க, தமிழ்ப் பெண்கள், இந்தியப் பெணகள் திருமணத்துக்கு முன்னோ பின்னோ தன் உடல், மனம் சார்ந்து சுதந்திரமான முடிவுகளை எடுக்கக்கூடிய சூழல் இந்த வெளியில் இதுவரை இல்லை. அப்படி இருப்பதாக யாராவது கற்பனையாகச் சொன்னால் கூடக் கேட்க எனக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. பண்பாட்டுக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிடும் சிறுத்தைகளுக்கும் சிங்கங்களுக்கும் பொங்கிவருவது உண்மையான சினமல்ல. சீற்றத்தின் ஊற்றுக்கண் பெண்ணுடல் சார்ந்து அவர்கள் கட்டியெழுப்பி வைத்திருக்கும் ஆதிக்கமும் நுகர்வும் பொருளாதாரக் கொள்கைகளும் ஆட்டம் கண்டுவிடுமோ என்னும் அச்சம்தான். ஆதாரத்தை ஆட்டி அசைக்கும் சொற்களைப் பேசியவர் இவர்களுடைய கதையாடலில் ஒரு காலத்தில் மையத்திலும் இன்று ஓரத்திலும் இருப்புள்ளவர் என்பது மேலதிகமான காரணமோ?

●

## காலச்சுவடு சிறப்புத் திட்டங்கள்

- காலச்சுவடு தனி இதழ் ரூ.15. ஆண்டுச் சந்தா ரூ.140. இரண்டாண்டுச் சந்தா ரூ.240. ஐந்தாண்டுச் சந்தா ரூ.600. மாணவர் ஆண்டுச் சந்தா ரூ. 75 (அடையாள அட்டையின் ஒளிநகலை அனுப்புக.)
- வெளிநாட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 600. இரண்டாண்டுச் சந்தா ரூ.1000. ஐந்தாண்டுச் சந்தா $75. காலச்சுவடு ICICI வங்கி எண்ணுக்கு Wire Transfer வழி சந்தாவை அனுப்பிவைக்கலாம். அவசியமான தகவல்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.
- காலச்சுவடு ஆயுள் சந்தா ரூ.2500. அயலில் வாழ்பவர்களுக்கு ஆயுள் சந்தா US$ 250. ஆயுள் சந்தாதாரர்கள் ரூ.500க்கான காலச்சுவடு பதிப்பக நூல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- மூன்று வாசகர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்ப்பவர்களுக்கு ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும். இந்தத் திட்டப்படி ஆண்டுச் சந்தா, இரண்டாண்டுச் சந்தா, ஐந்தாண்டுச் சந்தா, மாணவர் சந்தா, ஆயுள் சந்தா ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கும் அதற்கு இணையான ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- ரூ.500க்குக் காலச்சுவடு பதிப்பக நூல்களை எங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களுக்குக் காலச்சுவடு ஓராண்டுச் சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- காலச்சுவடு இரண்டாண்டுச் சந்தாதாரராகச் சேர்பவர்களுக்கு 6 (பழைய) இருமாத இதழ்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். இதை இந்தியாவில் இருக்கும் உங்கள் நண்பர்களுக்கும் காலச்சுவடு மூலமாக அனுப்பலாம். பழைய இதழ்கள் கையிருப்பை அனுசரித்து வழங்கப்படும்.
- anyindian.com இணைய தளம் வழியாகவும் சந்தா செலுத்தலாம்.

சந்தாத் தொகையை Kalachuvadu என்னும் பெயரில் பணவிடையாகவோ வரைவோலையாகவோ நாகர்கோவில் / சென்னை வங்கிக் காசோலையாகவோ அனுப்புக. இதரக் காசோலைக்கு ரூ. 40 சேர்த்து அனுப்புக.

| தலைமை அலுவலகம் | சென்னை அலுவலகம் |
|---|---|
| 669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629 001 | 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை |
| தொலைபேசி: 91-4652-278525 | திருவல்லிக்கேணி, சென்னை 600 005 |
| தொலைநகல்: 91-4652-231160 | தொலைபேசி: 91-44-28481662, 91-44-5215597 |
| மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in | மின்னஞ்சல்: kalachuvadu@yahoo.com |



படிப்பகம்


www.padippakam.com



# கலாச்சார குண்டாந்தடிகள்

மாலன்

தமிழில்: திவாகர் ரங்கநாதன்



**கலாச்சாரப் பாதுகாவல் என்பது எப்போதுமே** அடிப்படைவாதத்தின் ஒரு நீட்சியாக இருந்துவந்திருக்கிறது. தமிழ்நாட்டில் தீவிர முற்போக்குவாதிகள் அதைக் கையிலெடுத்திருப்பதுதான் வேடிக்கை. நடிகை குஷ்பு சொன்ன கருத்துகளால் உருவாகி, மீடியாவால் ஊதிப் பெரிதாக்கப்பட்ட சர்ச்சை, தனிநபர்களுக்கிடையேயான மோதலாகத்தான் தோன்றுகிறதே ஒழியத் தார்மீக அக்கறையால் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சில வாரங்களுக்கு முன்புதான் நடிகைகளைப் பற்றித் தரக்குறைவாகப் பேசியதற்குக் குஷ்பு இயக்குநர் தங்கர்பச்சானை மன்னிப்பு கேட்கவைத்தார். டாக்டர் ராமதாஸ் மற்றும் திருமாவளவனின் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்திற்குக் குரல் கொடுப்பவர் தங்கர்.

ராமதாஸும் திருமாவளவனும் பெரியாரைப் பெரிதும் மதிப்பவர்கள். தங்கள் சமூகப் பணிக்கு அவர்தான் உத்வேகம் தருவதாக இருவருமே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருமணத்தையும் கற்பையும் குறித்த பெரியாரின் கருத்துகள் முற்றிலும் வேறாக இருந்தன. திருமணம் ஒரு குற்றம் எனவும் திருமணம் போன்ற செயல்களுக்குக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் தண்டனை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

ஆண் – பெண் இடையிலான காதல், காமம், இச்சை, நட்பு, ஏக்கம், பாலியல் உந்துதல் ஆகியவை முற்றிலும் அந்தரங்கமானவை எனவும் அதில் மூன்றாம் மனிதர்களுக்கு – ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் – அது குறித்துப் பேச உரிமை இல்லை என்றும் பெரியார் சொன்னார். அவரைப் பொறுத்தவரை அது ஒருவர் தனக்கு விருப்பமான ஒரு உணவகத்தில் தனக்குப் பிடித்த உணவை உண்பதுபோல், அல்லது தனக்குப் பிடித்த ஒரு கடையில் பொருள் வாங்குவது போல் ஒரு தனிப்பட்ட விஷயம். இவ்விஷயங்களில் முடிவெடுக்க சொந்தத் திருப்தியும் சுதந்திரமுமே அடிப்படையாக இருக்கின்றன என்றும் இவற்றில் குறுக்கிடுவது அநாவசியமானது, தேவையற்றது, சர்வாதிகாரக் கண்ணோட்டத்தையே காட்டுகிறது என்றும் கருதினார்.

ஆனால் சமீப காலமாக, பெரியார் பிறந்த மண்ணில் மற்றவர் அந்தரங்கத்தில் குறுக்கிடுவது அதிகரித்து வருவது துரதிர்ஷ்டவசமானது. சமீபத்தில் அண்ணா பல்கலைக்கழகம் ஜீன்ஸ் ‘செக்ஸி’யாக இருப்பதாகச் சொல்லி அதைத் தனது வளாகத்தில் அணிவதற்குத் தடை விதித்தது. பெண் செய்தி வாசிப்பாளர்கள் பர்தா அணிய வேண்டும் என்று தாலிபான் ஃபத்வா பிறப்பித்ததற்கும் இதற்கும் அடிப்படையில் வேறுபாடு எதுவும் இல்லை. நம் சமூகத்தில் பெண்ணைப் பாதுகாக்க, அல்லது அப்படியான விதிமுறைகளை விதிக்கத் தவறினால் பெண்கள் ஆண்களைப் படுக்கைக்கு அழைப்பார்கள் என்ற சந்தேகத்திலேயே இது போன்ற விதிமுறைகள் பெரும்பாலும் உருவாக்கப் படுகின்றன. இவ்விரு பார்வைகளுமே பெண்களைத் தங்கள் ஆடையைக் குறித்துக்கூட முடிவெடுக்கும் சமூக அறிவும் திறனும் இல்லாத முட்டாள்களாக நடத்துகின்றன. இந்த விதிகள் பெண்களைக் கௌரவிக்கவில்லை; பெண்கள்மீதான அதிகாரத்தை ஆண்கள் தன்னிச்சையாகக் கையிலெடுத்திருப்பதையே காட்டுகின்றன. இவ்விதிகளை நியாயப்படுத்த முயன்றால் அது பெண்களை அவமானப்படுத்துவதாகும்.

சென்ற ஆண்டு சினிமா பாடலாசிரியர் ஒருவர் சில பெண் கவிஞர்கள் பெண்களின் பாலியல்பு குறித்துக் கவிதை எழுதியதாக அவர்களது கவிதைகளை எரிக்க வேண்டும் என்று பொங்கினார். இன்னொரு பாடலாசிரியர் அவர்களது நடத்தையைக் குறித்துக் கேள்வி எழுப்பினார். பெண்களையும் அவர்களது உடலுறுப்புகளையும் காமம் சொட்ட விவரிக்கும் (பெரும்பாலும் ஆண் மனதில் உருவான) சினிமா பாடல்களைப் பற்றி அந்தப் பாடலாசிரியர்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் கோபம்



படிப்பகம்

ஆபாச இலக்கியத்தின் மீது எழுந்ததல்ல. பெண்கள் அப்படி எழுதத் தொடங்கிவிட்டார்களே என்பதுதான் அவர்களின் கோபத்திற்குக் காரணம்.

இரட்டை வேடம் நம் சமூகத்தின் அடையாளமாகி விட்டது. குஷ்புவைத் தாக்குபவர்கள் சினிமாவிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் பிற ஊடகங்களிலும் பெண்கள் சித்தரிக்கப்படும் முறையை எதிர்த்ததே இல்லை. மாமியார்/நாத்தனார் கொடுமைகளுக்கு ஆளாகி எப்போதும் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் பலவீனமான பிறவிகளாகவோ, ஆணின் தலையசைப்புக்கு இடுப்பை அசைத்து ஆடும் கவர்ச்சிப் பாவைகளாகவோதான் இந்த ஊடகங்கள் பெண்ணைச் சித்தரிக்கின்றன. தமிழ்ச் செய்தி ஊடகங்களை வைத்துப் பார்த்தால் குழந்தைகள்மீதான பாலியல் பலாத்காரம், கள்ளக் காதல், குடும்பத்திற்குள் முறையற்ற உறவு, பணியிடங்களில் பாலியல் வன்முறை, தெருமுனைகளில் ஈவ்டீசிங், வயதான பெண்களைக்கூட மானபங்கம் செய்வது ஆகியவை சகஜமாகிவருகின்றன. இவை தமிழ்க் கலாச்சாரத்தையா பிரதிபலிக்கின்றன? தமிழ்ப் பண்பாட்டின் காவலர்களாகத் தங்களை அறிவித்துக்கொண்டிருப்பவர்கள் இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஏதேனும் செய்திருக்கிறார்களா?

தமிழ்நாட்டில் பாலியல் ஒழுக்கம் உன்னத நிலையில் இருப்பதாக நம்புபவர்கள் கற்பனை உலகில் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் 24,667 பேர் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோயுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதாவது நாட்டின் எய்ட்ஸ் நோயாளிகளில் பாதிப்பேருக்கு மேல் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள். தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு தமிழ்நாட்டில் உள்ள ஹெச்ஐவி/எய்ட்ஸ் பாதிப்பை மிக அதிக அளவுப் பரவல் என வகைப்படுத்தியிருக்கிறது. அதிக எய்ட்ஸ் அபாயமுள்ள பிரிவுகளில் 5 சதவீதத்தினருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு ஹெச்ஐவி இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. குழந்தைப் பிறப்புக்கு முந்தைய சிகிச்சைக்கான மையங்களில் பெண்களில் ஒரு சதவீதத்தினர் அல்லது அதற்கும் அதிகமானவர்களுக்கு ஹெச்ஐவி பாதிப்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் பெண்களைப் பொறுத்தவரை இது மிக அதிகமான அளவு.

தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்கள் பள்ளிகளில் பாலியல் கல்வி வழங்குவதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டிய நேரம் இது. போகிற போக்கில் சொல்லப்பட்டு ஊடகங்களால் பரபரப்பிற்காகத் திரித்து வெளியிடப்படும் கருத்துகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதைவிடப் போகிற போக்கில் உடலுறவு கொள்வதை (casual sex) எதிர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டம் நடத்துவதே இப்போது தேவை. வெற்று வாண வேடிக்கைகளைவிட எப்போது வேண்டுமானாலும் வெடித்துவிடக்கூடிய இந்த வெடிகுண்டைச் சமாளிப்பதுதான் அவசரத் தேவை. ●

29.9.2005 தேதியிட்ட *நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்* இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.

**பாவண்ணன் பார்வையில்**

இளம் எழுத்தாளர்: பாலமுருகன்



## மனத்தின் திசைகள்

**வெவ்வேறு விஷயங்களை வெவ்வேறு** விதமாக எழுதிப் பார்க்க விழையும் இளைய படைப்பாளிகளில் ஒருவர் பாலமுருகன். எழுதத் தொடங்கிய சிறிது காலத்துக்குள்ளாகவே வாசகக் கவனத்துக்குரிய நல்ல கதைகளை எழுதியவர். இயல்பான சித்தரிப்பு மொழியும் தாண்டித் தாண்டிச் செல்கிற வேகமான நடையும் அளவான எள்ளலும் பொருத்தமான உரையாடல் மொழியும் பாலமுருகனின் சிறு கதைகளில் காணப்படக்கூடிய வலிமையான அம்சங்கள். கிராமங்களும் நகரங்களும் கதைகளுக்குரிய பின்னணிகளாக மாறிமாறி அமைக்கப்பட்டிருந்தாலும் மனித மனத்தின் நுட்பத்தை உணரவும் உணர்த்தவுமான ஆர்வமும் வேகமும் எல்லாக் கதைகளிலும் காணப்படுகின்றன. "பதின்மூன்று மீன்கள்" என்பது இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பு.

தலைப்புச் சிறுகதையே இவரது எழுத்தாளுமையை வெளிப்படுத்தும் கதைகளில் ஒன்று. நாற்று நடுவது, பருத்தி எடுப்பது, கிழங்கு பிடுங்குவது, கடலைக்காய்ச் செடி பிடுங்குவது என்று அடுக்கடுக்காகக் குவிந்துகொண்டே இருக்கிற வேலைக் காலத்தில் நல்ல குழம்புக்கும் சோற்றுக்கும்கூட ஆசைப்பட வழியில்லாத ஒரு சராசரி விவசாயக் குடும்பம் இக்கதையில் இடம் பெறுகிறது. கருக்கலிலேயே எழுந்து வேகவேகமாகச் சோறு வடித்து, கீரை கடைந்து வைத்துவிட்டுச் சூரியோதயத்தின்போது வேலைக்கு ஓடுகிற ஓட்டம், பொழுதடைந்த பிறகு நிற்கிற வாழ்க்கை. அத்தகு சூழலில் புல்லுக் கட்டோடு தற்செயலாக ஓடையைக் கடக்கிற வெள்ளச்சி தண்ணீருக்குள் நெளியும் மீன்களைப் பார்த்ததும் மீன்குழம்பு வைத்துச் சாப்பிடும் ஆசைக்கு ஆட்படுவதோடு தொடங்குகிறது கதை.

ஆசை ஆசையாக வைக்கிற மீன்குழம்பை அவளால் சாப்பிட முடியாமல் போகிறது. குழம்பையும் சோற்றையும் ஆக்கி வைத்துவிட்டு, வேலைக்குப் போன கணவனையும் பிள்ளையையும் அழைத்துவரச் சென்ற சமயத்தில் வீடு புகுந்து எல்லா மீன்களையும் எடுத்துத் தின்றுவிடுகிறான் பக்கத்து வீட்டு இளைஞன். டைபாய்டு காய்ச்சலால் தினந்தினமும் கஞ்சி குடித்து நாக்கு செத்துப்போனவன் அவன். குழம்பு வைத்த வெள்ளச்சிக்கு மனம் கொதிக்கிறது. கணவனுக்கு ரத்தம் கொதிக்கிறது. எல்லாமே சிறிது நேரம்தான். அந்த இளைஞன் வீட்டில் காணப்படவில்லை என்று குமுறி அழுகிறாள் பெற்றவள். திருடித் தின்ற குற்ற உணர்ச்சியாலேயே ஊரைவிட்டுப் போயிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் எல்லாமே மறந்துவிடுகிறது.

சைக்கிளில் பறந்து பேருந்து நிறுத்தத்துக்குச் சென்று அந்த இளைஞனை அழைத்து வருகிறான் கணவன். அவன் அழுகிறான். இவன் முதுகைத் தட்டித் தேற்றுகிறான். ஒருபுறம் இச்சையின் வலிமை. இன்னொரு புறம் இழிவின் அவமானம். ஒரு விளிம்பில் கலைந்துபோன கனவுகளின் கோலம். இன்னொரு விளிம்பில் இயலாமைகளுக்கு இடையே ஊறிப்பெருகும் வற்றாத கருணை. எதிரெதிர் புள்ளிகளுக்கிடையே ஊசலாடும் மன இயக்கத்தைச் சித்தரித்துக் காட்ட பாலமுருகனுக்குக் கைவந்திருக்கிறது.

'வாழ்வில் ஒரு சம்பவம்' இன்னொரு நல்ல கதை.

மனத்தின் ஆழத்தை அறிய முயற்சி செய்யும் படைப்பு இது. இத்தகைய முயற்சி கொண்ட படைப்புகள் அனைத்தும் மகத்தானவையே. ●

www.padippakam.com

# ஒழுக்கம் என்னும் பாவனை

கனிமொழி



"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அதற்கொரு குணமுண்டு"

இந்தப் பாடலைக் கேட்கும்போதெல்லாம் தமிழனின் தனிக் குணம் என்ன என்ற கேள்வி என்னுள் எழும்பிக் கொண்டே இருக்கிறது.

தமிழனின் தனிக் குணம் என்ன என்பது தேடித் தேடி விடுவிக்க முடியாத புதிராகவே இருக்கிறது எனக்கு. பண்பாடு, கலாச்சாரம் என்பவை நமது இனத்திற்கு மிக உகந்த வார்த்தைகள்.

Hypocrisy என்பதைப் போலித்தனம், வெளிவேஷம், இரட்டை வேடம், பாவனை என்று பல விதங்களில் அர்த்தப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் hypocrisy-யில் உள்ள "உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று செய்வது (வாழ்வது)" என்பதில் உள்ள சாரம் மேற்படித் தமிழ்ச் சொற்களில் இல்லை. இப்போதைக்கு "பாவனை" என்பதையே வைத்துக்கொள்வோம்.

நமக்கு ஒழுக்கம் என்பதே ஒரு பாவனையாகி விட்டதோ என்று தோன்றுகிறது. ஒழுக்கம் பற்றிய நிலைப்பாடு இரண்டு தளங்களில் இயங்குவதாகத் தோன்றுகிறது. ஒன்று, தனிப்பட்ட ஒழுக்கம். அது நாம் மனப்பூர்வமாக, ஆதரவுபூர்வமாக நம்பும் ஒழுக்கக் கூறுகள். இன்னொன்று, சமூகத்திற்காக நாம் தூக்கிப் பிடிக்கும் ஒழுக்க விழுமியங்கள்.

இரண்டாவது விழுமியங்கள் பெரும்பாலும் திருவள்ளுவர் காலம் தொட்டு வருபவை. இப்பொழுது ஊடகங்களால் மட்டுமே உயிரூட்டப்பட்டிருப்பவை.

நடுப்பக்கத்து நாயகிகளையும் கிசுகிசுக்களையும் கொச்சையான ஆபாசச் செய்திகளையும் திரைப்படங் களையும் பெரிதும் நம்பிப் பிழைப்பு நடத்தும் பெரும் பாலான பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் அவ்வப்போது பொது ஒழுக்கத்தை (முக்கியமாகத் தமிழ்ப் பெண்களின் ஒழுக்கத்தை) காப்பாற்றத் தடாலடி நடவடிக்கைகளில் இறங்குவது வேடிக்கை.

சமீபத்தில் 'இந்தியா டுடே' பத்திரிகை நடத்திய ஒரு கருத்துக் கணிப்பில் நடிகை குஷ்பு சொன்ன கருத்துகளுக்கு எதிராக ஒரு இயக்கமே நடந்தது. எல்லாவற்றையும்விடக் கொடுமை என்னவென்றால், குஷ்புவை விமர்சித்த ஒரு பெண், "குஷ்புவே சொல்லி விட்டார், நாம் கெட்டுப்போனால் என்ன என்று நினைத்து இளம் தமிழ்ப் பெண்கள் கெட்டுப்போய் விடுவார்கள்" என்று கூறியதுதான்.

குஷ்புவுக்குக் கோயில் கட்டியதுபோய், இப்போது அவரை நாம் திருவள்ளுவர், பெரியார், ஜிட்டு கிருஷ்ண மூர்த்தி அளவுக்கு உயர்த்தியிருப்பதுதான் சுவாரஸ்யம். பல பத்திரிகைகளும் ஊடகங்களும் ரீட்டாவைவிட இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கர்ஜித்தன. இத்தனை நாள் பாலியல் வன்முறைகள், வரதட்சணை எரிப்புகள், சிசு வதை என்று பல பெண்களின் பிரச் சினைகளின் ஊடே ஆழ்ந்த நித்திரையில் இருந்த சில அமைப்புகள் இப்போது கையில் துடைப்பம், செருப்பு சகிதம் பொங்கி எழுந்திருக்கின்றன.

திருமாவளவனின் எத்தனையோ முக்கியமான போராட்டங்களைக் கண்டுகொள்ளாத ஊடகங்கள் இப்போது போட்டி போட்டு அவரை முக்கியத்துவப் படுத்துகின்றன. 'கற்பு என்பதே ஒரு இந்துத்துவக் கருத்து' என்ற அவரது கருத்து எப்போது மாறியது என்பதும் தெரியவில்லை.

ஒழுக்கம் என்பது ஒரு புதிய வியாபார உத்தி என்பதைப் புரிந்துகொண்ட இன்னொரு பத்திரிகை, சென்னையில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் புகுந்து அங்கு நடந்த ஒரு பார்ட்டியில் மது அருந்திக் கொண்டும் நடனம் ஆடிக்கொண்டும் இருந்த பெண்களைப் படம்பிடித்துப் போட்டு, சமத்துவம் என்பது இதுதானா என்று கேள்வி கேட்டிருக்கிறது.

மேற்கத்திய உடையணிந்த, மது அருந்தும், புகை பிடிக்கும் பெண்கள் எல்லோருக்கும் பெண் விடுதலை பற்றிய பிரக்ஞை இருக்கும் என்பதுகூட ஒரு குறைக் கண்ணோட்டம்தான். பெண்ணியத்தைக் கட்டுடைக் கும் முயற்சிதான். குடிப்பது தவறு என்று கூறும் காந்தியவாதிகளாக இவர்கள் மாறிவிட்டார்கள் என்றால், அருகில் நிற்கும் ஆண்களின் மீது இவர்களது ஒழுக்கக் கரிசனப் பார்வை ஏன் விழவில்லை?

உடைக் கட்டுப்பாடுகள் பற்றிய கட்டுரைகள் எழுதப் படும்போதும் அதில் அடிச் சரடாய் அந்தக் கட்டுப் பாடுகளுக்கு ஒரு ஆதரவுக் குரல் தொனிப்பதைக் காண முடிகிறது. இவர்கள் வெளியிடும் கருத்துக்களில் இவர்களுக்கு உண்மையிலேயே உடன்பாடு உள்ளதா? உள்ளது என்றால் இவர்கள் வெளியிடும் பல படங் களில், செய்திகளில் இவர்கள் பாதுகாக்கப் பாடுபடும் பண்பாடு உடைபடுவதை அறியாதவர்களா இவர்கள்? அல்லது இவர்கள் நடத்துவது வெறும் 'பல்பொருள் அங்காடிகள்'தானா?

உலகச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், கவர்ச்சி, கிளுகிளுப்பு, கற்பு எல்லாம் கிடைக்கும். உனக்கு எது வேண்டுமோ அதை எடுத்துக்கொள் என்பதுதான் இவர்களின் அடிப்படைத் தத்துவமா?

நன்றி: www.thozhi.com



படிப்பகம்

www.padippakam.com

With Best Compliments from

தினமலர்

தேசியத் தமிழ் நாளிதழ்

DINAMALAR

National Tamil Newspaper

Printed simultaneously at

Chennai | Vellore | Pondicherry
Erode | Salem | Coimbatore | Tiruchi
Madurai | Tirunelveli | Nagercoil



படிப்பகம்

விமர்சனக் கட்டுரை

## கொங்குதேர் வாழ்க்கை: ஒரு பார்வை

சுகுமாரன்




# காணாமல்போன சமநோக்கு

**எழுபதாண்டுக் காலக் கவிதை மரபுக்கு நியாயம் செய்கிறதா இந்தத் தொகுப்பு?**

வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளும் எல்லாப் புத்தகங்களோடும் நமக்கு மானசீக நெருக்கம் ஏற்படுவதில்லை. வாசிப்புக்கான மனநிலையையும் அவசியத்தையும் சார்ந்தவை இந்த நெருக்கமும் நெருக்கமின்மையும். இங்கு விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்டிருக்கும் இந்தப் புத்தகத்துடன் எனக்கு மன நெருக்கம் உண்டு.

பத்தாண்டுகளுக்கு முன்பு நண்பர் ராஜமார்த்தாண்டனுடன் செலவிட்ட உரையாடற்பொழுதுகளில் அதுவரை தமிழில் வெளியாகியிருந்த புதுக்கவிதைகளின் தொகுப்பு ஒன்றைக் குறித்த யோசனை உருவானது. ந. பிச்சமூர்த்தி புதிய நோக்கில் எழுதிய 'காதல்' என்ற கவிதை 1934ஆம் ஆண்டு 'மணிக்கொடி' இதழில் வெளியானது. அந்தத் தகவலின் அடிப்படையில் அறுபது ஆண்டுக் காலத்தில் புதுக்கவிதையில் நிகழ்ந்த வளர்ச்சியை அடையாளம் காட்டும் விதத்தில் தொகுப்பு அமையலாம் என்றும் யோசனை தோன்றியது. அதுபோன்ற தொகுப்பை யார் வெளியிட முன்வருவார், அதற்கு என்ன விதமான வரவேற்பு இருக்கக்கூடும் என்றெல்லாம் தெரியாத நிலையில் அந்த யோசனை ஒரு கனவாகவே இருந்தது. இரண்டு பேர் ஒரே கனவைப் பகிர்ந்துகொள்வது அசாத்தியம் என்பதற்கும் அந்த யோசனை உதாரணமாக இருந்தது. பிழைப்பின் நிர்பந்தங்கள் காரணமாக நான் கைவிட்ட ஆசைகளில் அந்தக் கற்பனைத் தொகுப்பும் ஒன்று.

ஆனால் ராஜமார்த்தாண்டன் அந்தக் கனவைப் பத்தாண்டுக் காலமாகப் பராமரித்துக் கைகூடச் செய்திருப்பதன் சான்று 'கொங்குதேர் வாழ்க்கை' நூல். பத்தாண்டுகளுக்குப் பின்னர் வெளியீட்டுச் சூழல் மாறியிருப்பதும் கவிதை ஆர்வலர்களின் எண்ணிக்கைப் பெருக்கமும் இந்த நூலின் பிறப்பைத் தவிர்க்க இயலாத நிகழ்வாக ஆக்கியிருக்கின்றன. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப் புதுக்கவிதையுடன் இடையறாத உறவும் தற்சார்புகளைக் கடந்து இதுவரை வெளிவந்த கவிதைகளைத் தேடித் திரட்டுவதற்கான உழைப்பும் ராஜமார்த்தாண்டனுக்கு இருந்திருக்கிறது என்பதற்கும் இந்தத் தொகுப்பு ஆதாரம். இந்த அனுகூலமான சூழலையும் இந்த மனிதரின் அயராத உழைப்பையும் ஒரு கவிதை ஆர்வலனாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1934இல் புதுக்கவிதை என்ற இலக்கிய வடிவத்தை முன்வைத்த பிச்சமூர்த்தி முதல் 2000ஆம் ஆண்டில் எழுத வந்த தென்றல் வரையிலான 93 கவிஞர்களின் ஏறத்தாழத் தொள்ளாயிரம் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன. சரியாக எழுபது ஆண்டுக் கால அளவில் ஒரு மொழியில் நிகழ்த்தப்பட்ட கவிதைச் சோதனைகளின் ஆவணம் இது.

ஆனால் இந்த நூல் வெளிவந்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் பொருட்படுத்திப் பேசப்படவோ விவாதிக்கப்படவோ இல்லை. கவனத்துக்குரிய படைப்புகள் பெரும்பாலும் உதாசீனப்படுத்தப்படுவதோ கண்டுகொள்ளாமல் விடப்படுவதோ தமிழிலக்கியத்தில் பின்பற்றப்படும் பொது மரபு என்ற எளிய சமாதானம் இங்கு செலாவணியாகக் கூடாது என்று கருதுகிறேன். அதற்கு இரண்டு காரணங்களை முன்வைக்க விரும்புகிறேன். ஒன்று: தமிழில் கவிதையைத் தீவிர அக்கறையுடன் எழுதுகிற, வாசிக்கிற படைப்பூக்கம் கொண்ட ஒரு பிரிவு விநோதமான கலாச்சாரச் சிறுபான்மையல்ல என்பதை இதுபோன்ற தொகுப்பின் துணையால் நிறுவ முடியும். இரண்டு: இதே தலைப்புள்ள தொகுதியின் முதற்பாகத்தில் இரண்டாயிரமாண்டுக் காலக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அந்த நூலும் ஏறக்குறைய நானூறு பக்கங்கள் கொண்டது. இரண்டாயிரம் ஆண்டுகளின் படைப்பாற்றலுக்கு நிகரான எழுபது ஆண்டுகளை விமர்சன அடிப்படையில்லாமல் நிராகரிப்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதல்ல.

ராஜமார்த்தாண்டன் தொகுத்திருக்கும் இந்த நூல் ஒரு வாசகனாக என்னைப் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் மறுமதிப்பீடுகளுக்கும் இட்டுச் சென்றிருக்கிறது. முப்பது ஆண்டுகளாகக் கவிதையியலில் பங்கேற்றிருப்பவன் என்ற நிலையில் நான் கொண்டிருந்த சில மூடநம்பிக்கைகளை இந்தத் தொகுப்பு கேள்விக்குரியதாக்கியது. 'எழுத்து' காலக் கவிஞரான சி. மணியின் கவிதைகளை ஆரம்ப நாள்

**கொங்குதேர் வாழ்க்கை (தொகுதி - 2)**

புதுக்கவிதைகளின் தொகுப்பு

தொகுப்பாசிரியர்: ராஜமார்த்தாண்டன்

*வெளியீடு:*

யுனைடெட் ரைட்டர்ஸ்
130/2, அவ்வை சண்முகம் சாலை,
கோபாலபுரம், சென்னை 600 086

முதல் பதிப்பு:
பக். 464; விலை ரூ. 290



படிப்பகம்

www.padippakam.com



வாசிப்பில் புதியனவாகவும் பின்னர் வாசிக்கும்போது காலத்தில் பின்தங்கி நின்றனவாகவும் உணர்ந்திருக்கிறேன். இந்தத் தொகுப்பில் மீண்டும் வாசிக்க நேர்ந்த வாய்ப்பில் இறப்பு நிகழ் எதிர் என்ற வகைப்படுத்தல் இல்லாத ஒரு நிரந்தரமான காலத்தின் மன நடவடிக்கை யாக அவற்றை இனம்காண முடிந்தது. கவிதைக் குழு வொன்றின் சக பயணியாக மனத்தில் தவறாகப் பதிந்து போன ஓர் ஆளுமை அபியுடையது. 'வானம்பாடிக் குழு'வினரின் பொதுவான கவிதை இயல்பு எதுவும் தீண்டாத அவரது கவிதைகள் அந்தச் சார்புநிலையை ஒட்டியே கவனத்தில் புறக் கணிப்புப் பெற்றிருந்தது. அவற்றின் தனித்துவத்தையும் எதார்த்தமான செயல்களுக் கிடையில் அறியப்படாமல் கிடக்கும் மர்ம வெளிச்சத்தைக் காட்டும் கவிதைகளையும் இந்தத் தொகுப்பின் மூலம் வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்க்க முடிந்தது. ஸ்ரீரங்கம் மோகனரங்கன் என்ற கவிஞரின் பெயர் தெரியவருவது இந்தத் தொகுப்பின் மூலம்தான். இவையெல்லாம் தொகுப்பு முன்வைக்கும் சாதகமான அம்சங்கள். எனினும் இந்த நூல் எந்தச் சலனத்தையும் கவிதையுலகில் ஏற்படுத்தி விடவில்லை.

> இந்தத் தொகுப்புக்குள் சேர்க்கப்பட்டவர்களை விடவும் கவனிப்புக்குரிய கவிதைகளை எழுதியவர்கள் இல்லையா? நபர்களை முன்னிலைப்படுத்தி நடத்திய தேர்வு புதிய போக்குகளைக் கவனத்தில் கொள்ளாமல் செய்திருக்கவில்லையா? தொகுப்பில் ஏற்கப்பட்டவர்கள் ஏன் ஏற்கப்பட்டார்கள் என்பதும் விலக்கப்பட்டவர்கள் ஏன் விலக்கப்பட்டார்கள் என்பதற்கும் புறவயமான ஆதாரங்கள் இல்லை. அப்படியானால் பாரபட்சமும் இருட்டடிப்பும் தொகுப்பின் பின்னணியில் செயல்பட்ட அரசியல் காரணி எனச் சுட்டிக்காட்டலாமா? ஒரு தொகுப்பு என்ற நிலையில் பிற்கால வாசகன் முன் இந்தத் தொகுப்பின் தேர்வுகள் நியாயமானவையாக நிற்கக்கூடுமா?

தொகுதியில் இடம்பெற்றிருப்பவர்களும் இடம்பெறாதவர் களும் பாராமுகமாக இருப்பதை ஒற்றை வாக்கியத்தில் விளக்கிவிடலாம். இடம்பெற்றவர்களுக்கு அஜீரண மிதப்பு. இடம்பெறாதவர்களுக்குப் பட்டினிக் கோபம். இந்த விளக்கத்தில் பாதி உண்மையும் பாதிப் பொய்யும் பிரிக்க முடியாதபடி கலந்திருக்கின்றன.

இதற்குக் காரணம் நூல் தொகுப்பின் பின்னணியிலுள்ள தெளிவின்மை. அதன் விளைவாகத் தெரியவரும் வெளிப் படையான சமநோக்கில்லாத தேர்வு. இதை விரிவாகப் பேசுவதற்கு முன்பு தொகுப்பின் ஒழுங்கமைப்புப் பற்றிய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்ற எந்தத் தொகுப்பும் தொகுப்பாசிரியரின் விருப்பு வெறுப்பை மீறிய ஒன்றல்ல. எந்த அடிப்படையில் ஒரு நூல் தொகுக்கப்பட்டாலும் அதன் தேர்வில் தொகுப்பாளனின் ரசனையும் சார்புகளும் நிலைப்பாடுகளும் இருக்கும். அது தவிர்க்க முடியாததும்கூட. கால வரிசைப் படியோ பொருளடிப்படையிலோ தன் விருப்பத்தை யொட்டியோ ஒரு தொகுப்பில் படைப்பின் தேர்வுகள் இடம்பெறலாம். எந்த முறையில் அமைந்தாலும் அந்தத் தொகுப்பின் தேர்வுக்குத் தொகுப்பாசிரியரே முழுப் பொறுப்பாளர். இது ஓர் அம்சம்.

தொகுப்புக்கான தேர்வு முறை வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பது மற்றொரு தேவை. ஒரு தொகுப்பில் எந்தப் படைப்பையும் சேர்க்கவும் விலக்கவும் தொகுப்பாசிரியனுக்கு உரிமையுண்டு. ஆனால் சேர்க்கைக்கான நியாயமும் விலக்கலுக்கான காரணமும் வாசகர் முன் வைக்கப்படுவது ஒரு தொகுப்பியல் தேவை என்று கருதுகிறேன். ராஜமார்த்தாண்டனின் தொகுப்பு முறையில் பிரதானமான குறைபாடாக இதைக் காண்கிறேன்.

பிச்சமூர்த்தி முதல் தென்றல்வரை 93 கவிஞர் களின் கவிதைகள் கால வரிசைப்படியாகவே தொகுக் கப்பட்டுள்ளன. பொருத்த மானது. எனில் ஏதேனும் ஒரு கவிதை வாசகன் இந்தத் தொண்ணூற்று மூவர் தவிர தனது விருப்பத்துக்குரிய கவிஞரை இந்தத் தொகுப்பில் தேடி ஏமாறும் வாய்ப்பு இல்லாமல் இந்தத் திரட்டு அமைந்திருக்கிறதா? தொகுப்பில் இடம்பெற்றி ருப்பவை எல்லாம் சிறந்த கவிதைகள் என்ற உரிமை பாராட்டலுக்குத் தகுந்தவை தாமா? இவற்றிலும் சிறந் தவை தொகுதியின் எல்லைக்கு வெளியில் இல்லையா? கவிஞர்கள் தேர்வும் கவிதைகளின் தேர்வும் அவ்வளவு கறாரானது என்று சொல்லப்படும் பட்சத்தில் சமகாலக் கவிஞர்களைத் தேர்வு செய்வதில் நெகிழ்வு கடைப்பிடிக்கப்பட்டது எதனால்? அக்கறையுள்ள வாசகரிடம் எழும் இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் முக்கியமானவை.

தொகுப்பில் கவிஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கவிதைகளின் எண்ணிக்கை சமத்துவமில்லாதது. குறைந்தபட்சமாக ஒரு கவிதையும் (நிலாந்தன்) அதிக பட்சமாக நாற்பது கவிதைகளும் (தேவதேவன்) இடம் பெற்றுள்ளன. ஆனால் இவை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பது தெளிவற்றுத் தோன்று கிறது. சிறந்த கவிதைகள் அதிகமாக உட்படுத்தப்பட வேண்டுமென்று விரும்பியதாகத் தொகுப்பாசிரியர் குறிப் பிடுகிறார். அவரது விருப்பம் சரியானதாக இருக்கலாம். எனினும் கவிதையின் சிறப்பு, எண்ணிக்கை சார்ந்ததா என்ற கேள்வியும் வாசிப்பவனின் மனத்தில் எழுகிறது. ஒரு கவிஞருக்கு அதிக எண்ணிக்கையிலும் இன்னொரு வருக்கு அதற்கு மாறான எண்ணிக்கையிலும் விகிதாச்சாரம் வழங்குவதைவிட ஆகச் சிறந்த கவிதைகளைத் தேர்ந் தெடுத்து எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வில்லாமல் பார்த்துக்கொண்டிருக்க முடியும்.

தொகுதியின் மற்றொரு பலவீனம் விடுபடல்கள். தமிழ்ப் புதுக்கவிதையில் சின்ன அளவிலாவது சலனமேற்படுத்திய சிலர் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு கவிஞர்கள் இடம்பெற்றிருக்கையில் கணிசமான பங்களிப்புச் செய்திரா தவர்கள் விடுபட்டதில் தவறில்லை என்று தொகுப்பாசிரியர் வாதிக்கலாம். ஆனால் அதற்கான காரணங்கள் புலப் படுத்தப்படவில்லை.

கவிதையை மக்களிடம் கொண்டு செல்வது என்ற முகாந்திரத்தில் கவிதைக்கு விரோதமான சிந்தனைப் போக்கை உருவாக்கிய இயக்கம் என்ற விமர்சனத்தின் அடிப்படையில் 'வானம்பாடி' இயக்கத்தையும் அதுபோன்ற பிற இயக்கங்களையும் விலக்கியிருப்பது புரிகிறது. நூலில் தொகுக்கப்பட்டுள்ள கவிதைகளின் போக்கை வைத்தே அந்தக் காரணத்தை விளங்கிக்கொள்வது எளிது. ஆனால் அதுவும் நியாயமற்றது.

எண்பதுகளில் எழுத வந்து சிறிய அளவிலாவது தமிழ்க் கவிதைப் பரப்பில் சலனங்களை ஏற்படுத்திய சில கவிஞர்கள் விடுபட்டிருப்பது தொகுப்பின் அதிகாரப்



படிப்பகம்

பூர்வமான நிலையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. மூன்று பெயர்களை உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். புதுக்கவிதையில் அதுவரை இல்லாத தொகுப்பு மனத்தின் வெளிப்பாடான கவிதைகளை எழுதிய பிரம்மராஜன், கவிதையில் அடித்தள மனிதர்களின் வாழ்வையும் புதிய கதையாடல் வடிவையும் முன்வைத்த பழமலய், பெண்ணின் தனியுலகைக் கவிதைக்குள் கொண்டுவந்த சுகந்தி சுப்ரமணியம் ஆகியோர் இந்தத் தொகுப்பில் தீண்டப்படாதவர்கள். இவர்களது கவிதையாக்கம் பற்றித் தொகுப்பாளர் 'புதுக்கவிதை வரலாறு' என்ற தனது நூலிலேயே குறிப்பிட்டுமிருக்கிறார்.

ராஜமார்த்தாண்டன் தனது தேர்வைத் தெளிவான அணுகுமுறையின்றி மேற்கொண்ட மனோபாவம்தான் இதற்குக் காரணம். எழுபதாண்டுக் காலக் கவிதைகளைத் தேர்ந்தெடுக்கும்போது கவிதைப் போக்குகளையும் கருத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும். தொகுப்பாளருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ அது போன்ற போக்குகளைச் சுட்டிக்காட்டாமல் முன்னேறுவது முறையற்றது என்று நம்புகிறேன். வகைமாதிரிக்காகவாவது அவை இடம்பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் இந்தத் தொகுப்பு ராஜமார்த்தாண்டனின் அந்தரங்க டயரி அல்ல. கவிதை ஆர்வலனுக்காகத் திறந்துவைத்திருக்கும் ஆவணம். அவரது அனுபவம் சார்ந்து புனையப்பட்ட படைப்பல்ல. மொழியின் பொதுத் தளத்திலிருந்து அவர் திரட்டிய ஆக்கங்களின் கருத்துக் காட்சி. அதற்கு ஒரு பொது இயல்பு உண்டு.

உதாரணமாக நான் குறிப்பிட்ட மூன்று கவிஞர்களும் கவிதையில் வேறொரு போக்கு உருவாக வளரக் காரணமாக இருந்தவர்கள். மரபை மீறிய உணர்வு நிலையை உருவாக்கியதில் பிரம்மராஜனின் பங்களிப்புத்தான் ரமேஷ்–பிரேம் கவிதைகளில் வேறு சாயலில் தொடர்கிறது. பழமலய்யின் இனக் கலாச்சார அடையாளப்படுத்தல்தாம் ஆ. இளம்பரிதியில் மறுவடிவம் பெறுகிறது. சுகந்தி சுப்ரமணியனின் பெண்மைத் தவிப்புதான் உமா மகேஸ்வரியிடம் சுதந்திர வேட்கையாக உருப்பெறுகிறது தொகுப்பாளர் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் விட்டிருக்கிறார்.


ராஜமார்த்தாண்டன்

இந்தத் தொகுப்பு காலவரிசைப்படி அமைந்திருக்கிறது என்பதைத் தவிர ஒரு நூலைத் தொகுப்பதன் வேறு அடிப்படை எதையும் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு உண்டு. ஓரிரு முறை வாசித்தபோது மெல்லிய ஓர் இழையைக் காண முடிந்தது. கவிதைகள், கவிதை ஆளுமைகள் என்ற பாகுபாட்டில் இவை தொகுக்கப்பட்டிருக்கலாம். சிலருக்கு அதிக விகிதாச்சாரமும் சிலருக்கு விளிம்புநிலை ஒதுக்கீடும் வழங்க இது காரணமாக இருக்கும். தேவதேவன், ராஜ சுந்தரராஜன், பிரான்சிஸ் கிருபா போன்றோர் கவியாளுமைகள். அவர்களுக்குப் பெரும்பங்கு. க.நா.சு., ஆத்மாநாம், சல்மா ஆகியோர் குறிப்பிடத்தகுந்த கவிதை எழுதியவர்கள். அவர்களுக்குச் சின்ன விகிதம். இதுதான் தேர்வு முறை என்றால் கவிதை அணுகலில் புதிய வைதீக மனப்பான்மை வலியுறுத்தப்படுவதாகப் பொருள். அப்படித்தானா?

இல்லை, கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டது வேறு அடிப்படையில் என்பது தொகுப்பாசிரியரின் கூற்று. நூலுக்கு எழுதிய முன்னுரையில் "கவிதை என்றும் புதியதாக இருக்க வேண்டும். கவிஞனின் தனித்துவம், அவனுக்கேயான பார்வை, அவனது சிறப்பான மொழியாளுமை, எல்லாவற்றுக்கும் மேலாக அவனது அபூர்வமான கற்பனையாற்றல் காரணமாகக் கவிதையில் இந்தப் புதுமை சாத்தியமாகிறது. நேற்றைய கவிதையை இன்று நாம் அனுபவித்து ரசிப்பதற்கும் இந்தப் புதுமையும் கற்பனையுமே காரணங்களாகின்றன. இந்த அடிப்படையிலேயே கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிடுகிறார்.

ஒரு தொகுப்பின் தேர்வு முறைக்கு மிகப் பலவீனமான அடிப்படை இது. ஒரு கவிஞரின் தனித் தொகுப்புக்கு இந்த அடிப்படை கச்சிதமானது. எழுபதாண்டுக் காலக் கவிதைப் பரப்பை இந்த அளவுகோலால் துல்லியமாக அளவிட முடியாது. காரணம் அவ்வளவு நீண்ட கால அளவில் ஓர் இலக்கிய வடிவத்தில் நிச்சயம் அநேக மாற்றங்கள் நேர்ந்திருக்கும். அந்த மாற்றங்களையொட்டிப் புதிய அளவுகோல்களின் தேவையும் உருவாகியிருக்கும். கவிதை என்றும் புதியதாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற தொகுப்பாளர் அதை அணுகும் முறை பழையதாக இருக்க அனுமதித்திருப்பதன் சான்று இந்தத் தொகுப்பு என்று தோன்றுகிறது.

எழுபதாண்டுக் காலக் கவிதைகளைத் தொகுத்திருக்கும் ஆசிரியருக்குத் தனது தேர்வு, வைப்புமுறை, தொகுத்தலின் சிக்கல்கள், அதிலிருந்து பெற்ற அனுபவம் என எதையும் தனது வாசகர்களிடம் பகிர்ந்துகொள்ள இல்லாமல் இருப்பது ஆச்சரியம் தருகிறது. புதுக்கவிதை பற்றிய வரலாற்று நூலில் தன் பார்வையைச் சொல்லிவிட்டதால் இங்கு அது தேவையில்லை என்று சொல்லுகிறார். இது ஆச்சரியத்தை இன்னும் அதிகப் படுத்துகிறது. ஒன்று: வரலாறு–தோற்றம், வளர்ச்சி, இருப்பு ஆகியவை பற்றியது. காலத்தின் தகவல்கள் சார்ந்தது. மற்றது: படைப்பின் மறு அறிமுகம் – மொழி, உணர்வு, அனுபவம் பற்றியது. மனம் சார்ந்தது. காலத்தின் புதிர்கள் சார்ந்தது. இந்த இரண்டையும் ஒன்றாகக் கருதியதால்தான் இந்தத் தொகுப்பு வாசிப்பவனிடம் ஒரு சமச்சீரின்மையை ஏற்படுத்துகிறது என்பது என் கருத்து.

இந்தத் தொகுப்புக்குள் சேர்க்கப்பட்டவர்களை விடவும் கவனிப்புக்குரிய கவிதைகளை எழுதியவர்கள் இல்லையா? நபர்களை முன்னிலைப்படுத்தி நடத்திய தேர்வு புதிய போக்குகளைக் கவனத்தில் கொள்ளாமல் செய்திருக்கவில்லையா? தொகுப்பில் ஏற்கப்பட்டவர்கள் ஏன் ஏற்கப்பட்டார்கள் என்பதும் விலக்கப்பட்டவர்கள் ஏன் விலக்கப்பட்டார்கள் என்பதற்கும் புறவயமான ஆதாரங்கள் இல்லை. அப்படியானால் பாரபட்சமும் இருட்டடிப்பும் தொகுப்பின் பின்னணியில் செயல்பட்ட அரசியல் காரணி எனச் சுட்டிக்காட்டலாமா? ஒரு தொகுப்பு என்ற நிலையில் பிற்கால வாசகன் முன் இந்தத் தொகுப்பின் தேர்வுகள் நியாயமானவையாக நிற்கக்கூடுமா?

இந்தக் கேள்விகளை ஒரு விவாதத்தின் தொடக்கமாகத் திறந்துவைக்கிறேன். அப்படி ஒரு விவாதம் தொடருவது இந்தப் புத்தகம் பரவலான கவனத்துக்குச் செல்ல உதவும். அந்த விவாதம் தமிழ்ப் புதுக்கவிதை இன்னொரு திசை நோக்கி முன்னேறத் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

குறிப்பு: 27.8.2005 அன்று நாகர்கோவில் அசிசி வளாகத்தில் நடைபெற்ற நெய்தல் கூட்டத்தில் வாசித்த கட்டுரை.

ராஜமார்த்தாண்டனின் எதிர்வினை அடுத்த இதழில் வெளிவரும்.

www.padippakam.com



மதிப்புரை

## மீண்டும் வரும் நாட்கள்

[கவிதை]

### மு. புஷ்பராஜன்




*வெளியீடு*:
**தமிழியல் – காலச்சுவடு பதிப்பகம்**
669, கே.பி. சாலை
நாகர்கோவில்–629 001.
முதல் பதிப்பு – ஜூலை 2004.
பக். 126, விலை ரூ. 60/–

**ராஜமார்த்தாண்டன்**

**யாழ்ப்பாணம் அருகே குருநகர்** கிராமத்தைச் சேர்ந்த மு. புஷ்பராஜன் எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து கவிதைகள் எழுதிவருபவர். கடந்த பதின்மூன்றாண்டுகளாக லண்டனில் வசித்துவருபவர். இத்தொகுப்புக்கு முன்னுரை எழுதிய மு. பொன்னம்பலம் இவரது கவிதைகளை நான்கு வகைகளாகப் பிரித்துப் பார்க்கிறார், அவை: 1. குருநகர் என்னும் கடலோரப் பிரதேசத்தைச் சுற்றிக் கவியும் கவிதைகள். 2. ராணுவப் பயங்கரவாதத்தை வெளிப்படுத்து பவை. 3. புலம்பெயர் வாழ்வில் சொந்த மண்ணின் – உறவுகளின் நினைவுகளும் ஒருவிதமான குற்ற உணர்வும். 4. இவற்றுக்கெல்லாம் பின்னணியான ஆத்மார்த்தப் பார்வை. இவற்றுடன், இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணம் பகுதியில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் எதிர்பார்ப்பு – ஏமாற்றம் – விரக்தி கலந்த மனநிலையில் எழுதப்பட்ட கவிதைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1988இல் ராணுவக் குண்டுவீச்சில் தனது வீட்டோடு கவிதைப் பிரதிகளும் அழிந்துவிட்டதாகவும் அவற்றுள் சிலவற்றை ஞாபகத்திலிருந்து மீட்டெடுக்க இயலவில்லை எனவும், 'குறிப்பாக இந்திய ராணுவம் அங்கிருந்த காலங்களில் எழுதிய கவிதைகளில் சிலவற்றை மீட்டுக்கொள்ள முடியாமல் போனதுதான்' தனது துயரம் எனவும் கூறுகிறார் புஷ்பராஜன் (ப. 30). இத்தொகுதியில் மூன்று கவிதைகள் இந்திய அமைதிப் படை யாழ்ப் பகுதியில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்டவை. இக்கவிதைகள் சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன் கவிதைகளைப் போல வெளிப்படையான, கடுமையான விமர்சனங்களாக அல்லாமல் சண்முகம் சிவலிங்கம், சு. வில்வரத்தினம் கவிதைகளில் போல 'ஆமை போல்' ஐந்தடக்கிய ஊமைக் குரல்களாகவே வெளிப்பட்டுள்ளன. உதாரணத்துக்குக் 'கைவிடப்பட்டோர்' கவிதையின் பின்பகுதி:

'வாளேந்திய சிங்கமும்
தூணேந்திய சிங்கங்களும்'
இணைந்த போது
கைவிடப் பட்டோர் ஆகி
சிதறடிக்கப்பட்டனர்

மீண்டும் தாய்மார்
இழுத்துச் செல்லப்படும்
புதல்வர்களுக்காய்
அந்நிய ஜீப்புகளின் பின்னால்
தலைவிரி கோலமாய்
கதறத் தொடங்கினர். (ப. 63)

எழுபதுகளில் எழுதத் தொடங்கிய ஏனைய ஈழத்துக் கவிஞர்கள் போலவே புஷ்பராஜன் கவிதைகளிலும் அமைதியான இளமைக் காலக் கிராம வாழ்க்கையின் பதிவு, அதன் பின்னரான ராணுவப் பயங்கரவாத அடக்குமுறைக் கொடூரங்கள், தன் இனத்துக்கான – பிரதேசத்துக்கான விடுதலைக் குரல், புலம்பெயர் வாழ்வின் துக்கமும் குற்றவுணர்வும், தாய்மண் பற்றிய ஏக்கம், இத்தனையையும் மீறி எழும் நம்பிக்கையின் குரல் யாவும் வெளிப்படக் காணலாம். கால வரிசையில் தொகுக்கப்பட்டுள்ள இந்தக் கவிதைத் தொகுப்பில் மேற்குறிப்பிட்ட போக்குகளை வாசகர்கள் தொடர்நிலையாக உணர முடியும்.

'ஒரு மனிதன் என்பதைவிட எனது மொழி, இனம் சார்ந்து நானும் எனது இனமும் கொண்ட நெருக்கடிகள், புறக்கணிப்புக்கள் அழுத்தமாக என்னுள் பதிந்திருக்கின்றன' என்கிறார் புஷ்பராஜன் (ப. 32). புறச்சூழலின் இந்தப் பாதிப்புகளே இவரிடம் பெரும்பாலான கவிதைகளாகவும் வெளிப்பட்டுள்ளன.

ஈழத்துக் கவிதைகள் பலவும் 'வெறும் வெற்று வரிகள், நீண்ட நீண்ட வரிகள்', 'அவை பெரும்பாலும் நீண்ட வசனங்களாகவே' தனக்குக் காட்சியளிப்பதாக வெங்கட் சாமிநாதன் குறைகூறுவதுண்டு ('என் பார்வையில் கவிதைகள்'). ஈழத்தின் முக்கியமான கவிஞர்களின் கவிதைகளிலும் கூட வெங்கட் சாமிநாதன் சுட்டும் இந்தக் குறைபாடுகளைக் காண முடியும்தான். ஆனால் அவற்றையும் மீறிய உயிர்த் துடிப்பும் வேகமும் கொண்ட கவிதைகளையும் அவர்கள் நிறையவே எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். வெங்கட் சாமிநாதன் ஈழக் கவிதைகள் பற்றிப் பொதுவாகக் கூறும் விமர்சனத்துக்கு புஷ்பராஜனும் விலக்கல்ல. உதாரணத்துக்குத் 'திரைகளின் பின்னால்' கவிதை:

தொடர்ந்த புறக்கணிப்பின்
வெம்மையில் எழுந்த மீறலில்
நிலைகுலைந்தோர்
தம் காலடிகளை அழித்துவிட்டு
எனது மீறலையே
வெட்டி எடுத்து
ஆராயும் பாங்கில்
வாழ்விலிருந்து சாவுக்கான
அரங்காக மாற்றும்
சூது புதைந்த நாடகத்திற்கு
சுயநல வேர் பாய்ந்த
தூரதேச நெறியாளர்கள்
திரைகளின் பின்னால் (ப. 116)

ஆனால் புஷ்பராஜனின் ஓரிரு கவிதைகளிலேயே நாம் இக்குறைபாட்டைக் காணவியலும். பல கவிதைகளிலும் கவித்துவம் செறிந்த வரிகள் வெகு இயல்பாக – சரளமாக இவரிடம் வெளிப்படுகின்றன. உதாரணத்துக்குச் சில கவிதை வரிகள்:

'வெள்ளி விரித்த வானில்
கிள்ளி எடுத்த நிலவின் கீற்று'
(ப. 35)

'வானிலோ
வாரிப் படர்ந்த வெண்மேகத்
திடையினில்
வைரப் பொடி சூழ
வட்ட நிலவு' (ப. 43)

'உன்மன அலையில்
என்கலம் ஆடும்.' (ப. 51)

'சிதைவுறாத
மலர்களின் உதிர்வு
மகத்துவம் அன்றோ . . .' (ப. 64)

'முழங்குக ஜெய முரசை
ஏழாம் தூதன் இசைத்த
எக்காளத் தொனி கேட்க
குத்துவிளக்குகள் மத்தியில்



படிப்பகம்

www.padippakam.com


குடியிருக்கும் ஒளியை
மரணம் என்றும்
ஜெயம் கொள்ளா தென
முழங்குக... முழங்குக...' (ப. 126)

எழுபதுகளில் எழுதத் தொடங்கிய பெரும்பாலான ஈழத்துக் கவிஞர்களிடமும் தமிழ்க் கவிதை மரபின் ஆரோக்கியமான தாக்கத்தைக் காண வியலும். அறுபதுகள், எழுபதுகளில் தமிழகப் புதுக்கவிஞர்கள் பலரும் மேலைநாட்டு நவீனத்துவத் தாக்கத்தின் காரணமாக மரபை நிராகரித்து எழுதிய காலகட்டத்தில் ஈழத்துக் கவிஞர்கள் மரபின் பாதிப்பிலிருந்து முற்றாக விலகிவிடவில்லை. அன்றைய காலகட்டத்தில் தமிழகத்து நவீன கவிதைகளில் குறைபாடாகக் காணப்பட்ட தன்மை இன்று பலவீனமான அம்சமாகக் கருதப்படுவதில்லை. அதுவுமொரு சிறப்புக் கூறாகவே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது. ஈழத்தில் வில்வரத்தினம் கவிதைகளில் போலவே மரபின் இந்த ஆரோக்கியமான தாக்கம் புஷ்பராஜன் கவிதைகளுக்கும் மேலதிக நுட்பத்தைக் கொடுப்பதை மேலே குறிப்பிட்ட கவிதை வரிகளில் காணவியலும்.

தமிழகத்துக் கவிதைகள் போல இருண்மையும் சூசகத்தன்மையும் அதீதமான அகவய நோக்கும் கொண்டவையல்ல ஈழத்துக் கவிதைகள். பெரும்பாலும் அவை வெளிப்படையான, நேரடியான, அதே சமயம் உணர்வுபூர்வமான அனுபவப் பகிர்தல்களே. எனினும் அவற்றின் அரசியல் பின்னணி காரணமாக, அவை வெளிப்படுத்தும் அனுபவ உணர்வுகளை முழுமையாக நாம் உள்வாங்கிக் கொள்ள ஈழத்தின் சமகாலத்திய அரசியல் போக்கும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணமாக, புஷ்பராஜனின் 'அப்பாவும் அம்மாவும்' கவிதை. 'அப்பாவும் அம்மாவுமாக அரசாண்ட ஆட்சியாளர்கள்' (ப. 26) என்று பொன்னம்பலம் இக்கவிதை குறித்துச் சுட்டிக்காட்டிய பின்னரே, இந்தக் கவிதையின் அரசியல் பின்னணியைப் புரிந்துகொண்டு கவிதையை உள்வாங்கிக்கொள்ள முடிகிறது. இது போன்றதே 'வெல்பவர் பக்கம்' கவிதை. இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த மோதலின் பின்னணியை மனதில் கொண்டு இந்தக் கவிதையைப் படித்தால், கவிதை உணர்த்தும் அனுபவத்தின் பரிமாணம், கவிதையில் வெளிப்படும் முரண்நகை மேலும் விரிவு கொள்கின்றன.

அவ்வாறாயின், 'காலம் கவிதைக்கு அளிக்கும் சலுகைகளை மீறி இவை கவிதைகளாக இருக்கின்றனவா?' என்னும் கேள்வி எழுகிறது (ப. 32). எந்தக் காலகட்டத்துக் கவிதையாயினும் புறச்சூழலிலிருந்து முற்றாக விடுபட்ட சுயம்புவாக அது அமைந்து விடுவதில்லை. அதே சமயம் கவிதையைப் பாதித்திருக்கும் புறச்சூழல் முற்றாக மாற்றமடைந்த பின்னரும் அந்தக் கவிதை புதிய அனுபவத்தைக் கிளர்த்துவதாக அமைதல் வேண்டும். புறநானூற்றுக் கவிதைகள் பலவற்றில் நாம் இத்தன்மையைக் காணவியலும். இத்தொகுப்பிலுள்ள முக்கியமான கவிதைகளனைத்தும் 'காலம் அளிக்கும் சலுகைகளை'யும் மீறிக் கவிதையாகக் கட்டமைவு பெற்றவையே. உதாரணத்துக்குக் 'கூடும் குரலும்' என்னும் சிறிய கவிதை:

தன் குரலுக்காய்
இரத்தம் வழியக் குதறப்பட்டு
வீதியில் விழுந்து துடிக்கிறது
கூடில்லா குயிற்குஞ்சு. (ப. 68)

இன்னுமொரு உதாரணமாக இத்தொகுப்பிலுள்ள நீண்ட கவிதையும் தொகுப்பின் தலைப்புக் கவிதையுமான 'மீண்டும் வரும் நாட்கள்' கவிதையைச் சொல்லலாம். இயேசுநாதர் மீதான விசாரணை, அவர் சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகிய சம்பவங்களின் பின்னணியில் ஈழத் தமிழரின் போராட்டத்தைச் சித்தரிக்கும் இந்தக் கவிதை, சகல விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான உணர்வை எழுப்புவதாகவும் அமைந்திருக்கிறது.

ஈழத்தில் நெருக்கடியான போர்ச் சூழலில் வாழ்கிறவர்களும் சரி, புலம் பெயர்ந்து வாழ்கிறவர்களும் சரி,


இப்பொழுது கிடைக்கிறது

நீங்கள் ஓர் எழுத்தாளராகவோ
பதிப்பாளராகவோ வாசகராகவோ
இருக்கலாம். ஆனால் உங்களிடம்
இருக்கிறதா?




விலை ரூ. 95

தற்காலத் தமிழ் உரைநடை
எழுதுநெறிகளை விளக்கும் முதல் கையேடு

கிடைக்குமிடம்
அடையாளம்
1205/1, கருப்பூர் சாலை,
புத்தாநத்தம் – 621 310.
✆ : 04332 273444


சென்ற இதழில் வெளியான லதாவின் பாம்புக் காட்டில் ஒரு தாழை நூலுக்கான மதிப்புரையை எழுதியவர் ரமேஷ் (சிங்கப்பூர்). ஆர். பாண்டியன் எனத் தவறாக அச்சாகியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

துக்கத்தில் கரைந்துபோய்விடாமல் அவர்களை உயிர்ப்பித்துக் கரையேற்றுவது அவர்களின் கனவுகளும் நம்பிக்கைகளுமே. அதனால்தான்,

கனவுகளே மலர்க
உறவினில் வளர்க (ப. 72)

என்று கனவுகளுக்கு வாழ்த்துக் கூறவும்,

இருந்ததும் இருப்பதும்
இருக்கப் போவதுமான
இருப்பிற்கு
என்றும் வாழ்வென
முழங்குக... முழங்குக... (ப. 126)

என்று நம்பிக்கை கொள்ளவும் புஷ்பராஜனால் முடிகிறது. இன்றைய ஈழத்துக் கவிஞர்களிடம் வெளிப்படும் பொதுவான கவிதைக் குணாம்சம்தான் இது.

தமிழ்க் கவிதை மரபில் உணர்ச்சிகளை நிதானமாக வெளிப்படுத்துகிற போக்கும் உண்டு; உச்ச நிலையில் வெளிப்படுத்துகிற போக்கும் உண்டு. அதனால்தான் சங்ககாலக் கவிதைகளை ரசித்துப் படிக்கிற ஒரு கவிதை வாசகனால் கம்பராமாயணத்தையும் படித்து அனுபவிக்க முடிகிறது. கவிதைகளில் உணர்வுகளை உச்ச நிலையில் உரத்து வெளிப்படுத்துவதற்கான புறச்சூழல் அமைந்துள்ள போதிலும் புஷ்பராஜனின் கவிதைகள் சங்க இலக்கிய மரபைச் சார்ந்தவையாகவே வெளிப்பட்டுள்ளன. கவிதை வெளிப்பாட்டின் இந்த அம்சம் இவரை ஏனைய ஈழத்துக் கவிஞர்களிடமிருந்து தனித்துக் காட்டுகிறது.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் – சமீபத்தில் வெளியான 93 கவிஞர்களின் கவிதைகளடங்கிய 'கொங்குதேர் வாழ்க்கை – 2' தொகுதியில் இடம்பெற்றுள்ள 'கானல் வரி', 'இக்கணத்தில் வாழ்ந்துவிடு', 'பீனிக்ஸ்', 'உதிர்வு' ஆகிய கவிதைகளுடன் '81 மே 31 இரவு', 'வெல்பவர் பக்கம்', 'கூடும் குரலும்', 'மீறல்', 'ஸ்ராலின் கைகுலுக்க மறுத்த போது', 'குளிர்காலம் . . .' எனத் தொடங்கும் சிறிய கவிதை, 'மீண்டும் வரும் நாட்கள்' ஆகியவை புஷ்பராஜனை ஒரு நல்ல கவிஞராக நமக்கு இனங்காட்டுகின்றன.

தமிழியல் (லண்டன்) – காலச்சுவடு பதிப்பகங்கள் இணைந்து தொகுப்பை மிகச் சிறப்பாக வெளியிட்டுள்ளன. ●


படிப்பகம்

www.padippakam.com



மதிப்புரை

## இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்

[கவிதை]

### சி. பத்மநாதன்




*வெளியீடு:*
**குமரன் புத்தக இல்லம்**
3, மெய்கை விநாயகர் தெரு
குமரன் காலனி
சென்னை 600 026.
முதல் பதிப்பு – ஜூலை 2004.
பக். 396, விலை: ரூ. 200/-

### ஆ. சிவசுப்பிரமணியன்

**வடமொழியில் 'ஸ்மிருதிகள்' என்று** அழைக்கப்படும் நீதி நூல்களில் சில, ஆரியர்களது சட்ட நூல்களாகவும் திகழ்ந்தன. அந்த வகையில் மனு ஸ்மிருதி முக்கியமானது. வடபுலத்தைத் தாண்டித் தமிழ்நாட்டிலும் மனுதர்மம் ஆதிக்கம் செலுத்தியதைச் சோழர் காலத்தியக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். ஆங்கிலக் காலனிய ஆட்சியின்போது சொத்துரிமை, திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல் தொடர்பான உரிமையியல் சட்டம் (சிவில் சட்டம்), இந்து, இஸ்லாமிய, கிறித்துவச் சமயத்தினருக்கு என்று தனித்தனியாக உருவாக்கப்பட்டது. இந்துச் சட்டத்தில் வடமொழி தர்ம நூல்களின் ஆதிக்கம் மிகுந்துவிட்டது. இந்நிலையில் தமிழர்களுக்கென்று ஒரு பாரம்பரிய உரிமையியல் சட்டம் கிடையாதா என்ற கேள்வி எழுகிறது.

எழுதப்பட்ட உரிமையியல் சட்டங்கள் நமக்கு இல்லையாயினும் ஒவ்வொரு சாதியினரிடமும் சில மரபுவழிச் சட்டங்கள் வழக்கில் உள்ளன. கொடுக்கல் வாங்கல், முறை தவறிய பாலுறவு, மணமுறிவு, எல்லைப் பிரச்சினை தொடர்பாக இன்றும் சில கிராமங்களில் இம்மரபு வழிச் சட்டங்கள் வழக்கில் உள்ளன. பிறமலைக் கள்ளர்களின் வாழ்வியல் குறித்து ஆய்வு நூல் எழுதிய லூயி துமோ 'ஊர் விலக்கம்' நிகழும் முறை குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய மரபுவழிச் சட்டங்கள் யாழ்ப்பாணத் தமிழர்களிடமும் வழக்கில் இருந்துள்ளன. இதைத் தேச வழமைச் சட்டம் என்று குறிப்பிட்டனர். டச்சுக்காரர்கள் இலங்கையை ஆண்டபோது 1707இல் தேச வழமைச் சட்டத்தைத் தொகுத்து டச்சு மொழியில் மொழிபெயர்த்து நூலாக்கினர். அப்போது ஒன்பது பிரிவுகளைக் கொண்டதாக அது விளங்கியது. பின்னர் டச்சு மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நூல் வடிவம் பெற்றது. போர்த்துகீசியர், டச்சுக்காரர் ஆளுகையில் தேச வழமையின் அடிப்படையிலேயே நீதி மன்றங்கள் தீர்ப்பு வழங்கின. ஆங்கில ஆட்சியின் போதும் இந்நிலை தொடர்ந்தது. அத்துடன் தேச வழமைச் சட்டம் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு நூல்வடிவம் பெற்றது. சிறு மாறுதல்களுடன் தேச வழமைச் சட்டம் இன்றும் வழக்கில் உள்ளது.

ஆண், பெண்களின் சொத்துரிமை, சீதனம், திருமணம், மறுமணம், தத்தெடுத்தல், நில உரிமை, குத்தகை, நன்கொடை, ஒத்தி, அடமானம், சொத்துகளை விற்றல், வாங்கல், மிருகங்களை வாடகைக்குப் பிடித்தல், அடிமைகள், வட்டிக்குப் பணம் கொடுத்தல், நெல் கடன் கொடுத்தல் என்பன குறித்த சட்டங்கள் தேச வழமையில் இடம்பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் பல நுணுக்கமான உட்பிரிவுகள் இடம்பெற்றுள்ளன. சான்றாக ஒருவனுடைய நிலத்திலிருக்கும் மரம் அண்டை நிலத்தில் கிளை பரப்பி இருந்தால் அக்கிளையில் உள்ள காய்கனிகள் யாருக்கு உரியன என்பதைக்கூட இச்சட்டம் வரையறுக்கிறது. யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதார அடித்தளம், இந்தப் பொருளாதார அடித்தளத்தைப் பேணும் சமூகக் கட்டமைப்பு என்பன வற்றை இச்சட்டம் குறிப்பிடுவதாகக் கூறும் கா. சிவத்தம்பி, பின்வரும் செய்திகளை, 'தேச வழமை' தெளிவு படுத்துகிறது என்றும் குறிப்பிடுகிறார்: (1) குறிப்பிட்ட காலத்தில் இச்சமூகத் தின் பொருளாதாரத் தளமாக அமைந்த உற்பத்தி முறைமைகள், (2) இந்த உற்பத்தி முறைமையின், முறைமைகளின் தொடர்ச்சிக்கு உதவும் அந்தச் சமூகத்தின் தனிமங்கள், (3) இந்த உற்பத்தி முறைமைகளுள் மேலாண்மை யுடையதாக விடுப்பது, (4) இவற்றின் நடைமுறைத் தொழிற் பாட்டுக்கான கருத்துநிலை உந்துதல்கள்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மரபுவழிச் சட்டங்கள் அனைவரின் பார்வைக்கும் கிட்டாத நிலையில் இலங்கையின் வரலாற்றறிஞர்களில் ஒருவரான சி. பத்மநாதன் அவற்றைத் திரட்டி நூலாக வெளியிட்டுள்ளார். பிரித்தானிய ஆவணச் சுவடிகள் நிலையத்தில் அவர் தேடி எடுத்த யாழ்ப்பாணத் தேச வழமைச் சட்டம், புத்தளம் கற்பிட்டி வழமைகள், திருகோணமலைத் தமிழரின் வழமைகள், மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தென்னிந்திய முஸ்லிம்களின் சட்டங்கள், இலங்கை மற்றும் தூத்துக்குடி பரதவர் சாதி வழமை ஆகிய ஆவணங்களுடன் சி. பிரிட்டோ என்பவர் 187இல் வெளியிட்ட "முக்குவர் சட்டம்" என்ற ஆங்கில நூலையும் மொழி பெயர்த்து, ஆறு அரிய ஆவணங்களின் தொகுப்பாக இந்நூலை அமைத்துள்ளார். நூலின் தொடக்கத்திலுள்ள அறிமுகப் பகுதியில் மட்டுமின்றி, ஒவ்வொரு ஆவணத்தின் தொடக்கத்திலும் மரபுவழிச் சட்டங்களும் வழமைகளும் வழக்கிலுள்ள பகுதிகளின் வரலாறும் அவற்றைப் பின்பற்றும் சாதியினர் குறித்த வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இச்சட்டங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள இவை பெரிதும் துணை புரிகின்றன.

அருஞ்சொல் விளக்கம் ஒன்றும் நூலில் இடம்பெற்றுள்ளது. இதை இன்னும் விரிவுபடுத்தியிருக்கலாமோ என்றும் தோன்றுகிறது. கி.பி. 1681இல் வெளியான இலங்கையின் வரைபடம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. பழைய ஆவணங்களை எவ்வாறு தொகுத்துப் பதிப்பிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூல் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது. தமிழர்கள் மரபுவழிச் சட்டங்கள் குறித்த ஆய்வின் முன்னோடியான தம்பையாவுக்கு நூலை 'சமர்ப்பணம்' செய்திருப்பதும் பொருத்தமானது. 'தென்னிந்தியத் தமிழருக்கும் இலங்கைத் தமிழருக்கும் இடையிலே நிலவிவந்துள்ள வரலாற்று ரீதியிலான தொடர்புகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கும் இந்நூல் மிகவும் பயனுடையதாயிருக்கும்' என்று பதிப்புரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது உண்மை என்பதை இந்நூலைப் படிப்பவர்கள் உணர்வர். ●



படிப்பகம்

www.padippakam.com





# நவீனம் செழித்த நினைவு

இளஞ்சேரல்



'அற்றைத் திங்கள் அவ்வெண்ணில வில்' என்றாலே பாரி மகளிர் நினைவுக்கு வர வேண்டும் என்று தன் உரையைத் தொடங்கினார் கவிஞர் ஞானக்கூத்தன். கபிலருக்கு இரண்டு பெண் குழந்தைகள். வறுமை. 12 வயதில் மணம் முடிக்கும் காலம் அது. சிறுமியரான பாரி மகளிர் சோகத்துடன் பாடுவதுதான் இத்தலைப்புப் பாடல். அந்த நிலா நல்ல நிலா என்றால் பின்னால் மறைந்திருப்பது இம்மகளிரின் சோகம். அன்றைய நினைவுகள் என்பது துன்பங்களை, சோகங்களை நினைவுகூர்வது. இவை மட்டும் தங்கிவிடுகிற தன்மையுள்ளது என்று தொடர்ந்தார் ஞானக்கூத்தன்.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸும் காலச்சுவடும் இணைந்து நடத்திவரும் இந்தத் தொடர் நிகழ்வின் ஏழாம் சந்திப்பில் கவிதை உணர்வு நிரம்பியிருந்தது. பண்டைய தமிழ் இலக்கியங்களிலிருந்து நேற்று எழுதப்பட்ட கவிதைவரையிலும் பல விஷயங்களைத் தொட்டுப் பேசிய ஞானக்கூத்தன் உரையின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

பாரதி, சோமசுந்தர பாரதியார் போலவே நானும் சிறு வயதிலேயே எழுதத் துவங்கிவிட்டேன். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் எனது ஊரான திரு இந்தளூர் பற்றித் திருமங்கை யாழ்வார் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அங்கு வைஷ்ணவப் பிள்ளைகள் 40-50 பேர் ஆயிரம் பாடல்களைச் சாதாரணமாகப் பாடுவர். நானும் தமிழ் ஆர்வத்தில் மனப்பாடமாகப் பாடியிருக்கிறேன். வீட்டில் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட முடிவுசெய்து வேதம் படிக்க அப்பா முடிவுசெய்தபொழுது சிறப்புத் தமிழ் படித்துக் கொண்டிருந்த எனக்குப் பெரும் சோகம். தந்தையிடம் பேச பயம். வறுமை வேறு.

அப்பொழுது நன்னிலம் அருகே ஏனங்குடியில் ரெட்டியார் ஒருவர் உதவித் தொகை தருவதாக அறிந்து நடந்தே சென்று அவரைச் சந்தித்தேன். கம்பன் நடந்த இடங்கள். வயல்களில் இடையில் நடந்தபொழுது விபரீதமான சந்தோஷம். தஞ்சையின் அழகு. இயற்கையின் ஓசை.

உதவித் தொகை கிடைத்துப் படிப்பு தொடர்ந்தது. இது தமிழார்வத்திற்குக் கிடைத்த வெற்றி.

ஆரம்பத் தமிழ்க் கல்லூரியில் புலவர் கீரன், கி. ராமலிங்கம் ஆகியோர் நண்பர்களாயினர். பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு மருந்து விற்பனைப் பிரதிநிதியாக மூன்று மாதம் பணிபுரிந்தேன். பெரும் ஊழல்கள் நிறைந்த துறையாக இருந்தது. மனம் ஈடுபடவில்லை. மனம் முழுக்கத் தமிழும் கவிதையுமாக அலைக்கழிக்கிறது. ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ்வொர்த் போலவே தமிழ்க் கவிதை மரபுக்கு வேறுகிளை ஒன்று தேவையென்று தோன்றிக்கொண்டேயிருந்தது. இச்சூழலில்தான் சி.சு. செல்லப்பா அறிமுகம் ஆனார்.

61இல் ம.பொ.சி. மீது ஈடுபாடு உண்டானது. அவர் தனித்த பார்வையில் திராவிட நிகழ்வுகளை அணுகினார். மைலாப்பூர், பீச் என்று சுற்றிய படி விவாதிப்போம். பின் சிற்றுண்டி முடித்துவிட்டு காரில் அறை வரை கொண்டு வந்துவிட்டுப் போவார். கவிதை குறித்து அவருக்கு அதிக ஆர்வமில்லை. சந்திப்பை நிறுத்திவிட்டேன். பிறகு திருத்தணியைத் தமிழ்நாட்டுடன் சேர்க்கும் விழாவில் கலந்துகொண்டேன். சி.எஸ்., ம.பொ.சி. ஆகியோர் பேசினார்கள். பெருங்கூட்டம். என் மணிபர்ஸை யாரோ பிக்பாக்கெட் அடித்துவிட்டார்கள். நடந்தே சென்னை வரும்பொழுது காரில் வந்த ஏ.பி. நாகராஜன், டி.ஆர். சுந்தரம் நின்று என்னை ஏற்றிக் கொண்டு வந்தார்கள்.

ஒரு முறை கன்னிமரா நூலகத்தைப் பார்த்து வியந்துபோனேன். என்னுடைய 32 பக்க நூலொன்றை இங்கே வைக்க முடியுமா என்ற மலைப்பு ஏற்பட்டது. ஏ.கே. ராமானுஜம்தான் எழுது, இல்லையெனில் உனது சிந்தனைகள் வெளியே தெரியாமலேயே போய்விடும் என்றார்.

முழுமையான இலக்கியச் சூழலால் 1961 அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டேன். ந. முத்துசாமி, சி. மணியுடன் நட்பு. *நடை*யில் கவிதைகள் வெளியானது. அங்கதம், டூயல் பர்சனாலிட்டியுடன் எழுத்து வந்தது. இளம்பிள்ளைவாதம் உள்ள தம்பி பற்றிய கவிதையெல்லாம் எழுதியிருக்கிறேன்.

* * *

உரைக்குப் பிறகு வாசகருடன் உரையாடல். வாசிக்கும் பழக்கம் குறைந்தது ஏன் என்ற கேள்விக்கு "ஒருவர் படிக்க ஆயிரம் பேர் கேட்கிற பழக்கம் நம் மரபு. 30-40 வயது வாசகர் மிகக் குறைவு. 1882க்குப் பிறகுதானே இலக்கியம் உலகெங்கும் பரவியது. உரைநடையில் மாற்றம் வந்தது. தவிர நல்ல ஆசிரியர்கள் அமைவது முக்கியம். எனக்கு சச்சிதானம் பிள்ளை, சேஷாத்திரி ஐயங்கார் ஆகியோர் அமைந்தார்கள்" என்றார்.

தமிழ் அழியுமா. என்னும் கேள்விக்கு, "தமிழ் சாகாது. ஏனெனில் நாம்தான் நாத்திகத் தமிழ், ஆத்திகத் தமிழ், பொதுத் தமிழ் என்று வளர்கிறோமே! கடந்த 50 ஆண்டுகளில் மிகச் சிறந்த பங்களிப்பை நவீனத் தமிழ் இலக்கியவாதிகள் செய்துள்ளனர். உலகிலேயே தமிழகத்தில்தான் பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியே இலக்கியம், மொழி, படைப்பு வளம் செம்மையாக முன்னேறியுள்ளது. அசோகமித்திரன், சுந்தர ராமசாமி உள்ளிட்டோர் சிறப்பான பங்களிப்பு செய்துள்ளனர்" என்றார்.

எழுத்தாளர் எம். கோபால கிருஷ்ணனின் அறிமுக உரையுடன் துவங்கிய நிகழ்வில் வாசகர்களுக்கு வழங்கப்பட்ட ஞானக்கூத்தன் பற்றிய சிறு கையேடு கூட்டத்தின் மீதான ஆர்வத்தைத் தூண்டியிருந்தது. ●



படிப்பகம்




## நாவல்கள்

| | |
|---|---|
| ஆழி சூழ் உலகு - ஜோ டி குருஸ் | ரூ.265 |
| பகடையாட்டம் - யுவன் சந்திரசேகர் | 130 |
| மணல்கடிகை - கோபாலகிருஷ்ணன் | 265 |
| காக்டெய்ல் - சுதேசமித்திரன் | 90 |
| காடு - ஜெயமோகன் | 190 |
| ஏழாம் உலகம் - ஜெயமோகன் | 130 |
| பின்தொடரும் நிழலின் குரல் - ஜெயமோகன் | 290 |
| காலச்சுமை - ராஜ்கௌதமன் | 160 |
| சிலுவைராஜ் சரித்திரம் - ராஜ்கௌதமன் | 260 |
| ரத்த உறவு - யூமா வாசுகி | 140 |
| யாரும் யாருடனும் இல்லை - உமா மகேஸ்வரி | 130 |
| குள்ளச்சித்தன் சரித்திரம் - யுவன் சந்திரசேகர் | 100 |
| அம்மன் நெசவு - சூத்ரதாரி | 70 |
| கிடங்குத் தெரு - ஜெகதீஷ் | 55 |
| இருபது வருஷங்கள் - எம்.எஸ். கல்யாணசுந்தரம் | 60 |
| பகல்கனவு - எம்.எஸ். கல்யாணசுந்தரம் | 35 |
| கூளமாதாரி - பெருமாள் முருகன் | 90 |
| வாழ்விலே ஒரு நாள் - சோல்ஸெனிட்சின் | 55 |
| காதல்தேவதை - மாஸோ | 55 |
| யூஜினி - பால்ஸாக் | 75 |
| வீழ்த்தப்பட்டவர்கள் - அஸுவெலா | 55 |
| கடல்புறா - ரிச்சர்ட் பாஷ் | 25 |
| இரவு - எலீவீஸல் | 70 |
| வீரம் விளைந்தது | 190 |

## சிறுகதைகள்


| | |
|---|---|
| நாஞ்சில்நாடன் கதைகள் | ரூ.275 |
| அ.முத்துலிங்கம் கதைகள் | 350 |
| இராசேந்திர சோழன் கதைகள் | 250 |
| ஆ. மாதவன் கதைகள் | 240 |
| வார்த்தைப்பாடு - அசதா | 40 |
| தொலைகடல் - உமா மகேஸ்வரி | 45 |
| நெரிக்கட்டு - அழகியபெரியவன் | 55 |
| வெள்ளெருக்கு - கண்மணி | 90 |
| தேவதேவன் கதைகள் | 50 |
| கால்வினோ கதைகள் (பிரம்மராஜன்) | 80 |
| அமைதியான ஒரு மாலைப் பொழுது | 70 |
| மானிட வாழ்வுதரும் ஆனந்தம் - கோபிகிருஷ்ணன் | 45 |
| பொன்மணல் - எம்.எஸ். கல்யாணசுந்தரம் | 45 |

## க வி தை க ள்

| | |
|---|---|
| முகவீதி - ராஜசுந்தரராஜன் | ரூ.70 |
| கொங்குதேர் வாழ்க்கை 1 - எஸ். சிவகுமார் | 250 |
| கொங்குதேர் வாழ்க்கை 2 - ராஜமார்த்தாண்டன் | 290 |
| காமக் கடும்புனல் - மகுடேசுவரன் | 120 |
| வலியோடு முறியும் மின்னல் - பிரான்சிஸ் கிருபா | 45 |
| கற்பாவை - உமா மகேஸ்வரி | 25 |

## பிற நூல்கள்

| | |
|---|---|
| அங்கே இப்ப என்ன நேரம்? - அ. முத்துலிங்கம் | ரூ. 180 |
| நரிக்குறவர் - இன வரைவியல் - பத்ம பாரதி | 160 |







| | |
|---|---|
| நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி - அ.கா.பெருமாள் | 65 |
| திருமூலர்: காலத்தின் குரல் - கரு. ஆறுமுகத்தமிழன் | 55 |
| அனுபவங்கள் அறிதல்கள் - நித்ய சைதன்ய யதி | 80 |
| நாராயண குரு - சீனிவாசன் | 100 |
| சொல் பொருள் மௌனம் - க. மோகனரங்கன் | 130 |
| கானல் வரி: ஒரு கேள்விக் குறி - ப. சரவணன் | 60 |
| எதிர் முகம் - ஜெயமோகன் | 75 |
| உள்ளுணர்வின் தடத்தில் - ,, | 75 |
| இலக்கிய முன்னோடிகள் - ,, | 280 |
| வியப்பளிக்கும் ஆளுமைகள் - வெங்கட் சாமிநாதன் | 60 |
| இன்றைய நாடக முயற்சிகள் - ,, | 60 |
| கடவுளும் 40 ஹெர்ட்ஸூம் - அரவிந்தன் நீலகண்டன் | 75 |
| கவிமணி கட்டுரைகள் | 70 |
| பத்ரகாளியின் புத்திரர்கள் - ஜெகதீசன் | 60 |
| நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று - நாஞ்சில் நாடன் | 55 |
| தெய்வங்கள் முளைக்கும் நிலம் - அ.கா. பெருமாள் | 100 |
| தென்குமரியின் கதை - ,, | 180 |
| ஒரு குடும்பத்தின் கதை - ,, | 60 |
| வடக்கு முகம் - ஜெயமோகன் | 40 |
| ஆயிரம் சிறகுள்ள மோகம் - ரோஜர் வாடிம் | 75 |
| தேவசகாயம்பிள்ளை வரலாறு | 40 |
| இயற்கையை அறிதல் - எமர்சன் | 25 |

# தமிழினி

67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14. e mail: tamizhininool@yahoo.co.in. Ph: 98841 96552

www.padippakam.com

நூற்றாண்டு விழா நினைவுகூறல்: செருகளத்தூர் சாமா

# அந்தக் கால நட்சத்திரம்



ராண்டார் கை

செருகளத்தூர் சாமா! அன்றைய தமிழ்த் திரைப்பட உலகில் பல வகைகளில் பிரபலமாக இருந்தவர். இவர் ஒரு நட்சத்திர நடிகர். கர்நாடக இசையில் திறமை பெற்றவர். திரைக் கதையாசிரியர், வசனகர்த்தா, இயக்குநர், ஸ்டூடியோ முதலாளி எனத் திரைப் படக் கலையின் நுணுக்கங்களைப் பழகி அறிந்தவர். ஷேக்ஸ்பியர் எழுதிய ஆங்கில நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் சாமா.

செருகளத்தூர் சாமா நடித்த படங்களில் *சிந்தாமணி* (1937), *அம்பிகாபதி* (1937), *நந்தனார்* (1942), *திருநீலகண்டர்* (1939), *சகுந்தலை* (1940), மனோன்மணி (1942), *சிவகவி* (1943), *ராஜமுக்தி* (1948), *ஏழை படும் பாடு* (1950), *மர்மயோகி* (1951) (தமிழில் முதல் முறையாக A சர்டிபிகேட் வாங்கிய பெருமை கொண்டது) ஆகிய படங்கள் முக்கியமானவை.

செருகளத்தூர் சாமா 1905இல் தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்தார். இவர் பிறந்த ஊரின் சரியான பெயர் சிறுகளத்தூர். அதில் வசதி நிறைந்த ஒரு மிராசுதாரின் மகனாகப் பிறந்தார் ஸ்வாமிநாதன். காவிரி பாயும் இடம் எல்லாம் கானம் ஒலிக்கும் என்பது பழமொழி. அதற்கேற்ப சாமாவும் சிறு வயதிலேயே கேள்வி ஞானம் மூலமாகவே கர்நாடக இசையில் தேர்ச்சி பெற்றார். இவர் மனதில் பாடகனாக வேண்டும், நடிகனாக வேண்டும் எனப் பல வகையான கனவுகள். அவைகளை நனவாக்கச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். இதில் தந்தைக்கு விருப்பமில்லை. அவர் உதவியை நாடாமலேயே சென்னையில் 'காஸ்மோபாலிடன்' கிளப்பில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். இது சின்ன வேலையாக இருந்தாலும் சாமாவுக்குப் பல நன்மைகள்.

அது மட்டும் அல்லாமல் சாமாவின் கவர்ச்சியான முகம், சரளமாக நகைச்சுவையோடு ஆங்கிலம் பேசும் திறமை, எல்லோருடனும் இனிமையாகப் பேசிப் பழகும் மனப்பான்மை இவை எல்லாம் அவரைப் பிரபலமாக்கின. அன்றைய சென்னைப் பிரமுகர்கள் பலர் இவரைத் தங்களில் ஒருவராகக் என்று கருதினார்கள்.

அதன் விளைவாக சாமாவுக்குப் பெரிய மனிதர்கள் பங்குபெற்ற கலை நிறுவனமான 'சுகுண விலாஸ் சபா'வின் ஆங்கில நாடகங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஷேக்ஸ்பியரின் பிரபலமான நாடகங்களில் ஒன்றான *மெர்ச்சன்ட் ஆஃப் வெனிஸில்* நடித்தார் (இந்தப் பிரபல நாடகத்தைச் சம்பந்த முதலியார் தமிழில் எழுதி நடித்து இயக்கினார். அதன் பெயர் *வாணிபுரத்து வணிகன்*).

ஷேக்ஸ்பியரின் நாடகத்தை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து *ஷைலக்* என்ற பெயரில் படமாக்கினார். அந்தப் படத்தில் சாமா ஷைலக்காக நடித்தார். படத்தைத் தன் சொந்த நிறுவனமான 'பாரத் பிக்சர்ஸ்' பெயரில் தயாரித்தார். *ஷைலக்* படத்தில் சாமா யாரும் செய்யாத ஒரு புதுமையை உருவாக்கினார். அந்நாளில் திரைப்படங்களுக்குப் பாட்டுப் புத்தகங்கள் மட்டும்தான் இருக்கும். அதில் பாடல்கள், கதைச் சுருக்கம் பங்கு பெற்றோரின் பட்டியல் போன்றவை எல்லாம் கொடுக்கப்படும். சாமா *ஷைலக்* படத்தின் திரைக்கதை வசனத்தையே புத்தகமாகப் போட்டுவிட்டார். அந்தப் புத்தகத்தின் விலை ஒன்றரையணா. இதுதான் தென்னிந்திய‌த் திரைப்பட வரலாற்றில் முதல் திரைக்கதை வசனப் புத்தகம். இது எந்தப் படாடோபமும் இல்லாமல் கொட்டகையில் விற்கப்பட்டது. *ஷைலக்* படத்திற்கு வசனம் எழுதி இயக்கியவர்கள் சாமா, ராமு. இந்த ராமு என்பவர் கும்பகோணத்தில் ஒரு பிரபல வக்கீல் குடும்பத்தைச் சேர்ந்தவர். சாமாவின் நெருங்கிய நண்பர். இவருக்கு சினிமா பைத்தியமும் அதிகம், சாமா தயாரித்த படங்களில் இவர் அவருடன் சேர்ந்து வசனம் எழுதி, இயக்கவும் செய்தார்.

காஸ்மோபாலிடன் கிளப்பில் ஒரு பிரபலமான அங்கத்தினர் அனந்த நாராயணன், அன்றைய இந்தியத் திரைப்பட முன்னோடிகளில் ஒருவர். 39 வயதுவரைதான் வாழ்ந்தார் என்றாலும் தமிழ் சினிமாவில் பல சாதனைகளைப் படைத்தவர். அவருக்குச் சாமாவை மிகவும் பிடித்துவிட்டது. கீழ்ப்பாக்கத்தில் அவருக்குச் சொந்தமான 'ஸ்ரீனிவாசா சினிடோன்' என்ற ஸ்டூடியோவில் பணிபுரிய நாராயணன் சாமாவை அழைத்துச் சென்றார்.

நாராயணன் *ஸ்ரீனிவாச கல்யாணம்* என்ற படத்தை எடுத்துக்கொண்டிருந்தார். சாமாவின் நடிப்பு வாழ்க்கை அந்த "ஸ்ரீனிவாச கல்யாண" வைபோகத்துடன் தொடங்கியது. இந்தப் படம்தான் சென்னையில் தயாரான முதல் படம். அதற்கு முன்பு ஒலியைப் பதிவு செய்யும் சௌகரியங்களைக் கொண்ட ஸ்டூடியோ கிடையாது. அந்நாளில் தமிழ்ப் படங்கள் பம்பாய், கல்கத்தா, பூனா, கொல்ஹாபூர் போன்ற இடங்களில் எடுக்கப்பட்டன.

நாராயணன் 1934இல் *த்ரௌபதி வஸ்திராஹரணம்* என்ற படத்தை எடுத்தார். இதில் கிருஷ்ணனாக நடித்தவர் சாமா. அவரது வசீகரமான தோற்றம் அவரைக் கலியுகக் கிருஷ்ணனாகவே உருவாக்கியது. அதன் விளைவாக அந்நாளில் கிருஷ்ணர் வேடம் என்றாலே சாமாவைத் தேடி வரும் (பின்னாளில் என்.டி. ராமாராவ் போல). சாமா கிருஷ்ணனாக நடித்த படங்கள் *மாயா பஜார்* (1935), *பாமா பரிணயம்* (1936), *சிந்தாமணி* (1937).

சாமாவை நட்சத்திர நடிகனாக்கியது வரலாறு காணாத வெற்றி கண்ட *சிந்தாமணி*. தொடக்கத்தில் சாமா இந்தப் படத்தில் கதாநாயகனான 'பில்வமங்கள்' என்ற வேடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


படிப்பகம்

செருகளத்தூர் சாமா கதாநாயகன் என்ற விளம்பரமும் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் இயக்குநர் ராவின் மனதில் திடீர் என்று ஒரு யோசனை. கதாநாயகன் வேடத்திற்கு சாமாவுக் குப் பதிலாகத் தென்னிந்தியாவின் முதல் சூப்பர் ஸ்டார் எம்.கே. தியாக ராஜ பாகவதரைப் போடலாம் என முடிவு செய்தார். சாமாவை என்ன செய்வது ? அவருக்குப் பழக்கமான வழக்கமான கிருஷ்ணர் வேடம் கொடுக்கப்பட்டது! அதற்குத் தேவை யான வகையில் ராவ் திரைக்கதையில் மாற்றங்களைச் செய்தார். *சிந்தாமணி* பல இடங்களில் ஒரு வருடத்திற்கு மேல் ஓடியது.

*சிந்தாமணி*யில் சாமாவின் தாடி வேடம் அவருக்கு மேலும் புகழைச் சேர்த்தது. அதில் அவர் பாடிய பாடல் களில் ஒன்று வரலாறு படைத்தது. "நாடகமே உலகம்... நாளை நடப்பதை யார் அறிவார்" என்ற இந்த அர்த்த புஷ்டி உள்ள பாடலை எழுதியவர் தமிழ் 'தியாகையா' என்று வர்ணிக்கப்படும் கர்நாடக இசை மேதை பாபநாசம் சிவன்.

*சிந்தாமணி* வெற்றி பெற்ற அதே ஆண்டில் வெளிவந்து வெற்றிபெற்ற மற்றொரு படம் *அம்பிகாபதி*. இதில் அம்பிகாபதியின் தந்தையான கம்பராக தாடியோடு நடித்தார் செருகளத்தூர் சாமா. இதை இயக்கியவர் அமெரிக்கா விலிருந்துச் சென்னைக்கு வந்து பல தமிழ்த் திரைக் காவியங்களை உரு வாக்கிய எல்லிஸ் ஆர். டங்கன்.

*அம்பிகாபதி*யின் வெற்றி பாகவதரை மேலும் சில படிகள் உயர்த்தியது. அந்தப் படிகளில் சாமாவும் ஏறினார். இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். கர்நாடக இசை, திரைப் பட உலகம். இப்படி இருவருக்குமே பல வகை ஆர்வங்கள். அந்த நட்பின் காரணமாக சாமா பாகவதருடன் பல வெற்றிப் படங்களில் நடித்தார். அவை களில் முக்கியமானவை *திருநீல கண்டர்* (1939), *சிவகவி* (1943).

1944இல் சாமா கதாநாயகனாக நடித்த படம் *பர்த்ருஹரி*. இதைத் தயாரித்து இயக்கியவர் இந்தியத் திரைப்பட உலகில் முன்னோடியான கே. சுப்பிரமணியம். கதாநாயகன் ஓர் அரசன். அவனுடைய ராணிக்கு அரண் மனையின் குதிரைப் பாகன் கள்ளக் காதலன். தன் மனைவியின் காதல் களியாட்டங்களைக் கண்ட அரசன் வெறுப் படைந்துவிடுகிறான். வாழ்க்கையைப் பல கோணங்களில் பார்த்து "பர்த்ரு ஹரி சுபாஷிதம்" என்ற காவியத்தை உருவாக்கினான்.

இந்தப் படத்தில் காதல் காட்சி கள் மிகவும் அருவருப்பாக இருந்தன என்று மக்கள் கருதினார்கள். அதன் விளைவாகப் படம் படுதோல்வி அடைந்தது. தான் கதாநாயகனாக நடித்த ஒரு படம் மக்களால் தூக்கி எறியப்பட்டதே என்ற வருத்தம் சாமா வின் மனதிலிருந்து பல ஆண்டுகள் அகலவேயில்லை.

1940களில் சாமாவுக்கு மூன்று படங்கள் பெரும் புகழைத் தந்தன. அவை *சகுந்தலை* (1940), *மனோன் மணி* (1942), *மீரா* (1945). *சகுந்தலை* யில் இவர் முனிவராக நடித்தார். கதா நாயகி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி முனிவ ரின் வளர்ப்பு மகள். சாந்தமே உரு வான முனிவராக இவருடைய நடிப்பு படத்திற்கு மெருகேற்றியது. *சகுந் தலை* அமோக வெற்றி பெற்றது.

டங்கன் இயக்கிய மற்றொரு திரை இசைக் காவியம் *மீரா*. எம்.எஸ்.தான் மீரா. *மீரா*வில் குடும்ப குருவாகச் செருகளத்தூர் சாமா.

1942இல் சாமாவுக்கு மீண்டும் ஒரு வெற்றிப் படம், ஜெமினியின் *நந்தனார்*. பிரபல இசைமணி எம்.எம். தண்டபாணி தேசிகர் நந்தனாராக நடிக்க, சாமா நிலப்பிரபுவான வேதி யராக நடித்தார். இப்படத்தைத் தயா ரித்தவர் இந்தியத் திரையுலக 'மொகல்' எஸ்.எஸ். வாசன்.

*நந்தனார்* ஓர் இசைக் காவியம். படத்தை வெற்றியடையச் செய்ய விளம்பர மேதையான வாசன் ஒரு யுக்தியைக் கையாண்டார். படத்தில் வரும் பாடல்களில் எது சிறந்தது என்று வரிசைப்படுத்தி எழுத வேண் டும். கொட்டகையில் டிக்கெட் வாங்கு பவர்களுக்கு அந்தக் கூப்பன் கொடுக் கப்படும். வாசன் முன்கூட்டியே வரிசைப்படுத்தி பேங்கில் வைத்தி ருந்த பட்டியலில் உள்ள விடை களுக்கு ஒத்து வந்தால் பரிசுகள் கொடுக்கப்படும். பரிசுத் தொகை 10,000 ரூபாய்.

சாமா நடித்து 1948இல் வெளிவந்த *ஜீவஜோதி* வெற்றி அடையவில்லை.

பிரபல பிரெஞ்சுக் கதாசிரியர் விக் டர் ஹ்யூகோவின் உலகப் புகழ் பெற்ற நாவல் 'Les Misérables' (லே மிஸரா பிள்). இந்த நாவல் பிரபல இந்தியத் திரையுலக மேதையான கே. ராம்நாத் கைவண்ணத்தில் 1950ல் *ஏழை படும் பாடு* என்ற தலைப்பில் வந்தது. பெரும் வெற்றியடைந்தது. கதாநாயக னாக நடித்தவர் சித்தூர் வி. நாகையா. கருணையே உருவான கிறிஸ்தவ மத குருவாகச் செருகளத்தூர் சாமா.

சாமாவுக்கு மற்றொரு வெற்றிப் படம் ராம்நாத் இயக்கத்தில் வெளிவந்த *மர்மயோகி* (1951). பல ஆங்கில நாவல்களைத் தழுவி இதன் திரைக் கதை வசனத்தை எழுதியவர் அன் றைய பிரபல இயக்குநர் A.S.A. சாமி. கதாநாயகன் எம்.ஜி. ராமச்சந்திரன்.

யுனைடெட் ரைட்டர்ஸ்



காமக் கடும்புனல்
(கவிதைகள்)
மகுடேஸ்வரன்
பக்: 207, விலை: ரூ. 100
முதல் பதிப்பு: டிசம்பர் 2004

யுனைடெட் ரைட்டர்ஸ்
67, பீட்டர்ஸ் சாலை,
ராயப்பேட்டை, சென்னை–14

சாமா தயாரிப்பாளராக அவதாரம் எடுத்தபோது தன் நிறுவனத்திற் கென்று ஒரு ஸ்டூடியோ இருக்க வேண்டும் என்று விரும்பினார். சென்னை கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கிங்ஸ்டன் என்ற ஒரு பிரபல பங்களா. 'நேஷனல் மூவி டோன்' என்ற ஸ்டூடியோ இந்தப் பங் களாவில் சில ஆண்டுகள் இருந்தது. அதை சாமா குத்தகைக்கு எடுத்துச் சில ஆண்டுகள் நடத்தினார். ஸ்டூ டியோவின் பெயர் பாரத மூவிடோன்.

1950களில் சாமாவுக்குத் திரைப் பட வாய்ப்புகள் குறையத் தொடங்கின. வயதும் ஆக உடல் நலமும் சரியாக இல்லை. சாமா, வாழ்க்கை வாழ் வதற்கே என்ற கொள்கையைக் கொண்டவர். அதன்படி தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார், சுவைக்கவும் செய்தார்.

1960களில் தியாகராய நகரில் குடியிருந்த தன் மகள் வீட்டிற்கு சைக்கிள் ரிக்ஷாவில் சென்ற சாமா, அந்த ரிக்ஷாவிலேயே மகளைக் காண்பதற்கு முன்பே இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டார். 1950களில் முடிவில் நான் கலை யுலகில் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் செருகளத்தூர் சாமாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

செருகளத்தூர் சாமா தமிழ்த் திரை உலகின் பெரிய புள்ளிகளில் ஒருவர். அப்படிப்பட்டவர் இன்று மறக்கப்பட்டு இருக்கிறார். திரையுலகில் இது சாதா ரணம் – அதிலும் முக்கியமாக நம் நாட்டில் – சாதாரணம். ●

# The PARKAR


**தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்**
293, Ahamed Complex, 2nd Floor, Royapettah High Road, Chennai - 600 014.
Phone : 55904058, Cell: 9384653983 - 9381008554

| நூல் பெயர் | விலை |
|---|---|
| அண்ணன்மார் சாமி கதை வடிவங்களும் வழிபாடும் | 120.00 |
| தமிழ்த் திரைப்படங்களின் அடிக்கருத்துகள் | 150.00 |
| கொ.மா. கோதண்டத்தின் படைப்புகள் | 180.00 |
| வள்ளலாரின் ஆளுமை உருவாக்கம் | 180.00 |
| மதுரை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | 225.00 |
| யேட்ஸும் பாரதியும் | 150.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம் | 130.00 |
| திருச்சிராப்பள்ளி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் –ஓர் ஆய்வு | 150.00 |
| சுற்றுச் சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம் | 130.00 |
| விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள் | 125.00 |
| எபிரேயத்தின் தாய்மொழி தமிழே | 250.00 |
| திரு.வி.க.வின் சமுதாய நோக்கு | 200.00 |
| இருபதாம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர் நோக்கும்.. | 250.00 |
| மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் | 250.00 |
| வன்முறை–நேர்வும் தீர்வும் | 180.00 |
| வில்லிசைவேந்தர் சாத்தூர்ப் பிச்சைக்குட்டி | 250.00 |
| தமிழில் அறிவியல் நூல்கள் – ஓர் ஆய்வு | 300.00 |
| கதைப் பாடல்களில் இடைக்காலச் சமூகம் (கி.பி.1500–கி.பி.1800) | 150.00 |
| குன்றக்குடி அடிகளார் பணிகள்–ஓர் ஆய்வு | 180.00 |
| தமிழ் நிகண்டுகள்–ஆய்வு | 150.00 |
| பாரதியார் கவிதைகளில் அணிநலம் | 200.00 |
| கோவை மாவட்ட வழக்குச் சொல் அகராதி–1 | 125.00 |
| கண்ணதாசன் நாவல்கள் – ஒரு திறனாய்வு | 75.00 |
| தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை | 150.00 |
| இருபதாம் நூற்றாண்டு கிறித்தவப் புதினங்களில் மனித விடுதலை | 150.00 |
| அறிவியல் தமிழ் இலக்கியம் | 100.00 |
| பாரதிதாசனில் ரூசோவின் தாக்கம் | 180.00 |
| பேரா.ச. வையாவுரிப் பிள்ளையின் பதிப்புப் பணி | 150.00 |
| கல்வெட்டுகள் காட்டும் கலைச்சொற்கள்– சோழர் காலம் | 160.00 |
| அகிலன்–ர.சு. நல்லபெருமாள் | |
| புதினங்களில் காந்தியம் | 150.00 |
| தமிழ்ப் புதுக்கவிதைகளில் படிமங்கள் | 125.00 |
| சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் | 150.00 |
| மரபுவழியில் கை | 50.00 |
| வள்ளுவரும் வள்ளலாரும் | 80.00 |
| வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமுதாயம் | 120.00 |
| தமிழ் நாவல் வளர்ச்சி | 150.00 |
| கா. அப்பாத்துரையார் தமிழ்ப்பணி | 100.00 |
| தமிழ் இலக்கண மரபுகள் | 120.00 |
| நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுகள் | 100.00 |
| மெய் பொய்யன்று திருமூலர் வள்ளலார் | 100.00 |
| அயல் மாநில–தமிழ்ப் படைப்பாளிகளின் புனைகதைகள் | 120.00 |

| நூல் பெயர் | விலை |
|---|---|
| தொடக்கக் கல்வித் தமிழ்ப்பாட நூல்கள்– ஓர் ஆய்வு | 100.00 |
| தொலைக்காட்சித் தமிழ் | 100.00 |
| புலமைச் செல்வியர் | 200.00 |
| புதுக்கவிஞர்களின் விடுதலைக் கண்ணோட்டம் | 100.00 |
| தொல்காப்பியக் கலைச்சொற் களஞ்சியம் – ஓர் ஆய்வு | 100.00 |
| இந்தியா டுடே – துக்ளக் இதழ்களில் அரசியல் நிலைப்பாடு | 160.00 |
| தமிழில் தலித் இலக்கியம் | 150.00 |
| தமிழ் இலக்கிய கலைச்சொல் அகராதி | 100.00 |
| ஆக்டோபசும் கறிக்கோழிகளும் | 100.00 |
| ஐந்திலக்கணம் | 100.00 |
| ஆளுமைப் பார்வைகள் | 100.00 |
| தசாவதாரங்கள் | 50.00 |
| தமிழ் நாடகம் சில ஆளுமைகள் | 50.00 |
| தமிழ் நாடகச் சூழல் – ஒரு பார்வை | 80.00 |
| அசல் கலைஞன் | 60.00 |
| இலக்கண வழிகாட்டி | 75.00 |
| தீனிப்போர்–நாடகம் | 60.00 |
| படிமம் | 80.00 |
| அண்ணாவின் மொழிநடை | 40.00 |
| பிதிரா | 276.00 |
| தொல்காப்பியத் தமிழ் | 100.00 |
| மூங்கில் காடு | 100.00 |
| பாரதிதாசன் கவிதைகளில் பகுத்தறிவு அழகியல் | 100.00 |
| தமிழ் நாவல்களில் சாதி | 100.00 |
| கோவைத் தமிழ் இலக்கணம் | 100.00 |
| தமிழில் இசுலாமியப் புதுவகை இலக்கியம்– ஓர் ஆய்வு | 100.00 |
| திருக்குறளும் பொது அறிவும் | 80.00 |
| கந்தபுராணத்தில் பக்திநிலை | 75.00 |
| மன ஓசை | 75.00 |
| இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வு உலா | 100.00 |
| மாத்தளை சோமுவின் சிறுகதைகள்–1 | 100.00 |
| மாத்தளை சோமுவின் சிறுகதைகள்–2 | 100.00 |
| வரலாற்று நோக்கில் திட்டக்குடி | 50.00 |
| தமிழியல் ஆய்வு–கருத்துநிலைத் தேடல் | 100.00 |
| புனைவின் வரலாறும் வாசிப்பின் அரசியலும் | 100.00 |
| பெண்கள் முன்னேற்றத்தில் சுமங்கலி இதழ்களின் பங்கு | 75.00 |
| இசுலாமிய சதக இலக்கியங்களும் தஸ்தகீர் சதகமும் | 75.00 |
| கி.ரா.கோபல்ல கிராமம் ஓர் ஆய்வு | 50.00 |
| சீவக சிந்தாமணி வடிவமும் நடையும் | 60.00 |
| வள்ளலார் வழங்கிய கொடை | 80.00 |
| தமிழ் நாவல்களில் காலக்கூறு கையாளப்படும் முறை | 160.00 |
| மறவர் உறவு முறை | 150.00 |
| குழுமாயி அம்மன் வரலாறும் வழிபாடும் | 60.00 |

www.padippakam.com

# எழுத்தில் வாழ்பவன் அன்றோ நான்



புதுவை இளவேனில்

## பசுவய்யா
கவிதைகள்

## சுந்தர ராமசாமி
சில நினைவுகூரல்கள்

- கோகுலக் கண்ணன்
- பி.எ. கிருஷ்ணன்
- ராஜ் கௌதமன்
- சை. பீர் முகம்மது
- ராஜு – விசாலம்
- சல்மா
- ஜே.பி. சாணக்யா
- உமா வரதராஜன்
- அ. முத்துலிங்கம்
- தனபால்
- யுவன் சந்திரசேகர்
- இமையம்
- சக்கரியா
- கி. ராஜநாராயணன்
- ரவிக்குமார்

## சுந்தர ராமசாமியின்
கடைசி வரிகள்

படிப்பகம்

www.padippakam.com

# பசுவய்யா கவிதைகள்


ஆர்.பி. பாஸ்கரன்

**என் மலரைத் தேடி**

இப்போது தெரிகிறது
காலத்தின் கானல்
கடலோரம் கொதிக்கும் மணல் உறிஞ்சும்
நீரின் மறைவு.

இப்போது தெரிகிறது
பாதைகளில் விரிந்து படரும் கிளைச் சிக்கல்கள்
என் பாதங்களைப் பின்தள்ளும் ஓட்டம்.

இப்போது தெரிகிறது
இதுகாறும் நான் அணிந்தவை எதுவும்
என் ஆடைகள் அல்ல என்பது
சுமந்தவை யாரோ கருத்தரித்த சூன்யங்கள்.

விழிப்புற்று வெறுமையின் களி எய்தி நிற்கையில்
சாயும் காலத்தின் நிழல்
நகர்ந்தோடி வருகிறது
என் பாதம் கவ்வ.

காலமே சற்றுப் பொறு
வெட்ட வெளியிலிருந்து என் மலரை
இதோ விரைவில் பறித்துவிடுகிறேன்.

*1986*

**சவால்**

நோவெடுத்துச் சிரம் இறங்கும் வேளை
துடைகள் பிணைத்துக் கட்ட
கயிறுண்டு உன் கையில்.

வாளுண்டு என் கையில்
வானமற்ற வெளியில் நின்று
மின்னலை விழுங்கிச் சூலுறும்
மனவலியுண்டு.

ஓய்ந்தேன் என மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின் வாங்கல் அல்ல பதுங்கல்.

எனது வீணையின் மீட்டலில்
கிழிபடக் காத்துக் கிடக்கின்றன
உனக்கு நரையேற்றும் காலங்கள்.

எனது கொடி பறக்கிறது
அடிவானத்துக்கு அப்பால்.

*1972*

www.padippakam.com

# பசுவய்யா
## கவிதைகள்

### தவறாய்

தவறாய்
ஒரு பிரிவுக்கு ஏற்பாடாயிற்று.

தவறாய் தலைவரும் விளித்து விட்டார்.
எழுந்து நின்றாயிற்று தவறாய்.

தவறாய் பிரிவுக்கு வருந்திப் பேசிவிட்டீர்.
தவறாய் கரங்களும் குவியத் துடிக்கின்றன.

தவறாய் என
இப்போது எப்படிச் சொல்வேன்.

பேசினால் போய்விடுவீர்
தழுதழுத்தாலும் அப்படியே.

எனக்கோ
பிரிந்த பின் போக இடமில்லை;
சேர உறவு இல்லை;
செய்யக் காரியம் எதுவுமில்லை.

இதுவே,
இவ்வுறவே என்றும்
என்றுகூட எண்ணாமல்
அதுவாய், அதுவாய்
காலம் எல்லாம் கழித்தாயிற்று.

தவறாய் என
இப்போது எப்படிச் சொல்வேன்.
தவறாயிற்று எல்லாம்.

*1975*



தட்சிணா மூர்த்தி

### என் எழுத்து

காற்றைத் திரித்து நகத்தைக் கிழித்து விளக்கேற்றி
ஊனைக் கரைத்து உயிரைப் பிழிந்து எழுத்தாக்கி
நெஞ்சைக் குத்தி விரலைத் தோய்த்துப் படைத்தேன்

திரியை எரித்தது விளக்கு
விளக்கை அணைத்தது காற்று
விரலையும் கரைத்தது குருதி

எனினும்
என்னை அழிக்க யாருண்டு
எழுத்தில் வாழ்பவன் அன்றோ நான்.

*1959*

www.padippakam.com





ஆதிமூலம்

## என் நினைவுச் சின்னம்

நான் விடைபெற்றுக்கொண்டுவிட்ட செய்தி
உன்னை வந்து எட்டியதும்
நண்ப
பதறாதே
ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல் எதுவும் அதில் இல்லை.

இரங்கற் கூட்டம்போட ஆள்பிடிக்க அலையாதே
நம் கலாச்சாரத் தூண்களின்
தடித்தனங்களை எண்ணி
மனச்சோர்வில் ஆழ்ந்து கலங்காதே.

நண்ப
சிறிது யோசித்துப்பார்
உலகெங்கும் கணந்தோறும்
இழப்பின் துக்கங்களில்
ஒரு கோடிக் கண்கள் கலங்குகின்றன
ஒரு கோடி நெஞ்சங்கள் குமுறி வெடிக்கின்றன.

நண்ப
நீ அறிவாயா
உன் அடிச்சுவடு ஒவ்வொன்றிலும்
அழிகின்றன ஒரு கோடி உயிர்கள்.

இருப்பினும்
நண்ப
ஒன்று மட்டும் செய்
என்னை அறியாத உன் நண்பனிடம்
ஓடோடிச் சென்று
கவிதையை எழுப்ப முயன்றுகொண்டிருந்தவன்
மறைந்துவிட்டான் என்று மட்டும் சொல்.
இவ்வார்த்தைகளை நீ கூறும்போது
உன் கண்ணீர்
ஒரு சொட்டு
இந்த மண்ணில் உதிரும் என்றால்
போதும் எனக்கு.


*1987*

படிப்பகம்

www.padippakam.com



# பசுவய்யா
## கவிதைகள்



மருது

### வாழும் கணங்கள்

மூளை நரம்பொன்று அறுந்து
ஒளிவெள்ளம் உள்ளே புகுந்தது
மனவெளியும் நிலவொளியில் குளிர
செவிப்பறை சுயமாய் அதிர
மண்ணில் ஒருபோதும் கேட்டிராத
ஓசை உவகைகள் எழும்பின
பாஷை உருகி ஓடிற்று
ஒரு சொல் மிச்சமில்லை
என் பிரக்ஞை திரவமாகி
பிரபஞ்சத்தின் சருமமாய்
நெடுகிலும் படர்ந்தது
ஒரு கணம்தான்
மறு கணம்
லாரியின் இரைச்சல்
எதிரே காலி நாற்காலி.

### சாகா இறப்பு

அவன் விடைபெற்றுக்கொள்ளும் நிமிடங்கள்
என் மனத்தில் துடிக்கத் தொடங்கவே
பரபரத்து ஓடினேன் பார்க்க
அப்போது அவன் சூன்யத்தில்
ஆனந்த ஓய்வு கொண்டிருந்தான்
புழு அவனைத் தின்றுகொண்டிருக்கும் நிலையிலும்
கண்களில் உயிரின் பிரகாசம் மின்னிற்று
ஆனந்த ஓய்வில் அவன் எழுதியிருந்த கவிதையை
- கடைசி வரிகளா அவை- பார்த்தேன்
மரக்கிளை குருவி ஒன்று அருவியைப் பார்ப்பது போல்.
மரணம் இறங்கும் விதத்தைப் பார்க்கிறான்
அதற்கு மேல் ஒரு மயிரிழை இல்லை
ஈரக்கசிவு இல்லை இன்னும் கொஞ்சம் எனும் இரங்கல் இல்லை
கடைசிப் புள்ளியில் தளம் கட்டும் துக்கம் இல்லை.

ஆற்றாமை என் தொண்டையை அடைக்க
இழை அறாது என் மனத்தில் ஓடும் மரணத்தை
மிக மோசமாக மீண்டும் வெறுத்தேன்
அப்போது அவனுடைய ஆனந்த ஓய்வு
அதன் பரிபூரணத்தை அடைந்து முடிந்திருந்தது
இறந்துகொண்டே திரும்பினேன்.




படிப்பகம்




கோகுலக் கண்ணன்

# அன்புள்ள சு.ரா. . . .



**உங்களை முதன்முதலில் சந்தித்தது நாகர்கோவிலில்** தான். ஆறு வருடங்களுக்கு முன்பு. கண்ணனைக் கடையில் விட்டுவிட்டு நீங்களும் நானும் ஒன்றாக ஆட்டோவில் வீடு வந்தோம். உங்கள் நண்பர்கள் இருவர் அன்று பார்க்க வந்திருந்தார்கள். பொதுவாய் இலக்கியம் பற்றிய பேச்சு. உங்களின் சிறுகதைகளை மட்டுமே அப்போது படித்திருந்தேன். 'அழைப்பு', 'பல்லக்குத் தூக்கிகள்' ஆகியவை என் கவனத்தைக் கவர்ந்திருந்தன. அதன்பிறகு சில மாதங்கள் கழித்து சான்டாக்ரூஸில் உங்கள் மகள் தைலா வீட்டில் சந்தித்தோம். அன்றைய பொழுது எனக்கு இன்னமும் நினைவில் நன்றாக நிற்கிறது. இப்போது கணினி அறையாக மாறிவிட்ட அறையில் நீங்கள் கட்டிலில் படுத்தவாறு பேசிக்கொண்டிருந்தீர்கள் (படுத்தபடி பேசுவது எனக்கு மிகவும் பிடிக்கும் என்று நீங்கள் சொன்னது எனக்கு இன்னமும் நினைவிலிருக்கிறது).

'கொந்தளிப்பு' என்ற உங்கள் சிறுகதையைப் பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். திருவனந்த புரத்தில் கோர்ட் வாசலில் போலீஸ் சில விபச்சாரி களை அடித்ததைப் பார்த்த பிறகு எழுதிய கதை என்று சொன்ன ஞாபகம். நான் விடாமல் உங்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன், அழைப்பு, கொந்தளிப்பு போன்ற கதைகள் எழுதிய தருணங்கள் என்ன, ஏன் இடைவெளிக்குப் பிறகு எழுதிய கதைகளில் இறுக்கம் கூடிப்போயிற்று என்று. அந்தச் சமயங்களில் நீங்கள் எழுதிய கதைகளின் மீது எனக்குத் தீராத மயக்கம் இருந்தது. கதைகளின் தளத்தில் உள்ள தீவிரம், யதார்த்தத்தி லிருந்து ஒரு அடி விலகியது போன்ற தோற்றம், கழுத்தைக் கவ்விப் பிடிப்பது போன்ற நெருக்கடி, முறுக்கிய கயிறெனத் திமிறும் மொழி – இவையெல்லாம் எப்படி அமைந்தன என்று கேட்டுக்கொண்டே இருந்தேன். முட்டாள்தனமான கேள்விகள்தான். நீங்கள் அப்போதிருந்த மனநிலை அப்படி என்று சுருக்கமாக நிறுத்திக் கொண்டீர்கள். எனக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது.

ஒவ்வொரு கதை பற்றியும் ஒவ்வொரு வரி பற்றியும் நீங்கள் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று மிகுந்த ஆசையாக இருந்தது. கதை களை அக்குவேறாக ஆராய்வது அது கிளர்த்தும் ஈர்ப்பைக் குறைத்துவிடுகிறது என்றவுடன்தான் நான் நிறுத்தினேன். ஆனால் உங்களுக்கு மிகுந்த பொறுமை இருந்தது. என் அறியாமையைப் பொருட்படுத்தாது என்னுடன் பேசினீர்கள். உங்கள் சகஜமான தோரணை யும் அனுசரணையான பேச்சும் தோளில் கைபோட்டுப் பேசுவது போன்ற நெருக்கமான நட்பைச் சட்டென்று ஏற்படுத்திவிட்டது. பிறகொரு நாள் உங்களைக் கேட்டேன்: நான் உங்களை எப்படி அழைப்பது என்று. சு.ரா. என்றுதானே கூப்பிட வேண்டும் என்றீர் கள். நான் உங்களை இறுதிவரையிலும் சார் என்றே அழைத்தேன், வார்த்தையில் மட்டு மரியாதை இருப் பினும் மனதிலும் செயலிலும் உங்களை என் வய தொத்த நண்பனாகவே நினைத்து வந்தேன். ஒரு நாள் என் பெண் ஷ்ரியாவிடம் இன்று சான்டாக்ரூ ஸுக்கு என் நண்பர் சு.ரா.வைப் பார்க்கப் போகிறேன் என்றேன். அவள் கேட்டாள்: "சு.ரா. நிஷா, தனுவின் தாத்தா இல்லையா? அவர் எப்படி உனக்கு நண்பராக இருக்க முடியும்?" அது அவளுக்குக் கடைசிவரை விளங்காத ஒன்றாய் இருந்தது.

உங்களிடம் நான் எப்போதும் கேட்கும் முதல் கேள்வி, "சார், உங்க ஹெல்த் எப்படியிருக்கு?" உங்கள் குரலில் ஒரு தீவிரமான உற்சாகம் ஏறிக்கொள்ளும். "ரொம்ப நல்லாருக்கேன் கோகுல்" என்று பதில் வரும். அதற்கு மாற்றுக் கருத்து உண்டா? அந்தக் குரலுக்குள்ளும் அதைச் சொன்ன மனதிற்குள்ளும்

www.padippakam.com



குடியிருந்த ஆரோக்கியம் என்னை உவப்பில் ஆழ்த்தும். நான் சற்று மனத் தளர்வில் இருக்கும்போது குறிப்பாக மீண்டும் மீண்டும் உங்களைக் கேட்பேன். ஆரோக்கியம் உங்களை ஒரு தங்கத் தாம்பாளத்தில் ஏற்றி வைத்திருப்பதுபோல நீங்கள் விவரிப்பது என்னை ஏதோ ஒரு விதத்தில் மீட்டுக் கொடுக்கும். "தினமும் தைலா வீட்டிலிருந்து ரோட்டோர கேட் வரைக்கும் நடக்கிறேன்" என்று சொல்லி அதை விவரிப்பீர்கள். அது சுலபமான நடையல்ல. ரோடு மேலும் கீழும் வளையும். ஒரு குறிப்பிட்ட மேட்டைக் கடப்பது கடினம். அதைத் தினமும் வென்று வரும் உங்கள் ஆரோக்கியத்தை அழுத்திச் சொல்வீர்கள்.

நான் உங்களை அதிகமாகப் புதன்கிழமைகளிலேயே சந்தித்திருக்கிறேன். ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் நீங்கள் தங்கியிருக்கும் ஆறு மாதங்களில் ஐந்து மாதங்களேனும் சான்டாக்ரூஸில்தான் செலவழித்திருக்கிறீர்கள். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நாம் சந்தித்துக்கொள்வோம். இருப்பினும் தினமும் உங்களைத் தொலைபேசியில் அழைத்துப் பேசியிருக்கிறேன். சில சமயம் உங்கள் குரலைக் கேட்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஏதேனும் ஒரு காரியத்தை உருவாக்கி உங்களை அழைத்திருக்கிறேன். உங்கள் எழுத்து வேலையைத் தடைப்படுத்துகிறேனோ என்ற குற்றவுணர்வு அழுத்தும். உங்களைக் கேட்டால் 'உங்கள் தொலைபேசிக்காகத்தான் காத்திருந்தேன் கோகுல்' என்பீர்கள். புதன்கிழமை மாலை உங்களைச் சந்திப்பதற்கு இரண்டு நாள்கள் முன்பிருந்தே என் மனம் பரபரக்கத் தொடங்கிவிடும். உங்களுக்குக் காட்ட வேண்டிய புத்தகங்கள், பத்திரிகைகள், குறிப்புகள் என்று எல்லாவற்றையும் சேகரிக்கத் துவங்கிவிடுவேன்.

தைலா வீட்டின் கண்ணாடி அறை எத்தனை அற்புதமானது. ஜன்னல் வெளியே குலுங்கும் பசிய மரங்கள் எப்பேர்ப்பட்ட சித்திரங்களைத் தீட்டுகின்றன. அதற்கு நடுவில் நாம் அமர்ந்திருப்போம். நம் முன்னால் ஒரு அடுக்காகப் புத்தகங்கள். நான் உங்களுக்குக் கொண்டுவந்த புத்தகங்களைப் பார்ப்பீர்கள். புத்தகத்தின் அட்டையை உங்கள் விரல்கள் சொல்ல முடியாத பிரியத்தோடு நீவிக்கொண்டிருக்கும். ஏதோவொரு பக்கத்தில் உங்கள் கவனம் ஆழும்பொழுது கன்னத்தை உங்கள் இடது கை தாங்கி, கட்டை விரல் தாடைக்கடியில் தாடியைக் கோதும். நான் கணினியிலிருந்து அச்செடுத்து வந்திருக்கும் தமிழ்க் குறிப்புகளைப் பார்க்க எப்பொழுதும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். "நீங்கள் ப்ரின்ட் பண்ணி வருவதில் மட்டும் எழுத்துரு இவ்வளவு அழகாக இருக்கிறதே."

ஒரு இயந்திரத்தின் காரிய நேர்த்தியும் என் கையில் ஏதோ ஒரு விதத்தில் சிறப்பாகக் கூடிவருவதாக நீங்கள் நினைக்கும்பொழுது அதை நான் ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும்?

நான் ஒரு முறை உங்களை ஒரு 'இலக்கியக் கூட்ட'த்திற்கு அழைத்துப்போயிருந்தேன். கூட்டம் முடிந்து வீடு திரும்பும்பொழுது நீங்கள் சொல்கிறீர்கள்: "இந்த மாதிரி கூட்டத்துக்குப் போனால் ஹெல்த் கெட்டுப் போயிடும்." அதுவே நாம் போன கடைசிக் கூட்டம்.

நாம் போகப்போக அதிகமும் கவிதைகளைப் பற்றியே பேசினோம். எனக்கு நீங்கள் உத்தரவாதம் தந்தீர்கள், 2005 ஜனவரி 1இலிருந்து கவிதை பற்றிய யோசனை மட்டும்தான் மனதில் வைத்துக்கொள்ளப் போகிறேன் என்று. 2003–04 சிறுகதைகளின் காலமென்றும் 2005இலிருந்து கவிதைகளுக்கான காலம் பிறக்கப்போகிறதென்றும் பேசிக்கொண்டோம். 2003ஆம் ஆண்டு நான் தொடர்ந்து கவிதைகளைக் கிட்டத்தட்ட தினமும் எழுதிக்கொண்டிருந்தேன். அதற்கு முக்கியக் காரணியாக நீங்கள் இருந்தீர்கள். ஒவ்வொரு கவிதையையும் பல முறை படித்துப் பார்த்த பிறகே உங்கள் கருத்துகளைச் சொல்வீர்கள். படிப்பதைத் தவிரக் கவிதைகளை நான் வாசிக்கச் சொல்லிக் கேட்பதிலும் உங்களுக்கு மிகுந்த விருப்பம் இருந்தது. பேச்சு, தமிழின் நவீனக் கவிதையிலிருந்து உலகக் கவிதைக்குத் தாவும். அனேகமாக ஒவ்வொரு முறையும் நாம் ஒரு கோப்பை மதுவுடன் கவிதைகளைப் பற்றிப் பேசியிருக்கிறோம். அப்போது உங்கள் எழுத்து, சிறுகதைகள் பக்கம் படிய ஆரம்பித்திருந்தது.

2004 கோடைக் காலம். நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்த மாதங்கள். உங்கள் கற்பனையின் ஒவ்வொரு இழுப்புக்கும் கலை படிந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு கதையும் உங்கள் உற்சாகத்தை அதிகப்படுத்தியது. அனுபவம் சார்ந்த கதைகளைவிடக் கற்பனை விரிவு கொண்ட கதைகளைப் படைப்பதில் மிகுந்த கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. 'மரியா தாமுவுக்கு எழுதிய கடிதம்' தொகுப்பு வெளிவருவதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தேன். ஏதோ ஒரு விதத்தில் அக்கதைகளுடன் வாசகன் என்ற நிலையை மீறியவொரு தொடர்பினை நம் உரையாடல்கள் மூலம் நான் பெற்றிருந்தேன். அந்தப் புத்தகத்தில் நான் ஒரு சிறு குறிப்பையேனும் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் உங்களிடம் அதைச் சொல்ல மிகுந்த கூச்சமாக இருந்தது. புத்தகம் வெளிவந்த பிறகு அதை நான் உங்களிடம் சொன்னபொழுது மிகவும் சந்தோஷப்பட்டீர்கள். அடுத்த பதிப்பில் அதை நிச்சயம் செய்துவிடலாமே என்று கூறினீர்கள்.

இந்த வருடம் உங்களைப் பார்த்தபொழுது ஏதோவொரு விதத்தில் உங்கள் உற்சாகம் சற்றுக் குன்றியிருப்பதுபோல்தான் தோன்றிற்று. சுனாமியால் உண்டான அதிர்ச்சி உங்களைப் பாதித்திருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். இது நான் எதிர்பார்த்ததுதான். சுனாமி அழிவு ஏற்பட்ட பிறகு நீங்கள் நாகர்கோவிலில் இருந்தபோதே உங்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். மிகுந்த மனச்சோர்வில் இருக்கிறீர்களா என்று கேட்டபொழுது எழுத்து வேலை ஒன்றுதான் மனதைக் கட்டியிழுத்து முன்னே கொண்டுசெல்கிறது என்றும் அதில் முழுவதாக ஈடுபடுவதன் மூலமே ஆறுதலை அடையக் கூடும் என்றும் சொன்னீர்கள்.

இந்த வருடம் நான்கு முறை உங்களை மருத்துவ மனையில் சந்தித்தேன். முதலிரண்டு முறையும் உங்களுடன் பேச முடிந்தது. உங்களுக்கு நடப்பது மிகுந்த சிரமம் தரும் காரியமாக ஆகிவிட்டிருந்தது. இந்த ஜூன் மாதம்தான் நாமிருவரும் சான்டாக்ரூஸ்



படிப்பகம்

www.padippakam.com



கடலோரம் ஒரு மைல் தூரத்திற்கு நிற்காமல் நடந்தது என் நினைவில் நிழலாடிக்கொண்டே இருக்கிறது. இப்போது நான்கைந்து அடிகள் வைப்பதற்குள்ளேயே மிகவும் சிரமப்பட்டீர்கள். ஆனாலும் மருத்துவர்களின் மீது இருந்த நம்பிக்கை சற்றும் குறையவில்லை. தொடர்ந்து நடப்பதன் மூலமும் உடற்பயிற்சியின் மூலமும் இந்த மூச்சுத் திணறலை வென்றுவிடலாம் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். மருத்துவமனை யிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய பிறகு ஒரு நாள் உங்களைப் பார்க்க வழக்கம்போல வந்திருந்தேன். எப்போதும்போல என்னை வரவேற்க நீங்கள் கூடத்தில் இல்லை. கமலா அம்மா நீங்கள் வீட்டுக்குப் பின்னால் நீச்சல் குளத்தைச் சுற்றி நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார். நான் சன்னல் வெளியே பார்த்தேன். உறுதியும் சோர்வும் உங்கள் முகத்தில் ஒரே சமயத்தில் இடம்பிடித்திருந்தன; உங்கள் கால்கள் விடாமல் நகர்ந்துகொண்டிருந்தன.

அக்டோபர் 2 காலை. மருத்துவமனையிலிருந்து தொலைபேசியில் அன்று அழைத்திருந்தீர்கள். எப்படி யிருக்கிறீர்கள் என்ற என் கேள்விக்கு முதல் முறையாக 'மோசமாத்தான் இருக்கு' என்று சொன்னது அதிர்ச்சியாக இருந்தது. அன்று மாலை உங்களை மருத்துவமனையில் பார்த்தேன். எல்லோரும் போன பிறகு உங்களுடன் அரை மணி நேரம் பேசிக்கொண் டிருந்தேன். என்னால் அன்று உங்களுடன் அந்த அறையில் இருக்கவே முடியவில்லை. நீங்கள் நடக்க சிரமப்பட்டீர்களே தவிரப் பேச்சில் மிகுந்த தெளிவு இருந்தது. கடந்த ஒரு மாதத்துக்குள் நீங்கள் எழுதி யிருந்த (செப். 7) 'ஜகதி' கதையைப் பற்றி மீண்டும் பேசினோம். 'ஏற்கனவே திருவனந்தபுரம் விமான நிலையத்தில் போலீஸ் எனக்காகக் காத்திருக்கிறார்கள்!' என்று சிரித்தீர்கள். நான் சொன்னேன், 'நல்ல வேளை 'ஜகதி' தமிழ்நாட்டில் வெளியாகவில்லை, இல்லை யென்றால் இதிலிருந்தும் ஏதாவது பூதம் கிளம்பி யிருக்கும்' என்று. 'நான் தமிழ்நாடு பக்கம் போகாமல் இருப்பது நல்லதுதான்' என்று சிரித்தீர்கள்.

அப்புறம் சமீபத்தில் படித்த புத்தகங்களுக்குப் பேச்சு மாறியது. *C.P. Snow*வின் *Realists,* மற்றும் *Andre Maurois*இன் *From Proust to Camus* - இவை இரண்டும் நிச்சயம் நான் படிக்க வேண்டிய புத்தகங்கள் என்று உங்களுக்குத் தோன்றியது. காந்தியின் எழுத்துகளை மீண்டும் வாசித்தது பற்றிப் பேசினீர்கள். 'ஜகதி' கதை எழுதிய பிறகு உங்களால் எழுத முடியாமல் போயிருந்தது. இதற்கு முந்தைய சந்திப்பில் 'எழுதிக் கொண்டிருக்கிறீர்களா?' என்ற என் கேள்விக்கு 'படித்துக்கொண்டிருக்கிறேன் கோகுல்' என்ற பதில் முன்பே வந்திருந்தது. உங்கள் மனதில் அது குறித்த வருத்தம் இருப்பது எனக்குப் புரிந்தே இருந்தது. 'ஆனால் என்னால் இப்போது படிக்கவும் முடியவில்லை' என்றீர்கள். சொல்ல முடியாத ஒரு கஷ்டம் என்னை அன்று சேர்ந்திருந்தது. அதைக் கஷ்டம் என்றுகூட மனம் உணர்ந்திருக்கவில்லை. ஏதோ ஒரு விதத் தவிப்பில் இருந்தேன். உங்களிடம் அதைச் சொல்லவும் செய்தேன். அப்போதுதான் நான் புதிய வேலையில் சேர்ந்திருந்தேன். அது சம்பந்தமான பிரச்சினையா என்றுகூடக் கேட்டீர்கள். நான் அந்த அறையிலிருந்து

**முந்தைய சந்திப்பில் 'எழுதிக் கொண்டிருக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு, படித்துக்கொண்டிருக்கிறேன் கோகுல்' என்று பதில் வந்தது.**

வெளியேறிவிடவே விரும்பினேன். உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த நான் எழுந்து நின்றபொழுது "இன்னும் சித்த இருங்க கோகுல்" என்றீர்கள். நான் விடைபெற்றுக் கொள்ளும்பொழுது 'சார், விளக்கை அணைத்து விடட்டுமா' என்று கேட்டேன். அப்போது என் மனதுக்குள் ஒரு குரல் அபசுரமாகக் கிறீச்சிட்டது. சீ மூடத்தனமே என்று அதை முடக்கினேன். நீங்கள் 'நான் அணைத்துக்கொள்கிறேன்' என்றபோது உங்கள் கரங்களைப் பற்றிக்கொண்டேன். பற்றிக்கொள்ள வேண்டும்போல் இருந்தது. விடை பெற்றுக்கொண்டேன்.

அதற்குப் பிறகு உங்களைப் பார்த்தது அக்டோபர் 6 மாலை தீவிர சிகிச்சைப் பிரிவில். நீங்கள் விழித்துக் கொள்ளாதபடி மருந்து கொடுக்கப்பட்டிருந்தது. பிராணவாயு, உணவு எல்லாம் குழாய்கள் மூலம் உங்களுக்குள் இறங்கிக்கொண்டிருந்தன. சுவாசத்திற்கு மாற்றாக ஒரு இயந்திரம் உங்கள் இதயத்தை இயக்குகிறது. உங்கள் முகமெங்கிலும் குழாய்கள் பரவியிருந்தன. பேச முடியாதபடி வாய் வழியாகவும் குழாய். தீர்க்க முடியாத சிக்கல்போல் தோன்றியது. நான் தைலா, தங்கு, தங்குவின் கணவர் மற்றும் கமலா அம்மா உங்கள் அருகில் வந்தபொழுது சட்டென்று உங்கள் கண்கள் விழித்தன. அந்தப் பார்வை என் மனதில் தைத்துக்கொண்டிருக்கிறது இன்னும். மருந்தின் மயக்கம். ஸ்தம்பித்த பார்வை. தைலா உங்களைக் கேட்கிறார்: "அப்பா, எப்படி இருக்கிறீர்கள்? ஏதேனும் அசௌகரியம் இருக்கிறதா?" உங்கள் தலை தலையணை மேல் 'இல்லை' என அசைகிறது. "உங்களைப் பார்க்க கோகுல் வந்திருக்கிறார், அவர் விரல்களைப் பற்றிக்கொள்ளுங்கள்" என்ற பொழுது நான் உங்கள் இடதுகையைப் பற்றிக் கொண்டேன். என் விரல்களை அழுத்திக் கொண்டே இருந்தீர்கள். "இப்போது உங்கள் இடது காலைத் தூக்குங்கள் பார்க்கலாம்" என்று கேட்டார் தைலா. உங்கள் இடதுகால் மெல்ல அசைந்தது. அதற்குப் பிறகு நீங்கள் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டீர்கள். சொல்வதைச் செய்கிறாரே தவிர எதையும் முழுதாக உள்வாங்கிக்கொள்ளும் நிலையில் அவர் இல்லை என்று தோன்றுகிறது என்றார் தைலா.

அக்டோபர் 9. தைலாவிடமிருந்து தொலைபேசி. அப்பாவின் நிலை சற்று முன்னேறியிருக்கிறது. சுவாசத்திற்கான இயந்திரத்தைக் கழற்றியாகி விட்டது. அவரால் மூச்சுவிட முடிகிறது. எழுந்து உட்கார முடிகிறது. சற்றே பேசவும் முடிகிறது. என் மனம் துள்ளிக் குதித்தது. இத்தனை நாட்களாக மனதின் மூலைக்குள் அகல் விளக்குப் போல அண்டியிருந்த நம்பிக்கை சற்றே நிமிர்ந்தது.


அக்டோபர் 10. உங்களை மீண்டும் சுவாச இயந்திரத்துடன் இணைக்க வேண்டியதாயிற்று.



படிப்பகம்

அக்டோபர் 13. தைலாவுடன் மீண்டும் பேசிய பொழுது இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்று தோன்றிவிட்டது என்றார். அன்று மதியம் அலுவலகத்தில் விடுமுறை சொல்லிவிட்டு உங்களை வந்து பார்த்தேன். உங்கள் முகம் ஒடுங்கிப்போனது போலிருக்கிறது. மார்பு ஒவ்வொரு முறையும் மேலெழும்பி விபரீதமான இடைவெளிக்குப் பிறகே தணிவது போல் தோன்றியது. நான் கையோடு '107 கவிதைக'ளை எடுத்து வந்திருந்தேன். உங்களுக்கு 'ஓவியத்தில் எரியும் சுடர்' கவிதையை வாசித்துக் காட்ட வேண்டும் என்று எனக்குத் தோன்றியிருந்தது. பக்கத்திலிருந்த நர்ஸ் 'அவரை எழுப்பிவிடாதீர்கள். அவர் மிகவும் பதற்றமடைகிறார். அவருடைய இதயத் துடிப்பு மிகவும் அதிகமாகிவிடுகிறது' என எச்சரித்தார். நான் மௌனமாக நின்றிருந்தேன். உங்கள் அருகே இருந்த நர்ஸ் சற்றுப் படபடப்புடனே எல்லாக் காரியங்களையும் செய்தாள். அடிக்கடி குழாய்களின் இணைப்புகளைக் கண்காணிக்கும் இயந்திரம் பீப் பீப் என அலறிக்கொண்டிருந்தது. முன்தினம்தான் பிராண வாயுவை நேரடியாகக் குழாய் மூலம் இணைத்துவிடும் சிகிச்சை உங்கள் தொண்டையில் செய்யப்பட்டிருந்தது. தொண்டையில் உலர்ந்த ரத்தக் கறை சற்று அதிகமாகவே தோன்றியது. உடனே ஒரு மருத்துவரை அழைத்து உங்கள் தொண்டைப் பகுதியைக் காட்டினால் டாக்டர் 'அது ஒன்றுமே இல்லை. சாதாரணமான விஷயம்தான்' என்றார். என்னிடம் 'நான் இந்த *procedure*ஐ செய்த டாக்டர் மட்டுமே. அவருடைய பொதுவான நிலையைப் பற்றி என்னால் ஒன்றும் சொல்ல முடியாது' என்றார். நர்ஸ் 'இல்லை டாக்டர், இவருடைய நிலை மோசமாகத்தான் இருக்கிறது' என்றாள்.

நான் உங்கள் அருகில் வெகுநேரமாக நின்றிருந்தேன். ஆனால் உங்கள் முகத்தைப் பார்ப்பது கணத்திற்குக் கணம் மிகக் கடினமாகவே இருந்தது. நர்ஸ் சற்று அகன்ற பிறகு உங்கள் கையைப் பற்றிக் கொண்டேன். 'நான் போகிறேன் சார்' என்றேன் மெலிதாக. உங்கள் கைவிரல்கள் சில்லென்று இருந்தன. உங்கள் முகத்தில் சிறிய அதிர்ச்சி ஏற்பட்டாற்போல இருந்தது. மூடியிருந்த கண்கள் லேசாகத் திறந்தன; எங்கோ பார்த்தன; பிறகு மீண்டும் அவை மூடிக் கொண்டன. நான் அங்கிருந்து நகர்ந்தேன். என் பார்வையிலிருந்து நீங்கள் மறையும்வரை அவ்வப்போது திரும்பிப் பார்த்தபடியே வெளியேறினேன்.



அக்டோபர் 14. மதியம் 2:30 மணிக்குத் தைலாவிடமிருந்து அழைப்பு. மதியம் 1:35க்கு எல்லாம் முடிந்துவிட்டது என்று செய்தி.

சில வருடங்களுக்கு முன்னால் நாமிருவரும் மரணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். மரணத்தைப் பற்றிய என் அச்சத்தை உங்களிடம் சொன்னேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டேன். 'என்னுடைய காலம் நிறைந்து விட்டது, நான் விடை பெற்றுக்கொள்கிறேன் என ஏற்றுக் கொள்வது கவித்துவமானது' என்று கூறினீர்கள்.

நீங்கள் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவலில் எழுதுகிறீர்கள்: "விசேஷமான மனிதனாய் இருப்பதை விட சகஜமான மனிதனாய் இருக்க வேண்டும்."

நம் நட்பில் சகஜத்தின் இதத்தை மறக்க முடியாது. நான் வாழ ஆசைப்படும் வாழ்க்கையை நீங்கள் என் கண் எதிரே வாழ்ந்தீர்கள். ஒவ்வொரு முறையும் உங்களைப் பார்க்கும்பொழுது எனக்கும் என் ஆதர்சத்திற்குமுள்ள இடைவெளி குறுகிக்கொண்டே வந்தது. இன்னும் கடக்க வேண்டிய தூரம் சிறிதே என்றபொழுதில் விடைபெற்றுக்கொண்டீர்கள். உங்கள் மனம் விடைபெறுவதற்கான எல்லாத் தயாரிப்புகளையும் முன்பே மேற்கொண்டு விட்டது போலவே இப்போது தோன்றுகிறது.

அருமை நண்பரே, இனி வரவிருக்கும் கலிஃபோர்னியக் கோடைக் காலங்களின் தனிமையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அன்புடன்,

**கோகுலக் கண்ணன்**

●



## அற்றைத் திங்கள்

அக்டோபர் மாத 'அற்றைத் திங்கள்' நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அக்டோபர் 15ஆம் தேதி காலையில் அம்பை கோவைக்கு வந்த போது சு.ரா. மரணமடைந்த செய்தி அவருக்குக் கிடைத்தது. நாற்பதாண்டுக் கால நண்பர் காலமானதன் அதிர்ச்சிக்கு ஆளான அம்பை, இத்தகைய மனநிலையில் தனது வாழ்க்கை அனுபவங்களைப் பற்றிப் பேச இயலாது எனக் கூறினார். அவரது உணர்வுகளைப் புரிந்துகொண்ட ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் உரிமையாளர் கிருஷ்ணன் கூட்டத்தை ரத்து செய்ய ஒப்புக்கொண்டார். எனவே அக்டோபர் மாதம் அற்றைத் திங்கள் நிகழ்வு நடைபெறவில்லை அம்பையின் கூட்டம் பிறிதொரு நாளில் நடைபெறும்.

– ஆசிரியர்

www.padippakam.com






பி.ஏ. கிருஷ்ணன்

# சு.ரா.வுடன் சில நாட்கள்

**சு.ரா.வின் இறுதி நாட்களில் அவரைச் சந்தித்துப் பேசிய ஓரிரு தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான பி.ஏ. கிருஷ்ணன் தரும் பதிவு**



**சான் ஓஸே நகரத்திற்கு வந்த உடனேயே** அவருக்கு ஃபோன் செய்திருக்க வேண்டும். சோம்பேறித்தனம். செய்யவில்லை. வந்த சில நாட்களுக்குப் பிறகு அவருடன் தொலைபேசியில் பேசியபோது என்னுடைய ஃபோனை அவர் தினமும் எதிர் பார்த்துக்கொண்டிருந்ததாகச் சொன்னார். நாகர்கோவிலில் அவருக்கு இத்தகைய எதிர்பார்ப்புகள் இருந்திருக்க நியாயம் இல்லை. அங்கே தமிழையும் இலக்கியத்தையும் இந்தியாவையும் பற்றிப் பேச அவரைச் சுற்றி ஒரு கூட்டமே நின்றுகொண்டிருக்கும். சான்டாக்ரூஸ், அவரிடம் அடக்கமாக அன்பு காட்டும் அவரது மகள் தைலாவின் நகரம். அங்கிருக்கும் தைலாவின் வீடு காலையானதுமே காலியாகிவிடும். சு.ரா.வும் கமலா அம்மாவும் தனியாகிவிடுவார்கள். வந்து சூழும் நிசப்தத்தைக் கலைப்பது பறவைகள், சிறு பூச்சிகள் அல்லது விலங்குகள் மட்டுமே. அதைத் தமிழ் கலைக்க வேண்டும் என்று சு.ரா. விரும்பினால் கோகுலக் கண்ணனிடமோ மனுபாரதியிடமோ அவர் பேச வேண்டும். அல்லது என்னைப் போன்ற சோம்பேறிகளின் ஃபோனை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நம் எல்லோரையும் போல சு.ரா.வும் மௌனம் கவியும் தருணங்களுக்கு ஏங்கியிருந்திருப்பார். ஆனால் அது வந்து கவிந்து, நினைத்தபோது விலகாதபோது, ஓசைக்காக, குறிப்பாகத் தமிழோசைக்காக, ஒரு பொறுமையின்மையோடு அவர் காத்துக்கொண்டிருந்தார் என்று நான் நினைத்தேன்.

எனக்கு என்மீதே மிகுந்த கோபம் வந்தது.

சான் ஓஸே நகரத்தில் 'பார்டர்ஸ்' புத்தக நிலையத்திற்கு அருகே நாங்கள் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. நானும் என் மருமகளும் காரை நிறுத்திவிட்டு சாலையைக் கடக்க முயலும்போது எங்களுக்கு மிக அருகில் சு.ரா. வந்த வண்டி நின்றது. முகம் பளீரென்று இருந்தது. நேர்த்தியாக வெட்டப்பட்ட வெண் தாடி. கண்களில் வெளிச்சம். சிரிப்பு. உடனே அவரது வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டேன். சிறிது நேரம் கழித்து நினைவிற்கு வந்தது. சு.ரா.வைப் பார்த்த மகிழ்ச்சியில் என் மருமகளிடம் விடைபெற்றுக் கொள்ள மறந்துவிட்டேன் என்று. அவரிடம் செல் ஃபோனில் உடனே பேசினேன். இத்தாலிய அமெரிக்கரான அவர் சொன்னார், "It is fine, Chittappa. You did bid me goodbye. Oh, you are so forgetful. But I suppose it happens. It used to happen with my Granddad (or Granduncle- I forget who). Quite frequently. He had Alzheimer's. You write. It comes to the same thing, doesn't it?" அவர் சொன்னதை சு.ரா.விடம் சொன்னேன்.

"மறக்கறதுங்கறது ஒரு அருமையான வியாதி, கிருஷ்ணன். எத்தனை பேருக்கு அது வாய்க்கும்?"

"மறக்கக் கூடாதது மறந்துபோயிடறதே, சார்."

"பொதி சுமக்கறதவிட அது எவ்வளவோ தேவலை. மறந்தா அது மறக்க வேண்டியதுதானோ என்னவோ."

அன்று இரவு உணவு சரவண பவனில். நாக்கு செத்துவிட்டதா என்று அவர் கேட்டார். செத்த நாக்கிற்கு உயிர் தருகிற மாதிரி சரவண பவன் உணவு அன்று ஏனோ இல்லை. சு.ரா.விற்கு உணவு பிடித்திருந்தது என நினைக்கிறேன். அதிகம் சாப்பிடவில்லை. ஆனால் விரும்பிச் சாப்பிட்டார். அப்போது உடல் நலம் பற்றி கேட்டேன்.



படிப்பகம்

www.padippakam.com



"முன்னால இருந்ததுக்குத் தேவலை. தினமும் நடக்க முடியறது."

தைலாவின் கணவர் எனக்கு உறவினர். நான் தைலாவை ஒரே ஒரு முறைதான் சந்தித்திருக்கிறேன். ஆனால் பார்த்த உடன் நெடுநாள் பழகிய நண்பர்களைப் போலத்தான் இருவரும் நினைத்தோம். வாய் ஓயாமல் பேச வேண்டும் என்று இருவருக்கும் ஆசை. சு.ரா.வுடன் பேசியதைவிடத் தைலாவிடம்தான் அதிகம் பேசினேன். சு.ரா.வும் குறைவாகப் பேசினார். பேசி முடித்த உடன் சன்னமான, மற்றவர் கவனித்தால் உணரக் கூடிய, மூச்சு வாங்கல். நானும் தைலாவும் இரண்டு நாள்கள் தொடர்ந்து சான்டாக்ரூஸின் புகழ் பெற்ற கடற்கரையில் நீண்ட தூரம் நடந்தோம். நடக்கும்போது பேசியதில் பாதிக்கும் மேல் சு.ரா.வைப் பற்றி. பேசாதபோது நினைவு அவரைப் பற்றி.

சு.ரா.வுடன் நான் கிட்டத்தட்டத் தனிமொழி ஆற்றிக்கொண்டிருந்தேன். படித்ததையெல்லாம் விளம்பரப் பொம்மைகள் மாதிரி வார்த்தைகள் அணிவித்து வெளியே நிறுத்துகிறேனோ என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. சு.ரா. பொம்மைகள் அணிந்திருப்பதை அளவிடும் தேர்ந்த பார்வையாளர்.

"என்ன புத்தகம் அது?"

"மார்ட்டின் லூதரைப் பத்தின புத்தகம், சார். இங்க லைப்ரரில எடுத்தது. இந்த ஊர் லூதர் இல்ல. பழைய லூதர்..." என்று தொடங்கி லூதர் எப்படிப் போப் ஆண்டவரை எதிர்த்தார், எப்படி அவர் கொண்டுவந்த சீர்திருத்தம் மேற்கத்திய அறிவியலும் தொழில்நுட்பமும் இலக்கியமும் வளர்வதற்கு ஒரு காரணமாக இருந்தது என்பதைப் பற்றியெல்லாம் பேசி முடிக்கும்போது அவர் கேட்பார்:

"படிச்சு முடிச்சுட்டேளா?"

"எங்க சார், ஒரு நாப்பது பக்கம் படிச்சிருப்பேன்."

"நாப்பது பக்கத்திலயே இவ்வளவு விஷயம் வச்சிருக்கானா?"

நான் படிக்க நினைத்து, நூலகத்திலிருந்து எடுத்து, படித்து முடிக்க முடியாமல் திரும்பக் கொடுத்த பல புத்தகங்களில் இதுவும் ஒன்று.

சு.ரா. விடாமல் படித்துக்கொண்டிருந்தார். நான் அவர் வீட்டில் இருந்தபோது அவர் படித்துக் கொண்டிருந்தது *Saul Bellow*வின் நாவல் என்று நினைக்கிறேன். அவர் வழக்கமாக உட்காருவது சாய்ந்து கொண்டு வசதியாகப் படிப்பதற்கென்றே அமைக்கப் பட்ட ஒரு 'உ– வடிவு (உ– வடிவா?) சோபா. அது அந்த வீட்டின் மிக அழகான அறையில் இருந்தது. அது சூரிய ஒளி வருவதற்கு ஏதுவான கண்ணாடிக் கூரை கொண்டது. இரு புறங்களில் மரப்பட்டிகள் இடையூடிய கண்ணாடிச் சுவர்கள். சுவர்களுக்கு வெளியே காடு. சிறிது நேரம் இருந்தால், மான்களையும், பருத்த கறுத்த முயல்களையும் பார்க்க முடியாத வாய்ப்பைத் தராத காடு. மூன்றாவது புறம் அமைந்த கதவைத் திறந்து சிறிது தூரம் நடந்தால் நீச்சல் குளத்திற்கு வந்துவிடலாம். இந்தக் கதவிற்குப் பக்கத்தில் ஒரு சிறிய புத்தக அலமாரி. அதில் பல புத்தகங்கள். அவற்றில் ஒன்று ஆங்கில இலக்கணத்தை எளிமையாகப் பயில உதவி செய்வதாக வாக்குறுதி அளிக்கும் புத்தகம். புகழ் பெற்ற புத்தகம். சு.ரா. அப்போது படித்துக்கொண்டிருந்த புத்தகம்.

சு.ரா. எல்லா வகை மாமிசமல்லா உணவுகளையும் விரும்பி, அளவோடு சாப்பிடுவார் என்று எனக்குத் தோன்றியது. வீட்டில் பாஸ்டா, நூடுல்கள், புரிட்டோ, டார்டியா போன்ற உணவுகளுக்கு விலக்கு இல்லை. நான் ஸான் பிரான்சிஸ்கோவில் ஒரு எரித்ரியன் உணவகத்தில் நம்மூர் கோதுமை தோசை போன்ற ஓர் உணவைச் சாப்பிட்டேன் என்று சொன்னேன். மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டார். நோய் நான் நிச்சயம் இருக்கிறேன் என்று அவ்வப்போது காட்டிக்கொண்டிருந்தது – கணினியின் முன் உட்கார்ந்து கதையெழுத முயலும் வேளையில், அல்லது வீட்டிற்கு வெளியே நடக்கும்போது. சிறிது தூரம் நடந்துவிட்டு, முடியாமல் வீட்டிற்கு வெளியே இருக்கும் பெஞ்சில் அமர்ந்துகொண்டு கண்ணை மூடிக்கொண்டு குறுந்தகட்டுச் சங்கீதம் (அருணா சாயிராம், மொஸார்ட்) கேட்டுக்கொண்டிருப்பார். அல்லது அவரது பேத்தி பாஸ்கட் பால் பயிற்சி செய்வதை ரசித்துக்கொண்டிருப்பார்.

இப்போதைய இளைஞர்கள் போன தலைமுறை இளைஞர்களைவிட நிறையப் படித்திருக்கிறார்கள் என்பதில் அவருக்கு மகிழ்ச்சி ஒரு புறம் என்றாலும் படிப்பு பெரும்பாலும் ஒற்றைப் பரிமாணமாக இருப்பது குறித்துக் கவலை. நமது தமிழ்நாட்டுக் கிராமங்களில் உள்ள நூலகங்கள் சீரழிந்துபோனதைப் பற்றி அவருக்கு மிகுந்த வருத்தம். "எனக்குத் தெரிஞ்சு நாகர்கோவிலிலிருந்து ஒரு பத்து மைல் சுத்தளவில் இருக்கற கிராமம் எல்லாத்திலும் ஒரு நல்ல லைப்ரரி இருந்தது. இப்போ அதோட தடமிருக்கறதே சந்தேகந்தான். திருப்பதிசாரம் சீனிவாசன் சொல்றார், பழைய லைப்ரரி புத்தகம்லாம் இப்போ திருநெல்வேலி பழைய புத்தகக் கடைகள்ள கிடைக்கறது, சீப்பா வாங்கலாம்னு."

அவரது கூர்மையை நோய் நெருங்கக்கூட முடியவில்லை. யாருடைய வீட்டைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்தோம்.

"பெரிசோ?"

"தொலைஞ்சு போயிடலாம் கிருஷ்ணன்."

நான் என்னுடன் ஸுடோகு புதிர்ப் புத்தகம் ஒன்று கொண்டுபோயிருந்தேன். கமலா அம்மாவிற்கும் தைலாவிற்கும் ஸுடோகு பைத்தியமே வர அது காரணமாக இருந்தது. இணையத்திலிருந்து புதிர்களை இறக்கி நான் கமலா அம்மாவிற்குக் கொடுக்க, அவர் ஒரு மூலையில் உட்கார்ந்து புதிர்களை விடுவிக்க முயன்றுகொண்டிருந்தார். சு.ரா.விடம் அவர் பேசும் நேரம் இதனால் கணிசமாகக் குறைந்து போயிருக்கலாம். என்னிடம் அவர் ஒரு வெளியில் சொல்ல முடியாத கோபம் கொள்ள ஒரு வாய்ப்பை அவருக்கு என்னையே அறியாமல் அளித்துவிட்டேன் என்று எனக்கு அப்போது தோன்றியது.


சான் ஓஸே நகரில் தமிழ் வாசகர்களை நான் சந்திக்க ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு சு.ரா.வால்



படிப்பகம்

www.padippakam.com






வர முடியவில்லை. எனவே அவரது வீட்டிலேயே சிறிய மறு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சு.ரா., கோகுலக் கண்ணன், மனுபாரதி, நான். இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்திருப்போம். தீவிர இலக்கியம் பக்கம் தீவிரத் தமிழர் என்று தங்களைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் தலை வைத்துக்கூட வைக்காமல் இருப்பது பற்றிப் பேச்சு திரும்பியது. தில்லித் தமிழ்ச் சங்கத்தில் சு.ரா.விற்கு நடந்த ஒரு புகழ் பெற்ற வரவேற்பைப் பற்றி நான் சொன்னேன்.

(தலைவர் கூட்டத்திற்குத் தாமதமாக வருகிறார். இடது தோள்பட்டையில் கழுத்து செல் ஃபோனை இடுக்கிக்கொண்டிருந்தது. அவரது பேச்சின் சாரம்: இவர் பேர் சுந்தரம் ராமசாமி. நாவல், சிறுகதை, நாடகம், கவிதையெல்லாம் எழுதியிருக்கார். நானும் எழுதியிருக்கேன் பெரியவாளைப் பத்தி. அவரைப் பத்தி அவரையே இரண்டு வார்த்தை பேசச் சொல்லி ருக்கேன். நம்ம கிருஷ்ணனும் அவரைப் பத்திச் சொல்லுவார்.)

மற்றவர்கள் சிரித்தார்கள். சு.ரா. சிரித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. இலக்கியச் சுரணை இலக்கியக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வரும் அனைவருக்கும் இருக்கும் என்று எதிர்பார்ப்பது பேராசை என்று அவர் கருதியிருக்க வேண்டும்.

மறுநாள் அவருக்கு மருத்துவப் பரிசோதனை நாள். மிக உற்சாகமாக இருந்தார். நானும் அவருடன் சென்றேன். தைலாவும் நானும் காரை நிறுத்திவிட்டு வருவதற்கு முன்னரே அவர் வரவேற்பறையில் சென்று அமர்ந்துகொண்டார்.

"ஒண்ணும் இம்ப்ருவ்மென்ட் இருக்க சான்ஸ் இல்லை. மோசமா ஆகாம இருந்தா அதுவே ஒரு நல்ல அறிகுறி", என்று தைலா என்னிடம் லிஃப்டில் செல்லும்போது சொன்னார். அவரைப் பரிசோதனை செய்ய அழைத்துச் சென்ற நர்ஸ் குறைந்தது 150 கிலோவாவது இருப்பார். எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் ஒரே மாதிரி உருண்டையாக இருக்கும் ஒருவரை இப்போதுதான் முதல் முறை பார்க்கிறேன்.

"ஆளைப் பாத்து பயந்துடாதேங்கோ, கிருஷ்ணன். அவ குழந்தை. வெறும் குழந்தை. என்னமா பாத்துக்கறா. இவ்வளவு வெள்ளையா இருக்கே, உங்க தலைக்கும் தாடிக்கும் டையடிச்சு விட்டுடுமான்னு கேட்டா."

சோதனை அறையிலிருந்து வெகு சீக்கிரமே அவர் திரும்பிவிட்டார். முகத்தில் மலர்ச்சி. நுரையீரல் இருப்பதைவிட மோசம் அடையவில்லை.

அன்று இரவு நாங்கள் வீடியோவில் சினிமா பார்க்கலாம் என்று முடிவு செய்தோம். இரவு மெக்ஸிகோ உணவு. அதற்குத் தேவையானதை வாங்க நாங்கள் ஒரு பெரிய சூப்பர் மார்க்கெட்டிற்குச் சென்றோம். சு.ரா.தான் ட்ராலியைத் தள்ளிக்கொண்டு வந்தார். நாங்கள் பார்க்கலாம் என்று நினைத்து எடுத்த படங்கள் இரண்டு. *Peter Sellers*இன் *The Party*. ஹிட்ச்காக்கின் *Vertigo*. மூளையை அதிகம் வேலை செய்யவிட சு.ரா.வும் விரும்பவில்லை என்றுதான் எனக்குத் தோன்றியது.

விருந்திற்குப் பிறகு சினிமா பார்க்க உட்கார்ந்தவர்கள் – தைலாவின் கணவர் ராம், தைலா, சு.ரா., கமலா அம்மா, நான். ராமும் நானும் பீட்டர் செல்லர்ஸ் ரசிகர்கள். அவர் இந்தியனாக நடிக்கும் படம் அது. கலப்படமில்லா நகைச்சுவைக்கு அப்படத்தின் முதற்காட்சிகள் உதாரணம். நானும் ராமும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறோம். சு.ரா. அதிகம் சிரிக்கவில்லை. படம் அவருக்குப் பிடித்ததாகத் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்துத் தூக்கம் வருகிறது என்று சொல்லிக் கொண்டு எழுந்து சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்துக் கமலா அம்மா. பிறகு தைலா. பிறகு ராம். நான் இரண்டு படங்களையும் பார்த்து விட்டுத்தான் தூங்கச் சென்றேன்.

மறுநாள் காலை சு.ரா.விடம் விடைபெற்றுக் கொண்டேன். நெஞ்சார அணைத்துக்கொண்டு விடை கொடுத்தார் நிமிர்ந்து பார்த்தேன். கண்கள் கலங்கி யிருந்தன. வீடு திரும்பும்போது ஞாபகம் வந்தது, சு.ரா. கமலாம்மா தம்பதிகள் காலில் விழுந்து சேவிக்க மறந்துவிட்டேன் என்று. மறுபடியும் பார்க் காமலா போகப்போகிறோம் என்று நினைத்துக் கொண்டேன். ●



படிப்பகம்


www.padippakam.com






ராஜ் கௌதமன்

# காலத்தால் வீழாதவர்



சு.ரா. இல்லத்தின் முன்திண்ணை

**பொதுவாக மரணச் செய்தியைக் கேட்டதும்** எல்லோரும் அதிர்ச்சி அடைவார்கள்; சிலர் துடிப்பார்கள்; சிலர் அழுது கண்ணீர் வடிப்பார்கள். வெகு சிலருக்கு எந்தவிதமான சலனமும் ஏற்படாது; மரணம் பற்றிய செய்தி கொஞ்சம் கொஞ்சமாக வேலை செய்யத் தொடங்கி, போகப் போக அவர்களைப் படுத்தித் தொல்லை கொடுக்கும். சுந்தர ராமசாமி காலமாகிவிட்டார் என்ற செய்தி என்னையும் அப்படித் தொல்லைப்படுத்திவிட்டது.

அவரோடு எழுபதுகளின் இறுதியில் நேர்ப் பழக்கம் ஏற்பட்டது; என்னைவிட முப்பது வயது மூத்தவர்; தெளிந்த சிந்தனையாளர்; தேர்ந்த படைப்பாளி. நான் பணியாற்றும் ஊரிலிருந்து தெற்கே ஐந்நூறு கிலோ மீட்டர் தூரத்தில் வாழ்பவர் என்ற காரணங்களால் அந்தப் பழக்கம் ஆலமரம்போல விழுது விட்டுப் பரவவில்லையென்றாலும் தொடர்ச்சியாக இலக்கியக் கூட்டங்களின் வழியாகத் தொடர்ந்துவந்தது.

அவர் காலமான செய்தியை அறிந்த பிறகுதான் அவரும்கூடக் காலமாகிவிடுவார் என்ற அரணை எனக்குள் ஏற்பட்டது. இப்படியே எப்போதும் போல அவர் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பார் என்றுதான் எல்லோரையும்போல நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அவரும் மரணத்தைத் தொட்டுவிட்டார்.

எழுபதுகளின் பிற்பகுதியில் கோடை விடுமுறை நாட்களில் ஏர்வாடியிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்த நாகர்கோவிலுக்கு பஸ் ஏறிப்போய் சுந்தர ராமசாமியைப் பல முறை சந்தித்துப் பேசிய நாட்கள் இனிமையானவை. அவரைச் சந்திக்கும்முன் அவர் இப்படித்தான் இருப்பார், பேசுவார், கிண்டல் செய்வார் என்று அவரது 'ஒரு புளியமரத்தின் கதை' யைப் படித்து எனக்குள் ஒரு கற்பனை செய்திருந்தேன். நேரில் சந்தித்தபோது அப்படித்தான் இருந்தார். ஒரு சிறந்த படைப்பாளியிடம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்கிற எதார்த்தம் எனக்குள் தாழ்வு மனப் பான்மையை ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படாதபடி அவரது பேச்சும் பழக்கமும் இயல்பாக இருந்தன. அவரது பழக்கத்தின் எல்லைக்குள் வர நேர்ந்த ஒவ்வொருவரது தனித்தன்மையையும் அவர் மதித்தது தான் இதற்குக் காரணம். கணியன் பூங்குன்றன் சொன்ன மாதிரி அவர் 'பெரியோரை வியத்தலும் . . . சிறியோரை இகழ்தலும்' இல்லை. இது அவரது இயல்பு.

நெருங்கிய ஒரு நண்பனோடு பேசத்தக்க விஷயங்களை அவர் பேசினார்; புதுப்பிக்கப்படுவதற்கு முன்னிருந்த அவர் வீட்டு மாடி அறையில் அதிகாலை ஒன்று, இரண்டு மணிவரை தற்கால இலக்கியம், விமர்சனம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். சில சமயங்களில் நேராக அவருடைய ஜவுளிக் கடைக்கே போய்விடுவேன். கடைக்குள் ஒரு சிறிய அறை உண்டு; அங்கே போய்ப் பேசுவோம்; ஜவுளிக் கடை அவருக்கு இலக்கிய நண்பர்களைச் சந்திக்கிற இடமாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. ஜவுளிக் கடையிலிருந்து கறுப்பு நிறக் காரை இலக்கணச் சுத்தமாக அவர் ஓட்டிவர, கூச்சத்தில் நெளிந்தபடி அவர் அருகில் அமர்ந்திருந்த அனுபவம் இனியது. அவர் வீட்டுச் சமையலறையில் அமர்ந்து (அப்போது வீடு புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தது) ஒன்றாகச் சாப்பிட்டபோது இயல்பாகப் பேச முடியாத எனது மனச் சிக்கலை அவர் கவனித்ததாகவே தெரியவில்லை. வித்தியாசமாக, அந்நியமாக நான் உணரக் கூடாது என்பதை அவர் நுட்பமாக அவதானித்துக்கொண்டிருந்தார் என்றுதான் நினைக்கிறேன்.

அவர் வீட்டு மொட்டை மாடியில் 'காகங்கள்' என்ற இலக்கியக் கூட்டத்தை மாதந்தோறும் சிரத்தையோடு நடத்திவந்தார். ஒருமுறை நானும்



படிப்பகம்

ஒரு காகமாக அதில் கலந்துகொண்டேன். அதில் அவர் பேசியபோது பெரிய தத்துவார்த்த அடிப்படைகளை வைத்துக் கைலாசபதி சிபாரிசு செய்தவர்களை விட, தனது ரசனையை மட்டும் வைத்துக் க.நா.சு. பட்டியலிட்டவருள் அநேகர் சிறந்த படைப்பாளிகளாக இருக்கிறார்கள் என்றார். ஒரு இலக்கியப் படைப்பு முதலில் ஒரு படைப்பாக, ரசிக்கத் தக்கதாக இருந்து கொண்டுதான் எதைப் பற்றியும் பேசலாம் என்பதை உறுதிப்படுத்துவதாக அவர் பேச்சு அமைந்தது.

நாகர்கோவில் என்றால் தென்னை, பலா மரங்களும் புத்தேரி காதரின் பூத் ஆஸ்பத்திரியும் குளமும் சுந்தர ராமசாமியின் வீடும்தான் சட்டென ஞாபகத்துக்கு வரும். காதரின் பூத் ஆஸ்பத்திரியில் எனது மகள் பிறந்த இனிய நினைவுகளோடு மற்றவை தந்த சந்தோஷங்களும் தொற்றிக்கொள்ளும். சு.ரா.வின் வீட்டின் இரு ஓரங்களிலும் அவரது மகனுடைய கூந்தலைப் போல அடர்ந்து செழித்து ஆகாயத்தில் விரிந்திருக்கும் அந்தப் பலா மரமும் சப்போட்டா மரமும் மனதுள் பசுமையிடும்.

எழுபதுகளின் இறுதிவரைகூட நாகர்கோவிலின் வனப்பு ஒருவரைப் படைப்பாளியாக்கக் கூடிய உந்துதலைத் தந்துகொண்டிருந்தது. 'புளியமரத்தின் கதை'யில் வரும் உயிருள்ள இடங்களின் தடயங்களை நாகர்கோவிலில் காண்பதற்கு நடந்திருக்கிறேன்; கண்டுபிடிக்க முடியவில்லை. பள்ளத்திலுள்ள அந்த பஸ் ஸ்டாண்டும் எதிரேயுள்ள பூங்காவும் புளிக் குளத்தையும் முனிசிபல் பூங்காவையும் லேசாக நினைவூட்டி நிற்கின்றன.

சு.ரா.வின் படைப்புகளைப் பற்றியும் அவரைப் பற்றியும் இங்கே பலரும் பல விதமான அபிப்பிராயங் களையும் விமர்சனங்களையும் கொண்டிருக்கலாம். அதுதான் மனித வழக்கம். என்னைப் பொறுத்தமட்டில் அவர் மிகவும் தெளிவான எழுத்தாற்றல் கொண்டவர். முதிர்ந்து கனிந்த அவரது நகைச்சுவைதான் அவரது சுபாவம். அந்தச் சுபாவம்தான் அவரது படைப்புகள்; அவரே ஒரு படைப்புதான். அவரது படைப்புகளில் சொல்லப்பட்ட சில கருத்துகளோடு உடன்பாடில்லா விடினும் அவரது படைப்புகள் எப்போதும் அனுபவிக்கத் தக்கவையே; அவரும்தான்.

அவர் காலத்தால் வீழாதவர்; பழக்கத்தால் சலிக்காதவர்.

●

சை. பீர் முகம்மது

# சிகரங்களும் சு.ரா.வும்

**சுந்தர ராமசாமியின் எழுத்துகள் பற்றி 1966ஆம் ஆண்டு** முதல் *தீபம்* பத்திரிகையின் வழி அறிய ஆரம்பித்தேன். அப்போது 'கடல் கடந்த தமிழகம்' என்ற பகுதியில் மாதந் தோறும் மலேசியக் கடிதம் எழுதிவந்தேன். 'ஒரு புளிய மரத்தின் கதை' பற்றிய விமர்சனம் தீபத்தில் நடந்தபோது எனக்கு சு.ரா.வின் எழுத்தில் ஈடுபாடு ஏற்பட்டது.

1968ஆம் ஆண்டில் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாசகர் வட்டம் மூலம் வெளியிட்ட அக்கரை இலக்கியம் தொகுப்பில் இடம்பெற்ற 'சிவப்பு விளக்கு' என்னும் எனது கதைக்கு ரூ. 500/– சன்மானமாக அனுப்பி வைத்தார்கள். அதை அப்படியே நா. பார்த்தசாரதிக்குத் திருப்பி அனுப்பி, அதற்குப் பதில் எனக்கு வேண்டிய நூல் களை அனுப்பும்படி வேண்டினேன். நான் கொடுத்த பட்டி யலில் சு.ரா.வின் 'ஒரு புளியமரத்தின் கதை'யும் 'பிரசாதம்' சிறுகதைத் தொகுப்பும் முதலிடத்தில் இருந்தன.

அந்த இரண்டு நூல்களையும் படித்தபொழுதே இவர் வித்தியாசமானவர் என்பது தெளிவாயிற்று. இக்கதைகள் நவீன இலக்கியத்தில் புதிய சிந்தனைகளை உருவாக்கின.

*ஜே.ஜே: சில குறிப்புகள்* வந்தபொழுது அது பற்றி அவ ரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். அப்பொழுது சென்னையில் இருந்த என்னை நாகர்கோவில் வரும்படி அழைத்தார். அவர் வெளியிட்ட காலச்சுவடு இதழ்கள் வேண்டுமென்று கூறிய உடன் அதன் அனைத் துத் தொகுப்புகளையும் அனுப்பிவைத்தார்.

அண்மைக் காலமாக காலச்சுவடு பத்திரிகையில் எனக்கு நெருக்கம் வந்ததும் அவர்மேல் உள்ள அன்பால் தான் – கண்ணனிடம் பேசும் ஒவ்வொரு முறையும் அவரைப் பற்றிக் கேட்காமல் நான் இருந்ததில்லை.

தமிழ் இனி 2000 கருத்தரங்கில்தான் அவரை முதல் முறையாகச் சந்திக்கும் வாய்ப்பு மாநாட்டு மண்டபத்திற்கு வெளியே ஏற்பட்டது. என்னை அறிமுகம் செய்துகொண்ட பொழுது உடனே 'தெரியுமே' என்றார். முன்பின் பார்த்திராத என்னை எப்படி அடையாளம் தெரிந்துகொண்டார்? இன்று வரை அதற்கு விடை கிடைக்கவில்லை.

இம்முறை தமிழகம் வரும்பொழுது நாகர்கோயில் செல்ல வேண்டுமென்ற எனது நிகழ்ச்சி நிரலில் அந்தக் கேள்விக் கான பதிலை அவரிடமே கேட்க நினைத்திருந்தேன். அது முடியாமல் போய்விட்டது. சில ஆத்மார்த்தமான எண்ணங் களுக்கும் கேள்விகளுக்கும் நாம் விடைகளைத் தேட முடிவதில்லை.

ஒருமுறை சிங்கப்பூர் இலக்கிய விழாவிற்கு வந்திருந்த ஜெயகாந்தனிடம் உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார் என்ற கேள்வி கேட்கப்பட்டது. அவர் எவ்வளவோ மறுத்தும் சொல்லும்படி வற்புறுத்தினார்கள். இறுதியில் தனக்குப் பிடித்த எழுத்தாளர் "சுந்தர ராமசாமி" என்று அவர் கூறியதும் "அவர் எழுதுவது யாருக்குப் புரிகிறது?" என்று கூட்டம் சொல்லிவிட்டது. ஜெயகாந்தன் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்று பதிலளித்தார்.

தனது வாழ்நாளில் இவர்தான் உச்சங்களைத் தொட முடிந்துள்ளது. சாகித்திய அகாதெமி, ஞானபீடம் போன்ற பரிசுகள் பெற்றால்தானா உச்சம்? உண்மையில் உச்சங்கள் அதற்குமேல் இருக்கின்றன. அந்தச் சிகரத்தைத் தொட்ட வர்களில் சு.ரா.வும் ஒருவர்! ●


www.padippakam.com






மி. ராஜு - பா. விசாலம்

# சில நினைவுக் குறிப்புகள்



**1952 முதல் இன்று வரை 53 ஆண்டுகள் அவருடனான** எங்கள் நட்பு நீடித்தது. இது பற்றி சு.ரா. தனது நினைவோடை நூல்கள் (2003) ஒன்றில், "அவருடைய (ராஜுவுடைய) நட்பு இன்றுவரையும் தொடர்ந்து வருகிறது. எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரும் விஷயம் இது" என்று குறிப்பிட்டார்.

சு.ரா.வின் இலக்கிய ஆளுமையைப் பற்றி இங்கே சொல்வது என் எண்ணமல்ல. அவரைப் பற்றிய என் நினைவுகளிலிருந்து சிலவற்றைப் பதிவு செய்வதே என் எண்ணம்.

சு.ரா.வை நான் முதலில் சந்தித்தது 1952ஆம் வருடத்தில். அதற்கு முன்பே விசாலம் அவரை நன்கு அறிவார். அவர்கள் இருவரும் நாகர்கோவில் எஸ்.எல்.பி. உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தனர்.

கொச்சி மாநிலத்தின் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு இணைப்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய திரு. குஞ்சன் நாடார், 'தென்குரல்' என்றொரு சிற்றிதழைத் தொடங்கி நடத்திவந்தார். அதன் ஆசிரியர் சி.எஸ். கிருஷ்ணன் (கன்னிக் கண்ணன்) என்பவர். 'புதுமைப்பித்தன் நினைவு மலர்' தொடர்பாக அவரைப் பார்ப்பதற்காகத் 'தென்குரல்' அலுவலகத்துக்கு சு.ரா. வருவார். அந்த அலுவலகம் எங்கள் வீட்டுக்கு அருகிலேயே இருந்ததால் நான் அங்கு அடிக்கடி செல்வதுண்டு. அங்குதான் எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. பின்னர் தொடர்ந்து சந்தித்துக்கொண்டோம்.

ஸ்காட் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நான், மாணவர் இயக்க ஈடுபாடுகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டதால் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டது. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சியோடு எனக்குத் தொடர்பு இருந்ததால் கட்சிப் பணிகளில் ஈடுபட்டேன். அப்போதும் சு.ரா.வோடு எனது நட்பு தொடர்ந்தது.

எங்கள் சந்திப்பின்போது இலக்கியம் பற்றி மட்டுமே பேசி வந்த சு.ரா. இப்போது அரசியல் பற்றிப் பேசத் தொடங்கினார். சமூக ஏற்றத் தாழ்வுகள், சாதிய ஒடுக்குமுறைகள், இவைகளால் மனம் நொந்திருந்த சு.ரா.வைப் பொதுவுடைமைத் தத்துவம் கவர்ந்தது. மார்க்சிய நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். மலையாளத்தில் அவர் படித்த அரசியல், தத்துவ, சமூக விமர்சனங்களும் படைப்புகளும் அவரிடம் இடதுசாரிச் சிந்தனையை வளர்க்க உதவின.

மார்க்சியம், சோவியத் யூனியன், உலக அரசியல் பற்றியெல்லாம் என்னோடு நீண்ட நேரம் பேசுவார். அது சார்ந்து அவர் படித்த புத்தகங்களைப் பற்றி என்னோடு விவாதிப்பார். என்னோடு கட்சி அலுவலகத்திற்கு வரத் தொடங்கினார். கட்சித் தோழர்களின் எளிமையும் சினேகபூர்வமான அணுகுமுறையும் அவரைக் கவர்ந்தன. கட்சி இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தபோதிலும் அதை அவர் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளத் துணியவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தொடர்ந்த பனிப்போர் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு உலகைக் கொண்டு சென்றுவிடுமோ என்ற அச்சம் இருந்த நேரத்தில், உலகமெங்குமுள்ள கம்யூனிஸ்ட்டுகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமாதான விரும்பிகள் எல்லோருமாகச் சேர்ந்து உலக சமாதான இயக்கத்தைத்



படிப்பகம்

www.padippakam.com



தோற்றுவித்தார்கள். உலக சமாதானக் கூட்டங்களில் கலந்துகொள்வதில் சு.ரா.வுக்கு மனத் தடை ஏதும் இருக்கவில்லை. அவர் அக்கூட்டங்களில் கலந்து கொண்டு பேசவும் செய்தார்.

பாரதி பிறந்த நாளை கம்யூனிஸ்ட்டுகள் பாரதி விழாவாகக் கொண்டாடிவந்தனர். அப்படி ஒரு பாரதி விழாக் கூட்டத்தில் பேசுவதற்கு சு.ரா. முன்வந்தார். மார்த்தாண்டம், தொடுவட்டி சந்தை மைதானத்தில் நடந்த பாரதி விழாவில் சு.ரா. பேசினார்.

"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு

போகவோ? – நாங்கள் சாகவோ?

அழுது கொண்டிருப்போமோ? – ஆண் பிள்ளைகள்

அல்லமோ? – உயிர் – வெல்லமோ?"

என்ற பாரதியின் பாடலைப் பாடி உணர்ச்சி பொங்க சு.ரா. பேசியது இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அன்று சு.ரா.வை எல்லோரும் பாராட்டினார்கள். இது நடந்தது 1955ஆம் வருடத்தில் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது எங்கள் நண்பர்கள் வட்டம் விரிந்தது. மோகன் தம்பி, விசாலம், கிருஷ்ணன் நம்பி, சு.ரா., நான் எல்லோரும் ஒன்றாகச் சந்தித்துப் பேசுவோம். கிருஷ்ணன் நம்பிக்கு அரசியலில் ஆர்வம் இருக்கவில்லை. முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் தொடங்குவதென முடிவெடுத்தோம். முற்போக்குச் சிந்தனையுடைய ஆசிரியர் சாம் டானியேல் தனது டுடோரியல் கல்லூரிக் கட்டிடத்தைக் கூட்டங்கள் நடத்துவதற்குத் தந்து உதவ முன்வந்தார். நெல்லையிலிருந்து தொ.மு.சி. ரகுநாதனை சு.ரா. அழைத்து வந்தார். கூட்டத்தில் தொ.மு.சி.யை அறிமுகப்படுத்தும் போது சு.ரா. இப்படிச் சொன்னார்: "குற்றாலம் அருவி இலக்கியமாகக் கொட்டுமென்றால், அதன் அடியில் நின்று அதனைத் தனது வாயில் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவு வலிமை படைத்தவர் இவர்." பின்னாளில் இது போன்ற அலங்காரச் சொற்களை, புகழுரைகளை சு.ரா. வெறுத்து ஒதுக்கினார். 'புதுமைப் பித்தனை எனக்குப் பிடிக்கும், புதுமைப்பித்தன் என்ற பெயரை எனக்குப் பிடிக்கவில்லை' என்று ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னதும் இதன் அடிப்படையில்தான்.

'புதுமைப்பித்தன் நினைவு மலர்' வெளிவந்த பின் அவர் படைப்பிலக்கியத்தில் முழுமூச்சாக ஈடுபட்டார். சிறுகதைகள் நிறைய எழுதினார். 'கோயில் காளையும் உழவு மாடும்' என்ற அவருடைய சிறுகதை பெரும் பாராட்டைப் பெற்றது. அவருடைய தேர்ந்தெடுத்த சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றை கமில் ஸ்வெலபில் செக் மொழியில் கொண்டுவந்தார். அந்தத் தொகுப்பில் சு.ரா.வைப் பற்றி அறிமுகம் ஒன்று வெளியிட விரும்பி கமில் ஸ்வெலபில் கட்சியை அணுகியபோது, அதை எழுதும் பொறுப்பு எம்.எம். அலிக்கு அளிக்கப்பட்டது. அவர் அதை எழுதி, கடைசி வரியாக இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்று குறிப்பிட்டிருந்தார். அந்த அறிமுகக் கட்டுரையை சு.ரா.வின் ஒப்புதலைப் பெறுவதற்காக நான் காட்டியபோது சு.ரா. அந்தக் கடைசி வரியை அடித்துவிட்டார்.

**ஸ்டாலின்மீது நல்லெண்ணம் கொண்டிராத சு.ரா. இப்பொழுது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது நம்பிக்கை இழந்தவராகிவிட்டார். என்னிடம் இது பற்றி மீண்டும் மீண்டும் பேசினார். ட்ராட்ஸ்கியை ஸ்டாலின் ஏன் கொன்றார் என்று என்னிடம் கேட்டுக்கொண்டே இருந்தார். அவர் மனம் மிகவும் கலவரமடைந்திருந்ததை உணர்ந்தேன்.**

அவர் கட்சியில் உறுப்பினராக இருந்தபோதும் தன்னை ஒருபோதும் கட்சி உறுப்பினர் என்று அடையாளப் படுத்திக்கொள்வதை விரும்பியதில்லை.

தனது சுதந்திரமான சிந்தனையோட்டத்துக்குக் கட்சி தடைக் கல்லாக இருக்கிறது என்று அவர் எண்ணியபோது கட்சியிலிருந்து மெதுவாக நழுவிக் கொள்ள ஆரம்பித்தார். கட்சியின் மீதுள்ள ஆர்வமும் ஈடுபாடும் குறையத் தொடங்கிய காலங்களிலும் எங்கள் நட்பு முன்புபோலவே தொடர்ந்தது.

தோழர் ஜீவாவோடு அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. ஜீவா நாகர்கோவில் வரும்போதெல்லாம் அவரைத் தவறாமல் சந்திப்பார். கட்சியைப் பற்றிய தனது விமர்சனங்களை ஜீவாவிடம் கூறுவார். ஜீவாவும் அவைகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்வார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆம் மாநாட்டில் குருஷ்சேவ், ஸ்டாலின்மீது வைத்த கடும் குற்றச்சாட்டுகள் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. ஏற்கனவே ஸ்டாலின்மீது நல்லெண்ணம் கொண்டிராத சு.ரா. இப்பொழுது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது நம்பிக்கை இழந்தவராகி விட்டார். என்னிடம் இது பற்றி மீண்டும் மீண்டும் பேசினார். ட்ராட்ஸ்கியை ஸ்டாலின் ஏன் கொன்றார் என்று என்னிடம் கேட்டுக்கொண்டேயிருந்தார். அவர் மனம் மிகவும் கலவரமடைந்திருந்ததை உணர்ந்தேன்.

கம்யூனிஸ்ட் எதிர்ப்பு எழுத்தாளர்களான லூயி ஃபிஷர், ஆர்தர் கெஸ்லர், ஸ்டீஃபன் ஸ்பெண்டர் போன்றவர்களின் புத்தகங்களைத் தேடிப் பிடித்துப் படிக்கலானார். கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள உறவை முறித்துக்கொண்ட பின்பு கட்சித் தோழர்கள் அவரிடம் காட்டிய அலட்சியம் அவர் மனதைப் புண்படுத்தியிருந்தது. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டிருந்தபோதிலும் அவர் ஒருபோதும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளராகச் செயல்படவில்லை. இறுதிவரை மார்க்சியத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார் என்றுதான் நம்புகிறேன். ஒரு சந்தர்ப்பத்தில், இன்று இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளில் ஓரளவு எனக்கு நம்பிக்கை தருவதாக உள்ளவை கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் என்று என்னிடம் சொன்னார். ●




படிப்பகம்




● சல்மா

# பின்னும் உயிர் வாழும் கானல்*



சு.ரா. இறந்துவிட்டார். செல் ஃபோன் திரையில் தோன்றிய வார்த்தைகள் எவ்வளவோ கண்ணீருக்குப் பிறகும்கூட விழிகளிலிருந்து நீங்க மறுக்கின்றன.

எனது ஓயாத அழுகையைப் பார்த்துவிட்டு அம்மாவும் நண்பர்களும் சொல்கிறார்கள், மரணம் அனைவருக்கும் பொதுவானது, நாமும் ஒரு நாள் இறந்துவிடுவோம், ஏற்றுக்கொள்.

என் குழந்தை சொல்கிறான், நம்ம கையில என்ன இருக்கு, அழுகாதே என்று.

மரணம் அனைவருக்கும் பொதுவான ஒரு விதி. நெருக்கமானவர்களின் மரணத்திற்கு மட்டும் ஏன் பொருந்தவே மாட்டேன் என்று அடம் பிடிக்கிறது?

சம்பிரதாயமான ஆறுதல் வார்த்தைகளால் நிரப்பக் கூடியதா அவரது இழப்பு?

* * *

நான் உயிர் வாழ்வதற்கான அவசியத்தைக் குழந்தைகள் மட்டுமே தந்துகொண்டிருந்த காலத்தில் அப்பொறுப்பைக் குழந்தைகளிடமிருந்து தன்னிடம் எடுத்துக்கொண்டவர் சு.ரா. உயிர் வாழ்தலுக்கான சகல நம்பிக்கைகளையும் எனக்குத் தர முடிந்தவரைப் பற்றி நினைவுக் குறிப்பை எழுத வேண்டும் என்பது அத்தனை எளிதானதல்ல. இன்றும் என்னை வந்து சேர்கிற மொத்த ஆறுதல்களையும் தின்று செரித்துவிட்டுத் துளியும் மறையாமல் எனக்குள் ஸ்திரமாக இறுகிக் கிடக்கிறது அவரது இழப்பு.

அவருடனான என் நினைவுகளை எழுத்துகளாக மாற்றுவதற்கான மனத் தயாரிப்பு இல்லை என்கிற எண்ணத்தைத் தாண்டி அவை இங்கே பதிவாகிக்கொண்டிருக்கின்றன என்றால் அதனைச் சாத்தியமாக்கியதும் அவர்தான்.

'95ஆம் ஆண்டு அவரது படைப்புகளின் மீது கொண்ட அபிமானத்தில் கடிதமொன்றை நீண்ட தயக்கத்துடன் எழுதினேன். அவருடைய பதிலுக்காகக் காத்திருக்க வேண்டும் என்கிற பேராசை ஏதும் இல்லை. அதோடு அவரைப் போன்ற மிகப் பெரிய படைப்பாளி வாசகர்களுக்குப் பதில் எழுத வேண்டிய அவசியம் என்னவாக இருக்க முடியும்?

நான் எதிர்பாராத நேரத்தில் அவரிடமிருந்து வந்து சேர்ந்த நீண்ட கடிதம் உணர்த்திய முதல் விஷயம், மனிதர்களிடத்தில் தர நிர்ணயம் எதையும் வைத்துக் கொள்ள முடியாத பண்பாளர் அவர் என்பது.

கடிதங்களால் மட்டுமே உருவாகி வளர்ந்துகொண்டிருந்த எங்களது நட்பில் புலம்பல்களை மட்டுமே கடிதத்திற்கான விஷயங்களாக நிர்ணயம் செய்துகொண்டுவிட்டிருந்த எனக்கு நம்பிக்கைகளையும் பிரியங்களையும் மட்டுமே அவர் பதில்களாக்கிக் கொண்டிருந்தார். எங்களது பத்தாண்டுக் கால நட்பு, இலக்கியம் சார்ந்த உரையாடல்களாய் அல்லாது தனிப்பட்ட பிரியங்களால் கட்டப்பட்டதாகத்தான் இருந்துவந்திருக்கிறது.

எனது துக்கங்களை அவருக்கு எழுதிக்கொண்டிருந்த சமயங்களில் நான் என்னையுமறியாமலேயே அவரை மிகப் பெரிய அளவுக்குக் குற்ற உணர்வுக்குள்ளாக்கி வந்திருக்கிறேன். எனக்கு உதவ முடியாத தன் நிலையை எண்ணி துக்கிக்கும் அவரது பதில் கடிதங்கள் என்னை நிதானம் கொள்ளச் செய்தன.

---

*பசுவய்யாவின் கவிதை வரி

www.padippakam.com



ஒரு முறை என் கணவர் என்னை அடித்து விட்டதாக எழுதிய கடிதத்தைக் கண்டு தொலைபேசியில் அழைத்து, "ஏம்மா, உங்கள அடிக்க அவருக்கு எப்படி மனம் வந்தது?" என்று கேட்டவரின் குரலில் உணர்ந்த துயரம் எனக்கு வாழ்நாள் முழுக்கத் தேவையான குற்றவுணர்வை இன்றும் தந்து கொண்டிருக்கிறது.

வீட்டுக்குள் முடங்கி இயலாமையின் பிடிக்குள் விழுந்து கிடந்த எனக்கு "நீங்கள் நினைப்பதுபோலச் சுலபமானதில்லை வெளி உலகம். உங்களால் வெளியில் சென்றுதான் எதையும் அடைய முடியும் என்றில்லை. இருந்த இடத்திலிருந்தபடியே உங்களது படைப்புக்கான உருவங்களையும் அதற்கான முயற்சிகளையும் தொடங்குங்கள்" என்கிற அவரது கடித வரிகளின் நிகழ்கால நிரூபணம்தான் என் படைப்பு முயற்சிகள்.

தனக்கு இந்த உலகத்திலிருந்து கிடைக்கக்கூடிய எந்த விஷயமும் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் பெரிய ஆர்வத்தை எப்பொழுதும் தன்னிடத்தில் வைத்திருப்பவர். குறிப்பாக அவ்விஷயங்கள் எனக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் அவர் கொண்ட ஆர்வம் மிகவும் வியப்புக்குரியது.

எங்கேயாவது சென்று எதையாவது பார்த்துவிட்டு வந்த பிறகு என்னிடம் சொல்வார்: "நீங்க அவசியம் பாக்கணும்னு நெனச்சுக்கிட்டேன். ஓங்களுக்கு ரொம்பப் புடிக்கும்."

நான் செய்கிற சின்னச் சின்னக் காரியங்களைக்கூட மிகையாகப் பாராட்டிக்கொண்டிருப்பார். இன்று நான் ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டேன் என்று சொன்னால் போதும். "உங்களால முடியாதது எதுவும் இல்ல, நீங்க கெட்டிக்கார ஆள் என்கிறது எனக்கும் கமலாவுக்கும் ரொம்ப நல்லாத் தெரியும்." உற்சாகமான குரல் மிகையாக என்னைப் பாராட்டித் தீர்க்கும்.

எனது பாகிஸ்தான் பயணத்திற்குப் பிறகு பயணம் குறித்து விசாரித்தவர், "முதல் முறையா தனியா ஆறு பிளைட் மாறி போய்ட்டு வந்தீங்களா, ஆங்கிலமும் இந்தியும் தெரியாம? நிஜமாவே நீங்க பெரிய ஆள் தான்" என்றார்.

என் ஊரில் கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள்கூட அரபு நாடுகளுக்கென விமானப் பயணம் செய்துகொண்டிருக்கும் யதார்த்தமும் எனக்குத் தெரியும். அப்பாராட்டின் நோக்கமும் புரியும்.

* * *

'95ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம்தேதி அவரை முதல் முறையாக அவரது இல்லத்தில் சந்தித்தேன். தயக்கத்துடன் அமர்ந்திருந்தவளிடம் சம்பிரதாய மான உரையாடலுக்குப் பிறகு, "நீங்க நிறைய எழுதலாமே" என்றார். பதில் சொல்லத் தெரியாமல் அமர்ந்திருந்தேன்.

"கனிமொழி தொகுப்பு வந்திருக்கு, படிச்சீங்களா" என்றார். இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினேன். "அவசியம் படிங்க. அந்த அம்மா திராவிடக் குடும்பத்துலருந்து வந்தாலும் கொஞ்சங்கூட அதனோட சாயல் இல்லாம ரொம்ப நல்லா எழுதியிருக்காங்க. நீங்களும் எழுதுங்க, தொகுப்பா கொண்டுவரலாம்."

அவருடைய நெடுநாள் விருப்பம் திருவனந்தபுரம் பத்மனாப சுவாமிகள் கோயிலையும் அரண்மனையையும் எனக்குச் சுற்றிக் காட்ட வேண்டும் என்பது. பயணிப்பது எனக்குச் சுலபமான பிறகு இரண்டாண்டுகளுக்கு முன் சு.ரா.வுடன் அதிகாலை ரயிலில் திருவனந்தபுரத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தேன். கனவில்லை அது.

கடந்துகொண்டிருக்கும் ஊர்களைப் பற்றி, அவற்றின் முக்கியத்துவம் பற்றி, கூடப் பயணிப்பவர்களது வேலைகளைப் பற்றி எனப் பல்வேறு விஷயங்களைப் பகிர்ந்துகொண்டே வந்தார். பேசாத தருணங்களில் எனக்கே எனக்காக மட்டுமே அவரிடமுள்ள பிரத்யேகமான புன்முறுவலோடு நான் பயணத்தை ரசிப்பதை ரசித்தபடி.

ஓட்டலொன்றில் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பே தனது உணவை முடித்துக்கொண்ட எனது மகன் கை கழுவவென வெளியேறும் வழியாகச் சாப்பாட்டு மேசை அடிப்புறத்தே தேர்ந்தெடுத்து வெளியேறியதை வியப்புடன் கவனித்தவர், "குழந்தைகள் வாழ்வை எத்தனை எளிதானதாக எதிர்கொள்கிறார்கள்" என்று சொல்லிச் சிரித்தார்.

பத்மனாப சுவாமிகள் கோயிலின் பிரகாரம் திறப்பதற்கென நீண்ட வரிசையில் என்னோடு காத்துக் கிடக்கையிலும் கோயிலின் ஒவ்வொரு பகுதியையும் சுற்றிவந்து எனக்குத் தகவல்கள் சொல்கையிலும் என் சந்தோஷத்தைப் புன்முறுவலோடு அனுபவித்துக் கொண்டிருந்தார். மதிய உணவுக்கு மிகப் பெரிய ஓட்டல் ஒன்றிற்கு அழைத்துச் சென்றவர், "இங்கே ஐந்தாவது மாடியிலிருந்து உங்களிடம் காட்ட வேண்டிய ஒரு இடம் இருக்கிறது. நீண்ட நாட்களாக நினைத்துக்கொண்டிருந்தேன்" என்றபடி ஐந்தாவது மாடிக்கு அழைத்துச் சென்றார். லிஃப்டில் பயணிக்கும் பொழுதே முகத்தில் லேசான பதற்றம் தெரிய ஆரம்பிக்க, குழப்பத்துடன் பயணித்துக்கொண்டிருந்தேன். லிப்டிலிருந்து வெளியேறியவர் பரபரப்பாக ஓரிடம் தேடிப் போனார். பதற்ற முகம் பரவசமடைகிறது. அது ஜன்னலோர இருக்கைகள் கொண்ட உணவு மேசை. "இந்த இடம் காலியா இருக்கணுமேங்கற கவலையில இருந்தேன்" என்றவர், "இந்தக் கண்ணாடி ஜன்னல் வழியா பாருங்களேன்" என்கிறார்.

அவர் காட்டும் திசையில் கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலைப் போலத் தென்னை மரங்களின் அணிவகுப்பு கண்களுக்குத் தெரிகிறது. பார்ப்பதற்கு மிகவும் அற்புதமானதொரு காட்சி அனுபவம் அது.

நான் சந்தோஷிக்கிறேனா எனப் பொறுத்திருந்தவர், "உங்களுக்குப் புடிக்கும்னு தெரியும். இங்கே வரப் போவெல்லாம் கமலாகிட்ட சொல்லுவேன்.



படிப்பகம்

www.padippakam.com



ராஜாத்திய ஒரு நாள் கூட்டி வந்து காட்டணும்னு" என்றார்.

பல கட்டுகளாக இருக்கக்கூடிய பத்மனாபபுரம் அரண்மனையின் உள்ளே கைடு மலையாளத்தில் சொல்வதை எனக்குத் தமிழில் சொன்னபடி உடன் வந்துகொண்டிருந்தார்.

குறுகலான மரப்படிகளில் ஏறி நடன மண்டபம் ஒன்றைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தபொழுது எனக்குக் கால்கள் வலிப்பதை உணர்ந்தேன். அதிகாலையிலிருந்து நடந்துகொண்டிருக்கிறோம் என்பது நினைவுக்கு வந்தது. என் மனதிலிருந்த உற்சாகம் வடிய முகம் இருள ஆரம்பித்தது.

"நீங்க எங்கூட வரவேணாம். கால் வலிக்கும். இங்கியே உக்காந்திருங்களேன்" என்கிறேன்.

"எனக்கா, கால் வலியா? என் ஆரோக்யத்த உங்ககிட்ட காட்டறதுக்கு இதுதான் சந்தர்ப்பம். நீங்க பயப்படுவீங்களே என்னோட ஹெல்த்தப் பத்தி. இப்பப் பாருங்க, நான் எப்படி இருக்கேன்னு" என்றார்.

என் இருளடைந்த முகம் பிறகு தன் இயல்புக்குத் திரும்பவேயில்லை.

அன்றிரவு படுக்கையில் அவரது வீங்கியிருந்த பாதங்களைத் தொட்டு,"எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு" என்றேன்.

"வருத்தப்படறீங்களா?" ஆதங்கத்துடன் கேட்டவர், "ஏன் கமலா, என் பாதம் எப்போதும் இப்படித்தானே இருக்கும், ராஜாத்திகிட்ட சொல்லு" என்றார்.

ஊருக்கு வந்த பிறகு ஒரு நாள் தொலைபேசியில் என்னிடம் பேசிக்கொண்டிருந்தவர், "அன்னிக்கு நீங்க என் பாதத்தத் தொட்டுப் பார்த்து வருத்தப்பட்டீங்களே, அன்னிக்கு என் பொண்ணு ஞாபகம் வந்தது. நெகிழ்வா இருந்தது."

திருவனந்தபுரத்தில் போட்டில் செல்வதற்கு டிக்கெட் எடுப்பதற்காகக் காத்திருந்த சமயத்தில், அவருடனேயே இருந்து அவரது சிந்தனைகளிலேயே தங்களைச் செதுக்கிக்கொண்ட சிலர் அவருக்கு எதிராகப் பேசுவது குறித்த என் வருத்தத்தைப் பகிர்ந்துகொண்டபோது அவருடைய புன்முறுவல் மட்டுமே பதிலாகக் கிடைத்துக்கொண்டிருந்தது.

நம் காலத்தின் ஆகச் சிறந்த படைப்பாளி என்கிற நம் பெருமிதங்களுக்கிடையே, அவர் சிறந்த மனிதாபிமானி என்பதை நான் உணர்ந்துகொண்ட தருணம் அது.

இலக்கிய உலகம் அவருடைய இழப்பை மாபெரும் இழப்பாக வரித்துக்கொண்டிருக்கிறது. என்னளவில் வேறு யாராலும் ஈடுசெய்யவியலாத இழப்பாக என்னுள் கனன்றுகொண்டே இருக்கும், என் வாழ்நாள் முழுவதும்.


**காவ்யா சண்முகசுந்தரத்தின் நூல்கள்**



**பேராசிரியர் சு. சண்முகசுந்தரம் ஆய்வுத் தொகுப்பு**

திருக்குறள் காவ்யா உரை – 30.00
கலைஞர் கலை இலக்கியத் தடம் – 125.00
நீலபத்மநாபன் – 100.00
பாரதிராஜா மண்ணும் மக்களும் – 125.00
வைரமுத்து வரை – 125.00
கி.ரா. 80 – 150.00
கன்னட நாடோடிக் கதைகள் – 45.00
பழமொழிக் கதைகள் – 25.00
அகத்தாரும் புறத்தாரும் – 75.00
தன்னனானே 95 – 75.00
நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு – 30.00
விடுதலை வேர்கள் – 35.00
நாட்டுப்புறவியல் ஆய்வுக்
கொங்கு நாட்டுப்புறவியல் – 100.00
நாட்டுப்புறவியல் – 100.00
முருகன் வழிபாடு – 75.00
நெல்லைச் சிறுகதைகள் (தொ) – 150.00
சென்னைச் சிறுகதைகள் (தொ) – 100.00
உடுமலை நாராயணகவி பாடல்கள்(தொ)– 200.00
நகுலன் கவிதைகள் (தொ) – 100.00
சி. கனகசபாபதி கட்டுரைகள் (தொ) – 140.00
தஞ்சை ப்ரகாஷ் கட்டுரைகள் (தொ) – 140.00
தஞ்சை ப்ரகாஷ் கதைகள் (தொ) – 200.00
சி.சு. செல்லப்பா இலக்கியத் தடம் (தொ) – 80.00
தமிழவனோடு ஓர் உரையாடல் (தொ) – 40.00
ஐந்து கதைப் பாடல்கள் (தொ) – 75.00
சென்னை நாட்டுப்புறவியல் (தொ) – 65.00
தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் (தொ) – 100.00
இலக்கியத்தடம் (தொ) – 250.00
கோட்பாடுகள் (தொ) – 50.00

**சுந்தர பாண்டியன் படைப்புகள்**

பகல் கனவு – 10.00 ☐ அந்தி – 40.00
ஆராரோ – 30.00 ☐ திப்புசுல்தான் – 75.00
சாணக்கியன் – 90.00 ☐ அம்மா – 30.00
வரம் (லி.தேவசிகாமணி பரிசு) – 30.00
சாபம் – 45.00 ☐ களவு – 30.00

**காவ்யா,** 16, சீனிவாசா அபார்ட்மெண்ட்
இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.
தொலைபேசி: 23726882

விளம்பரம்




படிப்பகம்


www.padippakam.com






ஜே.பி. சாணக்யா

# நான்காவது கடிதம்



**ஒன்பது வருடங்களுக்கு முன்பு, சென்னை வந்த** புதிதில் கதவில்லாத வீட்டில் குடியிருந்துகொண்டிருந்த ஒரு மாலை நேரத்தில்தான் உங்கள் பெயர் முதன் முதலாக எனக்கு அறிமுகமானது.

சுந்தர ராமசாமி.

நண்பர் ஒருவர் 'ஜே.ஜே: சில குறிப்புகள்' நாவலைக் கொடுத்து வாசித்துப் பாருங்கள் என்றார். பெயரை உச்சரித்துப் பார்த்ததில் ஒரு சிறிய சுவாரஸ்யம் அதில் இருப்பதாய்த் தோன்றியது. ஒரு இரவு, இரண்டு பகலில் வாசித்து முடித்தேன். இனம் புரியாத தீவிரத் தன்மையும் புதிதான ருசிக்கு ஆட்பட்ட தினங்களாகவும் அவை இருந்தன.

நவீன இலக்கியத்தில் நான் முதன்முதலாக வாசித்ததும் அதுதான். அதன் பின்தான் உங்கள் முதல் நாவல் *ஒரு புளியமரத்தின் கதை* என்பது தெரிந்தது. அப்போது தேவி திரையரங்க வளாகத்திலேயே என் பெரும்பாலான பொழுதுகள் கழிந்துகொண்டிருந்ததில் ஹிக்கின்பாதம்ஸில் பல மணி நேரங்களை வெய்யிலுக்குப் பயந்து செலவிட்டுக்கொண்டிருந்தேன். வெவ்வேறு சமயங்களில் அங்கு தமிழ்ப் புத்தகங்களின் பிரிவுகளுக்கான நபரை 'ஒரு புளியமரத்தின் கதை' இருக்கிறதா எனக் கணக்கற்ற முறை விசாரித்துக்கொண்டிருந்தேன். அவர் ஒரே பதிலை விதவிதமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். 'பிரிண்ட்ல இருக்கு. அடுத்த மாசம் வரலாம். வெய்ட் பண்ணுங்க' எனச் சளைக்காமல் சொல்லிக் கொண்டிருந்தார்.

நீங்கள் நடத்திய 'காலச்சுவடு' இதழ்களை நண்பர்களிடம் தேடிப் பிடித்தேன். பிறகு 'காலச்சுவடு' மீண்டும் வந்துகொண்டிருப்பது தெரிய வந்து தாம்பரத்திலிருந்து நுங்கம்பாக்கம் ரயில் நிலையம்வரை பயணம் செய்து புத்தகம் விற்கும் ஒவ்வொரு ரயில் நிலையக் கடையாய் 'காலச் சுவடு இருக்கிறதா?' என விசாரித்தபடி இறங்கி இறங்கி வெவ்வேறு ரயில்களில் ஏறிச் சென்று வருவேன். இதழ் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில்தான் கிடைக்கிறதென்று தெரிந்தாலும் மூன்று மாதத்தில் இதழ் வரும் நாட்களில் இப்படி ஒரு விசாரிப்பு எனக்கு உற்சாகமானதாகவும் 'காலச்சுவடு' இதழ் தெரியாத கடைக்காரர்கள் என்னை எதிர்கொள்ளும் விதம் சுவாரஸ்யமான்தாகவும் இருந்தன.

நான் 'காலச்சுவடு' இதழைத் தேடிச் சென்றதில் அடிநாதமாக ஒரு விஷயம் எனக்குள் மலர்ந்துகொண்டிருந்தது. 'ஜே.ஜே.: சில குறிப்புகள்' நாவலை எழுதியவர் தொடங்கிய பத்திரிகை; அதில் அவர் ஏதாவது எழுதக் கூடும் என்பதுதான் அது.

ஒரு நாள் 'ஒரு புளியமரத்தின் கதை' எனக்குக் கிடைத்தது. எனது உதவி இயக்குநர் 'பேட்டா'வில் இரண்டு நாள் பணம் சேர்த்து வாங்கினேன். தேவி திரையரங்க வளாகப் படிக்கட்டுகள், அதன் ஒதுக்குப்புறமான டீக்கடைகள், சாந்தி தியேட்டர் வளாகம் ஆகிய இடங்களில் வைத்து அந்நாவலைப் படித்து முடித்தேன். நவீன இலக்கியப் பரிச்சயம் இல்லாத அந்நாட்களில் அந்நாவல் என்னை மயக்கிவிட்டிருந்தது. அம்மொழி எனக்குள் ரம்யமான ஒரு நினைவைப் போலும் மூடப்பட்ட என் தோள் பைக்குள் உறங்கும் அப்பச்சைப் புத்தகம் ரகசிய நண்பனைப் போலும் இருந்துகொண்டிருந்தது.

அந்நாவலைப் படித்துவிட்டுத் தங்களுக்கு மூன்று பக்கத்தில் ஒரு கடிதம் எழுதினேன். ஆறவைத்துத் திருத்திப் படியெடுத்து, பிறகு அனுப்பலாம் என வைத்திருந்து, சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் எடுத்துப் பார்த்தபோது என் கடிதம் மிகவும் அபத்தமாக இருப்பதாகத் தோன்றியது. கிழித்துப் போட்டேன். உண்மையில் தற்போது வருத்தப்படுகிறேன். எந்தத் தடையும் குறுக்கீடுகளும் இல்லாத அந்தரங்கமானவனாக, ஒரு பச்சை வாசகன் அவனை ஈர்த்த ஒரு எழுத்தாளனை நேசிக்கும் கடிதம்.



படிப்பகம்

www.padippakam.com



இன்று யோசிக்கையில் நீங்கள் அந்தக் கடிதத்தை ரசித்துப் படித்திருக்கக்கூடும். இன்னும் கொஞ்சம் கூட்டிச் சொல்வதானால் உங்களுக்கு வந்த வாசகர் கடிதங்களில் அறிவாளித்தனமில்லாத, ஆனால் உங்களுக்குப் பிடித்த கடிதங்களில் அதுவும் ஒன்றாக இருந்திருக்கக்கூடும்.

வெவ்வேறு சமயங்களில் மாதங்களின் இடைவெளி களில் இது போன்று மேலும் இரண்டு கடிதங்கள் இதேபோல் பலியாயின. இந்த இரண்டு கடிதங்களும் சிறிது நீளமானவை. அப்போது எனக்கும் தங்களுக்கு மான கற்பனைச் சந்திப்புகளை உருவாக்கி மகிழ்வேன். அதில் எனக்கு நீங்கள் தேநீர் தருவீர்கள், அமர்வதற்கு இருக்கையைக் கை காட்டுவீர்கள், பிறகு கன்னியாகும ரிக்குச் செல்வோம். நாளைக் கழித்துத் திரும்ப முடி யாமல் திரும்பிக்கொண்டிருப்பேன்.

* * *

'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நூல் வெளியீட்டு விழாவை ஒட்டி நீங்கள் சென்னைக்கு வருவதை அறிந்து அன்று உங்களைச் சந்தித்து (மூன்றாவது கடிதம் இப்போது என் சொக்காயில் இருந்தது. பேச முடியாதுபோனால் கையில் கொடுத்துவிடலாம் என எண்ணி யிருந்தேன்) பேசும் எண்ணத்துடன் காலை 10 மணிக்கு நடக்கும் கூட்டத்திற்கு 7 மணிக்கெல்லாம் TVS பேருந்து நிறுத்த பிளாட்பாரத்தில் அமர்ந்திருந் தேன். புக் பாயின்ட்டின் பக்கம் மெதுவாகச் செல்லும் எல்லாக் கார்களையும் ஊருடுவிப் பார்த்துக்கொண் டிருந்தேன். விழா தொடங்கிய பின்புதான் நான் உங்களைப் பார்த்தேன். நீங்கள் ஒரு எழுத்தாளரைக் காணக் கேரளாவுக்குப் புறப்பட்டுச் சென்று அவர் உங்கள் கற்பனைக்கு எதிராகக் கத்திப் பேசிக்கொண் டிருந்ததைப் பார்த்து நீங்கள் திரும்பி வந்ததைப்போல் எனக்கெதுவும் நேரவில்லை.

நீல நிற பார்டர் போட்ட எட்டு முழ வெள்ளை வேட்டியும் பிஸ்கட் கலர் முழுக்கைச் சட்டையும் அணிந்திருந்தீர்கள். நான் எதிர்பார்த்த எழுத்தாளனின் ஒரு நிறைவான தோற்றம். உங்கள் கட்டுரைகளில் நீங்கள் எழுப்பிக்கொள்ளும் கேள்விகளின் அலைக் கழிப்பைப் போல் முகம். அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தீர்கள். அவ்வப்போது யாரையாவது கைகுலுக்கி வரவேற்றுப் பேசுவதைத் தவிர்த்துத் தனியாகவே இருந்துகொண்டிருந்தீர்கள். நான் தவிப் பாகவும் வெட்கத்துடனும் சிறு பதற்றத்துடனும் எழுந்து உங்களிடம் வந்தேன். நீங்கள் என்னைப் பார்த்தீர்கள். நான் உங்களைப் பார்க்கிறேன். அடுத்த கணம் நீங்களோ நானோ மரியாதை முன்னிட்டாவது சிரித்துக்கொள்ள வேண்டும் அல்லது நான் வணக்கம் வைக்க வேண்டும். யாரோ கும்பலாக வந்து உங்களை என் விழித் திரையிலிருந்து மறைக்கிறார்கள். உங்கள் தலையாட்டல் தான் எனக்குத் தெரிகிறது. அவ்வளவுதான், நான் தங்களைக் கடந்து வாசலுக்கு வந்துவிட்டேன்.

தோல்வி அடைந்த ஒரு மனோபாவம் என் மனதில் அருவிக்கொண்டிருந்தது. இன்னும் சில வினாடிகளில் நீங்கள் என்னைக் கூப்பிட்டுவிடப்போகிறீர்கள். தங்கள் முன் சிரித்து வணக்கம் வைத்துக் கை குலுக்கப் போகிறேன். அதற்குள் நான் நழுவிவிட வேண்டும். தங்கள் பார்வையிலிருந்து. அந்த நேரத்தில் உங்களிடம் சொல்ல ஒரு வார்த்தைகூட எனக்கு எழுந்திருக்க வில்லை. கூட்டம் முடியும் வரையில் கடிதம் என் சொக்காயிலேயே உறைந்திருந்தது. நீங்கள் பேசினீர்கள் மேடையில். நான் கேட்ட உங்கள் குரலின் முதல் வரி அது: "நாம் சொற்களை இழந்துவருகிறோம்." எனக்கும் பொருத்தமாகத்தான் இருந்தது.

தங்கள் புத்தகத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்றி ருந்தேன். அம்மா கேட்டாள்: "இது என்ன பச்சைப் புத்தகம்?"

"நாவல்" என்றேன்.

"குடு பார்ப்போம்" என்றாள். நான் பெரிய மேதை போல் "உனக்குப் புரியாது" என்றேன்.

"குடுடா பார்ப்போம். தமிழ்லதான எழுதியிருக்கு" என்றபடி வாங்கினாள்.

அவள் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தபோது அவள் திருப்பித் தரும் நொடிகளுக்காக அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் எடுத்துச் சென்று படித்தாள்.

தினமும் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் வீட்டு வேலைகளை அசமடக்கிவிட்டு இரவு விளக்கிட்டுக் கொண்டு படிப்பேன். நான்கைந்து நாள் இது தொடர்ந் தது. ஒரு நாள் நள்ளிரவில் அம்மா விளக்கிட்டுப் படித்துக்கொண்டிருந்தாள். கதையில் ஏதோ ஒரு சரடைப் பற்றிக்கொண்டுவிட்டாள் என்று நினைத்தேன். விடிந்து அவள் வீட்டு வேலை செய்யாமல் பள்ளி மாணவிபோல் படித்துக்கொண்டிருந்தாள். பிறகு, "இது நெசமா நடந்த கதையா? நல்லாருக்கு" என்றாள். எல்லோரும் சொல்வதுதான் என்றிருந்தேன்.

அம்மாவைப் பார்க்கப் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற போது தன் சக டீச்சர்களிடம் அவள் இந்த நாவலைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த ஒரு வாரத் தில் இரண்டு டீச்சர்கள் நான்கைந்து முறை அப்புத்தகத் தைக் கேட்டார்கள். நவீன இலக்கியப் பரிச்சயமே இல்லாத அவர்களிடம் இலக்கியத்தின் ருசியைச் செவ்வெண்ணெய் வைப்பதுபோல் நாவில் தடவுவது தான் அது. எங்கோ இருக்கும் எழுத்தாளன் தன் புத்தகம்வழி எத்தனை நாவுகளில், இதயங்களில் வலம்வந்துவிடுகிறான் என்பது உற்சாகமாக இருந்தது.

அதன்பின் டெல்லியில் 'கதா' திருவிழாவில்தான் தங்களைச் சந்திக்கும் சூழல் நேர்ந்தது. தங்களுக்கு மரியாதை செய்யப்பட்டுக்கொண்டும் புகைப்படக் கருவிகள் மின்னிக்கொண்டுமிருக்க ஒளி வெள்ளத்தில் மேடையில் இருந்தீர்கள். நான் அறிமுகம் செய்யப்பட் டேன். இந்தச் சமயத்தில் என்னை ஞாபகம் வைத்துக் கொள்ளக் கண்டிப்பாக முடியாது என்னும் நினைப்பு டனே கைகுலுக்கினேன். பரஸ்பர அறிமுகம் முடிந்த பின்பு அடுத்த நாள் நான் தனியாக நின்றுகொண்டி ருந்தபோது, "என்ன தனியா நின்னுட்ருக்கீங்க?" என்ற படி சட்டென என் அருகில் வந்து பேசினீர்கள்.

மிக இணக்கமாகவும் எளிமையாகவும் இருந்தது பேச்சு. என் வாழ்வில் எழுத்து ரீதியாக எழுந்த



படிப்பகம்

www.padippakam.com

சுமைகளில் ஒரு பாரம் குறைந்ததுபோலும் ஊர்க் காரர்கள் ஒன்றாகச் சந்தித்துப் பேசிக்கொள்வதுபோலும் அந்நியமற்று இருந்தது. நான் உங்களிடம் என்ன பேசுவது? "நான் உங்கள் வாசகன். உங்கள் கதைகளை அதிகம் வாசித்திருக்கிறேன்" என்றா? இந்த வரிகளை நீங்கள் எத்தனை வாசகர்களிடமிருந்து கேட்டிருப்பீர் கள்? சொல்லாத ஏதாவது ஒரு வரி, உங்கள் மனதில் பிரத்யேகமாகப் பதியும்படி, கடைசிவரை ஒரு வார்த்தைகூடச் சிக்கவில்லை. இன்று புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு வாசகனிடமிருந்து ஒரு எழுத்தாளனுக்கு முதலில் போய்ச் சேரவேண்டிய வரி அல்லது வார்த்தைகள் 'நான் உங்கள் வாசகன்' என்பதுதான். அது எத்தனை முறை எத்தனை நபர்களால் எழுத் தாளனிடம் சொல்லப்பட்டாலும் அது மிகவும் புத்தம் புதிய வாசகம்தான். டெல்லியிலிருந்து பிரியுமுன் எப்படியாவது நான் உங்களுக்கு எழுதிய மூன்று கடிதங்களையும் சொல்ல வேண்டுமென நினைத்தேன். ஆனால் நமக்கு ஒரு ஆசுவாசமான ஒரு பொழுது கிடைக்கும் என்று நம்பினேன். தங்கள் வீட்டிலமர்ந்து காபி அருந்தியபடியோ, கடற்கரையில் கடல் பார்த்து அமர்ந்திருக்கும்போதோ, என் கடிதங்கள் பற்றி, உங்கள் கதையுலகத்தை மீண்டும் மீண்டும் வாசித்தது பற்றிக் கூற வேண்டும் என நினைத்தேன். பொழுதுகள் மேல் எனக்கு நம்பிக்கை இருந்தது. ஏனெனில் நீங்கள் எனக்கு நரை தெரியும் இளைஞனாகவே தெரிந்தீர்கள். இது வெறும் வார்த்தையில்லை.

'சாருலதா' படம் பார்த்துவிட்டு வெளியே வந்தேன். என் தோளில் உங்கள் கை. பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டு பேசினோம். "இது போன்ற நூறு திரைப்படங் கள் வேண்டும். ஆயிரம் நாவல்களுக்குச் சமம்" என்றீர் கள். இது போன்ற விஷயத்தில் அதிகமாய் ஆசைப் பட்ட கலைஞன் நீங்கள். நான் நினைத்தேன். அப்படி விரல்விட்டு எண்ண முடியுமா நம்மூரின் திரைப்படங் களை. எழுத்தாளர்களைப் புறம்தள்ளும் சமூகம் ஒருபோதும் உருப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை.

என் அம்மா அடிக்கடி சொல்வாள்: 'தோலைக் கடித்துத் துருதியைக் கடித்து வேட்டை நாயாக வர வேண்டும்' என்பாள். இவ்வார்த்தைகளில் எங்கள் குடும்பத்தின் பொருளாதாரம், நம்பிக்கை, நான் செல்ல வேண்டிய தூரம் குறித்த அனைத்தும் பொதிந்திருப்ப தாகத்தான் தோன்றும். நான் அப்படித்தான் தமிழின் மிக முக்கியமான எல்லா எழுத்தாளர்களின் எழுத்துக் களிடமிருந்தும் மொழிபெயர்ப்பில் கிடைத்த அயல் மொழி எழுத்தாளர்களிடமிருந்தும் முட்டி மோதிக் கற்றுக்கொண்டுமிருக்கிறேன். அதில் தங்கள் எழுத்தின் பங்களிப்பு மிகவும் கணிசமானது என்பதை மரியாதைபூர்வமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத்தாளனின் கனவுகள், நம்பிக்கைகள் அவற்றைத் துரத்திப் பிடிக்கும் வேகம், இவற்றைக் கதை எழுது வது தவிர்த்து எழுத்தாளனுக்கு வேறு வழியில்லை என்ற அறியாமையைப் போக்கிக்கொண்டதும் புரிந்துகொண்டதும் தங்களிடமிருந்துதான்.

இன்றுவரையிலும் இலக்கியத்தின் புதிர்த் தன்மையும் ஒரு வகையான புரிதலும்தான் என்னை எழுத வைத்துக்கொண்டிருக்கின்றன. எனது கதைகள் இலக்கியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பின்புதான் எழுத்தாளர்களைச் சந்தித்தேன். அவை யாவும் தாமாக, யதார்த்தமாக நிகழ்ந்தேறியவை.

வடிவ நேர்த்தி, மொழி நுட்பம், வார்த்தைச் சிக்கனம், இவை உங்கள் எல்லாக் கதைகளிலும் நிரம்பியிருந்தது எனக்கு ஆச்சரியம். அதற்கு ஒரு விலை இருக்கிறது. அதை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். தன்னைத் தானே பழுக்கக் காய்ச்சி உலையில் வார்த்து வடிவெடுத்துக்கொள்வதுதான் அது. எழுதும்போது எனக்கு எழுந்த அடிப்படைக் கேள்விகளுக்குத் தங்கள் 'காற்றில் கலந்த பேரோசை' புத்தகம்தான் அகராதி. அதிலிருந்த பல வாசகங்கள் பல நேரங்களில் என் தவிப்பை, சந்தேகங்களைச் சமன்படுத்தியும் திருத்தியும் தீர்த்தும் வைத்திருக்கின்றன. அறிமுக எழுத்தாளர் களுக்கானவையும் இலக்கியத்தைப் புரிந்துகொள்வதற் கான துவக்க வாசகர்களுக்கான கேள்வி பதில்களும் அதில் நிறைய அடங்கியுள்ளன.

ஒரு முன்னோடிக் கலைஞன் வாசகர்களுக்கான பாதையைச் செப்பனிடுவது, திசைகாட்டிக் கருவியாக இருப்பது, மேடை அமைக்கப்பட்ட பருத்த நிழல் தரும் மரமாக இருப்பது போன்றவை அவனது முக்கிய மான பணிகள் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் அவற்றைத் திறம்படச் செய்த கலைஞன் நீங்கள் என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமுமில்லை.

ஐம்பது வருடங்களில் அறுபதுக்கும் குறைவாகச் சிறுகதைகள் எழுதிய நீங்கள் எதை உணர்ந்து கடந்த ஓராண்டில் பன்னிரண்டு கதைகளை எழுதினீர்கள்? உங்கள் பணிகளை நீங்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று எது உங்களுக்குச் சொன்னது? இப் பிரபஞ்சத்தின் ரகசியத்தில் எதை முகர்ந்து பார்த்து எழுதினீர்கள்?

திரும்பி வராத வீட்டிற்குள் புத்தகங்களைச் சீர்செய் தும் சட்டைகளைச் சலவை செய்தும் அடுக்கியும் கடிதங்களை உரிய நபர்களுக்கு அனுப்பியும் காற்றாடி மற்றும் விளக்குகளை அணைத்தும் வீட்டைப் பூட்டி, சாவியைப் பார்வையாளர்களுக்குக் கொடுத்துவிட்டு வெளியேறும் ஒரு நிதானம் உங்களைப் போன்ற அரிதான சிலருக்கே கைகூடும்.

தங்கள் ஒரு புத்தகத்தைத் தேடிப் புத்தகக் கடையில் அலைந்த அன்றிலிருந்து இன்று எவ்வளவோ மாறி விட்டது. அலமாரியில் ஒரு அடுக்கு முழுக்க உங்கள் புத்தகங்கள். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

எழுத்தாளனின் புத்தகங்கள் வாசிக்கப்படும் பிரதி களாக இருப்பது பெரிய விஷயமில்லை. கடைசியாக அவனும் ஒரு புத்தகமாக மாறுவதில்தான் அவனது முழுமையான வெற்றி இருக்கிறது. அவ்வகையில் நீங்கள் வெற்றி பெற்ற கலைஞன் என்று நான் சொல்ல வேண்டிய தேவை எதுவும் தற்போது இல்லை. தமிழ்ச் சூழல் நன்றாகவே இருக்கிறது.

நானும் உங்கள் வாசகன். இதைச் சொல்வதில் சந்தோஷமடைகிறேன். தற்போது தெரியப்படுத்துவதில் துயரமடைகிறேன்.

●




படிப்பகம்




உமா வரதராஜன்

# பின்தொடரும் வாசகரின் குரல்



**கடந்த சனிக்கிழமை, காலை கடையைத் திறந்ததும்** ஒரு கெட்ட செய்தி காத்திருந்தது. தொலைபேசி மூலம் நுஃமான் அதனைச் சொல்லி முடித்தார். என்னைப் போன்ற தமிழ் வாசகர்கள் பலருக்கு அது கெட்ட செய்தி மட்டுமல்ல. அதிர்ச்சியூட்டிய செய்தியுங்கூட.

"அற்பாயுளுக்கும் அதிமேதாவித்தனத்துக்கும் அப்படி என்னதான் ரகசிய உறவோ"* என்ற அங்கலாய்ப்புக் குரியதல்ல மூத்த எழுத்தாளர் சுந்தர ராமசாமி அவர்களின் மரணம். 74 வயதில் மரணம் நேர்வது அசாதாரணமான ஒன்றல்ல. ஆயினும் சமீபத்திய அவருடைய புகைப்படங்களிலிருந்த கம்பீரமான தோற்றம் மரணத்துடன் அவரைச் சம்பந்தப்படுத்திப் பார்ப்பதற்கான எந்தத் தடயங்களையும் முன்வைக்க வில்லை.

கடந்த நான்கு வருடங்களாக அவருடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எனது வீட்டுத் தோட்டத் தின் புதுப் பூக்களைச் சொந்தம் கொண்டாடும் அதே பெருமிதத்துடன் அவருடைய நூல்கள் வெளி யானபோதெல்லாம் சந்தோஷத்தில் ஆழ்வதோடு சரி. 'ஒரு புளியமரத்தின் கதை'யிலிருந்து, 'மறியா தாமுவுக்கு எழுதிய கடிதங்கள்' வரை அவரை நான் பின்தொடர்ந்திருக்கிறேன்.

நான் இருக்கும் இந்த ஊரிலிருந்து காடு, மலை, கடல் என ஏராளமான தடைகளுக்கும் ஆயிரம் மைல்களுக்கும் அப்பாலுள்ள நாகர் கோவில் சுந்தர ராமசாமிக்கும் எனக்கும் என்னதான் சம்பந்தம்? அவர் என் துரோணாச்சாரியரா? அல்லது பரிவு மிக்க ஒரு தந்தையின் மாற்றுருவா? அல்லது தலை சற்றே உயர்ந்து தெரியும் தமிழ்நாட்டின் சிறந்த ஆளுமையா? எல்லாமேதான்.

என் பதினேழு வயதில், இலக்கியக் கூட்டமொன்றின் அழைப்பைக் கொடுப்பதற்காகப் புடவைக் கடை ஒன்றிலிருந்த இக்பால் என்பவரை நான் தேடிச் சென்றபோது, பிளவுஸ் துணி வெட்டியபடி அவர் சொன் னார், "சுந்தர ராமசாமியின் புளிய மரத்தின் கதையைப் படித்துப் பாருங் கள். எவ்வளவு அற்புதமாக இருக்கிறது அது!"

இக்பால் சொன்ன அந்த நாவலை 'மணமகள் புத்தக சாலை'யில் சங்கர் லாலையும் சாண்டில்யனை யும் சற்று விலக்கிவிட்டுக் கண்டுபிடித்தேன். தமிழ்ப் புத்தகாலயத்தின் வெளியீடாக வந்த 'ஒரு புளிய மரத்தின் கதை'யை அன்றே அடையாளங்கண்டு சொன்ன இக்பாலின் கூர்மையான அவதானிப்பு இன்றும் என் நன்றிக்குரியது.

ஜெயகாந்தனின் தீவிர வாசகனாக நான் இருந்த ஒரு காலமது. ஆனால் சு.ரா.வின் படைப்புகளில் பரிச்சயம் கொள்ளத் தொடங்கியதிலிருந்து பீம்சிங்கின் படக் கதாநாயகிகளின் மனநிலைக்கு இட்டுச் செல்லப் பட்டுவிட்டேன். ஜெயகாந்தனா சுந்தர ராமசாமியா? வக்கரிப்பைவிட்டு விலகி அதிவிவேகத்தின்பால் என் மனம் சாய அதிக காலம் எடுக்கவில்லை. ஜெயகாந்தன் நமக்கு வழங்கும் வாசிப்பனுவத்தில் ஒரு சிறு புன்னகைக் கேனும் இடமிருந்ததில்லை. சுந்தர ராமசாமியோ நேரெதிர். அவருடைய எள்ளல் கலந்த மொழிநடை அந்நாட்களில் வெகுவாக என்னைக் கவர்ந்தது.

நண்பர் ஆனந்தனும் நானும் சம்மாந்துறை அஞ்சல் அலுவலகத்தின் பக்கத்துத் தேநீர்க் கடையிலிருந்து சு.ரா.வின் கதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருப்போம். அவன் அவருடைய 'பிரசாதம்' பற்றிச் சிலாகித்துச் சொல்வான். நான் 'முட்டைக்காரி' பற்றிக் கூறுவேன். 'சீதை மார்க் சீயக்காய்த் தூள்' குறித்து அவன் பேசுவான். 'லீலை' பற்றி நான் குறிப்பிடுவேன். இப்படியாக, பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சிபோல் அது நீண்டுகொண்டே செல்லும்.

* 'ஜே.ஜே. சில குறிப்புகள்' நாவலில் வரும் வரி.

www.padippakam.com



தமிழ் நாவல் வரலாற்றில் நான் ஒரு பாய்ச்சலாக உணர்ந்தது சு.ரா.வின் 'ஜே.ஜே. சில குறிப்புக'ளை. மொழியின் வாள்வீச்சு என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் அந்த நாவல். "சிவகாமி அம்மாள் தன் சபதத்தை முடித்துக்கொண்டாளா?" எனத் தமிழ் எழுத்தாளனிடம் ஜே.ஜே. எழுப்பும் கேள்வி அந்தக் கணத்தில் எனக்குள் ஏற்படுத்திய உற்சாகத்திற்கு அளவில்லை.

அந்த நாவல் தந்த பிரமிப்பில் சுந்தர ராமசாமி அவர்களுக்கு முதல் தடவையாக நான் ஒரு கடிதம் எழுதினேன். அனுப்பி இரண்டாவது வாரத்தில் சு.ரா.விடமிருந்து பதில் கடிதம் வந்தது. தட்டச்சில் பதிவு செய்யப்பட்ட நான்கு பத்திகள் கொண்ட கடிதம் அது. அதை எத்தனை தடவைகள் படித்திருப்பேன், மற்றவர்களுக்குக் காட்டியிருப்பேன் என்பது ஞாபகத்தில் இல்லை. அதன் பின்னர் அவ்வப்போது நாங்கள் கடிதங்கள் எழுதிக்கொண்டோம்.

1990 என்பது ஒரு முக்கியமான வருடம். மனிதப் படுகொலைகளைப் பார்த்து நான் அதிர்ந்து போயிருந்த காலம் அது. தெரு நாய்கள் மனித உறுப்புகளைச் சர்வ சாதாரணமாகக் கவ்விச் சென்ற சூழலில் நான் இருந்தேன். எதிர்காலமும் இருப்பிடமும் குறித்த கவலை என்னை வாட்டி வதைத்தது. இங்கிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டுமெனத் துடித்துக்கொண்டிருந்த நிலைமையில் சுந்தர ராமசாமி அவர்களை நான் தொடர்பு கொண்டேன். எதனைப் பற்றியும் யோசிக்காமல் உடனே நாகர்கோயிலுக்கு வந்துவிடும்படி அவர் பதில் அனுப்பியிருந்தார்.

1990 செப்டம்பரில் திருவனந்தபுரம் வழியாக நாகர்கோவில் சென்ற நான் முதல் தடவையாக சு.ரா. அவர்களை நேரில் சந்தித்தேன். வாசல் நிலை தட்டும் உயரம். கம்பீரமான தோற்றம். மீசை, தாடியற்ற மொழுமொழுவென்று சவரம் செய்த முகம் (எஸ்.வி. ரங்காராவுடன் அவரை ஒப்பிட்டெழுதிய சாரு நிவேதிதாவுக்குத் தங்கப் பேனா பரிசளிக்க வேண்டும்). கைகுலுக்கி அவர் என்னை வரவேற்றார். சில வாரங்கள்வரை அவருடைய அவுட் ஹவுஸில் நான் தங்கியிருந்தேன்.



இரவானதும், அமைதியான சூழலில் திண்ணையில் உட்கார்ந்து அவரும் நானும் பேசிக்கொண்டிருப்போம். நல்ல சிறுகதைகள் என்பன ஒரு வகையில் கவிதைகளே என அவர் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். தமிழ்நாட்டின் சாபக்கேடு, தங்களுக்குச் சம்பந்தா சம்பந்தமில்லாத துறைகளில் சிலர் தங்களை விற்பன்னர்களாகக் காட்ட முயல்வது என்றார். சினிமாமயப்பட்ட தமிழ்நாட்டின் பாமர ரசனை அவரை உறுத்திக்கொண்டேயிருந்தது. மு. தளையசிங்கம் மீது அவர் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். உரிய முறையில் அவருடனான கடிதப் போக்குவரத்தைப் பேணாதது தன்னுடைய துரதிருஷ்டம் எனக் கூறி வேதனைப் பட்டார். கிருஷ்ணன் நம்பி, மௌனி ஆகியோருடனான தன்னுடைய அனுபவங்களை நினைவுகூர்ந்தார். அவருடன் சம்பாஷித்தல் என்பது வெகு சுவாரஸ்யமான ஒன்று.

அண்மைக் காலமாக சு.ரா. அளவுக்குக் கண்டனங்கள், விமர்சனங்களை எதிர்கொண்ட, சர்ச்சைகளில் சிக்கிக்கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் வேறு எவருமில்லை எனச் சொல்லலாம். இந்தக் கண்டனங்கள், விமர்சனங்களின் பின்னால் இருந்த நேர்மை சந்தேகத்துக்குரியது. பெரும்பாலும் மௌனம், நழுவல் போக்குகளையே கடைப்பிடிக்கும் எமது கலை–இலக்கியச் சூழலில் வெளிப்படையாகத் தங்கள் கருத்துகளை முன்வைக்கும் சு.ரா. போன்றவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது ஆச்சரியமூட்டக்கூடிய ஒன்றல்ல. அவரது கருத்துகளை நேர்மையான தளத்தில் சந்திக்க இயலாதவர்கள் சாதி அரசியலைத் துணைக்கழைத்தவர்கள் என்பதுதான் உண்மை. சமீபத்தில் அவருடைய படைப்பான 'பிள்ளை கெடுத்தாள் விளை' எதிர்கொண்ட எதிர்மறையான விமர்சனங்களின் உள்நோக்கங்களைப் புரிந்துகொள்வது அவ்வளவு கடினமான காரியமல்ல. விமர்சகர்கள் என்ற பெயரில் போக்குவரத்து போலீஸ்காரர்களைப் போல் கலைஞர்களுக்கு வீதி ஒழுங்குகளைக் கற்பிக்க சிலர் முன்வருவது சகிக்கக்கூடிய ஒன்றல்ல. சு.ரா. ஒரு தடவை எனக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார். 'இந்தத் தமிழ்கூறு நல்லுலகிடமிருந்து நான் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியது இன்னும் நிறையவே உள்ளது.'

சு.ரா.வின் அநேகமான படைப்புகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் என்பன நூலுருப் பெற்றுவிட்டன. மரணப் படுக்கையில், தலைமாட்டில் உள்ள தன் கையெழுத்துப் பிரதிகளை ஏக்கப் பெருமூச்சுடன் நோக்கும் ஏராளமான தமிழ் எழுத்தாளர்களின் நிலைமை அவருக்கு நேரவில்லை. படைப்பாளி, சிந்தனையாளர் என்ற இரு தளங்களிலும் அவர் இறுதிவரை சுறுசுறுப்பாகவே இயங்கியுள்ளார். நவீனத் தமிழ் இலக்கியம் பற்றிய கருத்துலக விரிவாக்கத்தில் க.நா.சு.வுக்கு அடுத்தபடியாகப் பெரும் பங்காற்றியவர்கள் என சு.ரா.வையும் வெங்கட் சாமிநாதனையுமே எனக்குச் சொல்லத் தோன்றுகின்றது எனினும் வெங்கட் சாமிநாதனின் எழுத்து சில வேளைகளில் நிதானமிழந்து எதிராளிமீதான வசைகளில் இயங்கும். ஆனால் சு.ரா.வின் மொழிநடை குறும்பு கொப்பளிப்பது. நிலைகுலையாமல் தன் வாதங்களை அடுக்கிச் செல்வது. அந்த இழப்பின் வெற்றிடம் சுலபமாக நிரப்பக்கூடிய ஒன்றல்ல. ●



படிப்பகம்


www.padippakam.com






அ. முத்துலிங்கம்

# முதலும் கடைசியும்



**எல்லோரும் சு.ரா. என்று அன்போடு அழைக்கும்** திரு. சுந்தர ராமசாமியை எனக்குக் கடந்த பத்து வருடங்களாகத்தான் தெரியும். தெரியும் என்றால் கடிதம் மூலம்தான். முதன்முதல் நான் அவரைச் சந்தித்தது 2000 ஆண்டு சான்டாக்ரூஸில். ஒரு நாள் முழுக்க அவருடன் கழித்தேன். அவருடைய துணைவியாரின் விருந்தோம்பல் மனதை நெகிழவைத்தது. என் வாழ்நாளில் அது மறக்க முடியாத ஒரு நாளாகி விட்டது.

நான் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பிறகு அவர் 2001ஆம் ஆண்டு மே மாதம் டொரன்டோவுக்கு வருகை தந்தார். கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், டொரன்டோ பல்கலைக்கழகத்தின் தென்னாசியக் கல்வி மையமும் இணைந்து வழங்கும் இயல் விருதைப் பெறுவதற்காக வந்திருந்தார். அந்த வைபவத்தில் அவர் பேசியது என்றென்றும் என் மனதில் நிற்கிறது. 'என் மண்ணும் என் மொழியும்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரை அவருடைய வாழ்நாளிலேயே முக்கியமான ஒன்று.

அடுத்த நாள் அவரை என் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தேன். அவருடைய உணவுப் பழக்க வழக்கங்கள் எனக்குத் தெரியாது. என் மனைவி திண்டாடிப்போனார். அவர் யாழ்ப்பாணத்து முறையில் மரக் கறி உணவு தயாரித்திருந்தார். எதற்கும் இருக்கட்டும் என்று கோழிக் கறியும் வைத்திருந்தார். சு.ரா., அவருடைய மனைவி கமலா, மகள் தங்கு, அவர் கணவர், இன்னும் பல தமிழ் அன்பர்களும் கூடியிருந்தார்கள். இருபது பேருக்கு மேல் இருக்கும். எல்லோரும் மேசையிலிருந்து ஒன்றாக உணவருந்த முடியாது. ஆகவே buffet முறை நடை முறைப்படுத்தப்பட்டது. மேசையில் அவர்களே தட்டை எடுத்து அவர்களே பரிமாறிக் கொண்டு உண்ண வேண்டும். எல்லோரும் தங்களுக்கு வேண்டியதைப் பரிமாறிக்கொண்டு சாப்பிட அமர்ந்தார்கள்.

கடைசியாக சு.ரா.வும் பரிமாறிக் கொண்டு அமர்ந்தார். நானும் அவர் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டேன். அப்போது சு.ரா. 'முத்துலிங்கம்' என்று என் முழுப் பெயரையும் சொல்லி அழைத்து 'ஒரு ரகஸ்யம்' என்றார். எப்பொழுதும் அவர் என் முழுப் பெயரைச் சொல்லியே அழைப்பார். அவர் சொன்னது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தனக்கு மணமாகி 45 வருடங்களுக்கு மேலாகிவிட்டது; இத்தனை வருடங்களில், தன் தட்டில் தானே பரிமாறிச் சாப்பிடுவது இதுவே முதல் தடவை என்றார். எந்த நேரம் சாப்பிடுவது, என்ன சாப்பிடுவது, எவ்வளவு சாப்பிடுவது என்று அத்தனையும் கமலாவே பார்த்துக்கொள்வதாகச் சொன்னார். அன்று அவர் தனக்குத் தானே பரிமாறிச் சாப்பிட்டது முதல் தடவை. அதுவே கடைசித் தடவையாகவும் இருக்கும்.

தொலைபேசியில் ஒவ்வொரு முறை அழைக்கும் போதும் சு.ரா.விடம் "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்பேன். அவர் வழக்கம்போல "முத்துலிங்கம், நான் சின்னப் பையனாய் இருந்தப்போ ரொம்ப நோய்ப்பட்டு இருப்பேன். பள்ளிக்கூடத்துக்கும் போக முடியாது. ஆனால் இப்ப, வயது கூடக்கூட ஆரோக்கியம் கூடிக் கொண்டே போறது. டெய்லி வாக்கிங் போறேன்" என்பார். கேட்க சந்தோசமாக இருக்கும்.

அமெரிக்காவின் பிரபல எழுத்தாளர் Edward P. Jones எழுதிய The First Day என்ற சிறுகதையை நான் அப்பொழுதுதான் தமிழில் மொழிபெயர்த்து அது பிரசுரமாகியிருந்தது. அவரும் அதே கதையை ஆங்கிலத்தில் படித்திருந்தார். என்னுடன் பேசியபோது தனக்கு அந்தக் கதை பிடித்திருந்ததாகவும், அதைத் தான் மொழிபெயர்க்க நினைத்திருந்ததாகவும், ஆனால் நான்



படிப்பகம்

www.padippakam.com



முந்திக்கொண்டுவிட்டேன் என்றும் சொன்னார். நான் "அட, நீங்கள் செய்திருந்தால் இன்னும் சிறப்பாக வந்திருக்குமே" என்றேன். "இல்லை, நல்லாவே செய்திருக்கிறீர்கள்" என்றார் பெருந்தன்மையாக.

எங்கள் உரையாடல் ஒரே பொருளில் நிற்பதில்லை. தாவித் தாவிச் செல்லும். நான் என்னவோ சொல்ல நினைப்பேன், அவரும் அதே நிமிடத்தில் ஏதாவது பேச ஆரம்பிப்பார். அவர் என்ன புத்தகம் படிக்கிறார் என்று நான் கேட்பேன். சொல்வார். நான் படிக்கும் புத்தகம் ஆங்கிலப் புத்தகமாயிருந்தால் அவர் விவரங்களை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்வார். நானும் அப்படியே செய்வேன். அப்படி அனுப்பத் தவறினால் நினைவூட்டுக் கடிதம் வந்துவிடும். புத்தகத்தைப் பற்றிய முழு விவரமும் அவருக்குத் தேவை.

டொரன்டோவிலிருந்து வெளிவருவது 'காலம்' சஞ்சிகை. அதன் இருபத்தைந்தாம் இதழை ஒரு சிறப்பு மலராகக் கொண்டுவர வேண்டும் என அதன் ஆசிரியர் செல்வம் விரும்பினார். அவர் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து அந்த இதழை நடத்திவருகிறார். 'காலம்' பத்திரிகைக்காக சு.ரா.விடம் ஒரு சிறுகதை வேண்டுமென்றேன். மிகவும் யோசித்துத்தான் கேட்டேன். சமீபத்தில் அவர் மருத்துவமனையிலிருந்து திரும்பியிருந்தார். "காலம் இதழுக்காக நீங்கள் கேட்டு நான் எப்படி மறுப்பது?" என்றார். நான் அப்படியே விட்டுவிட்டேன். சு.ரா. ஒரு வாக்குக் கொடுத்தாரென்றால் எப்படியும் அதை செய்து முடித்துவிடுவார். அது எனக்குத் தெரியும். ஒரு மாதம் கழித்து மெலிதாக நினைவூட்டினேன். சில நாட்களில் அனுப்புவதாகச் சொன்னார். கடைசித் தேதி நெருங்கிக்கொண்டே வந்தது. மிகவும் தயக்கத்துடன் ஒரு மின்னஞ்சல் அனுப்பி வைத்தேன். அடுத்த நாளே கதை வந்து சேர்ந்தது. அவர் இரவிரவாக அதை எழுதியிருப்பார் என்று எனக்குத் தோன்றியது. அதிகம் தொந்தரவு கொடுத்துவிட்டேனோ என்ற குற்ற உணர்வு என்னை வருத்தியது. அந்தக் கதையின் தலைப்பு 'ஜகதி'. அது 'காலம்' இதழில் ஒக்டோபர் மாதம் வெளியானது. ஆனால் அதை அவர் பார்க்கவில்லை. அதுவே அவர் எழுதிய கடைசிச் சிறுகதை.

இந்தச் சிறுகதை எனக்குக் கிடைத்த தேதி செப்டம்பர் 12. மிகச் சிறியதாக இருந்தாலும் சொல்ல வந்த விசயத்தைக் கூர்மையாகச் சொன்ன கதை. நான் அந்தக் கதையைப் பற்றி அவருடன் இரண்டு நாள் கழித்து, 14ஆம் தேதி தொலைபேசியில் பேசினேன். இரண்டு விசயங்களை அவரிடம் கூறினேன். கதை தொடங்குவதற்கு முன் வரும் கிராம வர்ணனை நீண்டதாக உள்ளதுபோல் தெரிகிறது என்றேன். அவர் அதை வர்ணித்த பிறகுதான் தன்னால் கதைக்குள் இறங்க முடிந்தது என்றார். இரண்டாவதாக இந்தக் கதைக்கும் அவருடைய முந்தைய கதையான 'பள்ள'த்துக்கும் ஒற்றுமை இருக்கிறது என்றேன். சினிமா பைத்தியமான ஒரு தாய் தன் குழந்தையின் கண்ணைத் தோண்டிவிடுகிறாள். இந்தக் கதையில் ஒரு பைத்தியக்காரத் தாய் தன் குழந்தையைத் தாரிலே முங்கிக்





வடிவமைப்பாளர்
ப்ரிண்டர்
பதிப்பாளர்

தமிழிலும் ஆங்கிலத்திலும்
புத்தகப் பணி செய்து தரப்படும்.

பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள்
மற்றும்
ப்ராஜெக்ட் ஒர்க் சிறந்த முறையில்
செய்து தரப்படும்.

ராகாஸ்
அஹமது வணிக வளாகம், தரைத் தளம்
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை, சென்னை – 600 014
தொலைபேசி: 28350437
செல்பேசி: 9444050437
விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com



குளிப்பாட்டி அதைக் கொன்றுவிடுகிறாள். இரண்டுமே தாய், பிள்ளை உறவைச் சொல்லும் கதை. "அப்படியா, உங்களுக்குக் கதை பிடித்திருக்கிறதா?" என்றார். "நிறைய" என்றேன். சரியாக ஒரு மாதம் கழித்து, அதே 14ஆம் தேதி, ஒக்டோபர் மாதம் அவர் இறந்து போய்விட்டார்.

அமெரிக்காவில் இருக்கும்போது சு.ரா. தன் இரண்டு மகள்களுடனும் மாறி மாறித் தங்குவார். அவர் கனெடிக்கட்டில் இளைய மகளுடன் தங்கியிருந்தபோது ஒரு நாள் அழைத்தேன். என்ன புத்தகம் படிக்கிறீர்கள் என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டார். நான் அப்போது The Prophet of Zongo Street என்ற சிறுகதைத் தொகுப்பைப் படித்துக்கொண்டிருந்தேன். இதை எழுதியது Mohammed Naseehu Ali என்பவர். ஆப்பிரிக்காவின் கானாவில் இருந்து அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது நியூயார்க்கில் வாழ்பவர். அவர் ஓர் இசைக் கலைஞரும்கூட. நான் அலியின் புத்தகத்தைச் சிலாகித்துச் சில நிமிடங்கள் நிறுத்தாமல் பேசினேன். அவருடைய சிறுகதை 'நியூயார்க்க'ரில் வெளியானபோது அதைப் படித்திருந்தேன். ஆகவே அவருடைய புத்தகம் வெளிவந்ததும் முதலாளாக நின்று வாங்கிப் படித்திருந்தேன். "அந்தப் புத்தகம் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டார். நான் அதை அவருக்கு அனுப்புவதாகச் சொன்னேன். அவர் "வேண்டாம், வேண்டாம்" என்றார்.

முன்பொரு முறை Frank McCourt எழுதிய Angela's Ashes என்ற புத்தகத்தைப் படித்துவிட்டு நான் ஓயாமல் அது பற்றியே சு.ரா.விடம் பேசிக்கொண்டிருந்தேன். ஒரு surprise-ஆக இருக்கட்டும் என்று ஒரு புத்தகம் வாங்கி பார்சல் மூலம் அவருக்கு அனுப்பிவைத்தேன். அவர் 'நன்றி' என்றுவிட்டுத் தனக்குப் புதுப் புத்தகங்கள் அனுப்ப வேண்டாம் என்றார். அவர் இருக்கும் இடத்துக்குக் கிட்ட மிகக் குறைந்த விலைக்குப் பழைய புத்தகக் கடையில் என்ன புத்தகமும் வாங்கலாம் என்றார். ஆகவே அவருக்கு அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் ஒரு புத்தகமும் அனுப்பவில்லை. என்ன காரணமோ அலியின் புத்தகத்தை மட்டும் அவருக்கு எப்படியும் அனுப்பிவிட வேண்டும் என்று நினைத்தேன். இளைய மகள் வீட்டில் ஒரு மாத காலம் தங்கிவிட்டு மீண்டும் சான்டாக்ரூஸ் வருவதாக சு.ரா. சொல்லியிருந்தார். சான்டாக்ரூஸுக்கு வரும்போது புத்தகத்தை அனுப்பி வைக்கலாம் என்று நான் தீர்மானித்துக்கொண்டேன். ஆனால் அதை அவருக்குச் சொல்லவில்லை.

என் டயரியில் சு.ரா.வின் மூன்று விலாசங்கள் இருக்கின்றன. ஒன்று நாகர்கோவில். ஒன்று சான்டாக்ரூஸ். இன்னொன்று கனெடிக்கட். இதில் எந்த முகவரிக்கும் இனி நான் அந்தப் புத்தகத்தை அனுப்ப முடியாது.

நான் தொலைபேசியில் அவருடன் எப்பொழுது பேசினாலும் சமீபத்தில் படித்த சில தமிழ்ப் புத்தகங்களைப் பரிந்துரை செய்யத் தவற மாட்டார். அப்படி அவர் சொன்னால் நான் உடனே வாங்கிப் படித்து விடுவேன். அவர் கடைசியாகப் பரிந்துரை செய்தது இரண்டு தமிழ்ப் புத்தகங்கள். ஒன்று ரா.அ. பத்மநாபன் தொகுத்த 'பாரதியின் கடிதங்கள்'. அடுத்தது கே.ஏ. குணசேகரன் எழுதிய சுயசரிதை நூல் 'வடு'. உடனே சென்னைக்கு மின்னஞ்சல் அனுப்பி இரண்டு புத்தகங்களையும் தருவித்துவிட்டேன். இரண்டுமே சிறிய நூல்கள்; ஒரு மணி நேரத்தில் படித்து முடித்து விடலாம். நூல்கள் என் கையில் கிடைத்தபோது அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் குணமாகி வெளியே வரும்போது நூல்கள் பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று நினைத்தேன். அது நடக்கவில்லை.

**சு.ரா.விடம் உள்ள சிறப்பு அவர் கடைசிவரை வியப்படைவதை நிறுத்தவில்லை. புது விசயங்களை ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு கேட்பார். மூப்படையாத மனம். 'அப்படியா, அப்படியா' என்று ஆச்சரியப்படுவார். எல்லாப் புத்தகங்களும் அவருக்குத் தேவை.**

கடைசியாக அவருடன் பேசியபோது நான் படித்த புத்தகங்கள் பற்றிக் கேட்டார். நானும் சொன்னேன். இம்முறை இரண்டு நூல்கள். ஒன்று அருந்ததி ராய் எழுதிய War Talk என்னும் கட்டுரைகள் அடங்கிய புத்தகம். அடுத்தது The Next Fifty Years. அடுத்த ஐம்பது வருடங்களில் உலகத்தில் என்ன நடக்கும் என்று 25 உலகத்து முதல் தரமான விஞ்ஞானிகள் எழுதிய கட்டுரைகள். சு.ரா.விடம் உள்ள சிறப்பு அவர் கடைசி வரை வியப்படைவதை நிறுத்தவில்லை. புது விசயங்களை ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு கேட்பார். மூப்படையாத மனம். 'அப்படியா, அப்படியா' என்று ஆச்சரியப்படுவார். எல்லாப் புத்தகங்களும் அவருக்குத் தேவை. இந்தப் புத்தகங்களை வாங்கினாரா தெரியாது. வாங்கினாலும் படித்தாரா என்பதும் தெரியவில்லை.

என்னதான் புத்தகங்கள், சஞ்சிகைகள் என்று தொடர்ந்து பேசினாலும் நான் எழுதிய புத்தகங்கள் பற்றியோ கட்டுரைகள் பற்றியோ ஒன்றுமே பேச மாட்டார். சில வேளைகளில் அவர் எழுதும் ஒரு பத்திரிகையில் அவருடைய கட்டுரைக்குப் பக்கத்திலேயே எனது கட்டுரையும் வந்திருக்கும். ஆனால் அது பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார். எனக்குக் கூச்சம். நானும் கேட்க மாட்டேன்.

செப்டம்பர் 'காலச்சுவடு' இதழ் உணவுச் சிறப்பிதழாக வெளிவந்தது. அதிலே 'மொர மொரெனவே புளிக்கும் மோர்' என்னும் கட்டுரையை எழுதியிருந்தேன். ஒரு நாள் அபூர்வமாகக் காலையில் அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "உங்கள் கட்டுரை நல்லா வந்திருந்தது. முதல் வரியில் இருந்தே அம்மா காரக்டர் சரியாக அமைந்துவிட்டது" என்று பாராட்டினார். நான் நன்றிகூடச் சொல்ல முடியாமல் திகைத்து நின்றேன். எதற்காகப் பேசினார்? இதைச் சொல்லவா தொலைபேசியை எடுத்தார்? அவராகத் தொலைபேசி எடுத்து என்னைப் பாராட்டியது அதுவே முதல் தடவை. அதுவே கடைசியுமாகிவிட்டது. ●



படிப்பகம்


www.padippakam.com






● தனபால்

# பகிர்ந்துகொள்ள ஒரு இதயம்



*“உண்மையின் சிறு கீற்றுக்கூடப் பரவசத்தை ஏற்படுத்தக் கூடியது. ‘பயணத்தைத் தொடரு’ என்ற செய்தியை ஜே.ஜே. என் காதோரம் முணுமுணுப்பது போல் நான் உணர்வேன். ‘பாதைகள் என்று எதுவுமில்லை. உன் காலடிச் சுவடே உன் பாதையை உருவாக்குகிறது’ என அவன் வற்புறுத்துவதைப் போல் எனக்குப் படும்.”*

— ஜே.ஜே: சில குறிப்புகள்

**என்னுடைய இருபதாவது வயதில் ‘ஜே.ஜே: சில** குறிப்புகள்’ நாவலைப் படித்தேன். நான் அப்போது இடதுசாரி இயக்கம் ஒன்றில் இருந்தேன். என் பதினான்காவது வயதிலிருந்து அவ்வியக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தேன்.

‘ஜே.ஜே: சில குறிப்புகள்’ தந்த மன எழுச்சியில் சில நாட்கள் உறக்கமற்றுப்போனேன். உண்மையைத் தக்கவைத்துக்கொள்வதற்கான உள்மனப் போராட்டத்தில் நாம் பெறும் வெற்றி அல்லது தோல்வியே நம் குணாம்சத்தையும் செயல்களையும் தீர்மானிக்கிறது என்னும் பாடத்தை அவ்வியக்கத்திலிருந்து நான் பெற்றிருந்தேன். ஆனால் உண்மை எது என்று கண்டறிவதற்கான என் எளிய சூத்திரங்களை ஜே.ஜே. கலைத்துப் போட்டுவிட்டான்.

எப்படி இருந்தாலும் ‘ஜே.ஜே: சில குறிப்புகள்’ நாவலை நேர்மையாக எதிர்கொள்ள விரும்பினேன். நான் எந்த அளவிற்கு நிம்மதியற்றுப் போனேனோ அந்த அளவிற்கு ஜே.ஜே.வை நேசித்தேன். எனக்கு நெருக்கமான ஒரு தோழருக்கு அந்நாவலைப் படிக்கக் கொடுத்தேன். அவரிடம் எனக்குண்டான நிம்மதியின்மையை ஜே.ஜே. உண்டாக்கவில்லை என்றாலும் அவரும் ஜே.ஜே. எழுப்பும் கேள்விகளில் நியாயம் இருப்பதாக உணர்ந்தார். ஜே.ஜே. அவருக்கு நிம்மதியின்மையை ஏற்படுத்தாததற்குக் காரணமாக, சமூகச் செயல்பாடுகளிலிருந்து முழுமையாக ஒதுங்கிக்கொள்ளும் மன நிலையில் அவர் இருந்திருக்க வேண்டும் என்று இப்போது உணர்கிறேன்.

வருடங்கள் கரைய என் செயல்களிலும் சொந்த வாழ்க்கைக்கான தேடல்களே பிரதானமாயின. மனதிற்குள் ஜே.ஜே. உண்டாக்கிய நிம்மதியின்மையை என் சொந்தப் பிரச்சினைகள் மெல்ல ஆக்கிரமித்தன. ஆனால் ‘ஜே.ஜே: சில குறிப்புகள்’ என்ற நாவல் மூலம் சுந்தர ராமசாமி என் மனதில் நெருக்கமாகவும் ஆழமாகவும் பதிந்தார்.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகப் புரிகிறது. சுந்தர ராமசாமி ஒரு இயக்கமாகவே தன் வாழ்நாளில் செயல்பட்டிருக்கிறார். எந்த மனம் சமூகச் செயல்பாடுகளில் தீவிரமாக இயங்க நினைக்கிறதோ அந்த மனதிற்குள்தான் விடை தெரியாத ஏராளமான கேள்விகளும் நிம்மதியின்மையும் இருக்க முடியும். சு.ரா. கடைசிவரை அப்படித்தான் இருந்தார்.

சுந்தர ராமசாமி எந்த இயக்கத்தின் மீதும், தலைமையின் எந்த வடிவத்தின் மீதும் நம்பிக்கையில்லாமல் இருந்தவர். ஆனால் ‘ஜே.ஜே: சில குறிப்புகள்’ என்னும் படைப்பு நிகழ்ந்ததும் சு.ராவின் தொடர்ச்சியான செயல்பாடுகள் அனைத்தும் படைப்பு சார்ந்த மன நிலையைத் தாண்டி இயக்கமாகவே அதன் இயல்பில் பரிணாமம் பெறுவதாக எனக்குத் தோன்றுகிறது.

* * *

என் இருபத்தேழாம் வயதில் எனக்குக் கடுமையான ஒரு நெருக்கடியும் கஷ்டமும் ஏற்பட்டன. அந்தச் சமயத்தில் நான் சந்தித்த கோர முகங்கள் மனித மனங்கள் மீது எனக்குத் தீராத அவநம்பிக்கையை உண்டாக்கிவிட்டன. மனித மனங்கள் என்றும் தீராத



படிப்பகம்

www.padippakam.com



வன்முறையுடன் செயல்படுவதாக உணர்ந்தேன். அதுவே மனித மனத்தின் இயல்போ என்ற சந்தேகமும் எழுந்தது. வாழ்வதில் நம்பிக்கை இழந்தேன். தற்கொலை செய்துகொள்ளலாம் என்று முடிவெடுத்தேன்.

நான் செத்துப்போவதற்கு முன்னால் சுந்தர ராம சாமியை ஒரு முறை பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அந்த அவநம்பிக்கையான மன நிலையில் அவரை நெருக்கமாக உணர்ந்தேன். ஆனால் அவருக்கு என்னைத் தெரியாது. மிகுந்த தயக்கத்துடன் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்தேன். தன்னை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம் என்றார். அவர் பேச்சில் இருந்த கனிவும் நட்பு கொள்ளத் தயாராக இருந்த தன்மையும் எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தன. அன்றிரவே கிளம்பி நாகர்கோவில் போனேன்.

மறுநாள் காலையில் அவர் வீட்டிற்குச் சென்றேன். முதல்முறையாகப் பார்த்தபோதிலும் அவரிடம் பேச எனக்குச் சிறிதுகூடத் தயக்கமில்லை. என் நீண்ட நாளைய ஆத்மார்த்தமான ஒரு நண்பரிடம் பேசுவது போலவே உணர்ந்தேன். அன்று என் மனதில் இருந்த எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தேன். ஏறத் தாழ ஒரு மணி நேரம் பேசியிருப்பேன். ஒரு சின்னக் குறுக்கீடுகூட இல்லாமல் கவனமாகவும் பொறுமையாக வும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார். நெருக் கடியான சூழ்நிலையில் இருந்த நான் தடையின்றியும் தெளிவாகவும் பேசுவதற்குக் காரணமான அவரது கருணையை இப்போது நினைத்தாலும் கண்களில் நீர் நிறைகிறது.

அவரிடம் பேசும்போது நம்மை அறியாமல்கூட எந்த ஒரு விஷயத்தையும் குறைத்தோ அதிகமாகவோ சொல்லக் கூடாது என்ற கவனத்துடன் பேசினேன். சிறிதளவு அசிரத்தைகூட இல்லாமல் நான் பேசியதைக் கேட்டார். என் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வார் என்ற எதிர்பார்ப்பு என்னிடமில்லை. அதை அவரும் புரிந்துகொண்டார். ஆனாலும் என் மனநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அவர் விரும்பினார். தன்னம்பிக்கை தரக்கூடிய வசனங்களையோ போலி யான உதாரணங்களையோ அவர் சொல்லவில்லை. அன்று அவர் செய்த காரியம் ஒன்றுதான். என் எல்லாக் கேள்விகளையும் அதன் நியாயங்களையும் முழுமையாக அங்கீகரித்தார். அந்தக் கேள்விகளுக்குப் பின்னால் இருக்கும் தன் ஏக்கங்களைப் பகிர்ந்து கொண்டார். நம்மைப் போலவே விடை தெரியாத அதே கேள்விகளுடன் நம் ஏக்கங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு தோழமை இருக்கிறது என்பதை உணர்ந்த அந்தக் கணத்தில் என் தற்கொலை எண்ணம் மறைந்துபோனது.

அந்தச் சந்திப்பிற்குப் பின் அவர் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து சில வரிகள்:

“உண்மையில் பெரிய பிரச்சினை மனித முகங்களின் கோரங்கள்தான். யார் மனிதர்களை நம்புகிறார்களோ அவர்கள்தான் மீண்டும் மீண்டும் தண்டிக்கப்படுகிறார் கள். யார் மனிதர்களைத் துளியும் உள்ளூர நம்ப வில்லையோ, யார் மனித நேயம் பற்றி உதட்டளவில் பேசிக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் கெட்டிக் காரத்தனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

“எதை நம்ப வேண்டும்? எதை நம்பக் கூடாது? எப்படி வாழ்வது என்பதெல்லாம் எனக்கும் கேள்விகளாகத்தான் இருக்கின்றன.”

* * *

அவரை முதல் முறையாகச் சந்தித்த அந்த நாளுக்குப் பின் எங்கள் தொடர்பு நட்பாக விரிந்தது. அதற்குப் பின் வெவ்வேறு காரணங்களுக்காகவும் அவரைச் சந்திப்பதற்காகவும் ஏழு முறை நாகர்கோவில் சென்றிருக்கிறேன். அவர் வீட்டில் தங்கியிருக்கிறேன். அந்தச் சமயங்களில் கமலா அம்மாள், கண்ணன், மைதிலி ஆகியோரின் நட்பும் கிடைத்தது.

திருமணத்திற்குப் பின் என் மனைவியுடன் விருந்துக் கெனச் சென்ற ஒரே இடம் சுந்தர ராமசாமி அவர் களுடைய வீடுதான். அன்று நடைப் பயிற்சி மேற் கொள்ள அவர் வழக்கமாகச் செல்லும் பள்ளி மைதா னத்தில் நடந்துகொண்டிருந்தோம். அப்போது அவர் சொன்ன வாக்கியங்கள் இப்போதும் நெகிழ்வூட்டு கின்றன. “தனபால், உங்களுடைய கனவுகள் எல்லாம் நனவாகிக்கொண்டிருக்கின்றன. உங்களுக்கு நிறைவான வாழ்க்கை கூடி வர வேண்டுமென்று விரும்புகிறேன்.”

இன்றும் மனதளவில் நெருக்கடிகளை உணரும் போது ‘ஜே.ஜே: சில குறிப்புகள்’ளைப் படிக்கிறேன். நான்கைந்து முறை முழுமையாகப் படித்திருக்கிறேன். குறைந்தது நூறு முறையாவது அதில் ஏதேனும் சில பக்கங்களைப் படித்திருக்கிறேன். நான் ஒவ்வொரு முறை வாங்கும்போதும் யாரேனும் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் அப்புத்தகத்தைக் கொடுத்துவிடுவதும் நேர்ந்துகொண்டே இருக்கிறது.

அவரைக் கடைசியாக நான் சந்தித்தது சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் கோவையில் நடந்த் காலச்சுவடு நூல்கள் வெளியீட்டு விழாவிற்காக அவர் கோவை வந்தபோது. விழாவிற்கு முன் தினம் எங்கள் வீட்டிற்கு இரவு உணவிற்கு அழைத்திருந்தேன். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். மறுநாள் கவிதைகள் குறித்த அவருடைய பேட்டியை வீடியோவில் பதிவு செய்தேன். விழாவில் கவிதைகள் பற்றிய அவரது உரை மிகுந்த மன எழுச்சியுடன் இருந்தது. கோவையில் இருந்த இரண்டு நாட்களிலும் அவர் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருந்தார். அதே மாதத்தில் நாகர் கோவிலில் நடந்த சு.ரா. – கமலா அம்மாள் மண வாழ்வுப் பொன்விழா நிகழ்ச்சியில் நான் வெளிநாட்டி லிருந்து உரிய நேரத்தில் திரும்ப முடியாததால் கலந்து கொள்ள முடியவில்லை.

அதற்குப் பின் அவரை உயிரற்ற உடலாகத்தான் பார்க்க முடிந்தது. என் வாழ்நாளின் மிகப் பெரிய இழப்பு சு.ரா.தான்.

●




படிப்பகம்




யுவன் சந்திரசேகர்

# நண்பர் ராமசாமி



1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாளையங்கோட்டை தேவாலயத்தில் நடைபெற்ற சக ஊழியர் ஒருவரின் திருமணத்துக்கு நாங்கள் ஏழெட்டுப் பேர் சென்றோம். அங்கிருந்து கன்னியாகுமரி. விவேகானந்தர் பாறையில் நின்றுகொண்டிருக்கும்போது நண்பர்களிடம் அறிவித்தேன் – நான் நாகர்கோயில் போய்விட்டு மதுரை திரும்புகிறேன் என்று. எதற்கு என்று அவர்கள் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை.

அமெரிக்கன் கல்லூரியில் எனக்கு ஒரு வருடம் இளைய மாணவனான ரவி ஸ்ரீனிவாஸுக்கு சுந்தர ராமசாமியுடன் கடிதத் தொடர்பு உண்டு. அவன் கொடுத்த 'ஜே.ஜே. சில குறிப்புக'ளைப் படித்திருந்தேன். அதன் பல பகுதிகள் புரியாவிட்டாலும் பொதுவான ஒரு வசீகரம் அந்த நாவலிடம் எனக்கு உண்டாயிற்று. அதற்குப் பிறகு அவனிடமே வாங்கி 'ஒரு புளிய மரத்தின் கதை' வாசித்தேன் (தமிழ் நாவல் கதாபாத்திரங்களில் ஜே.ஜே.வையும் பாலுவையும் விட தாமோதர ஆசானுக்கு இசக்கிக்கும் முக்கியமான இடம் உண்டு என்று இப்போது தோன்றுகிறது).

சுந்தர ராமசாமி நாகர்கோவில் மணிமேடையில் உள்ள சுதர்ஸன் டெக்ஸ்டைல்ஸின் உரிமையாளர் என்று ரவி ஸ்ரீனிவாஸ் பேச்சுவாக்கில் சொல்லியிருந்தது மனத்தில் நன்கு பதிந்திருந்தது. நேரே கடைக்குச் சென்றேன். வீட்டுக்கு வழி சொல்லி ஆட்டோவும் பிடித்துக் கொடுத்து அனுப்பினார்கள்.

சுந்தர விலாஸில் என் அழைப்பைக் கேட்டு நடுவயதினர் ஒருவர் வெளியே வந்தார். கைவைத்த பனியனும் முரட்டு நாலுமுழ வேட்டியும் அணிந்திருந்தார். "சுந்தர ராமசாமி . . ." என்று இழுத்தேன். "நான்தான். உள்ளே வாங்கோ" என்றார்.

உள்ளே சென்று அமர்ந்த மாத்திரத்தில் உரையாடல் ஆரம்பித்தது. நான்தான் அதிகமாகப் பேசினேன். பேச்சைத் தூண்டும் விதமாகச் சிறு சிறு கேள்விகள் கேட்டுவந்தார். சாப்பாட்டு நேரம் வந்தது. "சாப்பிடலாமே" என்று சொன்னார். பல வருடப் பழக்கம்போல மிக சுவாதீனமாக நானும் எழுந்து போனேன். கடந்த இருபத்தோரு வருடங்களில் எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். அந்த வீட்டில் சுவாதீனக் குறைவாக ஒரு நாளும் உணர்ந்ததில்லை. அந்தச் சாப்பாட்டு மேஜையில் நானும் ராமசாமியும் மட்டும் உட்கார்ந்து சாப்பிட்ட நாளும் கிடையாது. அவரைப் பார்க்க வேறு யாராவது வந்திருப்பார்கள்.

இன்றுவரை, என்னுடைய வீட்டில் நண்பர்களை வரவேற்று உபசரித்து உரையாடும்போது, ராமசாமி அளவு என்னால் இயல்பாக நடந்துகொள்ள முடிகிறதா என்ற கேள்வி எனக்குள் எழத்தான் செய்கிறது. நான் சதா தோற்றுக்கொண்டே இருக்கிறேன்.

* * *

தண்டபாணி எனக்கு அறிமுகமானபோது, அவன் நிறைய வாசித்திருந்தான் என்றாலும் தமிழ் நவீன இலக்கியத்தில் அவனுக்கு வாசிப்பு குறைவுதான். என்னிடமிருந்து சுந்தர ராமசாமியின் நூல்களை வாங்கிப் படித்தான். அந்தச் சமயத்தில் எஸ்.வி. ராஜதுரை நடத்திவந்த 'இனி' இதழில் ராமசாமியின் 'மீறல்' கதை வெளியாகியிருந்தது. பேருந்துப் பயணத்தின்போது பக்கத்து இருக்கையில் அமர்ந்து ஒரே கைதாங்கியைப் பகிர்ந்துகொள்ள நேரும் இருவருக்கிடையில் நிகழும் மானசீக யுத்தம் பற்றிய கதை அது. பிரயாணிகள் இருவரும் முன் பரிச்சயம் உள்ளவர்களாக இருப்பது கதையின் மேன்மையைக் குறைக்கிறது என்று தண்டபாணி அபிப்பிராயப்பட்டான்.

"சுந்தர ராமசாமிக்கு எழுதேன்" என்றேன். "சீச்சீ. அதெப்படி. அவர் எவ்வளவு பெரிய எழுத்தாளர்.



படிப்பகம்

நான் வெறும் ஆரம்ப வாசகன். அது சரியா இருக்காதுடா. ஏதோ தோணிச்சு. நாம ரெண்டு பேரும் பேசிக்கிறோம். நான் யாருன்னே அவருக்குத் தெரியாது. இதையெல்லாம் போய் எழுதலாமா?"

"தாராளமாக எழுதலாம். ராமசாமி நிச்சயம் பதில் எழுதுவாரு."

"அப்பிடியா சொல்றே?"

"கட்டாயம். இன்னிக்கித் திங்கள் கிழமையா. உன் லெட்டர் நாளைக்கி அவருக்குக் கிடைக்கும். உடனே அவர் பதில் எழுதிருவாரு. வியாழக்கிழமைக்குள்ளே உனக்கு பதில் வந்துரும் பாரு."

ஆனால் வியாழக்கிழமை பதில் வரவில்லை. சனிக் கிழமைதான் வந்தது. காரணம், ராமசாமி வெளியூர் சென்றிருந்தார்.

இரண்டு வருடப் பழக்கத்தில் இவ்வளவு பெரிய நம்பிக்கை எனக்குள் உருவானதற்குக் காரணம் சுந்தர ராமசாமியிடமிருந்த அடிப்படை ஒழுங்கும் நண்பர் களிடத்தில் அவருக்கு இருந்த அக்கறையும்தான். என்னை வளர்த்த சகோதரருக்கும் எனக்கும் இடையில் உண்டாகும் சிறுசிறு மனஸ்தாபங்களைக்கூட அவருக்கு ஒரு போஸ்ட்கார்டில் எழுதிப் போடுவேன். தட்டச்சில் நாலைந்து பக்கங்களுக்குக் குறையாமல் அவரிடமிருந்து பதில் வரும். உறுத்தாத வகையில் ஆலோசனைகள் சொல்வார். "தெரிந்தோ தெரியாமலோ ஒரு சிடுக்கு விழுந்துவிட்டது. இது இறுகாமலும், மேலும் பல முடிச்சுகள் விழுந்துவிடாமலும் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமே என்று எனக்குப் பதட்டமாக இருக்கிறது" என்று அவர் எழுதியிருந்த ஒரு வாக்கியம் இத்தனை வருடம் கழித்தும் பசுமையாக நினைவில் இருக்கிறது.

தண்டபாணிக்கு அவர் எழுதியிருந்த பதிலும் ஞாபகம் இருக்கிறது. "என்னையும் அறியாமல், படைப் பின் பிராணனான மையத்தில் ஒரு சிறு கீறல் விழுந்து விட்டது வாஸ்தவம்தான். இனி அவ்வாறு நேராமல் பார்த்துக்கொள்கிறேன். தங்கள் ஆலோசனைக்கு நன்றி."

* * *

ராமநாதபுரத்திலும் கோவில்பட்டியிலும் வசித்த வருடங்களில் மிகப் பல தடவைகள் நாகர்கோவில் சென்றிருக்கிறேன். தனியாகவும் தண்டபாணியுடனும். முன்னிரவில் தொடங்கி விடிவதற்குச் சற்று நேரம் முன்புவரை விடாது பேசிக்கொண்டிருப்போம். நானும் தண்டபாணியும் மாறி மாறி சிகரெட் பிடிப்போம். ராமசாமி புகைப்பதை நிறுத்தியிருந்தார். நள்ளிரவுக்குப் பிறகு அவரும் சிகரெட் பிடிக்கத் தொடங்குவார். இருப்பு தீர்கிறது என்று ஆகும்போது நாங்கள் புகைக்கும் சிகரெட்டைப் பகிர்ந்துகொள்வார். "சிகரெட்டை விட்டுட்டேன்னு சொன்னீங்களே" என்று தண்டபாணி ஒருமுறை கேட்டான். "நண்பர்களோடு இருக்கும்போது சின்னச் சின்னத் தப்புகள் செய்தால் சற்று ஆறுதலாக இருக்கிறது!" என்றார்.

அந்த முறை சுந்தர விலாஸின் முன்னறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். நான், தண்டபாணி, கமலா மாமி மூவரும் நாற்காலிகளில் அமர்ந்திருக்க, ராமசாமி குறுக்கும் நெடுக்கும் நடந்தவாறே பேசிக்கொண்டிருந்தார். நெடுநாட்களாக உடற்கோளாறினால் அவதிப்பட்டு வந்த அவரது மூத்த மகள் சௌந்தரா பற்றிப் பேச்சு திரும்பியது. தொடர்ந்து பேசியவாறு நடந்த ராமசாமியின் நடை வேகம் குறைய ஆரம்பித்தது. உணர்ச்சி வெளிப்படாத வார்த்தைகளில் பேசிக்கொண்டே வந்தவர், ஒரு கட்டத்தில் நின்றுவிட்டார். கண்ணீர் மல்கியிருந்த அவரது முகத்தைப் பார்த்தபோது, ராமசாமியிடம் மிக மிகப் பிரியமாக உணர்ந்தேன்.

* * *

நான் சென்னைக்குக் குடிபெயர்ந்த பிறகு அவரைச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைந்துவிட்டன. சட்ட ரீதியான தேவைகளுக்காக வருடத்தில் பல மாதங்கள் அவர் அமெரிக்காவில் சென்று தங்கவேண்டிவந்தது. இந்தியாவுக்கு வரும் சமயங்களில் அவர் மிகவும் பரபரப்பான மனிதராக ஆகியிருந்தார். வெகுஜன ஊடகங்கள் அவரைச் சுவீகரித்துக்கொண்டன. சாவ காசமாக உட்கார்ந்து பல மணிநேரம் உரையாட இயலாதபடி அவருடைய நடைமுறைகள் மாறி விட்டிருந்தன.

இதுபோக, இலக்கிய வாழ்வின் பகுதியாக ஏகப்பட்ட துருவ மாற்றங்கள் கோபதாபங்கள், ஆதங்கங்கள் காரணமாகப் பல தரப்புகளிலும் சொற்கள் வாரியிறைக்கப்பட்டன.

ஆனால் ராமசாமியின் உடல்நிலை கவலைக்கிட மாக இருக்கிறது என்ற தகவலை எனக்கு முதன்முதலில்

**உன்னதம் – 14** நவ–டிச 2005. ரூ.15

மீண்டும் புதுவகை எழுத்தை நோக்கி...
கௌதம சித்தார்த்தனுடன் உரையாடல்

தலித்துகளும் நிலமும்: சில வரலாற்றுக் குறிப்புகள் – ரவிக்குமார்

கற்பும் கலாச்சாரக் காவலும் – அம்பை
பெண் மொழி விவாதம் – குட்டிரேவதி
தொழுகையின் அரசியல் – சாருநிவேதிதா
சாதி வாரியாக வீடு கட்டும் உரிமைகள் – தொ. பரமசிவன்
சொல்லப்படாத தமிழிசை – ந. மம்மது
தமிழ்க் கவிதையில் ஊடாடும் காமம் – கரிகாலன்
குரோட்டோவ்ஸ்கியின் அரங்கம் – சண்முகராஜா
மதுரை நாடக விழா: ஒரு விமர்சனப் பார்வை – ச. நந்தினி
மெக்கன்ஸி ஆவணம் – தமிழ்–சிங்கள உறவுக் கதை.

சிவகாமி தேவதேவன் இமையம்
உமாமகேஸ்வரி இசை அழகிய பெரியவன்
உமாதேவி தபசி தாஜ் முத்துமகரந்தன்
சங்கர் தேவாசுரன் தயா


**உன்னதம்**
ஆலத்தூர் – அஞ்சல்
கவுந்தப்பாடி – 638 455
ஈரோடு மாவட்டம்.

✆ 04256-243125,
9443224945
email:
unnatham@gmail.com

www.padippakam.com



கூறியவர் மனுஷ்யபுத்திரன். ஓரிரு மணி நேரம் கழித்து ஜெயமோகன் தொலைபேசியில் அழைத்தான். இருவருக்குமே குரல் உடைந்திருந்தது. சரளமாகப் பேச முடியாமல் தடுமாறினார்கள். முந்தைய இரவை உறக்கமின்றிக் கழித்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. எழுத்துக்கும் அது சார்ந்த சச்சரவுகளுக்கும் அப்பால், சுந்தர ராமசாமி உருவாக்கியிருந்த ஆத்மார்த்தத்தின் இன்னொரு சான்று இது என்று எனக்குத் தோன்றியது.



அவரளவு இளைஞர்களால் சூழப்பட்ட இன்னொரு எழுத்தாளரை நான் பார்த்ததில்லை. அவர் வழியாக எனக்குக் கிடைத்த நண்பர்களின் பட்டியல் மிக நீளமானது. அதன் விந்நியாசங்களும் அலாதியானவை. தி.அ. ஸ்ரீனிவாசன், எம்.எஸ்., அம்பை, மனுஷ்யபுத்திரன், சலபதி, சங்கரராம சுப்பிரமணியன், நெய்தல் கிருஷ்ணன் . . .

அவருடைய எழுத்துப் பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது. குறிப்பாக அவருடைய படைப்பிலக்கியம் பற்றி; அவருடைய உரைநடையும் கவிதைப் பார்வையும் அடுத்த தலைமுறை எழுத்தாளர்கள் எத்தனை பேரிடம் ஆழமான தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது என்பது பற்றி; நேர்ப் பேச்சிலும் கடிதங்களிலும் அவரிடமிருந்து எனக்குக் கிடைத்த எழுத்து ஆலோசனை பற்றி; நானும் எழுதுகிறவன் என்று ஆகி, வாசிக்கும் ஒவ்வொரு படைப்பையும் படைப்பாளியின் பார்வைக் கோணத்திலிருந்து வாசிக்கும் பழக்கம் படிந்துவிட்ட பிறகு, சுந்தர ராமசாமியின் படைப்புகள் சம்பந்தமாக எனக்குள் உருமாறிவரும் அபிப்பிராயங்கள் பற்றி; கடந்த சில வருடங்களில் அவர் புரிந்த எதிர்வினைகள் பற்றி . . . சாதகமாகவும் பாதகமாகவும் சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. அவை இப்போது முக்கியமில்லை என்றுதான் படுகிறது. பிற்பாடு விரிவாகப் பேசிக்கொள்ளலாம். இது உணர்ச்சிமயமான சந்தர்ப்பம். கிட்டத்தட்ட இருபது வருடங்களாகத் தொடர்ந்த நட்பின் மறுமுனையை இனிப் பார்ப்பதற்கில்லை என்று ஆகியிருக்கிறது. அந்த வெற்றிடத்தைக் காண்பது அத்தனை சுலபமாக இல்லை. ராமசாமியுடன் கழித்த தருணங்கள் கடந்த பத்து நாட்களாக காட்சிகளாய் நினைவில் ஊறியவண்ணமிருக்கின்றன.

அடுத்தடுத்த தலைமுறை வாசகர்களும் படைப்பாளிகளும் வரும்போது, அவர்களுக்கு சுந்தர ராமசாமியின் படைப்புகளும் அவற்றைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்பட்ட விமர்சனங்களும் திறந்தே இருக்கின்றன. அவருடைய படைப்பு ஆளுமை பற்றிச் சுயமாக முடிவுசெய்யும் சுதந்திரமும் அவர்களுக்கு இருக்கிறது.

ஒருபோதும் அவர்களுக்குக் கிடைக்க முடியாத ஒரு பெரும் பகுதி என் நினைவுகளில் பதிந்திருக்கிறது. அதைச் சொல்லி ஆற்றிக்கொள்ள வேண்டும். எண்பதுகளின் இறுதியில் என்னுடைய உடல்நலமும் மனநலமும் வெகுவாகக் குன்றியிருந்த நாட்களில் அவர் என் மீது கொண்டிருந்த கரிசனம் பற்றி. பல வருடங்களுக்கு முன்பே, தன்னுடைய உணவுப் பழக்கம் 'ருசியிலிருந்து ஆரோக்கியத்தை நோக்கித் திரும்பிவிட்டது' என்று அவர் குறிப்பிட்டது பற்றி. உடல்நலத்தைப் பேணுவதில் அவருக்கு இருந்த அக்கறை பற்றி. சீரான வாழ்முறை கொண்டிருந்த அவர் இன்னும் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கலாமே என்ற ஆற்றாமை பற்றி. தன்னோடு நெருக்கமாக இருந்த தண்டபாணி போன்ற நண்பர்களின் வாழ்க்கையில் துயரம் முட்டி நின்ற நாட்களில் அவர் வெளிப்படுத்திய பரிவும் கவலையும் பற்றி. அவர் பற்றிய சகல விவரங்களையும் இறந்த காலத்தில் குறிப்பிட வேண்டிவந்த துர்நிலை பற்றி . . . இவையெல்லாவற்றையும்விட, தன் படைப்புகள்மீது வெளியான அபிப்பிராயங்களை அவர் எதிர்கொண்ட விதம் பற்றி.

சுபமங்களாவில் அவருடைய நாடகம் 'யந்திரத் துடைப்பான்' வெளியாகியிருந்தது. ராமசாமியின் வீட்டில் அவருடன் சாப்பிட்டுவிட்டு, அவருடைய சொந்த அறையில், கட்டிலில் அமர்ந்து சிகரெட் பிடித்தவாறு "அந்த நாடகத்தில் தியேட்டரே இல்லை. வானொலி நாடகம் போல இருக்கு" என்று அபிப்பிராயம் உதிர்த்த போது என்னுடைய வயது முப்பதுக்குள்தான் இருக்கும். அவருக்கும் எனக்கும் முப்பது வயது வித்தியாசம். நாடகம் என்ற வடிவம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. இன்றுவரை. எனக்குத் தெரியாது என்பது ராமசாமிக்குத் தெரியும்.

ராமசாமி முகம் மலர்ந்து சிரித்தார்.

"நீங்க சொல்றது சரிதான். ந. முத்துச்சாமியும் இதையேதான் சொன்னார்."

கூட்டங்களுக்குப் பெரும்பாலும் முன்னதாகவே வந்துவிடுவார். நண்பர்கள் வரும்போது, ஒவ்வொருவரை ஒவ்வொரு விதமாக எதிர்கொள்வார். சிலருக்குச் சிறு தலையசைப்பு. சிலருக்கு மலர்ந்த சிரிப்பு. சிலரிடம் கைகுலுக்கல். சிலரிடம் அதிகநேரம் கைகுலுக்கல். வெகுசிலரை ஆரத் தழுவிக்கொள்வார். அவரது மரணம்வரை சந்திக்கும்போதெல்லாம் சுந்தர ராமசாமியின் தழுவலுக்கு உரியவனாக இருந்திருக்கிறேன் என்பது மிகவும் பெருமிதமாய் இருக்கிறது. அதன் காரணமாகவே அவருடைய மரணம் வெகுவாக வலிக்கிறது. ●




படிப்பகம்




இமையம்

# காலமும் கலைஞனும்



"நல்ல சொற்கள் ஒருவனுக்குப் பெருமை தேடித்தரும் நல்ல செயல்கள் ஒருவனுக்கு மதிப்பு பெற்றுத் தரும்."

லாவோட்சு

1985ஆம் ஆண்டு மே மாதம் கொடைக்கானலில் நடைபெற்ற மாணவர்களுக்கான எழுத்துப் பயிற்சி முகாமில்தான் சுந்தர ராமசாமி என்ற பெயரைக் கேள்விப்பட்டேன். அன்றுதான் முதன்முதலாக சு.ரா.வைப் பார்த்தேன். அந்தப் பயிற்சி முகாமிற்குப் பிறகுதான் இலக்கிய நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன்.

1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'சுந்தர ராமசாமி கட்டுரைகள்' என்ற க்ரியா பதிப்பகத்தார் வெளியிட்டிருந்த நூலைப் படித்தேன். அதுதான் சு.ரா.வுக்கும் எனக்குமான முதல் உறவு. பிறகு 'நடுநிசி நாய்கள்', 'ஒரு புளியமரத்தின் கதை', 'பள்ளம்', 'ஜே.ஜே: சில குறிப்புகள்', 'சுந்தர ராமசாமி சிறுகதைகள்' என்று எங்கள் உறவு வளர்ந்துகொண்டேபோயிற்று.

1994இல் 'கோவேறு கழுதைகள்' என்னும் என்னுடைய முதல் நாவல் வெளிவந்த இரண்டாவது அல்லது மூன்றாவது மாதத்தில் மதுரையில் உள்ள தன் நண்பர்களிடம் கிட்டத்தட்ட கட்டாயப்படுத்தி, அதற்கான விமர்சனக் கூட்டத்தை சுந்தர ராமசாமி தான் ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டத்தில் அவர் பேசியது 'காலச்சுவடு' இதழிலும் வெளிவந்தது. அன்று அவருக்கு நான் வணக்கம் மட்டுமே தெரிவித்தேன். வேறு வார்த்தைகள் பேசவில்லை.

1995ஆம் ஆண்டு முதல் முறையாக சுந்தர ராமசாமியைப் பார்ப்பதற்காக நாகர்கோவிலுக்குச் சென்றேன். ஒரு மணிநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அதன்பிறகு சென்னை புக் பாயின்ட்டில் நடைபெற்ற காலச்சுவடு புத்தக வெளியீட்டு விழாவில் தூரமாக நின்று அவரைப் பார்த்தேன். அதே மாதிரிதான் 'தமிழ் இனி 2000' மாநாட்டிலும் பாண்டிச்சேரியில் நடைபெற்ற மௌனி பற்றிய கருத்தரங்கிலும் பார்த்தேன்.

மௌனி பற்றிய கருத்தரங்கு முடிந்த மறுநாள் விருத்தாசலத்தில் 'எழுத்தாளர் சுந்தர ராமசாமியுடன் உரையாடல்' என்ற ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். பாண்டிச்சேரியிலிருந்து சு.ரா.வை அழைத்துவந்தேன். பயண நேரத்தில் சு.ரா.வுடன் நான் அதிகம் பேசவில்லை. ஆனால் திருமதி கமலா சுந்தர ராமசாமி அவர்களோடு சளசளவென்று பேசிக்கொண்டே வந்தேன். கூட்டம் முடிந்து ரயிலுக்காகக் காத்திருந்தபோது, "என்னைப் பத்திரமாகக் கண்ணனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கவலைப்படுகிறீர்களா" என்று திடீரென்று சு.ரா என்னிடம் கேட்டார். ரயில் தாமதமாக வருகிறது. மழை எந்த நேரத்திலும் அடித்துப் பெய்யலாம் என்ற நிலையில் நான் பதற்றமாக இருந்தது உண்மைதான். அப்போது நான் சு.ரா.விடம் "சுந்தர ராமசாமி கண்ணனுடைய சொத்தல்ல. பொதுச் சொத்து. பொதுச் சொத்தைப் போற்ற வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதே மாதிரி இந்தச் சமூகத்திற்கும் இருக்கிறது" என்று சொன்னேன். சத்தமில்லாமல் சிரித்தார். என்ன நினைத்தாரோ, நடக்கலாம் என்று சொல்லி என் தோளின் மீது கையைப் போட்டு நடக்க ஆரம்பித்தார். குறைந்தது பிளாட்பாரத்தில் அரைமணி நேரம் நடந்திருப்போம்.

'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவல் இரண்டாம் பதிப்பு வருவதற்கு முன்பு நாவலில் சில பிரச்சினைகள் இருக்கிறது, சரிசெய்து வெளியிடுங்கள் என்று கண்ணனிடம் கூறினேன். நான் கூறிய மறுநாள் சுந்தர ராமசாமி தொலைபேசியில் "நாவல் குறித்த அபிப்பிராயங்களை நேரில் வந்து சொல்ல முடியுமா?" என்று கேட்டார். சரி என்று ஒப்புக்கொண்டு அவர் சொன்ன தேதியில் நாகர்கோவிலுக்குச் சென்றேன். சுமார் 46 மணி நேரத்திற்கு மேல் இருவர் மட்டுமே ஒன்றாக இருந்தோம். நாவல் குறித்து மட்டுமே பேசினோம். புதிதாக எழுத ஆரம்பித்த ஒரு எழுத்தாளன் கூட அவனுடைய படைப்பு குறித்த திருத்தங்களைப் பிறர் கூறும்போது முகம் சுளிக்காமல் ஏற்பதில்லை. ஆனால் நான் சொன்ன அத்தனை விசயங்களையும் சு.ரா. கேட்டார். இந்தப் பண்பை வேறு எந்த எழுத்தாளரிடமும் நான் கண்டதில்லை.

www.padippakam.com

நான் கடைசியாக சுந்தர ராமசாமியை மதுரையில் நடைபெற்ற நாவல்கள் குறித்த கருத்தரங்கில்தான் பார்த்தேன். வணக்கம் சொன்னபோது, "எப்போதும் தி.மு.க. வேட்டிதான் கட்டுவீங்களா?" என்று என்னிடம் கேட்டார். நான் 'ஆமாம்' என்பதுபோல் தலையை அசைத்தேன். அதுதான் அவர் கடைசியாக என்னிடம் பேசிய வார்த்தை. அதன் பிறகு 21.10.2005இல் அவருடைய இயக்கமற்ற உடலை மட்டும்தான் பார்த்தேன்.

சுந்தர ராமசாமியுடன் சமூகம் குறித்தும் இலக்கியம் குறித்தும் இன்னும் பிற விசயங்கள் குறித்தும் நிறைய கேட்க நினைத்தேன். ஆனால் கேட்கவில்லை. எங்கள் உறவில் வார்த்தைகளுக்கு அதிக இடமில்லாமல் இருந்தது. மௌனம்தான் எங்களை நெருக்கமாகப் பிணைத்தது. எனக்கு நான்கு நண்பர்கள்தான். அதில் சு.ரா.வும் ஒருவர். சு.ரா.வின் நிஜமான, நீண்டகால நண்பர்கள்தான் என்னுடைய இன்றைய நண்பர்கள். அந்த நண்பர்கள் உருவாக்கிய சு.ரா.வின் பிம்பம் தான் எனக்குள் இருப்பது.

சுந்தர ராமசாமியும் நானும் வாய்ப்பிருந்தும், தனித்திருந்தும் அதிகம் பேசிக்கொள்ளாதவர்கள். அவர் மீதும், அவருடைய எழுத்துமீதும் எனக்கு அளவற்ற மதிப்பு உண்டு. அவரும் என்மீது அன்பு கொண்டிருந்தார் என்றுதான் நினைக்கிறேன். காரணம், அமுதன் அடிகள் இலக்கியப் பரிசு திருச்சியில் எனக்கு வழங்கிய போது, அந்த விழாவிற்கு சு.ரா. வந்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைத்தேன். விழாக் குழுவினர் சு.ரா.விடம் கேட்டனர். "உடல்நிலை மோசமாக இருக்கிறது. வரக்கூடிய நிலையில் இல்லை" என்று கூறிவிட்டார். விசயத்தை விழாக் குழுவினர் என்னிடம் கூறினர். "நான் அவர் வர வேண்டும் என்று ஆசைப்படுவதாகக் கூறுங்கள்" என்று சொன்னேன். விழாக் குழுவினர் சு.ரா.விடம் நான் சொன்னதை சொன்ன மறுநிமிடமே விழாவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டார். உடல்நிலை மோசமாக இருந்தபோதும் விழாவுக்கு வந்திருந்தார்.

சுந்தர ராமசாமி எனக்கு மட்டுமல்ல நண்பர். நீண்டகாலமாக எழுதிவருகிற எழுத்தாளர்களுடனும் ஒரு வருசத்திற்கு முன்பு எழுதவந்த எழுத்தாளர்களுடனும் அவருக்கு நட்பும் உறவும் இருந்தது. பத்துக் கவிதை மட்டுமே எழுதியவர்களையும், ஒன்றிரண்டு சிறுகதை, கட்டுரை என்று எழுதியவர்களையும் அறிந்து வைத்திருந்தது மட்டுமல்ல, அவர்களோடு நல்ல நட்பும் கொண்டிருந்தார். இந்தப் பெருமை சு.ரா.வுக்கு மட்டும் தான் உரியது. இவ்வளவு எழுத்தாளர்களை, வாசகர்களை நண்பர்களாகக் கொண்ட வேறு ஒரு எழுத்தாளன் தமிழ்நாட்டில் இல்லை. தன் பெரும்பகுதி நேரத்தை நண்பர்களுடன் பேசுவதற்கென்றே ஒதுக்கிய ஒரே எழுத்தாளர் சு.ரா. மட்டும்தான். அவர் யாரையும் முகம் முறித்துப் பேசியதில்லை. சரியோ தவறோ பிறர் சொல்வதைக் கேட்க வேண்டும், பிறர் கூறுகிற வார்த்தைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற பண்பு தான் அவரை நோக்கி எல்லாரையும் போக வைத்தது. நண்பர்கள்தான் அவருடைய மிகப் பெரிய பலம், சொத்து. தனித்தீவாக என்றுமே அவர் இருந்ததில்லை.

1996இல் நான் மிகவும் நெருக்கடியான மனநிலையில் இருந்தபோது நெருக்கடியைப் பகிர்ந்துகொள்ள நான் தேர்ந்தெடுத்த மனிதர் சுந்தர ராமசாமி. அவருக்கு நான் ஒரு கார்டில் என் நிலையை எழுதினேன். நான்காவது நாள் சு.ரா.விடமிருந்து ஒரு கார்டு வந்தது. அதிலிருந்து நான் ஒரு தெளிவைப் பெற்றேன். அதன் பிறகு கடிதத் தொடர்பு எங்களுக்கிடையில் இல்லை. நான் சு.ரா.வுக்கு நண்பர் என்றால் அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் நான் நண்பர்தான். நான் எழுத்தாளன். எனக்கும் நண்பர்கள் உண்டு. என் நண்பர்கள் எனக்கு மட்டும்தான். என் குடும்பத்தாருக்கு இல்லை. இப்படித்தான் எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். சு.ரா.விடம் கற்றுக்கொள்ள ஏராளமான உயர்ந்த பண்புகள் இருந்தன.

சுந்தர ராமசாமி வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சமூகத்தை உலுக்கிய பாதித்த எல்லா விசயங்களுக்கும் ஒரு மனிதனாக, ஒரு கலைஞனாக எதிர்வினையாற்றியிருக்கிறார். மகாமகப் படுகொலை, தூக்குத் தண்டனைக்கு எதிரான மாநாடு, குஜராத் பூகம்பம், குஜராத் கலவரம், கும்பகோணம் தீ விபத்து, சுனாமி, சங்கராச்சாரியார் கைதுவரை தன் குரலை உரத்து ஒலிக்கச் செய்துள்ளார். தான் வாழும் சமூகம் குறித்து ஓயாமல் சிந்தித்து, கவலைப்பட்டு, புதிய மதிப்பீடுகளை உருவாக்க முனைந்தார்.

கலைஞனை அவன் வாழும்போது மதிக்க வேண்டும் என்று தன் கடைசிக் காலம் வரை குரல் கொடுத்தவர் சுந்தர ராமசாமி. தமிழ்ச் சமூகம் அவரை மதித்ததா இல்லையா என்பதைவிடத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவருமே அவரை மதித்தார்கள், போற்றினார்கள். அவரைக் கடுமையாக எதிர்த்தவர்கள்கூட, அவருடைய கருத்துக்குத்தான் எதிராக இருந்தார்களே ஒழிய அவருக்கு எதிராக ஒரு ஆள்கூட இல்லை. அதே மாதிரி நிறைய எழுத வேண்டியவர் எழுதவில்லை என்று அனைத்துத் தரப்பினர் குற்றச்சாட்டுக்கும் ஆளான எழுத்தாளரும் அவர் மட்டும்தான்.

க்ரியா பதிப்பகத்தையும், க்ரியா பதிப்பகத்தோடு தொடர்புடைய நண்பர்களையும் விட்டு விலகிவந்து விட்டோமே என்ற ஏக்கம் சுந்தர ராமசாமிக்குக் கடைசிவரை இருந்தது. அதற்குப் பின் சு.ரா. எழுத்துத் துறையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வது குறித்துப் பேச, விவாதிக்க, சில விசயங்களைக் கவனப்படுத்த, நண்பர்கள் அதிகமில்லை.

சுந்தர ராமசாமி இறந்துவிட்ட செய்தி கிடைத்ததிலிருந்து சுமார் அரை மணிநேரம் வரை நடந்தேன். பிறகு வீட்டுக்கு வந்து 'சுந்தர ராமசாமி சிறுகதைகள்' என்ற நூலை எடுத்து எனக்குப் பிடித்த கதைகளைப் படிக்க ஆரம்பித்தேன். அன்று மட்டும் முப்பது கதைகளைப் படித்து முடித்தேன்.

காலம் தின்று செரிக்காத மனிதன் கலைஞன் மட்டும்தான். உடல் சிதைந்தாலும் கலைஞன் ஒருபோதும் அழிவதில்லை. சுந்தர ராமசாமி ஒரு மகத்தான கலைஞன். அவர் இல்லை. அவருடைய எழுத்துகள் உயிரோடு இருக்கின்றன. நிஜமான கலைஞன். கடல் மாதிரி, வானம் மாதிரி. ●


படிப்பகம்

www.padippakam.com






சக்கரியா

# தீப்பொறிகள் பறக்கச் செய்தவர்



**மலையாளிகள் தங்களுடைய எழுத்தாளராகவே சுந்தர** ராமசாமியைக் காண்கிறார்கள். அவர் தனது பால்ய காலத்தைக் கோட்டயத்தில் செலவிட்டார் என்பதும் அவருடைய பிரபலமான நாவலின் பின்புலம் கேரள மென்பதும் மட்டுமல்ல இதற்குக் காரணம். மலையாள இலக்கியத்தின் நவீனத்துவத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும் நவீனத்துவம் சு.ரா.வின் எழுத்திலுண்டு.

மலையாள இலக்கியம் அதன் நவீனத்துவத் தேடலைப் பாதி வழியிலோ அதற்கும் பின்னாலோ என்றோ நிறுத்திவைத்துவிட்டு இளைப்பாறியது. நவீனத்துவத்தைக் கைவிட்டு வெல்லப் பாகு போன்ற கற்பனாவாதத்தைக் கைப்பிடிக்க முன்னணி எழுத்தாளர்களுக்கும் அதிகம் யோசிக்க வேண்டியிருக்கவில்லை. தென்னிந்திய மொழிகளில் நவீனத்துவத்தின் நிறுவனர்களில் ஒருவரான சு.ரா. வேறுபடுவது இங்கேதான்.

மொழிபெயர்ப்புகள் மூலமும் உரையாடல்கள் மூலமும் நான் புரிந்துகொண்டிருப்பது மரணம்வரையிலும் அவர் மொழியையும் கற்பனையையும் சிந்தனையையும் நவீனத்துவத்தின் விசாலமான மனிதாயப் பாதையில் சஞ்சரிக்கச் செய்துகொண்டிருந்தார். அவர் ஏற்றுக்கொண்ட நிலைப்பாடுகளின் விளக்கங்கள் பற்றிக் கருத்து வேற்றுமைகள் உருவாகியிருந்தன என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஒருவேளை நடைமுறை வடிவங்களையும் விளக்கங்களையும் பற்றியதாக இருக்கலாம் அந்த விவாதம் என்று வெளியிலிருந்து ஊகிக்கும் எனக்குத் தோன்றியிருக்கிறது. தனக்குள்ளே தனது உலகப் பார்வையில் சு.ரா. சமகாலத்தன்மையுள்ளவராகவும் இயக்கமுள்ள சிந்தனையாளராகவும் தொடர்ந்துகொண்டிருந்தார். உள்ளுக்குள் மனிதன் நவீனமானவனல்ல எனில் பின் எப்படி அவனுடைய கரம் பேனா எடுத்து நவீனத்துவத்தையும் மனிதாயத்தையும் உருவாக்க முடியும்? எழுத்தாளனுக்குள்ளிருக்கும் அடிப்படையான மனிதன் மானுட விழுமியங்களையும் ஒருலகப் பார்வையையும் மாற்றங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் படைப்புகளின் தேவையும் ஈர்ப்புத் திறனும் பொருந்தாமல் போய்விடும். சு.ரா.வால் தனது தீர்மானத்துக்கு ஏற்பத் தனது அகத்தின் குரலுக்கு இசைவான வழியில் இவற்றை இணைத்துக்1கொண்டு செல்லவும் மகத்தானவையும் அழகானவையுமான படைப்புகளை உருவாக்கவும் முடிந்தது.

எங்களுக்கிடையிலான உறவு 1971 ஆண்டை நோக்கிப் பயணம் செய்கிறது. நான் கோயம்புத்தூரில் பணிபுரிந்துகொண்டிருந்தேன். என் மனைவி லலிதாவும் (தமிழ் எழுத்தாளர் வாஸந்தியின் ஒன்றுவிட்ட சகோதரி) நானும் நாகர்கோவிலுக்கு வந்து சு.ரா.வைச் சந்தித்தோம். எம். கோவிந்தன் மூலமாக நாங்கள் அவரை அறிந்திருந்தோம். அன்று அவர் எங்களுக்களித்த இனிய விருந்தோம்பலை நான் அன்போடு நினைத்துப்பார்க்கிறேன்.

கடைசியாக நாங்கள் சந்தித்தது சென்னையில் அசோகமித்திரனைப் பாராட்டுவதற்காக நடைபெற்ற விழாவில். ஊக்கமூட்டுவதும் கேட்பவர்களைப் பிடித்து உட்காரச் செய்வதுமான உரையை அவர் நிகழ்த்தினார். பல சமயங்களில் கூட்டம் வெடித்துச் சிரித்துக்கொண்டிருந்தது. அன்று அந்த மேடையில் பார்த்தது மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்த மனிதரையல்ல. சிந்தனைகளும் கற்பனைகளும் தீப்பொறிகள்போல அவரிடமிருந்து கிளம்பிப் பறப்பதை நான் பார்த்தேன்.

'காலச்சுவடு' இதழில் பத்தி எழுத சு.ரா. என்னை அழைத்ததை உற்சாகமூட்டுவதும் மதிப்பு மிகுந்ததுமான வெகுமதியாகவே நான் கருதுகிறேன். தமிழின் வலுவும் வளமும் நிறைந்த உலகத்திலிருந்து வந்த ஓர் அழைப்பு மட்டுமல்ல அது; மகத்தான தமிழ் எழுத்தாளர் ஒருவர் எனக்கு நேராக நீட்டிய நட்பும்கூட.

தன் வாழ்க்கை மூலமாக மட்டுமல்ல, மரணத்தின் மூலமாகவும்தான் ஒருவர் தன் நம்பிக்கைகளுக்கு ஒளி கூட்டுகிறார். மத வழக்கங்கள் எதுவுமில்லாமல் தனது இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிவுரைத்ததன் வாயிலாக நாம் வாழும் மத–ஜாதிச் சீர்கேடுகளின் சமூகத்துக்குத் தன் மரணத்தின் மூலமும் அவர் எதிர்வினையாற்றியிருக்கிறார். இறுதிவரையுமுள்ள மனிதாயமான சார்புநிலையென்பது இதுதான். இந்தப் பெரும் மனிதரின் நினைவுகளுக்கு முன் நேசத்துடன் தலைவணங்குகிறேன்.

**தமிழில்: சுகுமாரன்**



படிப்பகம்

www.padippakam.com






கி. ராஜநாராயணன்

# ஓர் அத்தியாயம்

**பதின் வயசைக் கனவு காணும் வயசு** என்று சொல்லலாம். அதிலும், ஏலாதவன் ரொம்பத்தான் கனவு காணுவான்; பகல் கனவு. இங்கே ஏலாதவன் என்பதை உடம்புக்கு ஏலாதவன் என்று கொள்ள வேண்டும். மாசக் கணக்காக, வருசக் கணக்காகப் படுக்கையில் கிடந்தால் சொல்லவே வேண்டாம். எனக்கும் அப்படித்தான் நேர்ந்திருக்கிறது.



சன்னல் வழியாகவும் கதவு வழியாகவும் தெருவைப் பார்த்துக்கொண்டும் கவனித்துக்கொண்டுமிருக்கும் குமரி, தட்டுப்படுகிறவர்களோடெல்லாம் பேச முடியாத ஊமை, இவர்கள் செய்துகொண்டிருப்பது உலகின் நடவடிக்கைகளை உன்னிப்பாக உள்வாங்கிக்கொண்டேயிருப்பதுதான். இவர்களைப் பற்றி ஒரு சொலவடை இப்படிச் சொல்லுகிறது: "ஊருக்குள்ளே நடக்கிறதை யாரிட்டெக் கேட்டாத் தெரியும்? ஊமை கிட்டெயும் வீட்டுக்குள்ளெ அடைஞ்சிக் கிடக்கிற குமரி கிட்டெயும்!" தெரு வழியாகப் போகிற ஒருத்தனை இவள் பார்ப்பது ஒரு வினாடிதான்; அவம் போற தினுசே சரியில்லை டோய் என்பாள். என்னெ இப்படிச் சொல்றாளே என்று யோசிப்பதற்குள் அவன் போன இடத்திலிருந்து ஒரு சலசலப்புக் கேட்கும். ரொம்ப அப்புராணிபோலப் போறானே என்று நாம் ஒருவரைப் பற்றி நினைப்போம். 'அவம் ஒரு சரியான ஊமைக் குசும்பன்' என்பாள். நாம நினைச்சது இவளுக்கு எப்படித் தெரியும்! அதுதான் அவர்களிடமுள்ள சூக்குமம். ஒரே 'கிளிக்'கில் பல விசயங்கள் இவர்களுக்குள் பதிவாகிவிடுகிறது.

அநியாயமாக இப்படிப் படுக்கையில் முடங்கிப் போனோமே என்று மனசு குமுறிக்கொண்டே இருக்கும்போது, உடன்பிறந்தவர்களும் வீட்டின் பெரியவர்களும் – முக்கியமாக அப்பா – கண்டு பிரமிக்கும்படியாக ஒன்றைச் சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற வைராக்யம் கூடிக்கொண்டேவரும். அப்படியான எண்ணம்தான் 'எழுது சாதித்துக் காட்டு என்று தூண்டியது' என்று ஒரு தடவை சு.ரா. சொல்லியிருக்கிறார். அவருடைய 'சன்னல்' கதை ஒரு அருமையான சித்தரிப்பு. நேரில் இன்னொரு முறை பேசிக்கொண்டிருந்தபோது, நாகர்கோயில் டாக்டர்களால் இனி இவரைக் குணப்படுத்த முடியாது என்று தெரிந்துவிட்டபோது, அப்பா திருவனந்தபுரம் போய் அப்போது அங்கே பிரபலமாக இருந்த டாக்டர் சங்கர்ராமனை அழைத்துவந்ததைச் சொன்னார். சங்கர்ராமன் டாக்டர் ஒரு நாளைக்கு ரெண்டே ரெண்டு நோயாளிகளைத்தான் பார்ப்பாராம். மூணாவது நோயாளியாக அந்தப் 'பொன்னு திருமேனியே' வந்தாலும் சரி, போயிட்டு வா என்று சொல்லிவிடுவாராம். அவ்வளவுக்குக் கரால்! வெளியூருக்கும் போக மாட்டாராம். ஒரே ஒரு நம்பிக்கை சங்கர்ராமனுடைய அப்பாவும் சுந்தர ராமசாமியின் அப்பாவும் நண்பர்கள் மற்றும் பள்ளித் தோழர்கள். அவர் முதலிலேயே சொல்லிவிட்டாராம்: 'அவங் கொணம்தான் உனக்குத் தெரியுமெ; நீயே கூப்பிட்டுப் பார்' என்று. கராலான ஆசாமிகளிடம் போவதென்றால் யாருக்குமே தயக்கம்தான் என்றாலும் அப்பா அவருடைய ரூமுக்குப் போய் விசயத்தைச் சொல்லி வேண்டினார்.

தடிமனான ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த டாக்டரின் முகம் அப்பாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தது.

"வர்ற நாயித்துக் கிழெம ஈவினிங் நானே வர்றேம், நீங்க வரவேண்டாம்."

டாக்டருடைய முகம் திரும்பவும் புத்தகத்தைப் பார்க்க ஆரம்பித்துவிட்டது. டாக்டருடைய அப்பா சந்தோச முகத்தோடு வாசலில் காத்திருந்தாராம்.

நாகர்கோயில் டாக்டர் வட்டாரங்களில் செய்தி பரவி விட்டது, சங்கர்ராமன் வருகிறார் வருகிறார்



படிப்பகம்

www.padippakam.com



என்று. இதுவரைக்கும்தான் நான் – கி.ரா. – சொல்ல முடியும். பாக்கியை சுந்தர ராமசாமியே சொன்னால் தான் சுவாரஸ்யமாக இருக்கும். பல தடவை அவரை சொல்லச் சொல்லி நாங்கள் அந்த டாக்டர் சங்கர்ராமன் கதையைக் கேட்டு ரசித்திருக்கிறோம். சமையலில் எதை எதை எவ்வளவுக்குச் சேர்த்தால் ருசிப்படும் என்று அறிந்து சேர்ப்பதைப்போல பேச்சில் எந்தெந்த வார்த்தைகளை எவ்வளவுக்குச் சேர்க்க, நீக்க வேண்டும் என்பது அவருக்குத்தான் தெரியும். பேச்சுக் கச்சேரி படு சுருதி சுத்தமாக அமைந்திருக்கும் அவரிடம். (அவர் சொன்னதை) முடிந்தவரை சுருக்க மாகச் சொல்ல முயலுகிறேன்;

அன்றைய சாயந்திரம் மிகச் சரியாக டாக்டருடைய கார் 'சுந்தர விலாஸ்' பங்களா காம்பவுண்டுக்குள் ஒரு வளையம் போட்டுச் சல்லென்று வந்து நின்றது. காரை அவரேதான் ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறார். முகமன்கள் முடிந்து டாக்டர் சங்கர்ராமன் சு.ரா.வின் படுக்கை அறைக்குள் நுழைகிறார்.

"எல்லாரும் முதல்லெ வெளியெ போங்க; ஜன்னல் எல்லாத்தையும் திறந்து வைங்க."

இப்பொ டாக்டரும் அம்பியும்(சு.ரா.)தான் அந்த அறைக்குள். கதவையும் அடைத்தாயிற்று.

". . . ம் . . . சொல்லு; என்ன பண்றது?"

"பயமா இருக்கு."

"ஏம், எதுக்கு?"

"செத்துப் போயிருவமோன்னுட்டு"

"யாரு சொன்னா!" டாக்டர் சிரிக்கிறார். "பயமே வேண்டாம்; நா வந்துட்டனோல்யோ" என்று சொல்லி ஆதரவாய்த் தடவுகிறார்.

"டெஸ்ட் பண்ணுவமா?"

தயக்கமான ஒரு சின்னத் தலை அசைப்பு.

"ட்ரெஸ்ஸெ எல்லாம் களைஞ்சிரணும்."

அம்பிக்குத் தயக்கம். டாக்டர் வர்றார் என்று இருக்கிறதில் நல்லதா, பொருத்தமாய்ப் பார்த்துப் பார்த்து டிரெஸ் பண்ணிக்கொண்டது! இப்பொ டாக்டரெ எல்லாத்தையும் கழட்டு என்கிறார். ராஞ்சனையாக (லஜ்ஜை) இருந்தது. டாக்டர் கதவை ஒரு நாலு விரற்கடை திறந்து வைத்துக்கொண்டு "ஒரு கோமணத் துணி வேணும்" என்கிறார். கோமணத் துணியா? கோமணத் துணிக்கு எங்கெ போறது. வீடே அல்லோலகல்லோலப்படுது. ஒரு கோமணத் துணிக்காக. கப்பல் கொள்ளும் அளவுக்குக் கடையில் துணிகள் இருந்தும் ஒரு கோமணத் துணியைச் சமாளிக் கத் திண்டாட வேண்டியதிருக்கு.

எப்படியோ கோமணத் துணி வந்து டாக்டர் கையில் சிக்கியது. அணிந்துகொள்ள அவரும் உதவி செய்கிறார்.

ஸ்டெதஸ்கோப்பை எடுக்கிறார்.

எல்லா டாக்டர்களும் செய்கிறதுபோல இவரும் எடுத்தோம், காதில் மாட்டிக்கொண்டோம் என்று இல்லாமல் . . . அதைச் சரிபார்த்துக் காதில் மாட்டிக் கொண்டு, முதலில் அவருடைய மார்பில் வைத்துச் சரிபார்த்து, பிறகுதான் சு.ரா.வின் நெஞ்சில், பல இடங்களில் வைத்துப் பார்க்கிறார். (இப்படி எந்த டாக்டரும் செய்து பார்த்ததில்லை!)

சு.ரா. இதைப் பாவனையுடன் சொன்னபோது எங்களுக்கும் சிரிப்பு வந்தது.

டெஸ்ட் எல்லாம் முடித்து, "டிரெஸ்ஸை மாட்டிக்கோ" என்றதும் உடம்பில் ஒரு தெம்பு வந்ததுபோல இருக்கு. கதவு திறக்கப்பட்டது. குடும்பத்தார் உள்ளே நுழைகிறார்கள். டாக்டர் கொஞ்சம் மாத்திரைகள் தருகிறார்.

"ஊசி?"

"ஒன்னும் வேண்டாம். உடம்புல ஒரு ரோகமும் இல்லெ. நாளைக்கே எழுந்திருச்சி உக்காந்திருவான். திரும்பவும் 'ஷட்டில்காக்' விளையாடலாம். பள்ளிக் கூடம் போகலாம்."

டாக்டர் சந்தோசமாய்ச் சொல்லுகிறார். அந்த சந்தோசம் எல்லோரையும் பற்றிக்கொள்கிறது. ஒரு வாரத்தில் எல்லாமே சரியாகிவிட்டது. மனசும் உடம்பும். இப்போது கேள்வியெல்லாம் – நாகர்கோயில் டாக்டர் வட்டாரத்தில் – டாக்டர் சங்கர்ராமன் கொடுத்த அந்த மாத்திரை என்னது? இதைத் தெரிந்துகொள்ள ரொம் . . . பப் பிரயாசைப்பட்டார் களாம்! (தெரிந்தால் இவ்வளவுதானா என்று ஆகிவிடும்) ஒன்றுமில்லை சல்பா மாத்திரைதானாம். நம்ப முடியலை. இல்லை; ஏதோ மறைக்கிறார்கள் என்றெல்லாம் பேச்சு வந்ததாம். (மருத்துவ ரகஸ்யம் என்று இருக்கலாமே!)

இப்படி ஒரு அற்புதம் நிகழ்த்திப் போய்விட்டார் சங்கர்ராமன். அபூர்வமானவர்களைப் பார்த்து நாம்கூட சொல்லுவதில்லையா, உங்கள் பாதம் எங்கள் வீட்டில் படணும் என்று.

திரும்பவும் இதே பேச்சு வந்தபோது சு.ரா.விடம் அவர் காராம்பசுவின் அம்சம் என்றேன். அதென்ன காராம்பசு அம்சம் என்று கேட்டார். வீட்டைக் கட்டி முடித்ததும் அந்த வீட்டினுள் காராம்பசுவின் காலடிதானே முதலில் பட வேணும் என்று நினைக்கிறோம் என்றேன். எல்லாரும் சிரித்தார்கள், கி.ரா. எதையாவது சொல்லுவார் என்று.

எது எப்படியோ, 'சுந்தர விலா'ஸுக்குள் அந்த டாக்டர் வந்தது எனக்கு இன்றும் ஒரு பெரிய்ய முக்கியமாகப் படுகிறது. சு.ரா.வின் வாழ்க்கையில் இது ஒரு அத்தியாயம் என்றே சொல்லுவேன். அவர் அந்த நெடுநாளைய படுக்கையிலிருந்து மீண்டெழுந்து வந்தது தமிழ் இலக்கியத்துக்கு முக்கிய வரவாக முடிந்தது.

●



படிப்பகம்

www.padippakam.com






ரவிக்குமார்

# ‘மரணம்தான் மரணம்’



**“நீங்கள் எழுதியதில் சிறந்ததாக எதைச் சொல்வீர்கள் ?”** என்று கேட்டார் பேராசிரியர் பழமலய்.

“ஜே.ஜே: சில குறிப்புகளில் கடைசியாகத் தரப் பட்டுள்ள டைரிக் குறிப்புகள் எனக்குப் பிடிக்கும்” என்றார் சுந்தர ராமசாமி.

பதினோரு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இரவு அவரை நான் முதன் முதலாகப் பார்த்தபோது அவரிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. வேல்சாமி, அ. மார்க்ஸ், பழமலய் ஆகியோரோடு நானும் அவரைச் சந்திக்கப் போயிருந்தேன். தோழர் கல்யாணியின் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்காகக் குடும்பத்தோடு போயிருந்தபோது ஃபாதர் எக்ஸ்.டி. செல்வராஜைப் பார்க்க இடிந்தகரைக்குப் போய்விட்டுக் கன்யா குமரியைப் பார்த்துவிட்டு, கடைசியாக அந்த இலக்கிய யாத்திரையை மேற்கொண்டோம். சு.ரா.வைப் பார்ப்பதில் பழமலய்தான் மிகவும் ஆர்வமாக இருந்தார். ‘சனங்களின் கதை’யால் தான் ஈட்டியிருந்த புகழ் தனது அடுத்த புத்தகத்தால் காப்பாற்றப்படுமா என்று தெரிந்துகொள்ள அவர் விரும்பியிருக்கக்கூடும். ‘குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்’ அப்போதுதான் வெளிவந்திருந்தது. அந்தச் சந்திப்பில் அவர்தான் அதிகம் பேசினார்.

“புத்தகம் அனுப்பியிருந்தேன் அதைப் பத்தி ஒண்ணுமே நீங்க எழுதலையே”

“படிச்சுட்டேன். எழுதறேன்”

“சனங்களின் கதை பத்திகூட நீங்க ஒண்ணும் சொல்லலை”

“ஆமாம். விரிவா உங்களுக்கு எழுதணும்”

“எழுதறது இருக்கட்டும் இப்ப சொல்லுங்க. என்னோட கவிதைகளைப் பத்தி நீங்க என்னதான் நினைக்கிறீங்க?”

“இல்ல நான் கூடிய சீக்கிரமே எழுதறேன்”

பழமலய் விடுவதாக இல்லை. எப்படியாவது அப்போதே சு.ரா.வின் கருத்தைத் தெரிந்துகொண்டுவிட வேண்டும் என்பதில் அவர் பிடிவாத மாக இருந்தார். அதற்கு மேலும் வழியில்லையென்று தெரிந்துவிட்ட பிறகு தன்னிடமிருந்து மிகவும் நாசூக்கான சொற்களைப் பொறுக்கி யெடுத்து மெல்லிய குரலில் சு.ரா. சொன்னார்:

“நீங்க செய்தியைத்தானே எழுதுறீங்க” சு.ரா.வின் குரல் தழைந்திருந்தது. தன்னை ஓடிவந்து தழுவிக் கொள்ளும் குழந்தையிடம் தான் எதுவும் வாங்கி வரவில்லை என்ற செய்தியைச் சங்கடத்தோடு சொல்லும் ஒரு அப்பாவின் பாவம் அவர் முகத்தில் தென்பட்டது.

“அப்போ கவிதைனா அதுல எந்தச் செய்தியும் இருக்கக் கூடாதா?”

“ஆனா ஒரு செய்தியே கவிதை ஆயிடாதுன்னு நெனைக்கிறேன்”

இதைச் சொன்னபோது பழமலய் காயம்பட்ட ஒருவரின் வலியோடும் ஆவேசத்தோடும் அவரைத் தாக்கத் தயாராகிவிட்டார்.

“அப்போ நீங்க எழுதியிருப்பதெல்லாம் கவிதையா?”

சு.ரா. அதற்குப் பதில் ஒன்றும் சொன்னதாக நினைவில்லை. பேச்சு சுற்றிச் சுழன்று நிலைக்குத் திரும்பியபோதுதான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்தக் கேள்வியைப் பழமலய் கேட்டார். இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தோம். வழியில் ஒரு ‘ஒயின் ஷாப்’ மூடத் தயாராகிக்கொண்டிருந்தது. உள்ளே நுழைந்து ஆளுக்கொரு பியர் குடித்தார்கள்.

சு.ரா. வீட்டு வரவேற்பறையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த புத்தகங்களில் எனக்குப் பிடித்தமான சில பெயர்கள் தென்பட்டதும், அவருக்கு வழங்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



'குமாரன் ஆசான்' விருது ஃப்ரேம் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்ததும் இப்போதும் நிழலாடுகின்றன. சு.ரா.வைக் கடைசியாக நாகர் கோவிலில் சந்தித்தபோது அந்த முதல் சந்திப்பைத் துல்லியமாக அவர் நினைவுகூர்ந்து பேசினார்:

"கவிஞர் அங்கெ உக்காந்திருந்தார். அறிஞர் (வேல் சாமி) இந்த இடத்தில் உக்காந்திருந்தார். பேராசிரியர் அந்த் இடத்துல உக்காந்திருந்தார்" என்று அவர் குறிப்பிட்டுப் பேசியபோது அவருக்கும் அந்தச் சந்திப்பு மறக்காமல் இருந்தது புலப்பட்டது.

புதுமைப்பித்தன் பற்றி *நிறப்பிரிகை* சார்பில் கும்பகோணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கு சு.ரா.வையும் அழைத்தோம். முதலில் வருவதாக ஒப்புக்கொண்டார். பின்னர் உடல்நலமில்லாததால் அவர் வர முடியாமல் போய்விட்டது. அது *நிறப்பிரிகை*யை விட்டு என்னை நான் விலக்கிக்கொள்ளத் தொடங்கியிருந்த நேரம்.

சில வருடங்களுக்குப் பிறகு, அவர் தலித் பிரச்சினை தொடர்பாகப் பேசும்படி ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். வழக்கம்போல நான் போகவில்லை. அது அவருக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்திருந்தது பிறிதொரு சமயத்தில் அவர் எழுதிய கடிதமொன்றில் வெளிப்பட்டது. ராஜீவ் கொலை வழக்கில் பலருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மரண தண்டனைக்கு எதிரான பிரச்சாரமொன்றை பியுசிஎல் சார்பில் முன்னெடுத்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக எழுத்தாளர்களை அதில் ஈடுபடுத்த வேண்டி ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்த விரும்பி சு.ரா.வுக்கு எழுதினேன். அவர் ஆலோசனையின்படி 'மார்க்சியப் பெரியார்' எஸ்.வி. ராஜதுரையுடன் சேர்ந்து அந்தக் கூட்டத்தைச் சென்னையில் ஏற்பாடு செய்தேன். அப்போது நடந்த கடிதப் போக்குவரத்தில் இப்படியான பொதுப் பிரச்சினைகளுக்காக எழுத்தாளர்கள் தொடர்ந்து குரல் கொடுக்க வாய்ப்பளிக்கும்படியான ஒரு ஏற்பாட்டின் தேவையை சு.ரா. வலியுறுத்தியிருந்தார். அது சாத்தியமாகாமலே போய்விட்டது.

நான் அவரைச் சந்தித்த சந்தர்ப்பங்கள் சொற்பம்தான். தொலைபேசிப் பேச்சுகளும்கூட பரஸ்பர நல விசாரிப்புகளாகவே பெரிதும் முடிந்திருக்கின்றன. இலக்கியம் தொடர்பான அவரது கருத்துகளில் நான் அதிகம் ஆர்வமற்றிருந்ததும் அதற்கொரு காரணமாக இருக்கலாம். ஆனால் அவரை நான் முக்கியமான ஒரு படைப்பாளியாகவே கருதுகிறேன். மொழியின் சாத்தியத்தை அவரளவுக்குச் சோதித்துப் பார்த்த எழுத்தாளர் தமிழில் வேறெவருமில்லை. உரைநடையில் பயன்படுத்தும் சொற்களுக்கும்கூடக் கவிதையின் கூர்மையை ஏற்றிப் பார்த்தவர் அவர். தனது மொழிபெயர்ப்புகளின் மூலமாகத் தனது கவிதைகளுக்கான சவாலைத் தானே ஏற்படுத்திக்கொண்டவர்.

சு.ரா. தீட்டிக்காட்டியுள்ள ஆளுமைகளின் சித்திரங்கள் அபூர்வமானவை. மிகையினால் மலினப்படுத்திவிடாமலும் நாகரீகம் கருதிப் பின்னப்படுத்தி விடாமலும் அவர் மனிதர்களை எழுதிக் காட்டியிருக்கிறார். அவர் ஒரு எழுத்தாளர் பற்றி எழுதினால் வாசகன் அந்த எழுத்தாளரைத் தேடிப் படிக்காமல் தூங்க முடியாது. அவரால் பரிந்துரைக்கப்பட்ட படைப்புகள் அவர் முன்வைத்த கோணங்களால் புதிய பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றன.

வேறொரு மொழியாக இருந்திருந்தால் இலக்கிய சர்ச்சைகளின் மூலமாகவும்கூட அவர் பலவற்றைக் கற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் இங்கே அவரோடு இலக்கியச் சர்ச்சையில் ஈடுபட்டவர்கள் அவரைத் தமது நிலையை நோக்கி இழுத்துப் போடவே முயன்றனர். அந்தக் கசப்பும் குறையும் அவரது எழுத்துகளில் தம் தடயங்களை விட்டுச் சென்றுள்ளன.

அவரும் கு. அழகிரிசாமியும் எழுதிக்கொண்ட கடிதங்கள் நூலாக வெளிவந்தபோது அதைப் பாராட்டி அவருக்கு எழுதியிருந்தேன். நடிப்பதற்காக அவருக்கு வந்த அழைப்பு பற்றி அதில் இடம்பெற்றிருந்த குறிப்பினைச் சுட்டிக்காட்டிக் கேட்டிருந்தேன். அதற்கு மிகவும் உற்சாகத்தோடு பதில் எழுதியிருந்தார். 'மேக் அப்' போடாமலே அழகாக இருந்த முகம் ஒன்றைத் தமிழ்த் திரையுலகம் க.நா.சு.வால் இழந்துவிட்டது வருத்தமானதுதான். எனினும் கவிதைக்கு நேரெதிரான அம்சங்களைக் கொண்ட நடிப்பிலிருந்து சு.ரா. தப்பித்தது நல்லதுதான் என்று எண்ணத் தோன்றுகிறது.

சு.ரா. எழுதிய அஞ்சலிக் கட்டுரைகளைப் படிக்கும்போது நாம் அந்த நபரை அறிந்திராவிட்டாலும் நமது மனம் கசியும். கடந்த டிசம்பரில் சுனாமியில் சிக்கி இறந்துபோன தமது நண்பரான சேதுராமன் நினைவாக அவர் எழுதியிருந்த கட்டுரையைப் படித்தபோது இப்படி அன்பு பாராட்ட ஒருவர் இருந்தால் உயிரைக்கூட விடலாம் என்று எண்ணிக்கொண்டேன். சு.ரா.வுக்கு அப்படி ஒரு அஞ்சலியை எழுத ஆற்றல் கொண்ட எவரும் இங்கில்லை. மனம் கசியலாம் ஆனால் அந்தக் கண்ணீர் எழுத்தாக உருப்பெறுமென்று சொல்ல முடியாது.

அவரே எழுதியதுபோல் "உறவுகளில் சிறிது நேர்மை. உண்மை மீது கொஞ்சம் மதிப்பு. பொது நன்மை சார்ந்த சில சுய நியதிகளைக் கூடிய மட்டிலும் கைப்பிடித்தல்" என வாழ்ந்தவர். அவரின் சுயச்சார்பான வாழ்வு ஒரு புறாவைப் போல 'வெளிக்குத் தெரியாமல், சுவடு தெரியாமல் ஏதும் பரபரப்பின்றி'* ஒரு மரணத்தை அவருக்குச் சாத்தியமாக்கியுள்ளது. சு.ரா.வுக்கு 'வாழ்வே மரணம் அல்ல. மரணம்தான் மரணம்.'*

*ஜே.ஜே: சில குறிப்புகள் நாவலிலிருந்து



இளவேனில்

இவ்விதழில் உள்ள சு.ரா. புகைப்படங்கள் அனைத்தையும் எடுத்தவர் புதுவை இளவேனில்.

சு.ரா.வின் படைப்புகள் குறித்த மதிப்பீடுகள், பிரசுரமாகாத அவரது கட்டுரைகள் வரும் இதழ்களில் வெளியாகும்.

சு.ரா.வுக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்துவோர் கூட்டம் குறித்த செய்தி, படங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**Edited and published by S. R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669 K. P. Road, Nagercoil 629 001 and printed by S. Vaidyanathan at Print Specialities, 186, V.M. Street, Chennai 600 014**

படிப்பகம்

www.padippakam.com

# கடைசி வரிகள்

Connecticut.

25 09 05 ஞாயிறு காலை 10 மணி

கவிதை படிக்கவும் படைக்கவும்.

Gary Soto selected Poems.

Page 6 The Elements of San Joaquin
for César Chávez

Field

The wind sprays pale dirt into my mouth
The small, almost invisible scars
On my hands.

The pores in my throat and elbows
Have taken in a seed of dirt of their own.

After a day in the grape fields near Rolinda
A fine silt, washed by sweat,
Has settled into the lines
On my wrists and palms.

Already I am becoming the valley,
A soil that sprouts nothing
For any of us.

25 09 05

அந்தப் பெருந்தயையின் கொடைமை நம்மை
அழைக்கிறது.
~~அதன்~~ இருப்பின் / வடிவம் நம் பார்வைக்குப் புலப்படவில்லை.

நம் இன்மையும், நம் பற்றும் நம் பார்வையை
மறைக்கிறது.

தன் மேன்மையால் நம்மை அணைக்கும் கொடை
அந்தப் பெருந்தயை நம்மைத் தேடி வருகிறது.

நாம் நம் சிற்றெல்லை மறந்து பேரும் உழக்கில்
கரைகிறோம்.



மரணமடைவதற்குப் பதினாறு நாட்களுக்கு முன்பு கனெடிக்கட்டில் இருந்தபோது சுந்தர ராமசாமி ஆங்கிலக் கவிதையொன்றைத் தன் குறிப்புப் புத்தகத்தில் பிரதி எடுத்திருக்கிறார் தன் கவிதை ஒன்றையும் எழுதியிருக்கிறார். படைப்புகளுக்கு இறுதி வடிவம் தருமுன் பல முறை திருத்தி எழுதும் பழக்கம் கொண்ட சு.ரா. எழுதிய இவ்வரிகள் கவிதையின் முதல் பிரதி. இவைதான் அவரது கடைசி வரிகள்.

www.padippakam.com

ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ்

இணைந்து நடத்தும்

காலச்சுவடு
மாத இதழ்

அற்றைத் திங்கள்

**தனித்துவம் மிக்க இலக்கிய நிகழ்ச்சி**

தமிழின் மூத்த படைப்பாளிகளும் முக்கிய ஆளுமைகளும் தாங்கள் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச் சூழல், தொடக்க காலப் படைப்பு முயற்சிகள், இலக்கிய நட்புகள் ஆகியவற்றை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்கள்.



கோவையில் ஒவ்வொரு மாதமும்
மூன்றாம் ஞாயிறு அன்று மாலை
அற்றைத் திங்கள் என்னும் தலைப்பில்
நடைபெறும் இந்தக் கூட்டத் தொடரில்
நவம்பர் மாதம்

கல்வியாளர்

# வே. வசந்தி தேவி

கலந்துகொள்கிறார்

*வே. வசந்தி தேவி 1992 முதல் 1998 வரை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணிபுரிந்தார். பிறகு, தமிழகத் திட்டக் குழு உறுப்பினராகவும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றிவந்தார்.*

நாள்: 20.11.2005 நேரம் : மாலை 6:30 மணி
இடம்: கோவை பாரதீய வித்யா பவன் (582, D.B. சாலை, ஆர்.எஸ். புரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

படிப்பகம்

Registered Newspaper
No: TN/KK Dn/12/2004 - 2006
Date of Publication Every month on 26th & 29th
ISSN 0972 - 8260 Kalachuvadu

www.padippakam.com

Regd with the Registrar of Newspaper
for India under No. 42764/88 Kalachuvadu




படிப்பகம்